

உ

சிவமயம்

நகரத்தார் மாநில மாநாட்டு மலர்

சென்னை · 1965

சிவமயம்

நகரத்தார் மாநில மாநாட்டு

மலர்

கலைத்தந்தை

கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களால்

11—7—'65 இல் வெளியிடப்பெற்றது

27, பவழக்காரத் தெரு, சென்னை-1

மலர் வெளியீட்டுக் குழு

1. திரு. 'சோமலெ' அவர்கள்.
2. „ அழ. வள்ளியப்பா அவர்கள்.
3. „ சொ. மீனாட்சிசுந்தரம் செட்டியார் அவர்கள்.
4. „ குமு. இலக்குமணச் செட்டியார் அவர்கள்.
5. „ அ. சேதுராமன் செட்டியார் அவர்கள்.
6. „ சொ. வள்ளியப்ப செட்டியார் அவர்கள்
7. „ அ. முருகப்ப செட்டியார் அவர்கள்.
8. „ நாக. முத்தையா அவர்கள்.
9. „ மு. சுந்தரேசன் செட்டியார் அவர்கள்
10. „ வீர. இராமநாதன் செட்டியார் அவர்கள்.
11. „ A. தியாகராசன் அவர்கள் (அமைப்பாளர்)

முன்னுரை

திருநலம் பொலியும் தென்தமிழ் நாட்டில், நகரத்தார் தங்கள் உயர்விற்கு வழி வகுப்பதற்காகச் சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் 'நகரத்தார் சங்கங்கள்' நிறுவிப் பணிபுரிந்து வருகின்றனர். இச் சங்கங்கள் தம்முள் ஒத்துழைத்து, மென்றும் ஊக்கத்துடன் செயற்படும் நன்னோக்கத்துடனும், வெளி நாட்டிலும் உள் நாட்டிலும் இருக்கும் பொது அற நிறுவனச் சொத்துக்களை ஒன்றாகச் சேர்த்துச் சமூகப் பெருஞ் செல்வர்களின் தளராத உதவியுடன் பெரியதோர் அறக்குழு (Trust) நிறுவுவதென்ற குறிக்கோளுடனும் நகரத்தார் மாநில மாநாடு கூட்டுவதென்ற எண்ணம் எழுந்தது. மாநில அளவில் பெரியதொரு மாநாடு கூட்டப்படுவது இதுவே முதன் முறையாகும்.

இம் முதல் மாநில மாநாட்டை யொட்டி, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் விளங்கும் கலைப்படைப்பாகச் 'சிறப்பு மலர்' ஒன்றை வெளியிட விரும்பினோம். அம் மலரானது நம் இனத்தவர்களைப் பற்றிய சிறப்புக்களையும் இயல்புகளையும் இன்றைய நிலைமையையும் எடுத்துக் காட்டுவதாக அமையவேண்டும் என்றும், அதன்மூலம் 'சென்ற காலத்தின் பழுதிலாச் சிறப்பையும், இன்றைய நிலைமையையும்' உலகிற்குணர்த்த வேண்டுமென்றும் விழைந்தோம். அதன் பயனே இச்சிறப்பு மலராகும்.

இம் மலரை உருவாக்கி நன் முறையில் வெளியிடுதற்கு உதவி செய்ய, 'சோமலெ' அவர்கள் அன்புடன் இசைந்தார்கள். 'செட்டி நாடும் தமிழும்' என்ற நூலின் மூலம் அவர்கள் நமது சமூகம், நாடு, மொழி, சமயம், கலை ஆகிய துறைகளில் எவ்வளவு ஈடுபட்டுச் சிறப்புற்றது என்பதை வரலாற்று ஆராய்ச்சிப் போக்கில் எழுதி உலகிற்குணர்த்தியவர்கள். மேலும் காசிச் சத்திர நூற்றாண்டு விழா மலரையும், சென்னை நகரத்தார் மாணவர் சங்கச் சிறப்பு மலரையும் வெளியிட்டதன் மூலமும், நகரத்தார்களைப் பற்றிய பலவகையான புள்ளி விவரங்களையும் வரலாற்றுக் குறிப்புக்களையும் தொகுத்ததன் மூலமும் இத்துறையில் பெரிதும் ஈடுபட்டு உழைத்த பழக்கம் உடையவர்கள். அவர்கட்கு உறுதுணையாக, மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் 'தமிழண்ணல்' இராம. பெரிய கருப்பன் அவர்கள் இம் மலர் பற்றிய பதிப்பு வேலைகளை ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் இருவருக்கும் நம் நன்றி உரியதாகும்.

பெருமக்கள் பலர் மனமுவந்து விளம்பரங்களை மிகுதியாகத் தந்து உதவியுள்ளனர். அவ் விளம்பரங்களைச் சேர்ப்பதற்கு மதுரை, திருச்சி, கோவை நகரத்தார் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்களனைவரும், மற்றும் நம் சமூக முன்னேற்றங் கருதும் பெருமக்களும் மிகுந்த முயற்சி மேற்கொண்டனர். விளம்பரங்கள் சேகரிப்பதில் மதுரை சவுத் இந்தியா கார்ப்பரேஷன் திரு. A. கணபதி செட்டியார் அவர்கள் மிகவும் உதவியுள்ளனர். திரு. மு. அழகப்பன் அவர்களும், திரு. A. சேதுராமன் அவர்களும், T. S. P. முத்துராமன் அவர்களும், திரு. S. V. மாணிக்கம் செட்டியார் அவர்களும், திரு. A. R. அருணாசலம் செட்டியார் அவர்களும், திரு. க. அ. செல்லப்பா அவர்களும், திரு. S. வள்ளியப்பன் அவர்களும், திரு. S. P. சிதம்பரம் செட்டியார் அவர்களும், S. RM. PL. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களும், ORWO FILMS வேங்கடா

சலம் அவர்களும், A. முருகப்ப செட்டியார் அவர்களும், M. சிவலிங்கம் செட்டியார் அவர்களும், AR. PL. அருணாசலம் செட்டியார் அவர்களும், M. சுந்தரேசன் அவர்களும் இவ்வாறே பாடுபட்டுள்ளனர்.

பாங்க் ஆப் பரோடா, தி. நகர் கிளை ஏஜண்டு திரு. பிச. பழ. மெய்யப்பன் அவர்கள் விளம்பரம் சேகரிக்கும் பணியில் காட்டிய உற்சாகத்தைப் போற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மேற்குறிப்பிட்ட அனைவரின் அரிய முயற்சியால், கலைமகளின் அருட் செல்வம் பெற்றுச் சிறந்த இம் மலர் திருமகளின் பொருட் செல்வமும் பெற்று வலிவும் பொலிவும் வாய்க்கப்பெற்றது. அவர்கட்கும், விளம்பரங்களைத் தந்துதவிய பெருமக்களனைவருக்கும் நாம் மிகவும் நன்றிக் கடப்பாடுடையவர்களாக இருக்கிறோம்.

நமது வேண்டுகோளுக்கு இணங்கி இம்மலர் அறிவு மணம் பெற்றுக் கமழும் வகையில் கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துச் செய்திகள், வரலாற்றுக் குறிப்புக்கள் அனைய பலவற்றை எழுதியுதவிய யாவர்க்கும் நம் அன்பையும் நன்றியையும் புலப்படுத்திக்கொள்கிறோம். இதனை அழகுற அச்சிட்டுத்தந்த 'காவல் ஆர்ட் பிரிண்டர்சின்' உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும், மற்றும் இதன் பகுதிகளை விரைந்து அச்சிட்டு உதவிய கமர்ஷியல் பிரஸ் நிருவாகிகட்கும், ஓவியர்கள் கணேசன், ஆனந்தன், ஆகியவர்கட்கும், ஒன்பது நகரக் கோயில்களின் படங்களை எடுத்துதவிய காரைக்குடி கொப்பு ஸ்டுடியோவினருக்கும் நம் நன்றி உரியது.

கலைத் தந்தை கருமுத்து. தியாகராசச் செட்டியாரவர்கள், தாம் உருவாக்கிப் படைக்கின்றவற்றிலெல்லாம் கலைநுட்பம் அமைய வேண்டுமென்ற ஆர்வம் உடையவர்கள். தமிழ் மொழிப் பற்றும் பயிற்சியும் மிக்கவர்கள். கலை, கல்வி, தொழிற்கல்வி நிறுவனங்கள் பலவற்றை நிறுவி, கோடிக்கணக்கில் செலவிட்டுப் பொதுப்பணி புரிந்து வருபவர்கள். நம் இனத்தவர் நல் வாழ்விற்கு எல்லா வகையாலும் உதவவேண்டும் என்ற மன ஈடுபாடு உடையவர்கள். மதுரை நகரத்தார் சங்கத் தலைவராக இருந்து, நெடுநாட்களாக ஆதரவு காட்டி வருபவர்கள். அவர்கள் இந்தச் சிறப்பு மலரை வெளியிட இசைந்தது நமது பேறாகும். அன்னார்க்கு நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர் உரிய காலத்தில் வெளிவந்தமைக்கு மலர்க்குழுவினர்க்கும் சிறப்பாக அக்குழுவின் அமைப்பாளர் திரு. A. தியாகராசன் அவர்களுக்கும் நன்றி கூறுதல் என் கடமையாகும்.

இம் மலர் குறைந்த காலத்தில் விரைந்து அச்சிடப்பெற்றது. குறைகள் இருக்கலாம்; குற்றம் பொறுத்துக் குணங்கொண்டு இம் மலர் மணத்தை யாவரும் முகர்ந்து, இன்பமும் மகிழ்ச்சியும் எய்த வேண்டுகிறோம்.

நலம் சிறக்க விளம்பரங்கள்
தந்த நல்லோர், நகரக்
குலம் சிறக்கக் கருத்துரைகள்
கொடுத்த சான்றோர், முயற்சி
வலஞ் சிறக்கத் தளராமல்
உழைத்த அன்பர், அழகு
மலர் சிறக்கச் செய்தவர்க்கு
மகிழ்ந்து சொல்வோம்! நன்றி.

11-7-1965
சென்னை

மு. சோமசுந்தரம் செட்டியார்,
தலைவர், சென்னை நகரத்தார் சங்கம்.


உள்ளுறை



நகரத்தார் முதல் மாநில மாநாட்டில்

கொடியேற்றும்

உயர்திரு உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியார் அவர்கள்



பழுத்தநல் அனுபவத்தார்
பயன்தர வாழ்ந்த மேலோர்
எழுச்சிகொள் மாநாட்டின்கண்
எழிற்கொடி ஏற்றிவைக்கிருர்

நகரத்தார் முதல் மாநில மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவரும்
சென்னை நகரத்தார் சங்கத் தலைவரும் ஆகிய
உயர்திரு மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்



திருவாழும் அருள்நோக்கம்
திகழும் செம்மல்
சிறப்பாகப் பொறுப்பேற்று
நடத்தும் தோன்றல்
வருவாரை வரவேற்க
மாநாட்டிற்கு
வழியாவும் வகுத்திட்ட
தலைவர் வாழ்க !!

சிவமயம்

நகரத்தார் முதல் மாநில மாநாடு

சென்னை 11—7—1965

மாநாட்டு மலர்

இறைவணக்கம்

பிள்ளையார்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

—கபிலதேவ நாயனார்

சிவபெருமான்

தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே! இதுகேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்;
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வதுவாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக் கூவாய்!

—மாணிக்கவாசகர்

முருகப்பெருமான்

முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே!—ஒரு கை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

—திருமுருகாற்றுப்படை

உ
சிவமயம்

நகரத்தார் முதல் மாநில மாநாட்டில்

வரவேற்புக் குழுத் தலைவர்

மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்

ஆற்றிய

வரவேற்புரை

செட்டிநாட்டரசர் அவர்களே
நம் சமூகத்தின் தலைவர்களே
நகரத்தார் பெருமக்களே

நம் சமூக வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்பமாக அமையும் நகரத்தார் மாநில முதல் மாநாட்டிற்கு வந்திருக்கும் உங்களனைவருக்கும் நல்வரவு கூறுகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இம் மாநாடு சிறப்பாக நடைபெற்று, நம் எல்லோருடைய உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் விருப்பம் நிறைவேறி, நம் சமூக நலம் என்கின்ற பொதுப்பயனை அடைந்து நம் இனம் செழிக்க வேண்டும்என்று பிரார்த்திக்கின்றேன்.

பெருமக்களாகிய உங்களனைவரையும் வரவேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். சென்னை நகரத்தார் சங்கத்தின் தலைவராக இருக்கின்ற காரணத்தால் எனக்கு இப்பேறு கிடைத்தது. இப்பெருமையை எனக்கு அளித்திருக்கும் சென்னை நகரத்தார் சங்க உறுப்பினர்கட்கு என் நன்றி உரியதாகும்.

சென்னை நகரத்தார் சங்க ஆண்டு விழாவைச் சில மாதங்கட்கு முன் நடத்தினோம். அப்போது நகரத்தார் மாநாடுகூட்ட விரும்பினோம். அச்சமயத்தில் கோவையிலும் ஒரு நகரத்தார் சங்கம் உருவாகியிருந்தது. மதுரையிலும், திருச்சியிலும் முன்பே சங்கங்கள் இருந்து வருகின்றன. ஒரே குறிக்கோளுடன் நகரத்தார்களின் சங்கங்கள் நான்கு முக்கிய நகரங்களில் இயங்கிவரத் தொடங்கியிருக்கிற இந்நேரத்தில் அவை ஒன்றுக்கொன்று கலந்து செயலாற்றவும் பகிர்ந்து பணியாற்றவுமான ஒரு சூழ்நிலை ஏற்படவேண்டும் என்ற எண்ணம் அரும்பியது. எனவே

நாங்கள் குறிப்பிட்ட மாநாட்டை இச்சங்கங்கள் நான்கும் சேர்ந்து கூட்டாகச் சென்னையில் மாநில மாநாடாக நடத்தலாம் என்ற கருத்தைக் கோவை நகரத்தார் தெரிவித்தனர். அதன் பயனே இம்மாநாடு. எனவே இம்மாநாட்டைக் கூட்டு வதற்குக் காரணமாக இருந்த எல்லோருக்கும் என்பாராட்டு உரியதாகும்.

மார்ச்சு மாத இறுதியில் நடைபெற்ற கோவை நகரத்தார் சங்கத் தொடக்க விழாவில் இம் மாநாடு கூட்டப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப இன்று இம் மாநாடு நிகழ்கின்றது. இம் மாநாட்டை நடத்துவதற்குப் பல வகையாலும் இச்சங்கங்கள் ஒத்துழைத்துள்ளமை பெரிதும் போற்றிப் பாராட்டு தற்குரிய செயலாகும்.

நம் சமூகத்தவர்களில் மூதறிஞராகத் திகழ்பவரும் பழுத்த அனுபவமும் எடுத்த காரியத்தை நிறைவேற்றும் இயல்பும் படைத்தவருமாகிய உயர்திரு. ஓ. ஏ. பி. ஆர். எம். அருணாசலம் செட்டியார் அவர்கள் நம் மயில் கொடியை ஏற்றிவைத்து உரை நிகழ்த்த வந்துள்ளார்கள். ஆண்டில் முதியராயினும் உள்ளத் தால் இளைஞராகத் திகழும் அன்னார் கொடியேற்றிவைப்பது, நம் குறிக்கோள்களின் வெற்றிக்குச் சிறந்த அறிகுறியாகும்.

இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க, டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியாரவர்கள் இசைந்து இங்குவந்துள்ளமை நம் அனைவருக்கும் பெருமை தருவதாகும். நம் சமூக முன்னேற்றத்தில் பெரும் அக்கறையும், எடுத்த செயல் களில் எல்லாம் வெற்றிபெறும் நல்ல உள்ளமும், பொதுநலப் பணிகளில் இடையறாத ஈடுபாடும் உடைய அவர்கள் இங்கு தலைமை தாங்குவதற்கு உடனே இசைவு தந்தார்கள். அவர்கட்கு அண்மையில் மணிவிழா நிகழவிருப்பது நாமனைவரும் அறிந்த ஒன்று. எல்லாவகையிலும் பிறர் நலம் பேணிப் பணிபுரியும் அன்னார், பல்லாண்டு இனிது வாழவேண்டுமென்று இறைவனை இறைஞ்சி உங்கள் சார்பிலும் என் சார்பிலும் எனது மனமுவந்த வாழ்த்துக்களை அவர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நமது சங்கங்களின் வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அவர்களுடைய அறிவுரையும் தலைமையும் ஒத்துழைப்பும் என்றென்றும் தேவை. எனவே அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடையாராகிய அப்பெருமகனாரை வருக வருக என்று வரவேற்று, இம்மாநாட்டைத் தலைமை தாங்கி நடத்தித் தரும்படி பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

இம் மாநாட்டைத் தொடங்கிவைக்க உயர்திரு அ. மு. மு. முருகப்ப செட்டியார் அவர்கள் இசைந்து வந்துள்ளமை நம் அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். இவர்கள் உலகமே வியக்கும்படியாகப் பெருந்தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள். நேரத்தைப்பொன்னேபோல் போற்றுபவர்கள். நம் சமூக இளைஞர்கட்கு வேலைவாய்ப்புக்கள் அளித்து ஆதரிப்பவர்கள். நம் பொதுச் சொத்துக்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, தலைமையான அறநிறுவனம் ஒன்றை ஏற்படுத்திச் செம்மையான முறையில் செயல்பட வேண்டுமென்று விரும்புபவர்கள். பார்சிகளைப் போல நம் சமூகத்தவரும் எண்ணிக்கையால் குறைவாயிருப்பினும்,

எல்லா வகையாலும் முன்னுக்கு வர முயலுதல் வேண்டுமென்ற கருத்துடையவர்கள். மிக நீண்ட காலத்திற்கு நிலைத்துச் செயல்படும்திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதிலும், எதிர் காலம்பற்றி முன் கூட்டி அறிந்து பணிபுரிவதிலும் திறமை மிக்கவர்கள். நம் சமூக நலன்களைக்காக்க அன்னாருடைய ஆதரவு மிகுதியும் தேவையென்று அவர்களை மன மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

இம் மாநாட்டை ஒட்டி மலரொன்றை வெளியிடுகிறோம். உண்ட உணவு செரித்துக் கண்ட காட்சிகள் மறந்துபோன பிறகும், இம் மாநாட்டு நிகழ்ச்சிகளையும், நோக்கங்களையும் என்றென்றும் மனத்தில் இருத்தும் வண்ணம் இம்மலர் உருவாக்கப்பட்டிருக்கிறது. நம் சமூக வரலாறு பற்றிய கட்டுரைகளும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கவிதைகளும் சிந்திக்கவைக்கவல்ல பிற குறிப்புக்கள் பலவும் இதன் கண் இடம் பெற்றுள்ளன. நம் சங்கங்களின் பெருமுயற்சியால் பெருமக்கள் பலரும் மனமுவந்து விளம்பரங்கள் தந்து உதவியுள்ளனர். அவர்களனைவருக்கும் நமது நன்றியுரியதாகும். இம் மலரை நன்முறையில் உருவாக்கத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. 'சோமலெ' அவர்கள் உதவியாக இருந்தார்கள். அன்னார்க்கு நம் நன்றி உரியது.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் இந்தச் சிறந்த கலைப்படைப்பை வெளியிடுவதற்குக் கலைத்தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியாரவர்கள் வந்திருப்பது பெரிதும் பொருத்தமுடையதென்று நான் கூறவேண்டியதில்லை. அன்னார் மதுரையிலுள்ள நகரத்தார் சங்கத்தின் தலைவராக இருந்து நம் சமூகத்திற்குப் பயன் தரும் பல நற்பணிகளை ஆற்றி வருகிறார்கள். கல்வித் துறையில் அவர்கள் ஆற்றியிருக்கும் பெருந்தொண்டு நாடறிந்ததாகும். மதுரையில் பல்கலைக்கழகம் அமைவதற்கு அடிப்படையான பலவற்றையும் செய்துதவியுள்ள பெருமை அவர்களுக்கு உரியதாகும். அவர்கட்கு நம் சமூக முன்னேற்றத்தில் பெரும் ஈடுபாடு உண்டு. அவர்களுடைய ஆக்கவுதவியும் ஊக்க உரைகளும் நம் குறிக்கோள்களை நிறைவேற்ற உதவும் என்று கூறி அவர்களை மனமகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

கலைத்துறையில் ஈடும் எடுப்பும் இன்றித் திகழும் உயர்திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் இன்று மாலையில் நிகழவிருக்கும் கலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க இருக்கிறார்கள். அவர்களுடைய அருள் நிழலிலேதான் இம் மாநாடு நடைபெறுகிறது, என்றால் அது மிகையாகாது. அதாவது அவர்களுடைய இராஜேஸ்வரி கல்யாண மண்டபமாகிய இவ்வரங்கினை, நமது மாநாடு நடத்துவதற்காக நேற்றும், இன்றும் தந்துதவியுள்ளமையையே குறிப்பிடுகிறேன். அவர்களின் அன்புக்கு நமது நன்றியைக் கூறி அவர்களையும் மனமுவந்து வரவேற்கிறேன்.

அழுத்தமான கொள்கையும் நிறைந்த அனுபவமும் உடையவரும், திருச்சி நகரத்தார் சங்கத் தலைவருமாகிய உயர்திரு. மு. அ. அருணாசலம் செட்டியார் அவர்கள் தம் கருத்துக்களை நம்மிடையே வழங்கி நம் சமூக முன்னேற்றத்றத்திற்கான வழிவகைகள் கூற வந்துள்ளார்கள். அன்பின் வடிவமாகவும் அடக்கத்திற்கடையாளமாகவும் திகழும் கோவை நகரத்தார் சங்கத் தலைவர் திரு ஏ. ஆர். எல். வி. நடராசன்

செட்டியார் அவர்களும் நம்மிடையே தமது கருத்துக்களைத் தெரிவிக்க வந்துள்ளார்கள். மற்றும் நம் சமூகத்தின் சான்றோர்களும் சமயப் பெரியார்களும் அரசியல் துறை அறிஞர்களும், கவிஞர்களும் வந்துள்ளனர்.

நமது அழைப்பைப் பெருமைப்படுத்தி நகரத்தார் ஊர்களிலிருந்தும் நகரப் பெருமக்கள் பெருமளவில் பிரதிநிதிகளாக வந்து குழுமியுள்ளனர். இவர்களனைவரையும் வருக, வருக என்று இரு கைகூப்பி வணங்கி வரவேற்கிறேன்.

திரு, C. V. C. T. வேங்கடாசலம் செட்டியார் அவர்கள், திரு. சா. கணேசன் அவர்கள், திரு. ப. வ. ராம. குழந்தையன் செட்டியார் அவர்கள், திரு. P. S. S சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் திரு. சேவு. அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் போன்ற பல பெருமக்களை மாநாட்டில் கலந்துகொள்ள அழைத்தோம். உரிய காலத்தில் இசைவு தெரிவித்தவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிநிரலில் இடம்பெற ஏற்பாடு செய்திருக்கிறோம். பிற்பகலில் டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் எம். சுந்தரம், மலேசியா தமிழ்நேசன் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியம், திரு. எல். இராமநாதன், தமிழண்ணல் இராம. பெரியகருப்பன் திரு. சுப. அருணாசலம் ஆகிய அறிஞர்களும் நகரத்தார் சங்கங்களின் செயலாளர்களாகிய திருவாளர்கள் ஆவி. க. மெ. அரு. தியாகராசன், திரு. ஆவிச்சிசெட்டியார், திரு நாக. நாகப்ப செட்டியார் ஆகியோரும் திரு S. V. N. நாகப்ப செட்டியார் அவர்களும் பேச இசைந்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நல்வரவு கூறுகிறோம்.

நம் முன்னுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் சுருக்கமாக இருவரிகளில் கூறுவதானால், ஒன்று கல்வியும் தொழிலும், இரண்டு திருமணமும் நல்வாழ்வும் எனலாம். முன்னது பெரும்பாலும் ஆடவர் பற்றிய சிந்தனை. மற்றது பெரும்பாலும் மகளிர் பற்றிய சிந்தனை. இவையிரண்டையும் தொகுத்துரைப்பதானால் நமது பொருள் வசதியின்மை—வறுமை பற்றிய பிரச்சினையே இன்று நம் முன் இருக்கிறதெனலாம்.

முன்பு வெளிநாட்டில் கம்பை போன்ற இடங்களில் எல்லா வசதிகளும் செய்து தருகிறோம், படிக்கவாருங்கள் என்றபோது படிக்கவருவோர் தொகை மிகக் குறைவாக இருந்தது. இன்றோ எல்லோரும் படிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். வசதிகள் போதவில்லை. புத்தகம், சிலேட்டு வாங்குவது போன்ற சிறு உதவிகள் முதல் பெரும் படிப்புகட்குவரை நிதியுதவி தேவைப்படுகிறது.

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்றார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. நம் சமூகப் பெண்கள் நிலை இதற்கு முற்றிலும் மாறாக உளது. எத்துணையோ கன்னியர் வாழ்வு பெறாது வாடுகின்றனர்

ஒன்றை முக்கியமாக உங்கட்கு நினைவூட்ட விரும்புகின்றேன். எத்துணை வறுமை வரினும் நம் சமூகத்தவர் தனிஒருவரிடம் இரந்துகேட்டு வாழ்தலை யறியாதிருந்த ஓரினம். இன்று பல வகையாலும் நிலை தாழ்ந்துவிட்டது இரங்குதற்

குரிய செய்தியாகும். எனவே நகரத்தார் சங்கங்கள் போன்ற அறநிறுவனங்களின் மூலம் உதவி செய்தல்என்பது இன்று மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

நாம் கட்டிவைத்த கோயில், சத்திரங்களின் மூலம் இன்று பெரும் வருவாய் பெற வாய்ப்பிருக்கிறது. வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் நமது அறநிறுவனங்களில் முடங்கியுள்ள தொகை கணக்கிலடங்காததாகும். இவையனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு பெரிய அறநிறுவனம் ஏற்படுத்தவேண்டும். செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்பர். நம் தொழிலதிபர்களும், செல்வர்களும் இதற்குப் பெரிதும் உதவ முன்வருதல் வேண்டும். நமது பெரிய தலைவர்கள் அனைவரும் கூடியுள்ள இப்பேரவையில் இத்தகைய நன்முடிவு ஒன்று எடுக்கப்பட்டு நம் சமூகம் முன்னேறுவதற்கான வழிவகைகள் முடிவு செய்யப்படுமானால் அதுவே இம்மாநாட்டின் பெரும் பயனாக அமையும்.

ஞாலங் கருதினும் கைகூடும் காலங்கருதி இடத்தால் செயின் என்றார் வள்ளுவப் பெருமகனார். நம் சமூகப் பெருமக்கள் பலருக்கும், நமது இன்றைய தாழ்நிலை நீங்கவேண்டும் என்ற நன்னோக்கம் பிறந்துள்ள இந்த நல்ல நாளில் நம் தலைவர்கள் அனைவரும் ஒன்று கூடிய இந்த நல்லநேரத்தில் நாம் நல்ல முடிவுகளைச் செய்து செயற்பட்டுச் சீர்பெற இறையருள் பாலிக்க வேண்டுமென்று இறைஞ்சுகிறேன். மீண்டும் உங்களனைவருக்கும் என் வணக்கத்தைக் கூறி வரவேற்கின்றேன்.



நகரத்தார் முதல் மாநில மாநாட்டைத்

தொடக்கிவைக்கும்

உயர்திரு அ. மு. மு. முருகப்பச் செட்டியார் அவர்கள்



தொழில்திறம் வன்மை மிக்கார்
தூயநல் உள்ளங் கொண்டார்
எழிலுறு முருகப்பர்தாம்
என்றென்றும் வாழ்க! வாழ்க!!

நகரத்தார் முதல் மாநில மாநாட்டுத் தலைவர்

டாக்டர் ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியாரவர்கள், Kt. B.A., M.L C., D.Litt.



மலர் முகம் இனிய சொற்கள்
மகிழ்ச்சியின் உருவாம் வேந்தர்
கலையெலாம் தழைக்க மூன்று
கனிதமிழ் சிறக்க வாழ்க!!
நலமுறு தலைமை ஏற்று
நடத்திநம் வாழ்வு காக்கச்
சிலம்பொலி தில்லைக் கூத்தன்
திருவருள் பணிவோம் வாழ்க!

DR. RAJAH
SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD.

'CHETTINAD HOUSE'
Adyar, Rajah Annamalai-
puram, P.O. Madras-28.

28-6-'65

திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்
தலைவர்,
சென்னை நகரத்தார் சங்கம்,
பவழக்காரத் தெரு,
சென்னை-1.

அன்புள்ளஐயா,

தங்கள் அன்புள்ள 9-5-65 உ கடிதம் கிடைத்தது. ஜூலை மாதம் 10, 11 தேதிகளில் சென்னையில் நம் நகரத்தார்களின் மாநில மாநாடு ஒன்று நடத்த ஏற்பாடாகி வருவதையும், அது சமயம் சிறப்பு மலர் ஒன்று வெளியிடத் தீர்மானித்திருப்பதையும் கேட்க மிகவும் சந்தோஷம். இம்மாநாட்டில் நகரத்தார்கள் அனைவரும் பங்கெடுத்துக்கொண்டு, நகரத்தார்களின் நலனை மனதில் கொண்டு அதற்கு வேண்டிய பல திட்டங்களை வகுத்து மாநாட்டைச் சிறப்பித்துத் தர வேண்டியது நம் கடமையாகும்.

இப்பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தங்களுக்கும், தங்கள் சங்கத்தைச் சேர்ந்த அனைவருக்கும் என் அன்புகலந்த ஆசி கூறுவதுடன், மாநாடும் சிறப்பாக நடைபெறவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

மு. அ. முத்தய்யா செட்டியார்

மாநாட்டுச் சிறப்புச் சொற்பொழிவாளர்கள்



உயர்திரு
மு. அ. அருணாசலம் செட்டியார்
அவர்கள்

தலைவர், நகரத்தார் சங்கம், திருச்சி



உயர்திரு
அரு. லெ. வெ. நடராசன் செட்டியார்
அவர்கள்

தலைவர், நகரத்தார் சங்கம், கோயமுத்தூர்

மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிடும்

கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள்



எண்ணத்தில் செயலில் தூய
எழில்திகழ் சான்ருேர், காணும்
கண்ணுக்குக் கலைவிருந்தாய்க்
கவினுற யாவும் செய்வார்
வண்ணத்துக் கலைப்படைப்பாய்
வளர்மலர் இதனைத் தம்மை
வண்ணத்தால் வெளியிட்டார்தம்
வன்மையைப் போற்றி செய்வாம்!

உ

உயர்திரு. கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்களின்

வாழ்த்து

★

நகரத்தார் முதல் மாநில மாநாடு சூலைத் திங்கள் இரண்டாம் கிழமை தமிழ் நாட்டின் தலைநகரில் நடப்பது மகிழ்ச்சிக்குரியது.

இம் மாநாட்டின் தொடர்பாகச் சிறப்பு மலர் ஒன்று வெளி வருதல் பயன் தருவதாகும்.

தமிழர் நாகரிகமே உலகில் சிறப்பும் தொன்மையும் வாய்ந்தது என்பது வரலாற்றுண்மை. இதைச் சிலப்பதிகாரம் நன்கு மெய்ப்பிக்கின்றது. இதற்கு ஏற்புடைச் சான்ருக விளங்குபவர் நம்மவரே.

மன்னர் பின்னோர் என்றும், தாழ்விலாச் செல்வர் என்றும் சங்ககாலப் புலவர்களால் நம்மவர் பாராட்டப்பெற்ற பெருமையுடையவர். நம் முன்னோர் நம் குலத்தை ஒன்பது கோயில்களாக வகுத்துத் திருமண விதி முறைகளை அமைத்தும் ஊர், வட்டகை, பத்தூர், தொண்ணூற்ருறு ஊர்க் கூட்டங்கள் கூட்டிப் பல சட்ட திட்டங்களை முறையே செய்தும் சிறந்து வாழ்ந்தவர். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே அலைகடல் கடந்து பெரும் வாணிகம் செய்யும் மாநாய்கராகவும், அருஞ் சுரம் தாண்டி இரும்பொருள் ஈட்டும் மாசாத்துவராகவும் உயர்ந்து விளங்கினர். சீனம், சாவகம், கடாரம், ஈழம் முதலிய அயல்நாடுகளிலும், குமரி முதல் இமயம் வரையும் இவர்கள் வாணிகம் செய்யாத இடமில்லை.

இவ்வாறு தாளாற்றி அரிதின் சேர்த்த பெரும் பொருளைத் தமக்கென்று வைத்துக் கொள்ளாமல், சமயம், கல்வி முதலிய நல் அறங்களுக்கு வரையாது வழங்கி மேன்மை எய்தினர். ''எப்பொருளும் ஆக்குவான் ஈசனே'' எனும் உணர்வால் தொடியோள் பௌவம் தொடங்கி இமவான் செல்வியை இடப்பாகங்

கொண்ட ஏந்தல் உறையும் கைலை வரை எண்ணற்ற கற்கோயில்களை எழுப்பினர். அப்பதிகளுக்குச் செல்லும் அன்பர்கள் பொருட்டுத் திருமடங்களையும் கண்டனர். ''கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்'' என்ற திருமுறைக் கருத்தை நினைவிற் கொண்டு வேத சிவாகம பாடசாலைகள் அமைத்தும், பள்ளி கல்லூரி பல்கலைக் கழகங்கள் நிறுவியும் மாண்புற்றனர். அறப்பணிகளையும், இறைத்தொண்டுகளையும் புரிந்தனர்.

இத்தகைச் செந்நெறியில் ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த'' நகரத்தார் உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாறுதல்களால் செய்தொழிலும், ஈட்டிய பொருளும் இழந்து இன்று வளங்குன்றியுள்ளனர். இதன் விளைவாக, எண்ணற்ற இளைஞர்கள் கல்வி பெற முடியாமலும், பருவ மடந்தையர் மணவினை இன்றியும் வருந்தி நிற்கின்றனர்.

அன்பும் அறனும் உடைய திருமணத்தைப் பழியும் பாவமும் பயக்கும் பண்டமாற்றாக்கி, இனிய எளிய வாழ்க்கையைத் துன்பமாகவும் சுமையாகவும் ஆக்கிக் கொள்கின்றோம்.

இந்த நிலைமை மாறி, நகரத்தார் தமது தொல் சிறப்புத் தோன்ற, பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தாற்போல் தம் இனத்திற்கு நலம் உண்டாக வாழ வேண்டுமாயின், அவர்களிடையே ஒற்றுமையும் செயல் இணக்கமும், தளரா முயற்சியும் சிக்கனமும் இன்றியமையாதனவாகும்.

செல்வர்கள் வீண் பெருமைக்காகச் செய்யும் பெருஞ் செலவில் ஒரு சிறு பாகத்தை ஒதுக்கின் அதுவே நம் இனத்து மக்கட்குப் பேருதவியாகும்.

''வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயருறா ஆங்குஅது கொண்டு
ஊரும் எறும்பு இங்கு ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று.''

என்று குமர குருபரர் கூறுமாறு யானை சிந்தும் சிறு எச்சிலால் ஒரு கோடி எறும்பு உயிர் வாழ்வது போல, நம் செல்வர்கள் மனையில் சிதறும் மிச்சிலால் எண்ணற்ற ஏழைக் குடும்பங்கள் உய்தி பெறுவார்கள்.

இம்மாநாடு, நகரத்தார் குலத்தில் ஒரு புதிய எழுச்சியைத் தோற்றுவித்து, சிதறிக் கிடக்கும் கோயில், பொது நிதிகளைச் செம்மைபெற ஒன்று சேர்த்து, தனவணிக குலத்தின் எதிர்காலம் முன்போல் ஒளிபெறுதற்கான வழி வகைகளை வகுக்க அங்கயற்கண்ணி பங்கினில் உறையும் ஆலவாய் அவிர்சடை அண்ணல் திருவருள் புரிவாராக.

லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

தமிழ்ப் பேராசிரியர், கீழ்த்திசைக் கல்வித் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலை நகர்
4-7-65.

அன்புடையீர்!

நகரத்தார் முதல் மாநில மாநாடு சென்னையில் நடைபெறும் செய்தி மிகவும் வரவேற்றற்கு உரியது.

நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேறி வரும் இக் காலத்தில், நகரத்தார்களில் சிலர், வாழ்க்கை நடைமுறைக்கும் கல்விக்கும் வேண்டும் பொருள் வளம் இன்றித் துன்புறுகின்றார்கள். நகரத்தார் குலத்தில் இப்போதுள்ள திருமணச் செலவு பெரிய அளவினதாக இருத்தலால், அதற்கு வேண்டும் பொருள் வசதி பெற்றோர்களிடத்தில் இல்லாமை காரணமாகப் பெண்மக்களில் பலர், திருமணம் நிறைவேறாத நிலையில் உள்ளனர். இவ்வாறு நம்மவர்கள் தளர்ந்திருத்தலை உணர்ந்து ராஜா அவர்கள், கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள் முதலிய நம் குலத்துப் பெருஞ்செல்வர்கள் நம் குலத்தினர் பலருக்கு நல்ல வேலைகள் அளித்தும், நம் குலத்தினர் கல்வி கற்கவும் பிற துறைகளில் நலம் பெறவும் வேண்டுவன செய்தும் உதவிகள் புரிந்து வருகின்றார்கள். இப் பெருந்தகையாளர்களுக்கு நம் குலத்தினர் அனைவரும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும் நகரத்தார் அனைவருக்கும் பொதுவாக உதவுதற்கு ஏற்ற நிதி நிறைந்த நிறுவனம் ஒன்று இருத்தல் நன்றாகும். இத்தகைய நிறுவனம், இம் மாநாட்டில் உருவாகும் என்று எதிர்பார்க்கிறேன். மதுரை, சென்னை, கோயமுத்தூர், திருச்சி முதலிய நகரங்களில் உள்ள நகரத்தார் சங்கங்கள் ஒன்று கூடித் தம் செயல்முறைகளைக் கலந்து கொள்வதற்கும் இம் மாநாடு உதவியாகும் என்று நம்புகிறேன்.

இத்தகைய செயல்முறைகளை ஆராய்ந்து செம்மையுடன் நிறைவேற்றுவதற்குச் செல்வாக்கு நிறைந்த செயற்குழு ஒன்று அமைதலும், பொதுப்பொருள் திரட்டுதலும் நல்ல வழிகளாகும். மாநாடு எல்லா வகையிலும் இனிது நிறைவேற அருள் புரியுமாறு தில்லைப்பெருமான் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

லெ. ப. கரு. இராமநாதன்

உ
சிவமயம்

A. M. M. MURUGAPPA CHETTIAR

"Tiam House"
11-12, North Beach Road,
Madras-1
29-6-1965

தென்னகத்தில் பல்வேறு நகரங்களில் செயலாற்றிவரும் நகரத்தார் சங்கங்களை இணைத்து ஓர் மத்திய ஸ்தாபனம் அமைப்பதற்கான முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இத்தகைய கேந்திர ஸ்தாபனத்திற்கு இப்போதுள்ள சூழ்நிலையில் அதிக அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்தத் தேவையில்லை. நகரத்தார் மக்களின் நலன்கள் முன்காலங்களில் கவனிக்கப்பட்டு வந்ததுபோல் சமூகப் பணியாகக் கருதப்பட்டு செட்டியார்கள் தங்கள் சொந்த முறையிலும், சமுதாய முறையிலும் கவனித்து வருவது இனி சாத்தியமில்லை. சாத்தியமானாலும் முற்றிலும் திருப்திகரமாக கவனித்துக்கொள்ள முடியாது. நாட்டின் ஏனைய மக்களது நலன்களையும் முன்னேற்றத்தையும் அரசாங்கம் அக்கறையுடன் கவனித்துக்கொண்டு, அவற்றுக்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதுபோலவே நகரத்தார் மக்களுடைய முன்னேற்றத்திலும் சர்க்கார் சிரத்தை கொள்ளல் வேண்டும். இதற்காகவும் இதர வகைகளில் நகரத்தார் மக்களின் நலன்களுக்காக என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்பன போன்ற துறைகளில் சிந்தனை செய்வதற்கும் நகரத்தார் சங்கங்களின் மத்திய ஸ்தாபனம் வழிவகை செய்யமுடியும். இம்முயற்சி வெற்றி யடைந்து ஸ்தாபனம் சுறுசுறுப்புடன் செயலாற்ற வேண்டும் என்று மனமார ஆசி கூறுகிறேன்.

அ. மு. மு. முருகப்பச் செட்டியார்

மு. சித. முத்தய்யா செட்டியார்

சென்னை-2
6-7-1965

மனமகிழ் மாநாடு

அரசர் பின்னோர் என்று ஆன்றோரால் போற்றப்படுபவரும், ஈட்டலிலும், காத்தலிலும், வகுத்தலிலும் வல்ல வழியினருமாகிய நம் சமூகத்தினர் நாட்டுக் கோட்டைப் பகுதியிலிருந்து நகர்ந்து தலைநகரத்தில் தனிப்பெரு மாநாடு கூட்டுவது சரித்திரத்தில் எழுதக்கூடிய ஒன்றாகும். எட்டி, காவிதி, என்ற பட்டம் பெற்று தமிழகத்தைத் தழைக்கச் செய்த நம் முன்னோர்போல நாமும் விளங்க எண்ணி மாநாடு கூட்டப்பெற்றது அறிந்து மகிழ்கிறேன்.

மேலைநாட்டு வணிகர்களைப்போல நம் சமூகத்தவரும் பன்னாட்டு வாணிபத்தில் பங்குபெற்று வணிக மன்னர்களாக விளங்க நல்ல பல திட்டங்களை மாநாட்டில் நிறைவேற்றி அதன்படி நடந்து, பாரதத்திற்கும் நம் சமூகத்திற்கும் நலம்பல பெருக முயற்சிப்போமாக.

பண்டைய வணிக முறையோடுகூட ஆலைத் தொழிலையும், நவீன விஞ்ஞானத் துறைத் தொழிலையும் நாம் மேலும் மேற்கொண்டு நம் நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பது எனது ஆசை. அது ஈடேற நடராசப் பெருமான் அருள்வாருக.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வாழ்க!
மாநாடு வெற்றி பெறுக!
மாநாட்டுச் செயலாளர் செயல் மேலும் வளர்க!

மு. சித. முத்தய்யா



சென்னை
5—7—'65

அன்புடையீர் !

வணக்கம்.

நம் இன நலன் கருதித் தாங்கள் தொடங்கியிருக்கும் பெருமுயற்சி பாராட்டு தற்குரியது. மாநாடு சிறப்புற நடைபெற வும், நோக்கங்கள் நிறைவேறவும் எனது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,
சுப. வயிரவன் செட்டியார்




சென்னை
5—7—'65

அன்புடையீர் ! வணக்கம்.


நம் சமூகப் பெருமக்கள் பலரும் கலந்து கொள்ளும் முதல் மாநில மாநாடு, நல்ல பல திட்டங்களை ஏற்றுச் செயற்படுத்த இருக்கிறது என அறிகிறேன். காலங் கருதிச் செய்யும் இப்பணிக்கு இறைவன் துணை முன் நிற்குமாக! 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்ற வாக்கிற்கிணங்க தங்களின் முயற்சிகள் அனைத்தும் நற்பயன் அளிக்கும் என்பது உறுதி.

அன்புள்ள,
உ. மு. சுப. லெ. அழ. அழகப்ப செட்டியார்

நகரக் கோயில்கள்



நகரக் கோயில்கள்



இளையாற்றங்குடித் திருக்கோயிற் காட்சி




மாற்றூர்க் கோயில் காட்சிகள்



ஐநூற்றீசர்





பெரியநாயகி அம்மன்



திருக்கோயிற் காட்சி


வைரவன்பட்டி
நகரக் கோயில்





இரணியூர்
நகரக்
கோயில்

காரைக்குடி நகரக் கோயில் காட்சிகள்



தேசிகநாதர்



ஆவுடையநாயகி




திருக்கோயிலும் குளமும்




நேமம்
நகரக் கோயில்
காட்சிகள்








இளுப்பக்குடி
நகரக் கோயில்



வேலங்குடி
நகரக் கோயில்



பிள்ளையார்பட்டி
கற்பக விநாயகரும்,
சோலைசூழ் நகரக்
கோயிலும்



பிள்ளையார்பட்டிக் கோயில் காட்சிகள்



மருதீசர்



வாடாமலர் மங்கை



திருவீசர்



சிவகாமவல்லி அம்மன்



காரைக்குடிக்கு அருகே உள்ள கோயிலூர் மடம்.
அங்கு விளங்கும் திருக்கோயில் காட்சி இது.

நகரக் கோயில்கள்

நகரத்தாரின் ஒன்பது நகரக் கோயில்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் புள்ளி விவரமும் கோயில்களின் படங்களுடன் இங்கு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிய செய்திகளையும் படங்களையும் பெறுவதற்கு நாங்கள் மேற்கொண்ட பெருமுயற்சியில், குறுகிய கால எல்லைக்குள், எங்கட்குக் கிடைத்தவற்றை மட்டும் இங்கு வெளியிடும் பேறு பெற்றோம். நகரப் பெருமக்களும் கோயில் காரியக்காரர்களும் அலுவலர்களும் மேலும் மன ஈடுபாட்டுடன் ஒத்துழைக்க வேண்டுகிறோம். இக் கோயில்வழி நாகரிக வளர்ச்சியை விரிவுபடுத்தி வெளியிட்டு, தமிழகச் சமய நாகரிக வளர்ச்சியில், நகரத்தார்களின் பங்கு எத்துணைச் சிறப்பும் பெருமையும் ஒப்புயர்வற்ற தன்மையும் உடையது என்பதை உலகிற்கு உணர்த்த இம்முயற்சி உதவும்.

கோயில்வழி நாகரிகம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சமயச் சார்பு மிக்கவர்கள். அவர்களுடைய சிவ நெறி வாழ்வு மிகவும் அழுத்தமானது. அதனுடன் சமயப் பொறுமையும் எல்லாச் சமய நெறிகளையும் தமது நெறிக்கு ஒப்பப் பேணும் பெருந்தன்மையும். பிற சமூக மக்களுடனும் இரண்டறக் கலந்து வாழும் இயல்பும் உடையவர்கள். பழக்க வழக்கங்களில் பழமையை எளிதில் விட்டு விடாத இவர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள தொன்மைமிக்க தமிழ் நாகரிகத்தை, இடுக்கண் மிகுந்த இடைக்காலத்திலும் போற்றிக் காத்து, அவற்றை இன்றளவும் கைக்கொண்டு வருகின்றனர். அதனால், தமிழர் வரலாற்றையும் மிகத் தொன்மை வாய்ந்த திராவிட நாகரிகத்தையும் ஆராய விரும்பும் வரலாற்று அறிஞர்களுக்கு, நகரத்தார்களின் வரலாற்று அறிவு மிக இன்றியமையாதது என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

நகரத்தார் வாழ்வும் சமயமும்

நகரத்தார்களின் வாழ்வு கோயிலை மையமாக-நடுநிலையாகக் கொண்டது. நகரத்தார் வாழும் ஒவ்வோர் ஊரிலும் அவர்களுக்கென ஒரு நகரக் கோயில் உண்டு. அவ்வூரில் வாழும் ஒவ்வொரு நகரக் குடும்பமும் அக்கோயிலின் உறுப்பினர் அல்லது புள்ளி ஆவர். ஆண்டு தோறும் அக் கோயிலுக்கு அவர்கள் ''இறை'' அல்லது 'புள்ளிவரி' கட்டுகின்றனர். அவ்வருமானத்தைக் கொண்டு அக்கோயில் பூசை, திருவிழா, மேற்பார்வைச் செலவுகள் நடைபெறுகின்றன.

இவர்கள் ஒன்பது நகரக் கோயில்களின் வழி வந்தவர்களாக, அக்கோயில்களின், உட்பிரிவுகளும் அடங்கிய இருபத்திரண்டு பிரிவுகளைச் (கோத்திரம்) சார்ந்தவர்களாகத் தங்களை மதிக்கின்றனர். திருமண அழைப்பிதழில், தாம் இன்ன கோயில் வழியினர் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக, அக்கோயிலின் இறைவன்-இறைவியின் பெயரைக் குறிப்பிட்டு, அத் 'தெய்வத்தின், திருவருளால் நிகழும் திருமணத்திற்கு வருக' என்று எழுதுவர். 'இசை பிடிமானம்' என்று திருமணத்தின் போது எழுதும் முறிச்சுவடியிலும் மணமகனும் மணமகளும் எவ்வெப்பிரிவினர் என்று சுட்டிக் காட்டுதல் தொன்றுதொட்ட மரபாகும். திருமணத்தின்போது அவர்கள் சார்ந்திருக்கின்ற கோயிலிலும் முன்கூட்டித் திருமணம் நடைபெறுவதைப் பதிவு செய்வர். அவ்விரு கோயில்களிலிருந்தும் மணமக்களுக்கு மாலைவரும். எத்துணைப் பெரும் பெரும் மாலைகளைக் கடை

4a

களிலே பெற்றுவிடக்கூடிய வாய்ப்புடையவர்களாயினும், இக் கோயில் மாலைகள் வாராது நகரத்தார் வீடுகளில் திருமணம் நடைபெறுதல் இல்லை.

இங்ஙனம் சார்ந்திருக்கும் கோயிலால் ஒன்பது வகையும் உட்பிரிவுகளுமாகப் பிரியும் நகரத்தார் தாம் வாழும் ஊரின்கண் உள்ள நகரக் கோயிலின் புள்ளிகள் என்ற முறையில் ஒன்றுபட்டு விடுகின்றனர். வேற்றுமையிடையே ஒற்றுமைகாண விழைவார்க்கு இது தக்கதோர் எடுத்துக்காட்டாகும்.

சாவிலும்கூடப் 'புள்ளிவரி' முழுதும் கட்டியவரா என்று கணக்குப் பார்த்துத்தான் ஈமச்சடங்குகளை முடிக்கின்றனர். கோயில் பாக்கியை வசூலிப்பதில் நகரத்தாரிடம் அத்துணைக் கட்டுப்பாடு உண்டு. இங்ஙனம் வாழ்விலும் சாவிலும் 'கோயில்' மிக முக்கியமான இடம் வகிக்கிறது. வரலாறு காலப்போக்கில் எவ்வளவோ மாறுதல்களைப் படைக்கிறது. ஆட்சிகள் மாறி மாறி அமைகின்றன. ஆயினும் ஆண்டவனையே தங்களுடைய ஆள்வோனாகவும், கோயிலையே தங்களுடைய வாழ்வுக்கு நடுநிலை மன்றமாகவும், அக்கோயிலுக்குப் புள்ளிவரி, ஆஸ்தி வரி, திருவிளக்குக் காணிக்கை முதலியன கட்டுதலையே, அக்கோயிற் குடிமக்களாகிய தங்களின் முதற்கடமையாகவும் இவர்கள் மேற்கொண்டொழுகுகின்றனர். இது ''யாமார்க்கும் குடியல்லோம்'' என்றும் 'தாமார்க்கும் குடியல்லாச் சங்கரன், நற்சங்க வெண்குழை, ஓர் காதிற்கோமாற்கே யாமென்றும் மீளா ஆளாய்' வாழ்வோம் என்றும் அப்பரடிகள் கூறிய உயரிய வாழ்வுமுறை யாகுமன்றோ?

வணிகமும் சமயமும்

நகரத்தார், தாம் மேற்கொண்ட வணிகத்துறைக்கும் கோயிலையே நடுநிலைப் பீடமாகக் கொண்டனர். ஓர் ஊரைச் சார்ந்த பெருமக்களின் சமூகத்தொடர்புடைய கூட்டங்களும் நகரக் கோயில்களிலேயே நடைபெறும். கடல்கடந்த நாடுகளிலும் இவர்களுடைய வணிகக் கூட்டங்கள் இரங்கூன் ஆறரை முதலிய கோயில் இடங்களிலேயே கூடுவது மரபு. முறைவழுவாமல் காக்கும் குடியாட்சி முறையில் பலருங்கூடி, பெருஞ்செல்வர் முதல் பரம ஏழைவரை பிரதிநிதியாகப் பங்கு கொள்ளும் சமவுரிமை பெற்று, சமூகக் கட்டுதிட்டங்களை வகுக்கின்ற சட்டமன்றமும் (Legislature); ஆட்சி மன்றமும் (Executive); வழக்குகளும் சமூகக் கட்டுப்பாட்டை மீறுதல் போன்ற குறைகளும் கண்டவிடத்து அவற்றையெல்லாம் 'ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய' 'மூத்தவர்கள்' பலர் கூடிப் பஞ்சாயத்து செய்து, தீர்த்துவைக்கும் நீதிமன்றமும் (Judiciary) அந்தந்த ஊர் நகரக்கோயிலையே இடமாகக் கொண்டு, நகரத்தார் சமூக அளவில் நடத்தப்பட்டு வருகிறது. இங்ஙனம் வாழ்வோடும் வாணிகத்தோடும் சமுதாய வளர்ச்சியோடும் கோயிலைப் பின்னிப் பிணைத்துக்கொண்டு இயங்குவதை ஆராய்ந்தால், நகரத்தார் 'கோயில் வழி நாகரிகம்' உடையவர் என்பது தெளிவு.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஔவைப் பெருமாட்டியின் வாக்கு. இதற்குப் பொருந்தும்படி, கோயிலும் அதைச் சார்ந்த குடியுமாக நகரப்பெருமக்கள் வாழ்கின்றனர். காவிரிப்பூம்பட்டினத்தில் இவர்கள் வாழ்ந்த காலத்தில் தாம் வாழ்ந்த ஊர்ப்பெயர்களால் அரும்பூர் கிழார், பெருமருதூருடையார், சிறு குளத்தூருடையார், கழனி நல்லூருடையார் என்றாற்போல அழைக்கப்பட்டனர் என்று தெரிகிறது. பின்னர்க் காவிரிப் பூம்பட்டினத்தைக் கடல் கொண்டதாலும், சோழ மன்னனுடன் மனவேறுபாடு கொண்டதாலும் பாண்டிய மன்னனிடம் இசைவு பெற்றுக்கொண்டு, அப்பாண்டிய நாட்டின் வறட்சிமிக்க பகுதியொன்றில் இவர்கள் குடியேறினர். முதலில் இளையாத்தங்குடியில் இவர்கள் தங்கினர். காலப்போக்கில் இனப்பெருக்கம் காரணமாக ஏழு ஊர்களில் குடியேறி, அங்குத் தமக்கு என்று கோயில் கட்டிக்கொண்டு வாழ்ந்தனர். அதன் பிறகு பதினாறாம் நூற்றாண்டுத் தொடக்கம் முதல் முகமதியப் படையெடுப்பும், பாளையக்காரர்களின் கலகங்களும், சிற்றரசர்களின் சண்டைகளும் ஏற்பட்டதால் தங்களுடைய உரிமையிலிருந்த கோயில்களை விட்டும் சிலைகளையும் பண்ட பாத்திரங்களையும் மண்ணில் புதைத்தும் வெளியேறிச் சுற்றி

யிருந்த பல ஊர்களில் பரவி அங்கங்கு வாழ்ந்த நாட்டுக் குடிகளுடன் சேர்ந்து வாழ்வாராயினர். அக்காலத்தில்தான் 'தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் என்று கணக்கிடப்பட்டது. இவர்கள் பர்மா மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகளுக்குச் சென்றபோது, அங்கும் ஊர்தோறும் கோயில் கட்டிக்கொண்டு, அறக்கட்டளைகள் ஏற்படுத்தி வாழ்ந்தனர். வாணிகத் தொடர்பான கூட்டங்களைக் கோயில்களிலேயே நடத்தி விதிமுறைகளை வகுத்துக் கொண்டனர்.

ஒன்பது நகரக் கோயில்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும், புள்ளி விவரங்களையும் இங்கே காண்போம்.

இளையாற்றங்குடிக் கோயில்

இவ்வூர் 'இளையாத்தங்குடி' என்று, இன்று மருவி வழங்குகிறது. இராமனுதபுரம் மாவட்டத்தில், திருப்பத்தூர் வட்டத்தில் இவ்வூர் உளது.* கீழச்சிவல் பட்டியிலிருந்து 3. கி. மீ. தொலைவில், ஆவனிப்பட்டிச் சாலையில் உள்ள இவ்வூர், முன்னுளைய சமீன் கிராமமாகும்.

தொன்மைச் சிறப்பு

காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து, குடியேறிய ஏழு பிரிவினரும் முதற்கண் இவ்வூரிலேதான் ஒன்ருக, ஒரே காலத்தில் குடியேறினர் என்பது வரலாறு. இங்கிருந்து ஏனைய ஆறு பிரிவினரும் ஆறு ஊர்களுக்குப் பிரிந்து சென்றனராதலின், 'ஏழு கோயில் நகரத்தார்கள்' என்ற பெயர் ஏற்பட்டது. பிறகு மேலும் இரு பிரிவினர் (பிள்ளையார்பட்டிக் கோயில், இரணிக்கோயில் என்ற இரு பிரிவினர்) தனித்தனி ஊர்களுக்கு இங்கிருந்து பிரிந்துபோகவே, இன்று 'ஒன்பது கோயில் நகரத்தார் என்ற பெயர் ஏற்பட்டு வழங்குகிறது. பொதுவாகச் செட்டியார்களை 'இளையாத்தங்குடிச் செட்டியார்' என்று குறிப்பிடுதல் உண்டு. பாடுவார் முத்தப்ப செட்டியார் 'இங்கிலீஷ் கொடி பறக்கவே, இளையாத்தங்குடி சிறக்கவே' என்று பாடியதும் இதனை வலியுறுத்தும். இதில் 'இளையாத்தங்குடி' என்பது நகரத்தார் அனைவருக்கும் உரிய பெயராக அமைக்கப்பட்டுள்ளமை காண்க.

இளையாத்தங்குடியில் தங்கியவர்கள் ஏழு பிரிவினராவர். அவர்கள் முறையே ஒக்கூருடையார், அரும்பூர்கிழார், பெருமருதூருடையார், கழனி வாசற்குடியார், கிங்கிணிக் கூருடையார், பேரசெந்தூருடையார், சிறு சேற்றூருடையார் என்பவராவர். பிற்காலத்தில் இங்கிருந்து பிரிந்து சென்றவராகிய திருவேட்பூருடையார் (பிள்ளையார்பட்டியாரும் இரணிக்கோயிலாருமாகிய அண்ணன் தம்பியர் இருவரும்) என்ற பிரிவினரும் நெடுநாள் இளையாத்தங் குடியிலேயே வாழ்ந்தனர்.

மேற்கண்டவற்றில் 'அரும்பூர் கிழார்' என்ற பிரிவு, இன்று 'பட்டண சாமியார்' என்று அழைக்கப்படுகின்றது. இதை ஆராயுமிடத்து, சிவநெறிச் செல்வராகிய திருவெண்காடர் என்னும் பட்டினத்தார் காலத்திற்குப் பின் இக் குலத்தவர் 'பட்டணசாமியார்' என்று அழைக்கப்பெற்றனர் என்று விளங்குகிறது.

இளையாத்தன்குடிக் கோயிலார் ஏழு வகுப்பினரும் திருவேட்பூருடையார் என்ற இரு சகோதரர்களும் பல தலைமுறைகள் இவ்வூரிலேயே வாழ்ந்தனர். இவர்கள் ஏழு பேரும் தத்தம் வகுப்புக்கு ஒவ்வோர் ஊருணியும் பிள்ளையார் கோயிலும் அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். திருவேட்பூருடையாரும் தங்கட்கெனப் பொதுவில் ஓர் ஊருணியும் பிள்ளையார் கோயிலும் இங்கு அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். இவர்கள் அனைவரும் நித்திய கலியாணியம்மையை உடன் கொண்டு விளங்கும் கைலாசநாதரை வழிபட்டு வந்தனர். மேலும் 'எம்பெருமான் விண்ணகரத்திலுள்ள திருமால்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கும் திருமால் ஆலயம் (பெருமாள் கோயில்) ஒன்றையும் இவர்கள் இங்குக் கட்டியுள்ளனர். செல்வச் செழிப்புமிக்க காலத்தில், சிற்பத் திறன்மிகுந்த கோயில்களையும், குளங்களையும், நந்தவனங்களையும், பசுமடங்களையும் நகர விடுதிகளையும் கோடிக்கணக்கில் செலவிட்டு, இவ்வூரை அழகு படுத்தியுள்ளனர்.

*நகரக் கோயில்கள் ஒன்பதுமே இராமநாதபுர மாவட்டத்திலேயே—அதுவும் திருப்பத்தூர் வட்டத்திலேயே—இருப்பது குறிப்பிடத்தக்கது.

இளையாத்தங்குடிக் கோயில் தேவஸ்தானத்தின் உதவியாலும், அரசினரின் ஒத்துழைப்பாலும் கல்வி நிலையங்களும், மருத்துவ மனைகளும், பூங்காக்களும், மற்றும் பொதுநல வசதிகள் பலவும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. சாலைகளும் சோலைகளும் நிறைந்து இவ்வூர் இனியதொரு காட்சி நல்குகிறது. இறைவனை வழிபடவும், ஓய்வு பெறவும், சுற்றுலாச் செல்லவும் ஏற்றதோர் இடமாக இஃது இலங்குகிறது.

ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடம் 65-வது பட்டம், ஜகத்குரு ஸ்ரீ மஹாதேவேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்களுடைய (1814-1851) சமாதிக்கோயில் இங்கே இருக்கிறது.

இளையாற்றங்குடி நகரக் கோயில் நிருவாகம் 1926-ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதி மன்றத்தாரால் ஏற்படுத்தப்பட்ட திட்டப்படி (Scheme) செவ்வனே நடைபெற்று வருகிறது. பரம்பரை தருமகர்த்தாக்கள் என்ற முறையில் இருவரும்; நியமனம் செய்யப்படும் மூவரும் என ஐவர் கொண்ட குழுவினர் (Board of Trustees) இக்கோயில் நிருவாகத்தை நடத்துகின்றனர். எல்லாத் தருமகர்த்தாக்களும் இந்த . இளையாற்றங்குடி நகரக் கோயிலைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்பது நீதிமன்ற ஆணையாகும்.

(கேரள சிங்க வளநாடாகிய கல்வாச நாட்டில் இளையாத்தன்குடியான குலசேகரபுரமுடையார், ஏழுவகைப் பிரிவினர்க்கும் இக்கோயில் உரியதாகும். இங்கு எம்பெருமான் விண்ணகரத் திருக்கோயிலில் (திருமால் கோயில்) கல்வெட்டுக்கள் சில உள்ளன.)

இறைவன் பெயர்: கயிலாசநாதர். அம்மை பெயர்: நித்திய கலியாணி. இளையாத்தங்குடிக் கோயில் புள்ளிகள் மொத்தம் 3338 ஆகும், இவர்கள் பரவி வாழும் ஊர் 64 ஆகும்.

மாற்றூர்க் கோயில்

இது சித்தர்களால் பூசிக்கப்பட்ட புகழ் வாய்ந்தது என்பர். இறைவன் பெயர்; ஐந்நூற்றீசர், இறைவி பெயர்: பெரியநாயகி. (நகரத்தார்களால் பதினாறு இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு, மிக உயர்ந்த முறையில் திருப்பணி செய்து, சருவதாரி ஆண்டு தைத்திங்கள் 20-ஆம் நாள் (2—2—1949) அன்று சிறப்பாகக் கும்பாபிடேகம் செய்யப் பெற்றுள்ளது.)

இது 'மாத்தூர்க் கோயில்' என மருவி வழங்கும். காரைக்குடிக்குக் கிழக்கே நான்கு கல் தொலைவில் இலுப்பைக்குடி இருக்கிறது. இலுப்பைக்குடிக்கு வடகிழக்கில் இரண்டுகல் தொலைவில் மாத்தூர்க் கோயில் இருக்கிறது.

இக் கோயிலைச் சார்ந்த பிரிவினர் முறையே உறையூருடையார், அரும்பாக்கூருடையார், மணலூருடையார், மண்ணூருடையார், கண்ணூருடையார், கருப்பூருடையார், குளத்தூருடையார் என்று அழைக்கப்படுவர். 'கேரள சிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரமுடையார்' என்று இவ்வெழுவகைப் பிரிவினரையும் குறிப்பிடுவர்.

(ஐந்நூற்றீசர் என்ற இறைவன் பெயர் கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் 'ஐஞ்ஞூற்றுவர்' என்ற வணிகக் குழுக்களின் பெயரோடு ஒற்றுமையுடையதாகும். மேலும் 'உறையூருடையார்' என்ற பிரிவு, காவிரிப் பூம்பட்டினத்திற்கும் முந்திய சோழர் தலைநகரமாகிய 'உறையூர்' வழி வந்த பெயர் என்று எண்ண இடமேற்படுகிறது.)

மாற்றூர்க் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் 3970. அவர்கள் தங்கி வாழும் ஊர்கள் 59.

வைரவன் கோயில்

'வைரவன்பட்டி' என்ற ஊர் காரைக்குடிக்கும் திருப்பத்தூருக்கும் இடையே பிள்ளையார் பட்டியை அடுத்து இருக்கிறது. அங்கு வைரவன் கோயில் உளது.

இக் கோயிலைச் சேர்ந்த பிரிவினர் முறையே சிறுகுளத்தூருடையார், கழனிவாசலுடையார், மருந்தேந்திரபுரமுடையார் என்

பவராவர். இவர்களுள் சிறுகுளத்தூருடை யார் என்ற பிரிவினர் பெரிய வகுப்பினர் என்றும், தெய்வநாயகர் வகுப்பினர் என்றும் (தெய்யனூர் வகுப்பு) பிள்ளையார் வகுப்பினர் என்றும் மூன்று உட்பிரிவினை உடையவராவர். இவர்கள் மூவரும் சகோதரர்களாவர். 'கேரள சிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டியபுரம் உடையார்' என்று இவர்கள் குறிப்பிடப் படுவர்.

இக் கோயிலைப்பற்றி 'வயிரவன் கோயில் புராணம்' என்ற தலபுராணம் ஒன்று எழுதப் பெற்றுள்ளது. தருமபுர ஆதீனவித்துவான் சேந்தன்குடி வி. நடேசகவிராயர் அவர்களால் இது இயற்றப்பட்டு, தேவிகோட்டை வித்துவச் சிகாமணி வீர. லெ. சிந்நயச் செட்டியாரவர்களால் புதுப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

இக் கோயில் ஆவரணத்துள் ஒரு பிள்ளையார் இருக்கின்றார். இப் பிள்ளையாரையே முக்கியமாகக் கொண்டிருப்பவர் பிள்ளையார் வகுப்பினர் ஆவர். இறைவன் சந்நிதியில் 'தெய்வநாயகர்' என்பார் உருவச்சிலை உளது. இவர் வழிவந்தவர்களே தெய்வநாயக வகுப்பினராவர். பிறிதொரு வகுப்பார் புள்ளியிலும் முறையிலும் பெரியவர்களாக இருந்தமை பற்றிப் 'பெரிய வகுப்பினர்' எனப்பட்டனர். இவர்களனைவரும் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் இவ்வூரிலேயே குடியிருந்து வந்தனர். இக் கோயிலுக்குப் பல இலட்ச ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்து 1894-ஆம் ஆண்டும், 1907-ம் ஆண்டும் இரு கும்பாபிடேகங்கள் நடைபெற்றுள்ளன. இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட விடுதி ஒன்றும் உளது.

இங்கு இறைவன் பெயர் வளரொளி நாதர்; அம்மை பெயர் வடிவுடையம்மை. வைரவன் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் 3285. இவர்கள் வாழும் ஊர்களின் எண்ணிக்கை 57 ஆகும்.

நேமங்கோயில்

குன்றக்குடி கீழச்சிவல்பட்டி வழியில் நேமம் என்னும் சிற்றூர் இருக்கிறது. இது 'நியமம்' என்ற சொல்லின் திரிபாகும். இச் சொல் கோயில் என்ற பொருளையுடையது.

இக் கோயில் செயங்கொண்ட சோழ மன்னனால் கட்டப்பெற்றதாகலின், இங்குள்ள இறைவனுக்குச் 'செயங்கொண்ட சோழேசர்' என்ற பெயர் ஏற்பட்டது. நகரத்தார் முன்பு நேமம், ஆர்க்காடு முதலிய ஊர்களில் வசித்து வந்தனர். இப்போது அங்கிருந்து பிற பகுதி கட்குக் குடியேறிவிட்டனர். மிகப் பழமையான இக்கோயிலை நகரத்தார்கள் ஆறு இலட்ச ரூபாய் செலவில் புதுப்பித்து 1907-ம் ஆண்டு மே மாதம் கும்பாபிடேகம் செய்தனர். மேலும் நகரத்தார்களால் அழகிய நாச்சியம்மன்கோயில், பிள்ளையார்கோயில், நந்தவனம், பசுமடம் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் எழுதிக்கொள்ளும் இசை பிடிமானத்தில் ''கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில், தேனாறுபாயும், இளநலமுடையார்'' என்று குறிப்பிடுவதனால் இவர்கள் 'இளநலமுடையார்' என்று அழைக்கப்படுவதுமுண்டு என்று தெரிகிறது.

பூங்குன்ற வேலங்குடியிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து, தேனாறுபாயும் இளநலம் உடைய நகரத்தார்களுக்கு கி. பி. 7-ஆம் நூற்றாண்டில், சவுந்தரபாண்டியனால் நேமம் விட்டுக்கொடுக்கப்பட்டது என்று தெரிகிறது. இக் கோயிலுக்கு அண்மையிலுள்ள ஆர்க்காட்டில், தேனாறு தோன்றுமிடத்தில் உள்ள மதுநதீசுவரர் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்தும் செவிவழிச் செய்திகளிலிருந்தும் இக் கோயில் மிகப் பழமையானது என்று தெரிகிறது. முன்பு இங்கும் கல்வெட்டுக்கள் இருந்திருக்க வேண்டும்.

பாடுவார் முத்தப்பச் செட்டியார் இந் நேமங் கோயிலைச் சார்ந்தவரே யாவார். அவர் செயங்கொண்ட சோழீசர் பேரில் பிள்ளைத் தமிழ், பதிற்றுப்பத்தந்தாதி, ஊசல், சதகம் போன்ற நூல்களைப் பாடியுள்ளார். நகரத்தார்களைக்கொண்ட தருமகர்த்தாக் குழுவினர் (Trustees) இக்கோயிலைப் பேணிவருகின்றனர்.

தொன்மைமிக்க நூல்களில் வழங்கும் கோயில் என்ற பெயருடைய 'நியமம்' என்பதை, இதற்குக் குறிப்பிட்டு வழங்குகின்றனர்.

காட்டாத்தங்குடிக்கும் நேமத்துக்கும் நடுவேயுள்ள நாய்ப்பரப்பாமலை என்ற மண் மேட்டில், நேமங்கோயிலைச் சேர்ந்த விக்கிர சங்களைத் திப்புசுல்தான் காலத்தில் புதைத்து வைத்தனர் என்பர். 1950 அளவில், அவை மாடு மேய்ப்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, காட்டாத்தங்குடி ஐயனார் கோயிலில் வைத்து வழிபடப்பட்டு வருகின்றன.

இங்குள்ள இறைவன் பெயர்: செயங் கொண்ட சோழேசர். இறைவி பெயர் : சவுந் தரநாயகி. இக் கோயிலைச் சார்ந்த 849 புள்ளிகளும் இன்று 20 ஊர்களில் வாழ்கின் றனர்.

இலுப்பைக்குடிக் கோயில்

இலுப்பைக்குடி என்னும் சிற்றூர் காரைக் குடிக்கு அருகே அரியக்குடி மாத்தூர்ச்சாலையில் உளது. நகரத்தார்களால் கட்டப்பட்டுத் திருப்பணி செய்யப்பட்ட கோயில். இங்கு அந்தணர் உறையுள், பசுமடம், விடுதி, நந்த வனம், ஊருணி யாவும் அமைக்கப்பட்டுள் ளன. முதற்கண் இக்கோயில் நகரத்தாரும் இவ்வூரில் குடியிருந்து, பிறகு பிற ஊர்களுக்குப் பரவிச் சென்றனர் என்று தெரிகிறது.

பூங்குடிக் கூராண்டான் குடும்பத்தார் ரூபாய் முப்பதினாயிரம் செலவில் ஓர் ஊருணி கட்டித் தெப்பத் திருவிழா நடத்தி வருகின் றனர்.

இப்பிரிவினர் 'சூடாமணிபுரமுடையார்' என்று முன்பு அழைக்கப்பட்டனர். இசை பிடிமானத்தில் 'கேரள சிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், இலுப்பைக் குடியான புக ழிடங் கொடுத்த பட்டணத்தில், சூடாமணி புரமுடையார்' என்று இவர்கள் குறிக்கப் படுவர்.

இறைவன் பெயர்: தான்தோன்றியீசர். இறைவி பெயர்: சவுந்தரநாயகி. இக் கோயிலைச் சார்ந்த 1609 புள்ளிகள் வாழும் ஊர்கள் 32 ஆகும்.

சூரைக்குடிக் கோயில்

இவ்வூர் பள்ளத்தூர்க்குத் தெற்கே 2 கல் தொலைவில் குன்றக்குடிச் சாலையில் உளது. 'சூரக்குடி' என மருவி வழங்குகிறது.

'புகழ் வேண்டிய பாக்கமுடைய நகரத் தார்' என்று இவர்கள் அழைக்கப்பட்டனர். 'பாக்கம்' என்பது கடற்கரை சார்ந்த ஊர் களுக்குப் பெயராக வரும். பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என்ற சங்ககாலப் பெயர்களை யும் சேப்பாக்கம், மீனம்பாக்கம் என்ற தற்காலப் பெயர்களையும் காண்க. ''கேரள சிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிக நாராயணபுரத்தில், புகழ் வேண்டியபாக்க முடையார்' என்று இவர்களைப் பற்றி இசை பிடிமானத்தில் குறிக்கப்படுகிறது.

அந்தணர் உறையுள், பசுமடம், நந்த வனம், விடுதி, ஊருணி முதலியன ஏற்படுத்தப் பட்டுள்ளன. 1898-இல் இரண்டு இலட்ச ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்து, கும்பாபிடேகம் நடத்தியுள்ளனர்.

இறைவன் பெயர்: தேசிகநாதர். இறைவி பெயர்: ஆவுடைநாயகி. இக் கோயிலைச் சார்ந்த மொத்தப் புள்ளிகள் 757. வாழும் மொத்த ஊர்கள் 24.

வேலங்குடிக் கோயில்

கோட்டையூரின் ஒருபகுதியாக விளங்கு வது வேலங்குடிக் கோயில்.

இதுவும் மிகப் பழமை வாய்ந்த கோயில்.

இதைப் பிரித்து, இருந்த இடத்திற்குத் தென் திசையில் தள்ளி, புதுக்கோயிலாகத் திருப்பணி செய்துள்ளனர். 1937-ஆம் ஆண்டு கும்பாபிடேகம்சிறப்பாகநடைபெற்றது. சிவன் கோயிலுக்கு மேற்கே, மகாலட்சுமி உடனுறை தேசிய நாராயணப் பெருமாள் கோயில் திருப் பணி செய்யப்பட்டு 1937-இல் கும்பாபிடேகம்

செய்யப்பெற்றது. மேலும் காமாட்சியம்மை உடனுய கண்டீசுவரர் கோயிலும் அந்தணர் உறையுளும் பசுமடமும், நந்தவனமும் இவண் உள.

இவர்கள் கழனிநல்லூர் உடையார் என்று அழைக்கப்பட்டவர்களாவர். ''கேரளசிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில், வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில் கழனிநல்லூருடையார்'' என்பது இவர்களைப் பற்றிய இசைபிடிமான வாசகம்.

இறைவன் பெயர்: கண்டீசுவரர். இறைவி பெயர்: காமாட்சியம்மை. இக் கோயிலைச் சார்ந்த மொத்தம் புள்ளிகள் : 31. இவர்கள் தங்கு வாழும் ஊர்கள் : 4.

இரணியூர்க் கோயில்

இரணியூர், கீழைச்சிவற்பட்டிக்கு அருகே உளது. 'திருவேட்பூருடையார்' என்ற அண்ணன் தம்பியர் இருவரில் இரணியூர்க் கோயிலார் மூத்த சகோதரர் வழி வந்தவர் ஆவர்.

இது பழமை மிக்க கோயிலாகும். இதன் கருப்பக் கிருகத்தின் நாற்புறச் சுவர்களிலும் எண்ணற்ற கல்வெட்டுக்கள் வெட்டப்பெற்றிருந்தன. மேலும் ஊருக்கு மேற்றிசையிலும் கீழ்த்திசையிலும் பல கல்வெட்டுக்கள் இருந்தன. அவற்றையெல்லாம் அரசினரின் கல்வெட்டு ஆய்வாளர் படிஎடுத்துள்ளனர். அவை அறுநூறுக்கு மேற்பட்ட உயர்ந்த அறச்செயல்களைக் குறிப்பிடுகின்றன. அவற்றை இக் கோயில் நகரத்தார் படியெடுத்து வாங்கியுள்ளனர்.

இறைவன் கோயில் கருவரைச் சுவரில் கி.பி. 1501-ஆம் ஆண்டில் கல்வாச நாட்டில் இளையாத்தன் குடியான குலசேகரபுரத்தில் திருவேட்புடையான் என்ற ஒருவருக்கு, பத்திர காளியம்மன் கோயிலுக்குத் தென்புறம், ஓர் அம்மன் கோயிலை அமைத்து வழிபடுவதற்கு, இரணியூரில் வசிப்பவர்களால் சுதந்திரமாகக் கொடுக்கப்பெற்றிருக்கிறது என்று குறிக்கப்பட்ட கல்வெட்டு இருந்தது என்பதைச் சென்னைக் கல்வெட்டு ஆய்வாளர்கள் பதிவு செய்துள்ளனர். (1926-ஆம் ஆண்டு கல்வெட்டு எண்-3). இக் கல்வெட்டுச் செய்தியையும், நம் இசை பிடிமானங்களில் எழுதும் ''கல்வாச நாட்டில் இளையாத்தன் குடியான குலசேகரபுரத்தில், இரணியூர் மருதங்குடியான இராச நாராயணபுரத்தில், இரணியூர்த் திருவேட்பூருடையார்' என்ற செய்தியையும் ஒப்பிட்டுக் காண்க. இதிலிருந்து, கி.பி. 16-ம் நூற்றுண்டுத் தொடக்கத்தில், இவ்விரணியூர்க் கோயிலாரும் பிள்ளையார்பட்டிக் கோயிலாரும் இளையாத்தன்குடியிலிருந்து தனித்தனியே பிரிந்து சென்றனர் என்றும் அதுமுதல் ஏழு நகரக்கோயில் பிரிவுகள்' ஒன்பது நகரக் கோயில்களாகப் பிரிந்தன 'என்றும், இந் நகரத்தார் ஏழு கோயில் பிரிவினராக இருந்தது கி. பி. பதினாறும் நூற்றுண்டிற்கு முற்பட்ட செய்தி யென்றும் தெளிவாக அறியலாம்.

(இக் கோயிலை சுமார் பனிரெண்டு இலட்ச ரூபாய்கள் செலவழித்து நகரத்தார் புதுப்பித்துள்ளனர். 1944, ஜனவரியில் சிவன் கோயில் கும்பாபிடேகம் பெருஞ் செலவிட்டுச் சிறப்புடன் நடத்தப்பெற்றது.) மேலும் நீலமேகப் பெருமாள் கோயில் திருப்பணியையும் நகரத்தார்கள் செய்துள்ளதுடன், அந்தணர் உறையுள் ஒன்றும் அமைத்துள்ளனர்.

இங்குள்ள இறைவன் பெயர்: ஆட்கொண்டநாதர். இறைவி பெயர்: சிவபுரந்தேவி. இரணியூர்க் கோயிலைச் சார்ந்த மொத்தப் புள்ளிகள் : 1430. இவர்கள் 36 ஊர்களில் பரவி வாழ்கின்றனர்.

பிள்ளையார்பட்டிக் கோயில்

காரைக்குடி-திருப்பத்தூர் சாலையில் குன்றக்குடிக்கும், வயிரவன் பட்டிக்கும் இடையே பிள்ளையார்பட்டி இருக்கிறது. இவர்கள் 'திருவேட்பூருடையார்' என்ற அண்ணன் தம்பியர் இருவரில் இளைய சகோதரரின் வழிவந்தவர் ஆவர். இவர்களும் மூத்த சகோதரரான இரணியூர்கோயிலாரும் கி. பி 16 ஆம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் இளையாத்தங்குடியிலிருந்து பிரிந்து வந்தவராவர்,

இது பழமை மிக்க கோயிலாகும். இது பல்லவமன்னர்களின் திருப்பணிகளில் ஒன்று என்றும், இங்குள்ள குடைவரைக் கோயில் 1300 ஆண்டுகட்கு முந்திய தென்றும், திரு சா. கணேசன் அவர்கள் இக்கோயிலைப்பற்றி எழுதியுள்ள ஆராய்ச்சி நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். பிள்ளையார்பட்டிக்கு 'இராசநாராயணபுரம்', மருதூர் என்ற பெயர்கள் பழங்கல் வெட்டுக்களில் உண்டு. நம் இசை பிடிமானங்களில் கல்வாசநாட்டில், இளையாத் தன்குடியான குலசேகரபுரத்தில், இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில், பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்' என வருவது கல்வெட்டுப் பெயர்களுடன் ஒத்துள்ளதைக்காண்க. மேலும், இக்கோயிலில் காணப்படும் பதினொரு கல்வெட்டுக்களில், ஒன்றின்கண் "காரிகுடி ஐந்நூற்றுவர் பெருந்தெருவில் வசிக்கும் நகரத்தார், மருதங்குடியும் இவ்வூர் வயலும் விலைக்குப் பெற்றுக்கொண்டிருக்கிற பிடிபாட்டிற்கேற்ப நாட்டிற்குரிய விதிப்படி கடமை கொள்ளும்படியும், இங்கே இராசநாராயணபுரம் என்ற பெயருடன், ஒரு நகரம் அமைத்துக் குடியேறும்படியும் உரை செய்தோம்," என்று காணப்படுகிறது. இசை பிடிமானங்களில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் என்று இவர்கள் இன்றும் குறிப்பிடுகின்றனர். இரணிக்கோயில் இசை பிடிமானத்திலும், அவ்வாறே குறிப்பிடுகின்றனர். இது இவர்கட்கு இருந்த இளையாத்தங்குடித் தொடர்பைக் காட்டுகிறது. மேலும் பண்டைய மரபு வழியாக, இளையாத்தங்குடியிலும் திருமணப் பதிவு செய்து பாக்கு வைத்து திருமணமாலை கொள்ளுகிறார்கள்.

பிள்ளையார்பட்டிக் குடை வரைக் கோயிலும், அதில் ஆறடி உயரத்தில் சமைக்கப்பட்டுள்ள கற்பகப்பிள்ளையாரான தேசிக விநாயகப்பிள்ளையாரின் திருவுருவமும் திருவீசர் என்னும் திருவீங்கைக்குடித்தேவர் இலிங்கவுருவமும் பல்லவமன்னர்களால் செய்யப்பட்ட முதல் திருப்பணியாகும். இதனைப் பாண்டியரின் திருப்பணி என்பாரும் உளர். பின்னர், நகரத்தார்களால் மும்முறை இங்கு பெருஞ்செலவிட்டுப் பல திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. நகரத்தார்களைக் கொண்ட தருமகர்த்தாக் குழுவினர் (Trustees) இக்கோயிலை நிருவகித்து வருகின்றனர்.

1820ஆம் ஆண்டுவரை நகரத்தார்கள் இவ்வூரில் பெருந்தொகையினராக வாழ்ந்தனர். பின்னர் கொடிய நோய் பரவிப் பாதிக்கப்பட்ட காலத்தே இவர்கள் மிதிலைப் பட்டி, செல்லூர், குழிபிறை போன்ற ஊர்கட்குக் குடியேறினார்கள்.

ஆறுமுகப்பெருமான் திருவுருவம் குன்றக் குடியில் மயில்வாகனத்தில் அமர்ந்தநிலையிலும் இங்கு நின்ற நிலையிலும் காணப்படுகின்றது.

இங்கு பிள்ளையார் சதுர்த்தி பத்து நாள் நடைபெறும் மிகப்பெரிய திருவிழாவாகும். இவ்விழா ஆவணி மாதத்தில் வளர்பிறைச் சதுர்த்தியன்று பத்தாம் நாளாக முடிவடையும். குகைக் கோயிலிலுள்ள கற்பக விநாயகர் இரண்டு கரங்களுடையவராக விளங்குவது தனிச்சிறப்பாகும். அவர் கையில் சிவலிங்கம் விளங்குகிறது. பிள்ளையாருக்குத் தனியே தமிழகத்தில் விழா நடப்பது இங்கு மட்டுமேயாம்.

இக்கோயிலில் பல இலட்ச ரூபாய்கள் செலவிட்டு நகரத்தார் திருப்பணிகள் பல செய்துள்ளனர். கி பி. 1899 ஜனவரி மாதமும் 1933 ஜூன் மாதமும் 1951 பிப்ரவரி மாதமும் மூன்று கும்பாபிடேகங்களைச் செய்துள்ளனர். மேலும் அலுவலாளர் இல்லங்கள், நகரவிடுதி, பெண்கள் விடுதி, பசுமடம், பள்ளிகள், தண்ணீர்ப் பந்தர் பல நகரத்தார்களால் இங்கு ஏற்படுத்தப் பட்டுள்ளன. இங்குள்ள கொங்கு நாச்சியம்மன் கோயில், பெரியகருப்பன் கோயில், மருதங்குடி ஐயனார் கோயில்களும் நகரத்தார் கட்டியவையேயாகும்.

இது கற்பக விநாயகரை முக்கியமாகக் கொண்ட தலமாகும். இறைவன் பெயர்: திருவீசர், இறைவி பெயர்: சிவகாமவல்லி. மேலும் மற்றும் ஓர் இறைவன் பெயர்: மருதீசர். இறைவி பெயர்:வாடாமலர்மங்கை. மொத்தம் புள்ளிகள் 1990. இவர்கள் பரவி வாழும் ஊர்கள் 45.

—தமிழண்ணல்

சங்கப்பகுதி

சென்னை நகரத்தார் சங்கம்

தர்மமிகு சென்னையில் வாழ்ந்துவரும் நகரத்தார் நலனைப் பேணவும், பொருளாதார முன்னேற்றம் கருதியும் இச் சங்கம் இளைஞர் பலரது முயற்சியால் உருவாயிற்று.

திருவாளர்கள் நாக. முத்தையா, அரு. பழ. அருணாசலம், அ. தியாகராசன், வே. திருநாவுக்கரசு, மு. அழகப்பன், இராமசாமி சேதுராமன், சுப. தண்ணீர்மலை மெய் ஊடையப்பன் ஆகியோர் 15-8-63-ல் பவழக்காரத் தெரு 32-ம் இலக்கமுள்ள கட்டிடத்தில் கூடி இச்சங்கத்தை நிறுவினர்.

22—9—63-ல் இதற்குச் 'சென்னை நகரத்தார் சங்கம்' என்று பெயரிட முடிவாயிற்று. திரு. மு. அழகப்பன், திரு. சொ. சொக்கலிங்கம் B.COM. இருவரையும் சங்கத்தைப் பதிவு செய்யும் வரை இடைக்காலப் பொருளாளர்களாக நியமித்தனர். பிறகு திரு. நாக. முத்தையா, திரு. அ. தியாகராசன் இருவரும் செயலாளர்களாகவும்; திரு. பிச. பழ. மெய்யப்பன், திரு. மு. அழகப்பன் இருவரும் பொருளாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிராவயல் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், இளமை முதல் பொதுப் பணியில் ஈடுபாடு கொண்டவர்கள்; பர்மாவில் கம்பை தனவைசியர் "கல்விக்" கழகத்தில் கல்வி மணம் கமழச் செய்தவர்கள். இளைஞர் பலரின் ஒருமித்த வேண்டுகோட்கிணங்கித் தலைவராக இருக்க அப்பெருமகனார் இசைந்தார்கள். திரு. கண. இராமநாதன் செட்டியாரவர்களும் திரு, S. R. M. PL. சுப்பிரமணியன் செட்டியாரவர்களும் துணைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். மேலும் சட்ட அமைப்பியல் குழு நியமித்து, விதிமுறைகள் வரையப்பெற்று 26—3—'64-ல் பதிவு செய்யப்பட்டது. (பதிவு எண்; 43/1934). சங்கத்தின் சின்னமாகத் தோகை விரித்த மயில் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

சங்கத்தின் சட்ட ஆலோசகராகத் திரு, என். சுப்பையா பி. ஏ. பி. எல்., தணிக்கையாளராக திரு. SP. ST. பழனியப்பன், B COM. F.C.A. திரு. பிச்சைக் குட்டி B. COM. F. C. A. ஆகியோர் பொறுப்பேற்றுள்ளனர்.

இச்சங்கத்தின் அலுவலகம் பவழக்காரத் தெருவிலிருக்கும் 27-ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில் தொடர்ந்து செயலாற்றிவரப் புது வீட்டுத் தெண்டாயுதபாணி கோயில் 'டிரஸ்டிகள்' இடம் அளித்துள்ளனர்.

செயற்குழுவினர் நிதி வசூல் குழு, கலை நிகழ்ச்சிக்குழு, கல்வி வளர்ச்சிக்குழு எனப் பல குழுக்களாகப் பிரிந்து அருஞ்செயலாற்றியுள்ளர்.

உறுப்பினர்: பெண்டிர் 8. ஆடவர் 618, ரூ. 101 கொடுத்து ஆயுள் உறுப்பினர் ஆனவர்கள் 6. ரூ. 250-ம், அதற்கு மேலும் தந்து ஆதரவாளர் ஆனவர்கள் 9. ரூ. 1001-ம் அதற்குமேலும் வழங்கிய காப்பாளர் நால்வர்.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியர்களுக்குக் கப்பல் போக்குவரத்து வசதியும், வேலைவாய்ப்பும் தருமாறு, மத்திய அரசினர்க்கு இச்சங்கத்தின் மூலம் 25—4—'64-இல் வேண்டுகோள் விடுத்ததற்கு, அவ்வரசினர் ஆவன செய்வதாக உறுதி கூறினர். சங்கத்தின் முயற்சியால் நம் சமூகத்தவர் 23 பேர்களுக்கு அ. மு. மு. குடும்பத்தினர் நடத்தும் தொழிற்சாலைகளில் வேலை கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஈராண்டுகளாகத் திருவொற்றியூர் மாசி மக விழாவில், மூன்றுநாள் நிகழ்ச்சிகளிலும் பந்தி விசாரணை செய்து, சங்கத் தொண்டர்கள் பணி புரிந்தனர்.

சங்கக் கலை நிகழ்ச்சிக் குழுவினரின் அரும் பெரும் முயற்சியால், இராஜா அண்ணாமலை மன்றத்தில் ராகினி ரிக்ரியேஷன்சாரின் மூலம் இரண்டு நாடகங்கள் மிகச் சிறப்பாக நடை பெற்றன. 9—8—64-இல், டாக்டர் இராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் தலைமை யில் 'மெழுகு வர்த்தி' என்ற நாடகமும், 7—3—65-இல் திரு. C. V. C. T. V. வேங்கடா சலம் செட்டியார் அவர்கள் தலைமையில் 'நீர்க் குமிழி' என்ற நாடகமும் நடைபெற்றன. இவை நம் சங்கத்திற்குக் கலைவளர்ச்சியிலுள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தியதுடன், நம் சங் கத்தின் நிதி நிலைமையைப் பெருக்குவதற்கும் உதவின.

கல்வி வளர்ச்சியிலும் நம் சங்கம் போதிய அக்கறை காட்டியுள்ளது. அம்பத்தூர் இராம சாமி முதலியார் உயர்நிலைப் பள்ளியில் பயி லும் ஒரு மாணவருக்கும், அடையாற்றிலுள்ள மத்திய தொழில் நுணுக்கப் பள்ளியில் இரண் டாவது வகுப்புப் பயிலும் ஒரு மாணவருக்கும் பள்ளிக் கட்டணம் முதலியன உதவப்பெற்றன.

சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது, திரு. A. நாகப்ப செட்டியா ரவர்கள் தலைமை தாங்கினார்கள். திருவாளர் கள் ஏ. வி. மெய்யப்ப செட்டியாரவர் களும், ஏ. கே. செட்டியா ரவர்களும். 'சோமலே' அவர்களும் குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களும் அவ் விழா வில் சொற்பொழிவாற்றினார்கள்.

சங்கத்தின் புதிய நிருவாகிகள் தேர்ந் தெடுக்கப்பட்டனர் : தலைவர் : திரு. மு. சோம சுந்தரம் செட்டியார். துணைத் தலைவர்கள் : திரு. கண. இராமநாதன் செட்டியார், திரு. S. RM. PL. சுப்பிரமணியன் செட்டியார், செய லாளர்கள் : திரு. கும. முருகப்பன், திரு. அ. மு. லெட்சுமணன். பொருளாளர்கள் : திரு. பிஎ. பழ. மெய்யப்பன், திரு. அ. கணபதி.

இராஜா சர். முத்தையா செட்டியாரவர் கள் ரூ. 5001 உதவி சங்கக் காப்பாளராக விளங்கிவருகின்றமையை மகிழ்ச்சியுடன் குறிப் பிடவிரும்புகிறோம். கலைவளர்க்கும் ஏ.வி.எம். அவர்களும் கலைத் தந்தை கருமுத்து தியாகரா சச் செட்டியாரவர்களும் இங்ஙனம் ரூ. 5001 உதவிச் சங்கக் காப்பாளராவதற்குப் பேரன்பு கொண்டு இசைந்துள்ளனர். சங்கத் தலைவர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியா ரவர்கள் முதன் முதலில் தாமே முன் வந்து ரூ. 1001 கொடுத்து, சங்கக் காப்பாளரானார் கள். C. V. C. T. V. வேங்கடாசலம் செட்டியா ரவர்களும், திரு. S. P. வயிரவன் செட்டியா ரவர்களும் ரூ. 1001 உதவி, சங்கக் காப்பாள ராக விளங்கி வருகின்றனர்.

செயற்குழுவினர், பல குழுக்களாக அமைந்து விரைந்து செயற்பட்டுச் சங்கத்தின் முன்னேற்றத்திற்காக அரிய பணியாற்றி வரு கின்றனர். அவை நிதிக்குழு, கல்விக்குழு, கலைக்குழு, புள்ளி விவரக்குழு, மலர் வெளி யீட்டுக் குழு என்பனவாம். சங்க நோக்கங் களை நிறைவேற்றத் தேவையான நிதியைப் பெற்றுத்தர நிதிக் குழுவும், தமிழ்க் கலையை வளர்க்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து சங்கத்திற்குப் பொருள் சேர்க்கக் கலைக் குழுவும், நகரத்தார் மாணவர் கல்வி வளர்ச் சிக்குத் தேவையான உதவிகள் செய்யக் கல்விக் குழுவும், சென்னையில் உள்ள நகரத்தார் குடும் பங்களைப் பற்றியதும், தொழில் விவரங்களைப் பற்றியதுமான அடிப்படைப் புள்ளிவிவரங் களைச் சேகரிக்கப் புள்ளிவிவரக் குழுவும், மாநாட்டுச் சிறப்பு மலரை யாவரும் கண்டு மகிழும்படி வெளியிட மலர் வெளியீட்டுக் குழு வும் சிறப்பான முறையில் செயலாற்றி வரு கின்றன. திரு. சுப. நா. நாகப்பன், திரு. சித. முத்து இருவரும் சங்கத்தின் அலுவலர் களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் 25 மாணவர்கட்கு உணவு, புத்தகம், தனிச் சம்பளம் முதலியன அளித்து வருகிறோம். மற் றும் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர் கட்குப் புத்தகமும் தனிச் சம்பளமும் உதவி யுள்ளோம். நகரத்தார் குலப்பெண் ஒருவருக்கு தையல் கருவி வாங்குவதற்குக் கடனுதவியாக ரூ. 300 வழங்கப்பட்டுள்ளது.

P. U. C. மாணவர் நால்வர்க்கு ரூ. 1001 உதவித் தொகையளிப்பதென்றும், தொழிற்

(38 ஆம் பக்கம் காண்க)

நகரத்தார் சங்கம்

மதுரை.

தோற்றம்

நகரத்தார் குலம் தனது பழஞ்சிறப்புக்களை உணர்ந்து மீண்டும் பெரு வாழ்வு பெறுவதற்கு ஒன்றுபட்ட முயற்சி தேவை. பல்வேறு காலங்களில் நகரத்தார் பலவிடங்களில் ஏற்படுத்திய பொது அற நிறுவனங்களையும் அவற்றிற்காக வாங்கிய சொத்துக்களையும் பொது நிதிகளையும், அறக் கொடையாக அளித்த நகைகள் முதலியவற்றையும் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்து பாதுகாத்து அவை தரும் வருவாயைக் குலத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தவும். இதற்கென மதுரையில் ஒரு சங்கம் தோன்றிப் பணி புரிய வேண்டும் என்னும் எண்ணம் இந்நகரில் உள்ள நகரத்தார்களிடம் கிளர்ந்தெழுந்ததனாலேயே 8—4—56-ம் நாள் அன்று 'நகரத்தார் சங்கம்' உருவாகியது. வாணிகமும் கல்வியும் தம் இரு கண்கள் எனப் போற்றிவரும் கலைத்தந்தை திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் சங்கத்தின் தலைவராக அமைந்தார். அவர்கள் இன்றளவும் தம் சொந்த அறநிறுவனத்தின் மூலம் (தியாகேசர் ட்ரஸ்ட்) கல்விக்காக 1½ கோடி ரூபாய்வரை செலவிட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரிய செய்தியாகும்.

சங்கம் தோன்றுவதற்கு உறுதுணையாயிருந்த பூலாங்குறிச்சி திரு. வ. ராம. வள்ளியப்ப செட்டியாரும், கண்டர மாணிக்கம் திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியாரும், துணைத் தலைவர்களாய் அமைந்தார்கள். இராசா சர் மு. அ. முத்தையா செட்டியாரையும் டாக்டர் அழகப்பச் செட்டியாரையும் சங்கம் புரவலர்களாகக் கொண்டது, அரிமளம் திரு. செ. செல்லப்பனும் ஆ. தெற்கூர் திரு. மு. சொக்கலிங்கமும் செயலர்களாகத் தெரிவு செய்யப் பெற்றனர். அமைப்புக் கூட்டத்திலேயே சங்கத்திற்கு நன்கொடையாக ரூ. 11000 பெறப்பட்டது.

பணிகள்:

முதலாண்டில் மேலும் ரூ. 4547 நன்கொடையாகப் பெறப்பட்டது. 240 பேர்கள் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். தொழில் கல்வி நிலையங்களிற் பயின்ற மாணவர் 6 பேருக்குத் திருப்பப்பெறும் உதவித்தொகை வழங்கப்பட்டது. 40 பேருக்கு வேலை பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இரண்டாவது ஆண்டில் திரு. மு. சொக்கலிங்கத்திற்குப் பதிலாகத் தேவகோட்டை திரு. ஆ. மெ. அரு. தியாகராசன் செட்டியார் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். மதுரை, திருப்பரங்குன்றம், வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் ஆகிய இடங்களில் உள்ள நகர விடுதிகளையும், மதுரைப் பிட்டுத் தோப்பில் உள்ள காலி மனை, மண்டபம் ஆகியவற்றையும் சங்கம் ஒப்புக்கொண்டு ஆட்சி செய்து வருவதென்று தீர்மானிக்கப் பெற்றது. சங்கத்தின் அலுவலகம் மதுரை வடக்குச் சித்திரை வீதியில் உள்ள நகர விடுதிக்கு மாற்றப்பட்டது. சங்கத்தின் உறுப்பினர் தொகை 280 ஆக உயர்ந்தது. நகர விடுதியைச் செம்மை செய்து இப்போது நன்முறையில் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.

மூன்றாவது ஆண்டில் திரு. செ. செல்லப்பனுக்குப் பதிலாகத் தேவகோட்டை திரு. சுப. அண்ணாமலை செயலாளராகத் தெரிவு செய்யப்பெற்றார். இவ்வாண்டில் உறுப்பினர் தொகை 334 ஆக உயர்ந்தது. 38 நகரத்தார் இளைஞர்க்கு வேலை தேடித் தரப்பெற்றது. இந்த ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் குறிப்பிட்ட ஒரு கருத்து:

''பஞ்சாலைத் தொழில் பற்றி நடந்த உலகத் தேர்வில் தேவகோட்டையைச் சேர்ந்த எஸ். இராமநாதன் என்பவர் இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார். இதைக் கவனிக்கும்பொழுது நமது குல மாணவர்களுக்கு மேலும் நிதி உதவி அளித்தால் அவர்கள் கல்வியில் நன்கு முன்னேறுவர்.''

இக்கூட்டத்தில், இராமநாதபுரம் மாவட்டம் தொழில் துறையில் பின் தங்கியிருப்ப

தால் இங்குத் தொழிற்பண்ணை ஒன்று நிறுவ வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

நான்காவது ஆண்டில் 15 மாணவர்க்கு உதவிச் சம்பளம் அளிக்கப்பெற்றது. 27 பேருக்கு வேலைத் தேடித் தரப்பெற்றது. முன்னைய ஆண்டுகளைவிட மிகுதியான வெளியூர் உறுப்பினர்கள் சேர்ந்தனர். சங்கத்தின் வற்புறுத்தலால் மதுரைக்கும் தேவகோட்டைக்கும் இடையே விரைவு உந்துகள் போக்குவரவு நிறுவனங்களால் தொடங்கப் பெற்றது. மாரியம்மன் தெப்பக்குளம நகர விடுதியில் குளிக்கும் அறைகள், கட்டப்பெற்றன. திருப்பரங்குன்றம் நகர விடுதிக்கு முன்புறம் உள்ள அவ் விடுதியைச் சேர்ந்த நகரத்தார் தெப்பக் குளத்தின் இரு கரைகளிலும் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் வகையறு தேவஸ்தான திருவாக அதிகாரி இரண்டு அறிவிப்புப் பலகைகள் வைக்கச் செய்திருப்பதை எதிர்த்துத் தெப்பக்குளம் நகரத்தார்களுக்குப் பாத்தியப்பட்டது என்று எடுத்துக்கூறித் தேவஸ்தானத்திற்குச் சங்கத்திலிருந்து கடிதம் எழுதப் பெற்றது.

ஐந்தாவது ஆண்டில், மலேயாவில் நம் சங்கத்திற்கு 40 உறுப்பினர்கள் சேர்ந்தனர். நன்கொடை ரூ. 9227 பெறப்பட்டது. 10 மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் அளிக்கப் பெற்றது. குறைவான கல்வியுடைய நகரத்தார் இளைஞர்கட்கு ஆலைகளில் தொழிலாளர் வேலை கொடுக்க வேண்டும் என்று கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களைச் சங்கச் செயலாளர்கள் இடைவிடாது வேண்டியதற்கு இணங்க, அவர்கள் தமது தேனூர்ச் சிவகாமி ஆலையில் 100 பேருக்குத் தொழிலாளர் வேலை கொடுத்தார்கள்.


நகரத்தார் இல்லங்களில் திருமணம், புதுமை முதலிய சிறப்புக்கள் நிகழும்போது நம் சங்கத்திற்குக் குறைந்த அளவு ரூ. 11 மகமையாக உதவவேண்டும் என்று செயலாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்பெற்றது. அதற்கு இணங்க இதுவரை ரூ. 1634 மகமையாகப் பெறப்பட்டது.

டாக்டர் இராம. அழகப்ப செட்டியாரின் மறைவிற்குப் பின், பள்ளத்தூர் திரு. அ. மு. மு. முருகப்பச் செட்டியார் அவர்கள் புரவலராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இந்நிகழ்ச்சி சங்கத்தின் ஐந்தாம் ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் நிகழ்ந்தது. இக்கூட்டத்தில் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. வெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்து :

''பர்மாவிலும் நகரத்தாரால் நிறுவப்பட்ட கோவில்களிலும் ஏராளமான பணங்களும் விலை மதிப்புள்ள நகைகளும் உள்ளன என்றும், அவற்றைப் பெற்றால் சமூக முன்னேற்றத்திற்கு மிகவும் பயன்படும் என்றும், அதற்கான முயற்சியைத் தாமே முன்னின்று செய்வதாகவும் திரு. அ. மு. மு. முருகப்பச் செட்டியார் உறுதி கொடுத்துள்ளார். இளைஞர்கள் இதை அவர்க்கு நினைவூட்டி, அத்தொகை முதலியவை இச்சமூகத்தின் நல்வாழ்விற்காகக் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

ஆறாவது ஆண்டில் உறுப்பினர் தொகை 971 ஆக உயர்ந்தது. சங்கத்தின் செயலர்கள் இவ்வாண்டில் புதிதாக உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியினைத் தொடங்கினர். இவ்வாண்டிலேயே ரூ 101/= செலுத்தி, 65 வாழ்நாள் உறுப்பினர் சேர்ந்தனர். செயலர்களின் முயற்சியில் சங்கத் தலைவர் திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள், சங்க வாயிலாக விண்ணப்பிக்கும் மணம் ஆகாப் பெண்களின் பெற்றோருக்கு, ஊருக்கு ஒரு பெண்ணிற்கு ரூ1501/= வீதம் திருமணத்திற்கு அளிக்க முன்வந்தார்கள். அதன்படி இந்த ஆண்டு முடிவிற்குள் 3 திருமணங்கட்குக் கொடுத்து உதவினார்கள். அடுத்த ஆண்டில் மதுரை விசாலாட்சி ஆலை அதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் ஒரு திருமணத்திற்கு ரூ 501/= வீதம் உதவி அளிக்க முன்வந்தார்கள். அதன்படி உதவி வருகிறார்கள். நம் சங்கச் செயற்குழு உறுப்பினராகிய காரைக்குடி இராம. வீர. இராம. இராமசாமிச் செட்டியாரவர்கள் ஒரு திருமணத்திற்கு ரூ 1500/= வீதம் உதவியளித்து இதுவரை பல திருமணங்களை நடத்தி வைத்துள்ளமை இங்கு பாராட்டத் தக்கது. நம் சங்கம் திரட்டிவரும் திருமண மகமை நிதியும் இவ்வாறு வறுமை


(தொடர்ச்சி 313ம் பக்கம் பார்க்க)



பேரூர் கோயில்

நகரத்தார் சங்கம்

கோயமுத்தூர்.



தமிழகத்தில் கோயமுத்தூர் நகரம் 'பஞ்சாலைத் தொழிலில்' மேன்மையுற்றுத் திகழ்கிறது. இத் தொழிலிலும் மற்றும் பல தொழில், வாணிகத் துறைகளிலும் நகரத்தார் சமூகத்தவர் பலர் ஈடுபட்டு இங்கு வாழ்ந்து வருகின்றனர். நகரத்தார்களுக்கென சென்னை, மதுரை, திருச்சி நகரங்களில் சங்கங்கள் நிறுவப்பெற்று நடந்து வருவதைப் போல இங்கும் ஒரு சங்கம் ஏற்பட வேண்டுமென்ற ஆர்வத்தினால், 17—3—'65 அன்று இச் சங்கம் நிறுவப்பட்டது. இச் சங்கத்தின் நோக்கங்கள், விதிமுறைகள் பலவும் மதுரை நகரத்தார் சங்கத்தைப் பின்பற்றி அமைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு சங்கம் ஒன்றினை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் பத்தாண்டுகளுக்கு முன்பே தோன்றியது. திருவாளர்கள் உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியாரவர்கள், PL. கண்ணப்ப செட்டியாரவர்கள், அரு. லெ, வெ. நடராசன் செட்டியாரவர்கள் போன்ற பலர் அன்றே பெரிதும் முயன்றார்கள். இங்ஙனம் முன்பே இச்சங்கத்திற்கு விதைக்கப் பட்ட வித்து, இன்று முளைவிட்டுத் தோன்றி யுளது என்றால் மிகையாகாது. இச் சங்கம் 9—10—'64-இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு எண் 90/1964).

குணக்குன்றாக விளங்கும் திரு. அரு. லெ. வெ. நடராசன் செட்டியாரவர்கள் இதன் தலைவராக விளங்குகிறார்கள். திருவருளும் கலையருளும் வாய்க்கப்பெற்றவரும், கோவை நகரில் பஞ்சாலைத் தொழிலில் முக்கிய இடம் வகிப்பவரும், மலர்முகமும் அடக்கமும் அமைதியும் பொருந்தியவருமாகிய திரு. P.S.S. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் துணைத் தலைவராக இருந்து சங்கத்தைப் புரந்து வர இசைந்துள்ளார்கள்.

திரு. PL. S. RM. இராமநாதன் செட்டியாரவர்கள் மற்றுமொரு துணைத்தலைவராகவும்; திரு. AL. சிங்காரம் செட்டியாரவர்கள் பொதுச் செயலாளராகவும்; திரு. NK. நாகப்ப செட்டியாரவர்கள் நிருவாகச் செயலாளராகவும் திரு. S. M. ரெங்கநாதன் செட்டியாரவர்கள் பொருளாளராகவும் பொறுப்பேற்றுள்ளார்கள். இவர்களை உள்ளிட்ட பதினாறு பேர் கொண்ட செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இச் சங்க வளர்ச்சிக்கு நாச்சியார்புரம் S.V.N. நாகப்பன் அவர்கள் பெரிதும் ஒத்துழைத்து வருகின்றனர். இப்பொழுது சங்கம் தலைவர் அவர்களின் இல்லத்தில்தான் செயல் பட்டு வருகிறது. உறுப்பினர்கள் சேர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதில் வெற்றி கண்டு வருகிறோம். ஐம்பது வாழ்நாள் உறுப்பினர்களும் 300 ஆண்டுச் சந்தா உறுப்பினர்களும் உள்ளனர். உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள, அதற்குரிய விண்ணப்பத்தாளை நிறைவு செய்து ரூ. 2 கட்டுதல் வேண்டும்.

இந் நுழைவுக் கட்டணத்துடன் ரூ. 4 செலுத்து பவர் ஆண்டு உறுப்பினராகவும், ரூ. 101 செலுத்துபவர் வாழ்நாள் உறுப்பினராகவும் சேர்த்துக்கொள்ளப் பெறுவர்.

திருப்பேரூர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் இச் சங்கத்தின் தொடக்க விழா 17—3—65 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் இராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் சங்கத்தைத் தொடங்கி வைத்தார்கள். அவ்வமயம் செட்டி நாட்டு அரசியார் ராணி மெய்யம்மை ஆச்சி அவர்கள் திருவிளக்கேற்றி வைத்தார்கள். கலைத்தந்தை கருமுத்து. தியாகராசன் செட்டியாரவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். தொழில் மேதை அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். மற்றும் பெருமக்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

'நகரத்தார் சங்கங்களின் முதல் மாநில மாநாடு' கூட்டுவது பற்றிய ஆலோசனைக் கூட்டமும் அன்று நடைபெற்றது. நம் சங்கங்கள் எல்லாம் இணைந்து ஒரே வகையான, திட்டங்களுடன் சீராகவும் சிறப்பாகவும் செயல்பட வேண்டுமென்றும், சென்னை நகரத்தார் சங்கம் இதற்கேற்ப மாநில மாநாட்டைக் கூட்ட ஆவன செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

எங்கள் கருத்தினை ஏற்றுச் செயற்படுத்திய சென்னை நகரத்தார் சங்கத்தினர்க்கும், அவ்வாறே ஒத்துழைத்த மதுரை, திருச்சி சங்கத்தார்களுக்கும் எங்களுடைய நன்றி உரியதாகும்.

இறைவன் திருவருளால் நம் சங்கங்கள் இணைந்து செயலாற்றி, நம் சமூகத்தின் இன்றைய இன்னல்கள் நீங்கி இன்பமும் நல்வாழ்வும் பெறப் பாடுபட வேண்டுமென விழைகின்றோம்.

அன்புள்ள,

5—7—65 NK. நாகப்பச் செட்டியார்

கோயமுத்தூர் நிருவாகச் செயலர்.

(34ம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளியில் பயில மாணவர் நால்வர்க்கு ரூபாய் ஆயிரமும், பட்டப்படிப்புப் படிக்கும் மாணவர் மூவருக்கு ரூபாய் ஆயிரமும் உயர் தொழில் கல்வி, பொறியியல் கல்வி படிக்கும் மாணவர் அறுவருக்கு ரூபாய் மூவாயிரமும் கடனுதவியாக அளிக்கவும் முன்வந்துள்ளோம்.

நகரத்தார் முதல் மாநில மாநாடு நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் 9-5-1965 அன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் மதுரை, கோவை, திருச்சி சங்கங்களின் சார்பாக அவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். மாநாட்டை ஜூலை மாதம் 10, 11-ந் தேதிகளில் நடத்துவதென முடிவு செய்யப்பெற்றதுடன், நம் சங்கத் தலைவர் உயர்திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட வரவேற்புக் குழுவும் அமைக்கப்பெற்றது. நமது சமூகப் பெருமக்களை இம் மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்வதென்றும், எல்லா ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகளை அனுப்பும்படியாக நகரத்தார் சங்கங்கள் முயற்சி மேற்கொள்வதென்றும், மாநாட்டை ஒட்டி மலர் ஒன்றை வெளியிடுவதென்றும், அதற்கான விளம்பரங்களைச் சேகரிக்க நகரத்தார் சங்கங்கள் ஒத்துழைப்பதென்றும் முடிவு செய்யப்பெற்றது.

மாநாடு சிறப்புற நடைபெற எல்லாவகையாலும் உதவுகின்ற சென்னை நகரத்தார் சங்க உறுப்பினர்கட்கும் மற்றும் அனைவருக்கும் செயற்குழுவின் சார்பாக எங்கள் நன்றி உரியதாகும். எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நமது நோக்கங்கள் நிறைவேறி, நமது சமூக நலன்கள் காக்கப்பெற்றுச் சீரும் சிறப்புமிக்க முன்னைப் பெருவாழ்வு மீண்டும் வாய்க்குமாக என இறைஞ்சுகிறோம்.

5—7—65 அன்புள்ள,

27, பவழக்காரத்தெரு குமட. முருகப்பன்

சென்னை-1. அ. மு. லெட்சுமணன்

செயலர்

நகரத்தார் சங்கம்

திருச்சிராப்பள்ளி.

நகரத்தார்கள் இன்றைய சூழ்நிலைக்கேற்ப கல்வி, தொழிலில் முன்னேற வேண்டும். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டும். தொழிலில் அதிகமாக ஈடுபட்டு நாடு வளம் பெறுவதற்கு முயல வேண்டு மென்ற நோக்கத்தோடு இச்சங்கம் 10.9.1948 ல் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் நகரத்தார் ஒன்று சேருவதற்கு முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட சங்கம் இது தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சங்கத்துக்கு பள்ளத்தூர் மு. அ. அருணாசலம் செட்டியார் அவர்கள் தலைவராக வும் பலவான்குடி S. AR. பழனியப்ப செட்டி யார் அவர்கள் துணைத்தலைவராகவும் தேவ கோட்டை ஆவி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள் செயலாளராகவும் பள்ளத்தூர் RM. அழகப்பன் அவர்கள் உதவிச் செயலாளராக வும் பணியாற்றி வருகிறார்கள்.

கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்வதற்காகச் செட்டியார்கள் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று இங்கு தனியாக நிறுவப்பட்டுள்ளது. நகரத் தார் சங்கம் பல ஆண்டுகள் திருச்சி வாழ் நகரத் தார்களின் பேரவைகளைக் கூட்டி வைத்தும் அவர்களுக்கும் திருச்சியில் உள்ள பிற சமூகப் பெருமக்களுக்கும் உயர் நிலை அதிகாரிகளுக்கும் தொடர்பும், நல்லுறவும் ஏற்படுத்தியும் சீரிய முறையில் தொண்டு செய்து வருகிறது. நகரத் தார் பிரச்சினைகளை திருச்சிக்கு வருகை புரியும் அமைச்சர்கள் அரசினர்களின் அலுவலகர்கள் ஆகியவரிடம் அவ்வப்போது தூது சென்று எடுத்துரைத்து வருகிறது. நகரத்தார் சங்கப் பெருமக்களுக்கு வரவேற்பு வழங்கி வருகிறது. ஆண்டு விழாக்களைச் சிறப்பாக நடத்தி முக்கிய மான தீர்மானங்களையும் நிறைவேற்றிவரு கிறது. திருச்சித் தமிழ்ச் சங்கத்திற்கு நகரத் தார் சங்கம் தனது நூல் நிலையத்தைஅன்பளிப் பாகக் கொடுத்திருக்கிறது.

பணம் கொடுக்கல் வாங்கல் தொழிலில் ஈடுபட்டுள்ள பல சமூகத்தினரையும் ஒன்று சேர்த்து ''லேவாதேவிக்காரர்கள் சங்கம்,'' என்று ஏற்படுத்தியுள்ளோம். இவ் வமைப்பின் வாயிலாக இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் நம் சமூகத்தினர்களுக்கு அரசினரின் புதிய சட்டங் களால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து குறைகளை ஒல்லும் வகையால் நீக்க இச்சங்கம் பாடுபட்டு ஓரளவுவெற்றியும் கண்டிருக்கிறது. ''லேவா தேவிக்காரர்கள் சங்கம்'' ஏற்படு வதற்கு இச்சங்கம் காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சி தேசியக் கல்லூரியில் கானாடுகாத் தான் திவான்பகதூர் மு. இராம. இராமசாமி செட்டியார் பெயரில் இரண்டுமாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்கப் பெற்று வருகிறது. இச் சங்கத்தின் விழிப்பால் இவ்வுதவி நம் இனத்தவர்க்குக் கிடைத்து வருகிறது. நம் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு ஆண்டுக் கட்ட ணம் ரூ6/-ஆயுள் கட்டணம் ரூ. 250/:ஓராயிரம் ரூபாய் நன்கொடை வழங்குபவர்கள் ஆதரவா ளர்களாக ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றனர்.

தமிழ் நாட்டின் இதயம் என்று கூறுமாறு விளங்கி வரும் திருச்சிராப்பள்ளி நகரம் மின் சாரக் கொதிகலத் தொழிற்சாலை; துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற நிறுவனங்களால் மக்கள் தொகையிலும் பல்கிப் பெருகி வளர்ச்சி பெற்று வருகிறது. திருச்சிராப்பள்ளி யில் ஏறத்தாழ 300 நகரத்தார் குடும்பங்கள் உள்ளன. பலர் தொழில் வாணிகத் துறைகளை மேற்கொண்டுள்ளனர். ஏனையோர் அலுவல கங்களில் வேலை பார்த்து வருகின்றனர். இந் நகரில் இயங்கும் இச்சங்கம் மேன்மேலும்நன்கு செயலாற்றி நம்மவர்கட்கு எதிர் காலத்தில் பெரும் பயன் விளைவிக்கும். இதற்கு உறுதுணை யாக நகரத்தார் அனைவரும் உதவ வேண்டு கிறோம்.

அன்புள்ள,

5-7-65 — ஆவி. க. ஆவிச்சி செட்டியார்

திருச்சி — RM. அழகப்பன்

செயலர்கள்

நகரத்தார் மாநில மாநாட்டில் நடைபெறும் கலை நிகழ்ச்சிக்குத்


தலைமை தாங்கும்

A. V. மெய்யப்பச் செட்டியாரவர்கள்



திரைப்படத்துத் துறைவிளங்கத்
திகழுகின்ற கலைஞர்
முறைப்படுத்தி நலம்பெருக்கி
முன்னேறும் வணிகர்
கலைநிகழ்ச்சி யதுசிறக்க
உரைநிகழ்த்தும் தலைவர்
நிலைபெறுத்தும் திறன்வளர்த்துப்
புகழ்சிறந்து வாழ்க!

நகரத்தார் முதல் மாநில மாநாடு



மாநாடு நிகழ்ந்த கலை வளர்க்கும் ஏவிஎம் அவர்களின்
கவின்மிகுந்த ராஜேஸ்வரி கலியாணமண்டபம்



அறத்தின் விளக்குகள்

நெற்குப்பை இராம சுப்பிரமணியன்

கலைகள் வளர்க்கும் நகரத்தார்,
கந்தன் அருளும் கைகூடி
மலைபோல் செல்வம் குவிந்தினிது
வாழ்க! வாழ்க! வாழியவே!

கோயில் கட்டும் நகரத்தார்,
குளங்கள் அமைக்கும் நகரத்தார்,
ஏயும் நலங்கள் பலவோங்கி
இனிது வாழ்க! வாழியவே!

ஆயி ரம்பேர் உண்டுவர
அன்னம் வழங்கும் சத்திரங்கள்
தூய உளத்தோ டன்புடனே
தோற்று விக்கும் நகரத்தார்.

மருத்து வத்தின் சாலைமுதல்
மாண வர்க்குப் பள்ளிகளும்
கருத்தாய்ச் செய்து தெளிவுபெறும்
கனத்த புகழின் நகரத்தார்.

அணுகி வந்த விருந்தினரை
ஆத ரிக்கும் தன்மையிலே
இணையே யில்லாத் தகுதியுமே
இணைந்த நல்ல நகரத்தார்

நாடு நாளும் முன்னேற
நல்ல தொழிலின் நிலையங்கள்
கூடு மட்டும் தோற்றுவிக்கும்
குணமும் மிக்க நகரத்தார்.

தவத்தில் தவமும் உடையவராம்
தனமா வணிகப் பெருமக்கள்
அவர்க்குக் கூறும் வாழ்த்துரைகள்
அறத்திற் கேநாம் கூறுவதாம்,

ஆன தாலே மனமேநீ
அவரைப் போற்றித் தினம்பாடு!
வானம் எட்டும் அவர்புகழை
வாழ்த்தி வாழ்த்தி நலம்கூடு!

விழுதாய், அறத்தின் விளக்காக
விளங்கும் நல்ல நகரத்தார்
எழில்வேல் முருகன் இன்னருளால்
இனிது நீடு வாழியவே!

செட்டியார் சமூகம்

[பினாங்கு ரோட்டரி கிளப்பில் 6—6—34 அன்று மாலையில் டாக்டர் ராம. அழகப்ப செட்டியார் எம்.ஏ., பார்-அட்-லா அவர்கள், நமது சமூகம் என்னும் தலைப்பில், பிற சமூகத்தவரிடையே நம்மைப் பற்றிச் செய்த சொற்பொழிவு.]

தலைவர் அவர்களே! நண்பர்களே!!

இன்று மாலையில் நான் பேச எடுத்துக் கொண்ட பொருள் 'செட்டியார் சமூகம்' என்பதாகும். இதைப்பற்றி நான் பேசுவதற்கு முன் லார்டு மெக்காலே ஒரு காலத்தில் கூறியது நினைவிற்கு வருகிறது. 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலுள்ள அனைவருக்கும் இந்தியாவைப் பற்றிய செய்திகள் தெரியுமென்ற எண்ணம் பரவி இருந்தது. இந்த எண்ணம் எவ்வளவு தவறானதென்பதை மெக்காலே நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். ஒரு ஆங்கிலேயக் கிழவியிடம் அவர் இந்தியாவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த பொழுது, 'இந்தியா, பம்பாயிலிருக்கிறதா, அல்லது பம்பாய் இந்தியாவிலிருக்கிறதா' என்று அவ்வம்மையார் குழப்பமுற்றார்களாம். அதைப் போன்று செட்டியார் சமூகத்தைப் பற்றி நீங்கள் எவ்வளவு தூரம் அறிந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் பேசுவதில் செட்டியார் சமூகத்திற்கும் அவர்கள் வியாபாரத்திற்கும் சாதகம் ஏற்படுவதோடு இங்குள்ள பொதுமக்களுக்கும் செட்டியாரின் உண்மை நிலையை அறிந்து கொள்ள நலமாயிருக்குமென்று கருதுகிறேன்.

இப்பொழுது செட்டியார் சமூகத்தைப் பற்றிய சில புள்ளி விவரங்களைக் கூறுகிறேன். செட்டியார்கள் சென்னைக்குத் தெற்கே ஒரு பகுதியில் வசிக்கின்றார்கள். மிகமிக சமீபமாக இருக்கும் தொண்ணூற்றாறு கிராமங்களிலும் அவர்கள் பரவியிருக்கிறார்கள். அந்தக் கிராமங்களில் ஒரு முனிசிபாலிடி தான் இருக்கிறது. இதிலிருந்து செட்டியார்கள் பட்டினங்களில் வசிக்கவில்லை என்பதையும் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள் என்பதையும் நீங்கள் நன்கு அறியலாம்.

சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் இவர்கள் பர்மா, சிலோன், மலேயா முதலிய கிழக்கு நாடுகளில் தங்கள் தொழில்களை ஆரம்பித்தனர். நீங்கள் பினாங்கு ஸ்ட்ரீட்டில் செட்டியார்கள் வியாபாரம் செய்யும் தெரு வழியாகச் சென்றால் செட்டியார்கள் ஒன்றாகக் கூடி இருப்பதையும் சிறிய கட்டிடங்களில் அதிகமான பேர்கள் வாசம் செய்வதையும் காண்பீர்கள். செட்டியார்கள் தங்கள் வியாபார நிலையங்களிலேயே வசிக்கிறார்கள் என்பது உண்மை. இங்கு நீங்கள் பார்க்கின்ற ஒவ்வொரு செட்டியாரும் தங்கள் சொந்தக் கிராமத்தில் அரண்மனை போன்ற மாளிகை ஒன்றினைத் தங்கள் சொந்தத்தில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் செய்வது பெரிதும் வருந்தத்தக்கது என்று கருதுகிறேன். நல்லதுக்கோ அல்லது கெட்டதுக்கோ இவர்கள் வெளிநாடுகளில் மிகமிகக் குறைந்த செலவில் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

ஒற்றுமை உணர்ச்சி

வெளிநாடுகளில் செட்டியார்களுக்கு இருக்கும் ஒற்றுமை உணர்ச்சி ஆச்சரியப்படத் தக்கதாகும். இவர்கள் ஓர் ஊருக்கு வந்து தங்கியதும் முதலாவதாக ஒரு கோயில் கட்டுகிறார்கள். இக் கோயில் எல்லாச் செட்டியார்களுக்கும் ஒரு பொதுவான சபாமண்டபமாக இருக்கின்றது. இக்கோயில்களில்தான் வியாபாரச் சபைகளின் வேலைகள் செய்யப்படுகின்றன. பெரும்பாலான இடங்களில் செட்டியார்களுக்கு வியாபாரச் சபைகள் கிடையாது. வியாபாரச் சபையில் செய்யப்பட வேண்டிய விஷயங்கள் கோவில் நகரக் கூட்டத்தில் செய்யப்பெற்று வருகின்றன. பர்மா, மலாயா முதலிய பல நாடுகளில் சுமார் அறுநூறு கோயில்கள் வரை கட்டப்பட்டு இருக்கின்றன. பெரும்பாலும் எல்லா விஷயங்களிலும் செட்டியார்

கள் முறைகளைக் கைவிட்டுவிட்டு உணர்ச்சியைக் கையாளுகின்றனர்.

கோயில்களில் கூட்டம் கூடிக் கருத்துக்களை வாதிக்கின்றார்கள். அக்கூட்டங்களுக்கு தலைவரோ செயலாளரோ கிடையாது. குறிப்போ இல்லை. பொய்யுரைக் கேட்டால் உண்மையிலேயே அதிசயிப்பீர்கள்! ஆனால் அவர்கள் மற்ற வியாபார சமூகத்தார்கள் போலவே, தங்கள் காரியங்களைச் சீக்கிரமாகவும் திறமையாகவும் முடித்துக் கொடுக்கிறார்கள் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும். செட்டியார்கள் தற்காலத்தில் ஒரு விஷயத்தின் உணர்ச்சியை மட்டுமின்றி அதனை வியாபாரத் தோரணையான முறையிலும் செயற்பாட்டுக்குக் கொண்டுவருகிறார்களென்பதில் சந்தேகமில்லை.

செட்டியார்கள் செய்திருக்கும் தர்மத்தின் அளவைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒருவன் பேராச்சரியமடைவான். நண்பர்களே! எனது சமூகத்தினர் அறுபது கோடி ரூபாய்களுக்கு மேலாக இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் தருமம் செய்திருக்கிறார்களென்று கூறுவதை நம்புங்கள்! ஆனால் இத்தருமத்தின் பெரும் பகுதி தென்னிந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களைப் புதுப்பிப்பதிலும், புதிதாகக் கட்டுவதிலும் செலவிடப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள இந்து ஆலயங்கள் சித்திர வேலைப்பாடுகளுக்குப் பேர் போனவையாகும். தென்னிந்தியாவின் சிற்பக் கலைகள் இன்றும் சிறந்திருப்பதற்குச் செட்டியார்களின் தரும சிந்தனையே முக்கிய காரணமாகும். இப் பெருந் தருமத்திற் குறிப்பிடத்தகுந்த ஒரு பகுதி தற்காலத் தருமத்திற் செலவிடப்பட்டிருக்குமானால் கிழக்கு நாடுகளிலேயே என் சமூகத்தின் பெயர் தலை சிறந்து நிற்கும். பழைய தருமங்களைச் செய்வதோடன்றி, தற்காலத்துக்குத் தேவையான துறையில் ஆர்வத்தோடு பெருந்தருமம் செய்த ஒருவர் எனது சமூகத்திலிருக்கிறாரென்பதை மிகப் பெருமையோடு கூறுகின்றேன். அதாவது இராஜா சர். அண்ணாமலை செட்டியாரையே குறிப்பிடுகிறேன். சுமார் நாற்பது லட்சரூபாய்களுக்கு மேல் செலவு செய்து இராஜா சர். அண்ணாமலை செட்டியார், தென்னிந்தியாவில் தனது பெயரால் ஒரு பல் கலைக்கழகம் நிறுவியிருக்கின்றார். பாராட்டத்தக்கதும் தைரியமுள்ளதுமான வழியைக் காட்டிய இப் பெரியாரை எனது சமூகத்திலுள்ள பணக்காரர்கள் பின்பற்றினால் எனது சமூகம் மிகவும் உன்னதமான நிலையை யடையுமென்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

தொழில் முறைகள்

இப்போது செட்டியார்களின் தொழிலைப் பற்றியும் அவர்கள் கையாளும் முறைகளைப் பற்றியும் கூறுகின்றேன். உத்தேசமாக எனது சமூகத்தார் பர்மாவில் சுமார் இருநூறு கோடி ரூபாய்க்கு மேலும் மலாய் நாட்டிலும் பிற இடங்களிலும் நூறு கோடி ரூபாய்க்கு மேலும் தொழில் நடத்துகின்றனர். ஏஜண்டுகளுக்கு இவர்கள் சன்மானம் கொடுப்பது விநோதமான முறையாகும். அவர்களுக்கு மூன்று வருடங்களுக்கு உள்ள சம்பளங்கள் போக, கடையில் கிடைக்கும் இலாபத்தில் நூற்றுக்குப் பத்து அல்லது ஏழு வீதம் போனஸ் கொடுக்கப்படுகிறது. இங்குள்ள கிளைக் காரியாலயங்களில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு சிறு பகுதியைக் கொடுப்பதாகத் தாய் நாட்டிலுள்ள தலைமைக் காரியாலயத்தார் அனுமதியளித்தால் இங்குள்ள எனது ஐரோப்பிய நண்பர்களில் பலர் அதனை ஒரு பெரும் அதிர்ஷ்டமென்று நினைப்பார்களென்பதை அறிவேன்!

இப்பொழுது நான் வட்டியைப் பற்றிப் பெருமையோடு பேச முன் வருகின்றேன்; நாம் எல்லோரும், ஷேக்ஸ்பியர் இயற்றிய ஹாம்லெட் நாடகத்தில், போலோசியஸ் தனது மகனுக்குக் கூறிய பிரபலமான புத்திமதிகளைப் படித்திருக்கிறோம்:

'கடன் கொடுப்பவனாகவுமிருக்காதே;
கடன் வாங்குபவனாகவு மிருக்காதே.'

ஏனென்றால் கொடுத்த பணத்தை மட்டும் இழப்பதன்றி நண்பனையும் இழக்கின்றோம் என்பதே அதன் பொருள்.

இம் முறைப்படி பார்த்தால் உலகத்தில் பாங்குகளும் மற்ற வியாபார நிலையங்களும் இருக்கவே இடமில்லை. இவைகள் ஒருபுறங் கிடக்கட்டும். இப்பொழுது என்னுடைய முக்கிய நோக்கமென்னவென்றால் செட்டியார்



கள் தொழில் செய்யும் முறை வெளியில் கூறப்படுகின்ற மாதிரி கொடுமையானதாகவும், குறைபாடுள்ளதாகவும் இருக்கவில்லை என்று நிரூபிப்பதேயாகும். பெரிய பாங்கிகளை எடுத்துக்கொள்ளுங்கள், அவர்கள் சாதாரண வட்டியின் பேரில் அதிக விலை மதிப்புள்ள சொத்துக்களை ஈடாகக் கொண்டு குறைவான தொகைகளையே கடனாகக் கொடுக்க முன் வருகின்றனர். இம்மாதிரி ஈடு வைக்கப்பட்ட சொத்துக்கள் வீடு முதலியவைகளாயிருக்குமானால், அவைகளை இன்ஸ்யூர் செய்யும்படி கட்டாயப்படுத்துவதுடன் அந்தப் பாலிசிகளையும் தங்கள் பெயருக்கு மாற்றி வைத்துக் கொள்கின்றனர். ஆனால் ஒரு சாதாரணச் செட்டியார் கொடுக்குங் கடனுக்கு ஈடு என்ன? மனிதத் தன்மையில் உள்ளத்திலிருந்து எழும் நாணயமும், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற உண்மையான உணர்ச்சியும்தான் ஈடு என்று நான் நம்புகிறேன். இவர்களிடந்தான் நாங்கள் தொழில் செய்து வருகின்றோம். ஒரு நாள் காலையில் நாங்கள் கொடுத்திருக்கும் ஒரு சிறிய வியாபாரி தனது கடையில் காணப்படவில்லை என்ற செய்தியைக் கேட்டதும் நாங்கள் பதறுகின்றோம். வியாபாரியுடன் நாங்கள் கொடுத்த பணமும் மறைந்துபோகிறதென்பதை நீங்கள் நன்குணர வேண்டும்.

இத்தொழிலில் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் துணிச்சலைக் கவனிக்கும்போது எங்களுடைய வட்டி விகிதங்கள் மிகவும் நியாயமானதும் நேர்மையானதும் என்பது நன்கு விளங்கும். நாங்களும் யோக்கியதையும் செல்வாக்கும் நிறைந்த பெரிய வியாபாரிகளுக்குப் பெரிய பாங்கிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு குறைந்த வட்டி விகிதத்துக்குப் பணம் கொடுத்து வருகின்றோம்.

ஏழைகளுக்கு உதவுகிறோம்

அன்றொருநாள் ஒரு பெரிய பாங்கின் மானேஜரோடு உரையாடிக்கொண்டிருந்தேன். அவர் அப்பொழுது. செட்டியார்கள் இன்னும் சிறிய வியாபாரிகளோடு தொழில் செய்து கொண்டிருப்பது எவ்வளவு பரிதாபகரமானது என்று கூறினார். பணக்காரனுக்கு அநேகமாய் உதவுவார்கள். ஆனால் ஏழைகளுக்கு யார் உதவுவார்கள்?' என்ற பைபிள் வாக்கியம் என் நினைவுக்கு வந்தது. இங்குள்ள பெரும் பாங்கிகளெல்லாம் பெரும் வியாபார நிலையங்களுக்குப் பெருந்தொகை கொடுப்பதிலேயே பேராவல் உடையவைகளாயிருக்கின்றன. ஆனால் சாதாரண நிலைமையிலிருக்கும் ஒருவன் பெரியவனாய் வர உதவி செய்வதற்கு யார் இருக்கின்றார்கள் என்று நான் உங்களைக் கேட்கின்றேன். இதினின்று நான் பாங்கிகளின் உயர்ந்த முறைகளைக் குறை கூறுவதாக நீங்கள் யாரும் கருதக்கூடாது. அவைகள் தங்கள் வேலைகளைச் செய்கின்றன. சிறிய வியாபாரிகளுடன் வியாபாரம் செய்கின்ற காரணத்துக்காகச் செட்டியார்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியதில்லை. சாதாரண மக்களுக்குப் பணங்கொடுத்து இத்தேசத்தை மகிழ்ச்சியுடையதாகவும், முன்னேற்றமானதாகவும் செய்வதற்குத் தனிப்பட்ட பெருமையான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்ததாகவே நான் கருதுகின்றேன். பர்மாவிலும் இங்குள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்குத் தகுதியாக்கப்பட்டதற்குக் காரணம் நாங்கள் சிறிய மனிதர்களுக்கு உதவியதுதான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

வட்டித் தொழில் கொடுமையானதா?

கடுமையான வட்டியை எதிர்ப்பதைக் குறித்து நான் வாதாட முயற்சிக்கவில்லை. ஆனால் நான் செட்டியார் சமூகத்திலொருவன் என்ற காரணத்தினால் அநியாயவட்டி வாங்குகிறோமென்று எங்கள்மீது சுமத்தப்படுகின்ற பெரும் பழியைக் குறித்து உங்களுடன் பகிரங்கமாகப் பேசக் கடமைப்பட்டுள்ளேன். பெரியோர்களே! வட்டியின் தத்துவம் சிலருக்கு விநோதமானதாகவே தோன்றும். இதைக் குறித்து லேவாதேவிக்காரர்களுக்கு விரோதமாகச் சரித்திரம் சான்று பகர்கின்றது. கடியாரங்கள் உற்பத்தி செய்யும் சாதாரண ஒரு வியாபாரியை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு கடியாரத்துக்கு, எவ்வளவு அதிகமாக விலை வைக்கப் பார்த்தாலும், அதிக இலாபம் உள்பட நூறு டாலர்களுக்கு மேல் ஆகாது என்பது பலருக்குத் தெரியும். அந்தக் கடிகாரம் 'ஆயிரம் டாலர்' விலையுள்ளதாக விளம்பரப் படுத்தப்படுகிறது. அநியாய விலை வைத்தாலும்கூட இருநூறு டாலருக்குக் கடியா

கலைக் கண்காட்சி

விளையாடத் துணையாகி இன்பம் சேர்த்து
வேடிக்கைப் பேச்சாலே துன்பம் போக்கிக்
களையாமல் அன்பனுக்குப் பணிகள் செய்து
கதைபேசும் மணையாட்டி, இன்பப் பாவை!
வளையாடக் கைவீசி நடந்து செல்வாள்
வரும்போதும் போம்போதும் 'மிஞ்சி' பேசும்!
களையான திருமுகத்தில் பொட்டு வைத்துக்
காட்சிதரும் மனைவிளக்கு! கலைக்கண் காட்சி!

— நாரா நாச்சியப்பன்

ரத்தை விற்றாலே போதுமானது. ஆனால் ஆயிரம் டாலர் கொடுத்து அதே கடிகாரத்தை வாங்கிச் செல்லும் மக்கள் கடிகாரக்காரனுடைய அதர்ம சிந்தனையைப் பற்றியோ தவறான வியாபார முறையைப் பற்றியோ ஒரு வார்த்தைகூடக் கூறுவதில்லை. ஆனால் வட்டி விஷயம் வரும்பொழுது கதை வேறுவிதமாக மாறிவிடுகிறது. நியாயமாக நூற்றுக்கு வருடத்துக்குப் பத்து வட்டி வாங்க வேண்டிய இடத்தில் இருபது வட்டி கேட்டால், மக்கள் சமூகம் வட்டித் தொழில் செய்பவர்களைத் தூற்றிச் சபிக்கின்றது. இங்கிலாந்தில் பல கம்பெனிகள் நூற்றுக்கு நூறு இலாபம் சம்பாதிப்பதைப் பற்றி நாம் கேள்விப்படுகின்றோம். அவைகளைப்பற்றி யாரும் ஒரு வார்த்தையும் பேசுவதில்லை. ஆனால் அதேசமயத்தில் செட்டியார்கள் அதிக வட்டி வாங்குவதாகப் பழிக்கப் படுகின்றது.

தாய் நாட்டில் செட்டியார்கள்

இங்குள்ள செட்டியார்கள் தங்கள் தாய் நாட்டிலும் இம்மாதிரியே வியாபாரம் செய்து கொண்டிருப்பார்களென்று நீங்கள் கருதலாம். ஆனால் நண்பர்களே! நீங்கள் கருதுவது முற்றிலும் தவறானது என்று நான் ஆதாரத்துடன் கூறுகின்றேன். இந்தியாவில் பெரும்பாலான செட்டியார்கள் வட்டித் தொழிலில் ஈடுபடுவதில்லை. காலத்துக்கேற்ற புது வியாபாரங்களில் அவர்கள் தங்கள் அறிவையும், காலத்தையும் பணத்தையும் செலவிடுகின்றார்கள். உதாரணமாக, பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பேனிகள், பஞ்சாலைகள், சர்க்கரைத் தொழிற்சாலைகள் மற்றும் ஷேர்புரோக்கிங் போன்றவைகளில் செட்டியார்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். அரசாங்கச் சபைகளிலும், சட்டசபைகளிலும் நகர சபைகளிலும் இன்னும் பல எண்ணற்ற பொது ஸ்தாபனங்களிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள். இந்தியாவிலுள்ள பழைய நகரசபைகளிலொன்றான சென்னைக் கார்ப்பரேஷனின் முதலாவது மேயராக எனது சமூகத்தைச் சேர்ந்த ஓர் இளைஞர் குமார ராஜா முத்தய்யா செட்டியார் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார் என்ற செய்தியை உங்களுக்குக் கூறுகின்றேன். வெளிநாடுகளில் எனது சமூகத்தினர் பொது வாழ்க்கையில் தமக்குரிய பங்கை ஏற்றுக் கலந்து கொள்ளாதிருப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும். வியாபாரம் செய்யும் ஒரு செட்டியார் வெளிநாட்டிலிருக்கும் பொழுது பொது வாழ்க்கையிலீடுபடப் பயப்படுகிறார். தனது காலத்தையும் ஆற்றலையும் தனது தொழிலை வளர்ப்பதிலேயே செலவிட விரும்புகிறார். காலம் மாறிக்கொண்டே வருவதினால் இனிமேல் எனது சமூகத்தினர் வெளிநாட்டில் பொதுவாழ்க்கையிலும் ஈடுபட்டுத் தங்கள் கடமையைச் செவ்வையாகச் செய்வார்களென்று நான் நம்புகிறேன். செட்டியார்களின் நேர்மையான தொழிலும் அவர்களின் துணிச்சலும் இந்த நாட்டிலும், பர்மாவிலும் பாராட்டப்பட வேண்டுவது அவசியமாகும். உங்கள் மத்தியில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக மீண்டும் வந்தனஞ் செலுத்துகின்றேன்.

நகரத்தார் முதல் மாநில மாநாடு



மாநாட்டு ஆலோசனைக்குழு கூடிய மாட்சிமிகு ராஜா அண்ணாமலை மன்றம்



முதல் ஆண்டுச் செயலர்

திரு. நாக. முத்தையா



குலந் தழைக்க வந்த குழந்தை நலம் பேணுக!

மு. சோமசுந்தரம் செட்டியார்

(சென்னை நகரத்தார் சங்கத் தலைவராகிய, உயர்திரு. மு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் சிறந்த கல்வியாளரும் ஆவார்கள். அன்னார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பர்மாவில் கம்பைக் கல்விக் கழகத்தின் பொறுப்பாளராக இருந்து பணியாற்றியவர்கள்.) அக் கல்வி நிலைய வாயிலாக வெளிவந்த இதழில், ஆசிரியராகவிருந்து, இவர்கள் பல தலைப்புக் கட்டுரைகள் (Editorial) எழுதியுள்ளார்கள். அவற்றுள் ஒரு கட்டுரையின் சில பகுதிகளை இங்கு எடுத்து வெளியிட்டு, குழந்தை வளர்ப்பில் காட்டவேண்டிய அக்கறையை நகரத்தார் மரபினர்க்கு மீண்டும் நினைப்பூட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

மலர்தலையுலகிலுள்ள மாந்தர் யாவரும் எல்லாப் பேறும் பெற்று இன்புற வாழவேண்டுமென எண்ணுவது இயல்பே. இது குறித்தன்றோ முதியோர்கள் '' பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க '' எனக் கூறிப்போந்தனர். பலவகையான நற்பேறுகளைப் பெறு தலைப் பற்றிய இத்தொடர், இன்று காலப்போக்கின் காரணமாக மாற்றியுணரப் படுகின்றது. ஒரு சிலர் பதினாறும் பெற்று என்றவுடன் எவ்விதமும் பதினாறு குழந்தைகளைப் பெற்றுவிடுதல் தான் உயர்ந்த பேறெனக் கருதி அவ்வழியில் முந்துகின்றனர். அத்தகையவரை நோக்கித் தான் ஒரு பெரியார், '' புற்றீசல் போலப் பொலபொலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்! காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்!!' என மொழிகின்றார். எனினும் மக்கட்பேறு வேண்டா ஒன்றெனக் றுவதற்கில்லை. மனிதன் அடையவேண்டிய னறு பேறுகள் மிகச் சிறப்புடையன. அவை லோரும் அடைந்து, பல்வகையாலும் இன் நல்வாழ்வு பெற இன்றியமையாதன.

அவற்றுள் மக்கட்பேறும் சிறந்த ஒன்றே. ஆனால் மக்களைப் பெற்றுவிட்ட ஒன்றினால் மட்டும், அப்பேற்றை எய்திவிட்டதாக இன்புற இயலாது. பெற்ற மக்களைப் பெருமையுற வளர்ப்பதிலேதான், அப்பேற்றின் சிறப்பு




பதினாறு பேறுகள்

1.புகழ் 2.கல்வி 3.வலிமை 4.வெற்றி 5.நன்மக்கள் 6.பொன் 7.நெல் 8.நல்வினை 9.நுகர்ச்சி 10.அறிவு 11 அழகு 12.பொறுமை 13.இளமை 14.துணிவு 15.நோயின்மை 16.வாழ்நாள்

அடங்கியிருக்கிறது. தாம் பெற்ற மக்களால் இடருறுவார் எத்தனையோ? இவ் வையகத்தில் மக்களால் துன்பம் உண்டாகின்றதென்றால்— இளம் வயதில் ஒழுக்கக் குறைவும் கட்டுப் பாட்டுத் தளர்ச்சியும் அடக்கமின்மையும் ஏற் படுகின்றன என்றால் அதற்குக் காரணம் பெற் றோர்களே யாவர்.

சிறு வயதில் திருத்தி வளர்க்காமல் செல்ல மாகவும், செல்வச் செருக்குடனும் வளர்க்கப் பெறும் பிள்ளைகளே பிற்காலத்தில் பிறர்க் கின்னு செய்பவராய், பெற்றோர்களின் பெய ருக்கு ஊறு செய்பவராய்த் திகழ்கின்றனர். குலப் பெருமையை அழித்துவிடவும் முனைகின் றனர். திருத்தி வளர்த்த 'குரோட்டன்ஸ்' போன்ற தாவர இனங்களும்கூடப் பார்ப்பவ ருக்கு எழிலையும் ஒழுங்கையும் இன்பத்தையும் புலப்படுத்தி விளங்குகின்றன அல்லவா? மக்கள் சிறு குழந்தைகளாக இருக்கும்போதே குறிப் பிட்ட நேரத்தில் உணவருந்தவும், உழைக் கவும் உறங்கவும் பழக்கப்படுத்துதல் வேண்டும். நேரந் தவறுமை என்ற ஒழுங்கு வாழ்வு முன் னேற்றத்திற்கே வழிவகுக்க வல்லது. மேலும் நல்லகாற்றைச் சுவாசித்தல், உடலைஅழுக்கின்றி வைத்துக்கொள்ளுதல், நல்ல மரியாதையான சொற்களையே பேசப் பழக்குதல் முதலிய துறை களில் பயிற்சி கொடுக்கவேண்டும். தக்க வயது வந்ததும் உயர்ந்த கலாசாலைகளுக்கு அனுப்பிக் கல்வியிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் உட லுறுதியிலும் தொழிற் பயிற்சியிலும் சிறந்த வர்களாக ஆக்க வேண்டுவது ஒவ்வொரு பெற் றோரின் முக்கிய கடமையாகும். இச் செயலில் சிரமத்தையோ, செலவையோ கவனிப்பதற் கில்லை. தாம் பெற்றுள்ள எல்லா உடைமை களுக்கும் உரியவராகின்ற மக்கள் முன்னேற் றத்தில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டு மென்பதை அதிகமாக வலியுறுத்த வேண்டிய தில்லை.



நம் சமூகத்தினரில் பலர் கல்வியில் போதிய கவனம் செலுத்தவில்லை. என்றாலும் வணிகத் துறையில் சிறந்து விளங்கியதால் பெரும் செல்வர்களாகவும் பிறரிடம் எதையும் எதிர்பாராதவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். ஆதலால் இனியும் வாணிகம், தொழில் முதலிய நம் குல முயற்சிகளைக் கைவிடாது, அதற்கேற்ற முறையில் குழந்தைகளின் கல்வியை வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். தற்காலக் கல்வி முறைப்படி School Final; F.A., B.A., M.A., என்ற பட்டப் படிப்புக்களில் அவரவர்விருப்பத்திற் கேற்பஎவ்வளவுதூரம் வேண்டுமானாலும் கற்பிக்கலாம். ஆனால் படிப்பு முடிந்து வெளி யில் வந்ததும் உத்தி யோகத்திற்கு அலையா திருக்கும்படி செய்ய வேண்டுமென்றுதான் நாம் வலியுறுத்துகிறோம். அதாவது பாங்கிங், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகட்கு உதவியளிக்கும் படிப்பையும் குழந்தைகட்குப் போதிக்க வேண்டும்.



ஆங்கிலம் பயிலாத பெற்றோர்கள் பலர் தம் குழந்தைகள் ஆங்கில அறிவும் பெற்றுப் பிற்காலத்தில் நல்வாழ்வு பெறவேண்டுமென்ற நோக்குடையராய் ஆங்கிலக் கல்லூரிகட்கு அனுப்புகின்றனர். அங்கு சிறிது பயின்றதும், சில சிறுவர்கள் தங்களைத் தம் பெற்றோரினும் அறிஞராகக் கருதிக்கொண்டு, அவர்களையே அவமதிக்க ஆரம்பிக்கின்றனர். இது அறி வுடைமை யன்று. சில ஏடுகளைப் படித்த ஒன் றினுலே ஒருவன் அறிவுடையோனாகக் கருதப் பெறான். கல்வி யென்பது தம் வாழ்க்கையைச் செம்மையாக வைத்துக் கொள்வதற்குரிய ஒரு கருவி யென்பதை ஒவ்வொருவரும் மனத்தில்

பதியவைத்துக் கொள்ளல் வேண்டும். இது கருதியே முன்னைய பெரியோர்கள், 'கற்றுணர்ந் தடங்கல்' எனக் கூறினர். அதாவது ஐயந்திரி பறக் கற்று அவற்றை நன்குக ஆராய்ந்து அவ் வழி நடத்தல் என்பதே அதன் பொருள். படிப்பது தேர்ச்சி பெற 'பாஸ் மார்க்கு' வாங் கும் ஒரு வெற்றிக்கு மட்டுமன்று. உயர்ந்த அறிவும் செவ்விய வாழ்க்கையும் உடையோர் நிறைந்த நாடுதான் சிறந்து விளங்க முடியும். இன்னும் சில ஆண்டுகளில் அத்தகைய செவ் விய அறிஞராய் வரவேண்டியவர்கள் தற்கால இளைஞர்களென்பதைக் கூறவும் வேண்டுமோ? ஓர் ஆங்கிலப் பெரியார்," A Nation moves on the feet of its children," எனக் கூறுகிறுர். அத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்ள விருக்கும் இளைஞர்கள் பயில்கின்ற காலத்தே அடக்கம், மரியாதை, அன்பு, பிறர் நலம் பேணல், உண்மை பேசுதல் முதலிய உயர் பண்புகள் உடையோராய்க் கல்வியிலும் ஆர்வம் காட்டுவது நலம். மேற்கூறிய குணங் களமைந்த அறிஞர் பலர் நமது கல்வி நிலையத் திலிருந்து வருடந்தோறும் வெளிவந்து கொண் டிருக்க வேண்டுமென்பதே நமது பேரவா.

நமது கல்வி நிலையம் தோன்றி ஏழு ஆண்டு கள் முடிந்து, இப்பொழுது எட்டாவது ஆண்டு நடைபெறுகிறது. ஏழு மாணவர்களுடன் தொடங்கிய இந் நிலையம் இன்று 260 மாணவர் களுடன் திகழ்கின்றது. முகல் வீதியில் ஒரு சிறிய அறையில் தொடங்கிய பள்ளி இன்று 16 ஏக்கருள்ள அழகிய பூங்காவில் பல கட்டி டங்களில் மிளிர்கிறது. அன்று இளைஞர் சங்கத் தினர் சிலரின் எண்ணத்தால் எழும்பிய இது, இன்று இராஜா சர் அண்ணுமலைச் செட்டியா ரவர்கள் போன்ற எல்லாப் பெரியோர்களின் பேராதரவையும் பெற்று நம் சமூகத்தின் பொதுவுடைமையாகக் கருதப்படுகிறது. இங்கு தங்கிப் பயிலும் மாணவர்களின் எண் ணிக்கை இப்பொழுது 225. அவர்கட்கு இப் பொழுதுள்ள கட்டிடங்கள் போதவில்லை யென்ற குறையை நீக்க 'டிரஸ்டார்' ஒரு புதிய கட்டிடம் ஒன்று கட்ட முன்வந்திருக்கின்றனர். பாங்கிங், வியாபாரம், கைத்தொழில் முதலி யவைகளும் இங்கு சொல்லிவைக்கப் பெற வேண்டுமெனப் பல அன்பர்கள் விரும்புகிறுர் கள். அதுதான் நமது குறிக்கோள் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் அதற்குரிய நூல்களெல் லாம் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருப்ப தால் மாணவர்கள் ஓர் அளவு ஆங்கில அறிவு பெற்ற பின்புதான் போதிக்க இயலும். இவ் வாண்டில் 'ஐஸ்கூல்' மாணவர்கள் சிறிது அதிகரித்திருக்கின்றுர்கள். இனிமேல் அதிக மானவர்கள் ஐஸ்கூலிலும் பயில்வார்களென் பதில் ஐயமில்லை. ஆதலால் அடுத்த ஆண்டில் அதற்காவன செய்யப்பெறலாம். இன்னும் நமது சிறுவர்கட்கு எத்தகைய வசதிகள் அவசியமென்று கருதப் பெறுகின்றனவோ, அவற்றையெல்லாம் செய்து தர 'டிரஸ்டார்' விருப்பத்துடன் இருக்கிறுர்கள். எனவே, நமது சமூகப் பெரியோர்கள் தத்தம் குழந்தை களை இங்கு அனுப்பிச் சில ஆண்டுகள் தங்க வைத்து, அவர்களை முற்றக் கற்ற முதிர்ந்த அறிவாளர்களாக ஆக்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேம்.



நகரப் பெருமக்கள் எதை எழுதினுலும் முதற்கண் பிள்ளையார் சுழியும் சிவமயமும் எழுதியே தொடங்குவர். ஒருசமயம் பெரிய வர் ஒருவர் காலை நேரத்தில் பல நண்பர் களுடன், சிவப்பழம் போலத் திருநீற்றை நெற்றி நிறைய இட்டுக்கொண்டு; பிள்ளையார் கோவிலுக்கு வணங்குதற்காகச் சென்று கொண்டிருந்தார். அவர்களை வழியிற் கண்ட ஒருவர், கேலியாக, "ஏது சிவமயமாயிருக் கிறதே! எங்கே போகிறது?" என்று கேட் டார். அதற்குப் பெரியவர், 'இந்தச் சிவமயம் பிள்ளையார் சுழியை நோக்கிப் போய்க்கொண் டிருக்கிறது,' என்று அதே நகைச்சுவைக் குறிப்புடன் விடை கூறினர்.



காப்பாய் நன்றே!

பெரி. சிவனடியான் எம்.ஏ., பி.டி.,

வணிகர்குலப் பெருமக்கள் வணங்கும் தெய்வம்
வழிவழியாய்க் காத்துவரும் பழனித் தெய்வம்
பிணியகற்றிப் பெருவாழ்வு தந்த தெய்வம்
பேரழகுத் தமிழ்த்தெய்வம் செந்தூர்த் தெய்வம்
அணிமணிகள் துணிவிழையா ஆண்டித் தெய்வம்
அடுத்தவர்க்கு நல்குவதில் அரசுத் தெய்வம்
பணியும்நமைப் பாலூட்டிக் காக்கும் தெய்வம்
பச்சைமயி லேறிவிளை யாடும் தெய்வம்.

திருமுருகா! ஒருமுகத்தால் உமைப்ப ணிந்தோம்
செவ்வேள்நீ! அறுமுகத்தால் அருள வேண்டும்!
கருவிலுறு உருமுதலாய்க் கடல்போல் வாழும்
கண்மணிகள் வாழ்வுபெறக் கருணை வேண்டும்
பெருமையெலாம் உம்மருளால் பெற்றதாலே
பெருவணிகர் நகரத்தார் சங்கம் உன்றன்
அருமைமிகு அழகுமயில் உருவைப் போற்றி
அமைத்துளது இலச்சினையாய்க் காப்பாய் நன்றே!



நகரத்தாரும் தொழில்திறமையும்

அ.மு.மு.முருகப்ப செட்டியார்

[பொருளியல் தொழிலில் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழும் நம் சமூகப் பெருமகனர் உயர்திரு அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்கள், கோயமுத்தூர் நகரத்தார் சங்கத்தில் 17-3-65 அன்று ஆற்றிய தொடக்க விழாச் சொற்பொழிவில் பல உயரிய கருத்துக்களைப் பயன்படும் வகையில் வெளியிட்டார்கள். அவை நம் சமூகத்தவருக்குப் பெரிதும் பயன்படும் என்று கருதி, அச் சொற்பொழிவின் சில பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம்.]

நம்முடைய சமூகத்தார்களின் நிலைமையைப்பற்றிக் கண்ணேட்டமாகப் பார்த்தால் இரண்டு மூன்று அம்சங்கள் முக்கியமாகத் தென்படும். (1) நாம் செய்து வந்த தொழில் (2) நாம் தொழில் நடத்திய இடங்கள் (3) நமது தொழில் மூலம் நாம் நமது சமூகத்தினருக்கும் நமது நாட்டு மக்களுக்கும் சமுதாய ரீதியில் செய்துள்ள சேவை. இம் மூன்று அம்சங்களை மட்டும் நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

நாம் செய்துவந்த தொழில் வங்கித் தொழில். வட்டிக்கடை என்ருலும், லேவாதேவி என்ருலும் பெயர் வித்தியாசமே தவிர தொழில் தன்மையில் வித்தியாசமில்லை. இப்போது மேல் நாட்டு முறைப்படி ஜாயின்ட் ஸ்டாக் பாங்க் (Joint Stock Bank) என்று சொல்லப்படுகிற பாங்கிகள் செய்யும் கடன் கொடுக்கும் வேலையைத்தான் நமது முன்னேர்களும் செய்து வந்தார்கள். அந்தக் காலத்தில் இருந்த சூழ்நிலைக்கும், நாம் தொழில் நடத்திய மக்களுடைய பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை, தேவைகள், அவர்கள் நடத்தும் தொழில்கள் முதலியவற்றை அனுசரித்து அவற்றுக்குத் தகுந்த மாதிரி நமது முறைகளை அமைத்துக்கொண்டு தொழில் நடத்தி வந்தோம். அதன் மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு அறப்பணிகள் செய்தும், கல்விக் கூடங்கள் அமைத்தும், சமூகத் தொண்டு செய்து வந்தோம். நாம் செய்து வந்த சமூகத் தொண்டு நமது பண்பாட்டுக்கும், சமயக் கோட்பாடுகளுக்கும் இணங்கி நமது முன்னேற்றத்துக்கும், சுகவாழ்வுக்கும் ஏற்றதான வகையில் அமைந்திருந்தது.

இப்போது இம்மூன்று வகைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாறுதல்களுக்கு நாம் காரணம் அல்ல. நமது சமூகத்தார் காரணமல்ல. சூழ்நிலைகள் மாறி, சமூகத்தினரின் கொள்கைகள், மனப்பான்மைகள் மாறி, தொழில் தன்மையும் மாறி, நம்முடைய கட்டுக்கு (Controlக்கு) அகப்படாத காரணங்களால் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. நாம் தொழில் நடத்திவந்த இடங்களில்-முக்கியமாக பர்மா, சிலோன், மலேயா போன்ற அண்டை நாடுகளில்-அரசியல் காரணங்களினுலும், இதர காரணங்களாலும், நாம் தொடர்ந்து தொழில் நடத்த முடியவில்லை. தொன்று தொட்டுப் பரம்பரை பரம்பரையாகத் தொழில் நடத்தி வந்ததாலும் நமது மக்கள் அந்தந்த நாட்டு மக்களுடனே கலந்து ஒன்றிப்போனதாலும், நமக்கு அந்த நாடுகளில் குடி உரிமை, சொத்து உரிமை முதலிய தகுதி உண்டு. அந்த உரிமைகளுக்கெல்லாம் நாம் முற்றிலும் பொருந்தியவர்கள்தாம். இவ்வுரிமைகளை நமக்கு உறுதி செய்து கொடுக்கவும், பறிபோகாமல் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் அரசாங்கக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். வேற்று நாடுகளுடன் நடவடிக்கைகள் அரசாங்கத்தின் மூலம்தான் நடைபெற வேண்டுமே தவிரத் தனிப்பட்டவர்கள் மேற்கொள்ள முடியாது. இவ்வகையில் நமது இந்திய அரசாங்கம் போதிய சுறுசுறுப்பும் உணர்ச்சியும் காட்டவில்லை. நமது அயல் நாட்டுக் கொள்கையில் வலிமை, உறுதி இருக்க வேண்டும். ஆனுல் அவை அவ்வாறு அமையவில்லை. இதைப் பற்றி வருத்தப்படத்தான் வேண்டும். இதனுல் பாதிக்கப்பட்டவர்

களில் பெரும்பான்மையினர் நமது சமூகத்தினர்கள். இதன் விளைவாக வெளிநாடுகளில் இருந்தவர்கள், கௌரவமாகப் பிழைப்பு நடத்திக்கொண்டிருந்தவர்கள், எல்லாவற்றையும் விட்டு, தாயகம் திரும்பி வந்துள்ளார்கள். இந்த மாறுபட்ட சூழ்நிலையில் நமது சமூகம் வாழ்ந்து முன்னேற வேண்டும்.

நாம் நடத்திய தொழில்களும், தொழில் முறைகளும், இந்தக் காலத்துக்குப் பொருந்தாது. அவற்றையெல்லாம் அடியோடு மாற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். வங்கித் தொழில் நடத்துவதானால் இண்டியன் பாங்க், இண்டியன் ஓவர்சீஸ் பாங்க் போன்று நவீன முறையில் நடத்த வேண்டும். உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டால் பெரிய பெரிய நிறுவனங்களை ஏற்படுத்தி நவீன முறையில் தொழில் நுட்பங்கள் எல்லாம் தெரிந்து கொண்டு அவற்றை நடத்த வேண்டும். பழைய தொழில்களெல்லாம் புதுமுறையில் நடத்த வேண்டும். புதுப் புதுத் துறைகளிலும் ஈடுபட்டுப் புதுத் தொழில்கள் செய்துதான் நாம் முன்னேறவேண்டும். இது ஒரு மாறுதல். சூழ்நிலை நமது நாட்டில் மாறி விட்டது. நாமும் மாறவேண்டும்.

நமது சமூகப் பணியிலும் ஏற்பட்டுள்ள மாறுதலான சூழ்நிலையைக் கவனிக்க வேண்டும். கோயில்களுக்கு மானியங்கள் விட்டு, வழிபாடுகளுக்குக் கட்டளைகள் ஏற்படுத்தி, தர்ம சத்திரங்கள் கட்டி அன்னதானம், யாத்திரை வசதிகள் போன்றவைகளை அதிகமாக முன் காலத்தில் செய்து வந்தோம். இதனால் நாம் நன்மையே பெற்றோம் என்று நான் சொல்லத் தேவையில்லை. இது நமது பண்பாடு. இக்காலங்களில் இதே அறப்பணிகளை விரிவுபடுத்த முடியவில்லை. வருமானம் இல்லாத காரணம் ஒன்று. வாழ்க்கையின் பிரச்சினைகள் கடுமையாக ஆகிவிட்டதால் இவ்வகையில் சிரத்தைக் குறைவும் காரணமாக இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும் அறப்பணிகளை, முன்பு ஏற்படுத்தியதை விடாது நடத்தினாலே போதுமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கோயில்களுக்குள்ள சேர்த்துக்களையும்



வருமானத்தையும் கோயில் திருப்பணிக்குச் செலவழித்தது போக மீதமிருப்பதை சமூகப் பணிக்குச் செலவழித்தல் நல்லது என்ற கருத்தும் வேகமாகப் பரவி வருகிறது. அரசாங்கத்தின் ஆதிக்கமும் தலையீடும்கூட இக்கருத்தின்படியே இதன் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. ஆகவே பொதுச் சொத்துக்கள் சமூகப்பணிக்கு அதிகமாகச் செலவு செய்யப்பட வேண்டும் என்ற சமுதாய நலக் கொள்கை (Welfare concept) பரவலாக இருக்கிறது.

சமயத்தில் ஈடுபாடான கொள்கைக்கும் (Religious concept)க்கும் சமுதாய நலக் கொள்கைக்கும் (Welfare concept) மோதல் ஏற்படா விட்டாலும் அறப்பணியைவிட சமூகப்பணி முக்கியமானதாக எண்ணப்படும் சூழ்நிலை இப்போது அதிகமாக ஏற்பட்டிருக்கிறது.

இந்த மூன்று மாறுதல்கள் தோன்றியுள்ள தற்காலச் சூழ்நிலையில் நமது சமூகம் வாழ வேண்டும். வாழ்ந்து முன்னேற வேண்டும். இதற்கு நமது சமூகத்தினர் எந்தெந்த வகைகளில் தங்க

ளுடைய திறமைகளையும், மனப்பான்மைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் நமக்கு இப்போது முக்கியமானது. இதுபற்றி கருத்துக்கள் சிலவற்றை உங்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டு மக்கள் மத்தியிலேயே நாம் தொழில் நடத்தி முன்னேற வேண்டும் என்பதில் அனுகூலங்கள் உண்டு, இடையூறுகளும் உண்டு. பொதுவாக நமது மக்கள், அண்டை நாடுகளில், ஓரளவுக்குச் சுலபமாகவேகூட தொழில் நடத்தி விடலாம். நமது நாட்டில் - அதுவும் இந்தக் காலத்தில்- அவ்வளவு சுலபமாக இதைச் செய்யமுடியாது. ஏனெனில் இங்கே நம்முடைய சூழ்நிலை வேறு. நமது நாடு அண்டை நாடுகளைவிட முன்னேற்றம் அடைந்துள்ள நாடு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். உலக நாடுகளின் வரிசையில் இந்தியா பின்தங்கிய நாடு என்று மதிக்கப்பட்டாலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்த்துப் பார்த்தால், இந்தியாதான் குறைந்த அளவு பின்தங்கியது (Minimum backward) என்று சொல்ல வேண்டும். நமது அறிவு, ஆற்றல், திறமை, உழைப்பு எல்லாம் ஓரளவுக்கு உயர்ந்த தன்மையுடையன. ஆகவே இந்த அளவுக்கு நமது சமூகமும் தனது பொது அறிவையும், ஆற்றலையும், திறமையையும் உயர்த்திக்கொள்ளுதல் அவசியம். கல்வி இதில் முதல் இடம் பெறும். சாதாரணக் கல்வியுடன் தொழிற்கல்வி, பொறியியல் கல்வி எல்லாம் முக்கியம். நமது சமூகத்தினரிடையே இந்த வகையில் விழிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் பார்க்கிறோம், நமது செட்டிநாட்டிலேயே பல உயர்நிலைப் பள்ளிகளும், பெண் பள்ளிகளும், கல்லூரிகளும் சுறுசுறுப்புடன் பணியாற்றி வருகின்றன. படிக்கும் மாணவர்கள், மாணவிகள் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டே வருகின்றன. பாலிடெக்னிக் பள்ளிகளும் அநேகம் இருக்கின்றன. இவற்யெல்லாம் பூரணமாக நமது சமூக மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், உபகாரச்சம்பளம் (Half fee full-fee Scholarship) வசதிகளுள்ள இடங்களில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். படிப்புப் பற்றிக் கவனிக்க வேண்டியவை இரண்டு. பலன் கிடைக்க நீண்ட நாள் பிடிக்கும் படிப்பு ஒன்று. 5, 6 ஆண்டுகள் விடாமுயற்சியுடன் படித்துத் திறமைகளைச் சம்பாதித்துக் கொண்டால்தான் அதிலிருந்து கிடைக்கக் கூடிய பலன் கிடைக்கும். இரண்டாவது, ஆதாரக்கல்வி. நடுத்தரப் பள்ளிப்படிப்பு நன்றாகச் சீராக அமைந்து அஸ்திவாரம்போல் இருந்தால்தான் பாலிடெக்னிக், என்ஜினீரிங் போன்ற படிப்புகளில் தேர்ச்சியடைய முடியும். இதற்கு ஆங்கிலத்தின் அறிவும் பயிற்சியும் அவசியம். மொழிப் பிரச்சினை பற்றி நான் இங்கே சிறப்பாகச் சொல்ல வேண்டியதில்லை. தமிழ் நமது தாய் மொழி. அதை எப்படியும் நாம் பாதுகாத்துக் கொள்ளுவோம். அதற்கு ஒருவித ஆபத்தும் வந்துவிடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். ஆனால், ஆங்கிலத்தின் மூலம்தான் நாம் முன்னேற்றம் காணமுடியும் என்பதில் இங்கே ஒருவருக்கும் சந்தேகம் இருக்க முடியாதென்றே நினைக்கிறேன். ஒருக்கால் அபிப்பிராயபேதம் இருப்பினும் என் அனுபவத்தைச் சொல்லுகிறேன். ஆங்கிலம் நமக்கு அவசியம். அதன் மூலம் நமது அறிவு நிச்சயமாக வளரும். நமது தொடர்புகள் விரிவடையும். நமது தொழில் வளம் பெருகும். நமது சமூகமும் முன்னேற்றம் அடையும். ஆகையால் தமிழுடன் ஆங்கிலத்தைப் புறக்கணிக்காமல் பூரணமாக அதைப் பயில வேண்டும்.

தொழில் திறன்மையைச் சம்பாதித்துக் கொண்டு பல தொழில்களில் புகுதல் வேண்டும். புதுப்புதுத் தொழில்களில் புகப் புதுப் புதுத் திறமை வேண்டும் என்பதில்லை. பழைய திறமைகளே போதும். புதுச் சூழ்நிலைகளுக்கு அந்தப் பழைய திறமைகளை மாற்றிப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும். பஞ்சாலை நடத்தி அதில் அனுபவம் ஒருவருக்கு இருந்தால் அவர் வேறு துறையில் ஒரு தொழிற்சாலையை அதிக அல்லலில்லாமல் ஆரம்பித்து நடத்த முடியும். சர்க்கரை ஆலைகளையும், சிமிட்டித் தொழிற்சாலையையும், நூல் ஆலையையும், ரேயான் ஆலையையும், இரசாயன உரத்தொழிற்சாலையையும் ஒரு தொழில் அனுபவமுடையவர் எப்படி ஆரம்பிக்க முடிகிறது? ஒவ்வொரு துறைத் தொழிலுக்கும் தனித் தனியே தெரிந்துகொள்ள வேண்டிய நுணுக்கங்கள் பல இருந்தாலும் பல பொதுத் தொழில்களில் ஒரு துறையில் தேவைப்படும் திறமைகளே வேறு துறைகளிலும் தேவைப்படும். மேலாண்மை, நிருவாகம், கட்டுப்பாடு, உற்பத்தித் திறமை இவையெல்லாம்

பொது இயல்புகள். எல்லாத் தொழில் துறைக்கும் இவை பொருந்தும்.

நமது சமூகத்தினர்கள் வட்டிக்கடையும் லேவாதேவியும் செய்து பழகியவர்கள் என்றால் பெரிய கம்பெனிகளை உருவாக்குவதிலும் மூலதனம் சேகரிப்பதிலும், கூட்டுறவு முறைகளை அமைப்பதிலும், லாப-நட்டக் கணக்காளிப்புகளிலும், அவர்கள் இயற்கையாகவே திறமையுடன் செயலாற்ற முடியும் என்பதுதான் என் கருத்து. இதனால்தான் நான் சொல்லுகிறேன் : நமது சாமர்த்தியங்களை புதுப் புதுத் துறைகளில் பயன்படுத்தத் தெரிந்து கொண்டால்தான் நமது சமூக முன்னேற்றத்துக்கு வழி காணலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. இங்கே, கோவை நகரத்திலே நமது சமூகத்தினர் பஞ்சாலைகளை ஏற்படுத்தி மிகவும் வெற்றிகரமாகவே நடத்தி வந்திருக்கின்றனர். 50 வருடத்துக்கு மேலாக இங்கே ஆலைகள் நம்மவர்சள் நடத்தி வருகிறார்கள். இப்போது நமக்கு வாய்ப்புகள் அமோகமாகப் பெருகிக் கிடக்கின்றன. திட்டங்களினால் ஏற்பட்ட ஒரு பலன் இம்மாதிரி வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொடுத்திருப்பதுதான். அரசாங்கத்தின் உதவியும் பரவலாகப் பலவிதங்களில் கிடைக்கிறது. இந்தச் சூழ்நிலையில் புதுப் புதுத் தொழில்களில் நமது சமூகத்தினர்கள் முன்னேற்ற மடைய முயற்சியும் உழைப்பும்தான் வேண்டும். இதில் நாம் எப்போதுமே சோடைகள் அல்ல. கடுமையாக உழைப்பவர்கள் என்று நமக்கு எப்போதுமே புகழ் உண்டு. உதாரணத்துக்கு எங்கேயும் போக வேண்டாம். கல்வித் துறையிலும் வியாபாரத் துறையிலும் இராஜா சர் பெயர் தான் நமக்கு முதலில் சொல்லத் தோன்றும். அடுத்து அழகப்பச் செட்டியாரின் பெயர் நமக்குத் தெரியும். பஞ்சாலை என்றால் கருமுத்துத் தியாகராசன் செட்டியார் என்று யாரும் சொல்லுவார். சினிமா என்றால் ஏ. வி. எம். (A. V. M.); தோல் துறை ஏற்றுமதி வாணிகம் (Leather Trade) என்றால் ஆ. நாகப்ப செட்டியார். இப்படி எந்தத் தொழிலில் புகுந்தாலும் அதில் முதன்மையாகவே நம்மவர்கள் விளங்குகிறார்கள். இவர்கள் எல்லாம் உழைப்பின் சின்னங்கள். உழைப்பைப் புதுவழிகளில் மேற்கொண்டு முன்னேற வேண்டும்.

இரண்டு அம்சங்களில் எச்சரிக்கையும் அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது. வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காக நமது பண்புகளைக் குறைத்துக்கொள்ளக் கூடாது. ஆலய வழிபாடு, சமயப்பற்று, சமூகப்பற்று, நாட்டுப்பற்று முதலியவை நமது உயர் பண்பாட்டின் அம்சங்கள். யார் எப்படிப்போனால் என்ன, நாம் முன்னேற்றம் அடைந்தால் போதும் என்று நாம் எண்ணி விடக்கூடாது. நமது சமயப்பற்றிலிருந்து அதை ஆதாரமாக வைத்துத்தான் உயர் ஒழுக்கங்களும், நடைமுறை உயர் இலட்சியங்களும், நேர்மை உணர்ச்சியும் உருவாகி வந்துள்ளன.

நமது நோக்கங்கள் நிறைவேறாது தடைப்படும்போதும், மனத்துக்குச் சங்கடங்கள் நேர்ந்து சோர்வு ஏற்படும் போதும், நமக்குத் தைரியமும் அமைதியும் அளிப்பது நமது சமயப்பற்றும் பண்புமாகும். இதைக் குறைந்து போகும்படி விடக்கூடாது. நமது சமூகத்தினருடைய கௌரவமும், நேர்மையும், நாணயமும் முன்பெல்லாம் மிக உயர்ந்த நிலையில் இருந்தன. அதே அளவுக்கு இவை எப்போதும் இருக்கவேண்டும் என்று முயற்சி செய்ய வேண்டும். நாட்டு மக்களிடையே பொதுவாக நாணயக்குறைவு, ஒழுக்கக்குறைவு இருந்தாலும் அதற்காக நாமும் அந்த அளவுக்கு இருந்தால் போதுமென்று திருப்திப்பட்டுக் கொள்ளக்கூடாது.


இரண்டாவது எச்சரிக்கை, நமது சங்கத்தைப் பற்றி நமது சமூகத்தார்களின் நலன்களைக் கவனித்துக் கொள்வதற்காக நகரத்தார் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றாலும் நமக்கு மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லை என்ற மனப்பான்மை வளர்ந்து விடாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

நமது சமூகம் மற்ற சமூகத்தினிடமிருந்து தனித்து வாழமுடியாது. மற்றவர்களின் மத்தியில், அவர்களுடைய சூழ்நிலையிலேயே வாழ்க்கை நடத்த வேண்டியதால் குறுகிய மனப்பான்மை வளரவிடாது, பரந்த நோக்குடனேயே நமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது நமக்கு நல்லது. ★

ம து ரை



26-8-1962ல் சங்கப் பேரவையில்
மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார்
அவர்கள் சிறப்புரை ஆற்றினர்கள்



11-10-1964ல் நடைபெற்ற பாராட்டு
விழாவில் அழகப்பா கல்லூரி முதல்வர்
டாக்டர் வ. சுப. மாணிக்கம் உரை
யாற்றினர்கள்.

இடமிருந்து :—N. அருணசலம் செட்டியார், M.P. அவர்கள், தி. சுந்தரம் செட்டியார் அவர்கள், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள்.



ஆ. வி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள்
செயலர், நகரத்தார் சங்கம், திருச்சி

நகரத்தார் சங்கம், மதுரை

செயலர்கள்



ஆவி. க. அரு.
தியாகராசன் செட்டியார் அவர்கள்



சுப. அண்ணாமலை, M.A., M.Litt.
அவர்கள்

★

பொருளாளர்



சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள்

விழிப்புணர்ச்சி வேண்டும்

கருமுத்து தி. சுந்தரம்

சென்னை நகரத்தார் முதலாவது மாநில மாநாடு தமிழகத் தலைநகரில் சிறப்புற நடக்க விருப்பதையும், அதை யொட்டிச் சிறப்பு மலர் ஒன்று கவினுற வெளியிடப் பெறுவதையும் அறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

மக்கள் இனமே முதலில் தோன்றியதாகக் கருதப்படும் தமிழ் நாட்டில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற தொல்குடி மரபினர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே சிறப்புற ஒழுக்கத்தில் உயர்ந்து வாழ்ந்து வந்தனர். இந்நால் வகை இனப்பாகுபாடு, ஆரியர் பிறப்பை யொட்டி வகுத்த சமுதாயப் பிரிவினையைப் போலன்றி, தொழில் சிறப்பை அடிப்படையாகக் கொண்டு,

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப வகுக்கப் பெற்றதாகும்.

இந்நால் வகைச் சமூகத்தவரும் ஒரு நாட்டின் உயர்விற்கும், பாதுகாவலுக்கும், செல்வச் செழிப்பிற்கும், பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் இன்றியமையாதவராக நமது முன்னோரால் மதிக்கப்பட்டனர்.

''தள்ளா விளையுளும் தக்காரும்
தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு''

என்னும் அரிய குறட்பாவில், செந்தண்மை பூண்ட அந்தணர் தக்காரெனப் போற்றப் பெறுவாராயினர். தாழ்விலாச் செல்வர் என்ற சொற்றொடரால் வணிகப் பெருமக்கள் குறிக்கப் படுகின்றனர். தள்ளா விளையுள் என்னும் சொற்கள் அதற்குக் காரணமான வேளாளரைச் சுட்டி நிற்கின்றன.

இவ்வாறு அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய மூவரையும் எடுத்தியம்பிய வள்ளுவர் பெருமான்,

''ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயனின்றே
வேந்தமை வில்லாத நாடு''

என்ற குறட்பாவில், நாட்டிற்கு நல்லரணாய் விளங்கும் செங்கோல் அரசரின் சிறப்பை விதந்து கூறியுள்ளார். இதனின்றும் அறிவுத் துறையிற் சிறந்த அந்தணர், நாட்டை அரண் செய்து காக்கும் அரசர், மக்கட்கும், ஆட்சிக்கும் வேண்டிய செல்வத்தை ஈட்டி நல்கும் வணிகர், எல்லோரையும் உணவால் ஏற்றுத் தாங்கும் வேளாளர் ஆகிய நலஞ் சான்ற நாற்பால் மக்களைக் கொண்டதே சிறப்புடைய நாடு என்பது இனிது புலனாகும்.

இத்தகைய பண்டைச் சமுதாய அமைப்பில், மன்னவர் பின்னோராகவும் தாழ்விழாச் செல்வராகவும் நாட்டிற்கு அணி செய்து, ''கொள்வதும் மிகைப்படாது, கொடுப்பதும் குறைபடாத'' வணிக அறத்தில் நின்று,



''வாணிகம் செய்வோர்க்கு வாணிகம்
பேணி பிறவும்
தமபோல் செயின்''

என்றவாறு பிறர் நலத்தையும் தம் நலம்போல் மதித்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரே நகரத்தார் பெருமக்கள் ஆவர்.

இவர்கள், ''செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனில் கூரியது இல்'' என்ற பொதுமறை உண்மை தேர்ந்து, வேற்று மொழி வழங்கும் நிலப் பகுதிகட்கு வாணிகத்தின் பொருட்டுச் செல்லும் மாசாத்துவான்களாக விளங்கினர்.


''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்னும் ஔவை மூதாட்டியின் அறிவுரை வழி நின்று, அலைகடல் கடந்து, சீனம், சாவகம், ஈழம், கடாரம். யவனம் முதலிய அயல் நாடுகட்குச் சென்று பொருள் திரட்டும் மாநாய்கராக இலங்கினர்.

இவ்வாறு ''தாளாற்றித் தந்த பொருளைத் தக்கார்க்கு வேளாண்மை புரிந்து'' வாழ்ந்த இப்பெருமக்கள், தாம் வாழ்ந்த அல்லது சென்ற இடங்களில் எல்லாம், கோயில்கள் எடுத்தும், குளங்கள் தொட்டும், அறச்சாலைகள் நிறுவியும் சிவநெறியைப் பரப்பினர். அத்துடன், தாய்மொழியாந் தமிழைத் தம் உயிரெனப் போற்றி வளர்த்ததோடு, தமிழ்ப் புலவர்களைப் பேணிக் காக்கும் புரவலராய் விளங்கினர்.

அவற்றிற்கும் மேலாக, கல்வி யளித்தோர் கண் வழங்கியவர் ஆவர் என்னும் மூதுரையைத் தேர்ந்து, கலை, விஞ்ஞானக் கோயில்கள் பல கண்டு, கேடில் விழுச் செல்வமாம் கல்வியை நாட்டில் பரப்பினர்.

இத்தகைய அரும் பண்புகளுடன், ''பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தாற்போல்'' வாழ்ந்த நகரத்தார் பெரு மக்களில் பலர், இன்றைய உலக அரசியல், பொருளாதார மாற்றங்கள் காரணமாகத் தமது தொல்குடிச் சிறப்பும், பண்டைப் பெருமையும் குன்றி நலிந்து நிற்கின்றனர். இந்த அவல நிலை மாறி, அவர்கள் தமது முன்னோர் புகழ் எய்தி, தமக்கும், தமது சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன் மிக உயர்ந்து வாழ வேண்டுமாயின், அவர்களிடையே ஊக்கம், முயற்சி. ஒத்துழைப்பு முதலிய நற்பண்புகளைத் தோற்றுவிக்க வல்ல ஓர் இயக்கம் உருவாகுதல் இன்றியமையாத தாகும். அத்தகைய இயக்கமாக நகரத்தார் சங்க ஒன்றிப்பை உருவாக்கி, தன வணிகரிடையே புதியதோர் விழிப்பையும் எழுச்சியையும் தோற்றுவிக்க நகரத்தார் நடத்தும் சென்னை மாநில முதல் மாநாடு முற்படும் என்ற நம்பிக்கையுடன், அந்நன் முயற்சிக்கு அங்கயற்கண்ணி பங்கினில் உறையும் ஆலவாயான் திருவருள் துணை நிற்பதாக என அப் பெருமான் இணையடிகளை மனத்தால் நினைந்து, சொல்லால் வாழ்த்தி, மெய்யால் வணங்குகின்றேன்.

வட்டியும் உண்மையும்



நகரத்தார் விடுகளில் உணவுண்ணும் பாத்திரத்தை 'வட்டி' என்பர். 'வட்டில்' என்ற சொல்லின் திரிபு அது. இன்றும் பெருஞ்செல்வர்கள் கூட இலையில் உண்டாலும், மோர்ச்சோறு போல்வனவற்றை 'வட்டி'யிலிட்டு உண்ணவே பெரிதும் விரும்புகின்றனர். 'வட்டி' வைத்துச்சாப்பிடுவதில் ஓர் உட்பொருளும் உள்ளதென்று சிலர் கூறுகின்றனர். அஃதாவது செட்டு மிகுந்த செட்டிப்பிள்ளைகள், முதலைத் தின்று தீர்த்துவிடக் கூடாது, அம் முதலின் மூலம் கிடைக்கும் வட்டியை வைத்துத்தான் உண்ணவேண்டும் என்பதை நினைவுபடுத்த வேளைதோறும் வட்டிவைத்து உண்ணுகின்றனராம். சொற்சாதுரியத்தை விட்டுவிட்டுப் பார்த்தாலும் இதில் 'உண்மை' இருக்கிறதல்லவா?

உ

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள்

இயற்றிய

நகர வாழ்த்து

கடவுள் வணக்கம்.

அறந்தழைக்கும் ஏழுநகர் ஐந்நூற் றுபர்வணிகர்
சிறந்திருக்கும் வாழ்த்திதனைச் செப்பவே — நிறைந்த புகழ்
அஞ்சரமே! குஞ்சரமே! ஆறுமுக மே சிறந்த
கஞ்சமலர் மகளே! காப்பு.

நூல்

சீரான ஏழுநகர்ச் செல்வர் புகழ்பாடக்
காரானை மேனியனே! கந்தனுக்கு மூத்தோனே!
தப்பாத வாசகனே! தண்டமிழ்க்கு வல்லோனே!
எப்போதும் போற்றிசெய்வேன்; எந்தன்வினை தீர்த்தருள்வாய்
சீரகத்தார் மார்பர் சிங்கக் கொடியார்மால்
மார்பிருக்கும் லக்ஷுமியை வைத்த குலத்தவர்கள்
சீராக வாழும் திருப்புனவை மாமுனியை
ஆராய்ந்து போற்றும் அரிய குலத்தவர்கள்
பாண்டிநாட் டாசான்தன் பாதம் பணிந்திடுவோர்
நீண்ட புகழ் சேரநிரை பவளக்கால் நிறைப்போர்
போற்றுவார் ஐந்தெழுத்தைப் போதமளித் தவைபோல்
மாற்றுவார் தீவினையை; வைத்திடுவார் நல்வினையை
தேசம் மதித்திடவே செந்தமிழைத் தான்வளர்ப்போர்
வாசமுடன் வெள்ளானை வாசல்நடை கொண்டவர்கள்
மூவேந்தர் தங்களுக்கு முடிபுனைய வல்லவர்கள்
தார்வேந்தன் சோழன் சரிதைதனை விண்டவர்கள்
பார்வேந்தர் மெச்சப் பவளக்கால் தான்நிறைப்போர்
மாவேந்தர் கொண்டாட மாணிக்கம் பிச்சையிட்டோர்
சீராளன் தன்னைச் சிறக்கக் கறிசமைத்த
நீரேந்து செஞ்சடையான் நீண்டபதம் பெறுவோர்

காசியிலும் சேதுவிலும் கனகத் தருமமிட்டு
வாசமுள்ள ஈசர்பதம் மனம்பதித்து வாழும்அந்நாள்
நாற்றிசையும் பாண்டியனுர் நற்குடிகள் தான்தேடித்
தேற்றமுள்ள தேரோறித் தேசிகர்தம் நாடனுகி
செந்தாமரைபோல் சிறந்த முகம் பார்த்தயர்ந்து
பிந்தாத செந்தமிழைப் பேறுமவர் பெற்றிகண்டு
வாரீர் வணிகரே! வளமையுள்ளோர் உங்களைப்போல்
பாரோம் புவியிலுமே பார்த்து வந்தோம். கண்டிலமே!
நம்முடைய தேசமதில் நற்குடியாய் வாழ்ந்திருக்க
வண்மையுள் ளோர்நீங்கள் வரவேணும் என்றுரைத்தார்
அப்போது நல்வணிகர் அரசருடன் ஏதுரைப்பார்
இப்போதே சொல்லுகிறோம் இவ்வுலகில் உள்ளபடி
எப்போதும் போலஎவ் விக்கினமும் வாராமல்
தப்பாது காப்போம் எனத் தாரும்வலக் கைஎன்றார்
மெய்ப்பாகவே அரசன் வேண்டும் பிரியமுடன்
எய்ப்பகற்ற வந்திடுவீர் எமக்குமுடி சூட்டிடுவீர்
சந்திரரும் சூரியரும் தமிழ்மொழி உள்ளளவும்
எந்தன் அரசுள்ளளவும் இங்கிருந்தே வாழும் என்றார்
வைத்திருப்போம் என்று வலக்கை கொடுத்தாராம்
சித்த மகிழ்ந்தார் வணிகர் தென்னவனுர் வாழ்க என்றார்
என்றவுடன் பாண்டியனுர் இதயக் களிப்புடனே
அன்று விஸ்வ கர்மாவை அழைத்தேது தாமுரைப்பார்
ஆயிரத்தைந் நூறுதேர் அழகாக வேணுமென்றார்
சாயலுடைத்தேகன்மாவும் தமிழரசன் ஆணைவழி
பாயிரத்து நூல்வழியே பண்பாகத் தான்சேர்த்து
ஆயிரத்தைந் நூறுதேர் ஆண்டவர் முன்னே விடுத்தார்
கண்டவுடன் பாண்டியனுர் கன்மாவைக் கொண்டாடித்
தண்டமிழ்சே ரும்வணிகர் தம்மை வரவழைத்து
தேரேறி நம்நாடு செல்வோம் என உரைத்தார்
சிரகத்தார் மார்பர் சிறந்துதே ரேறிநின்றார்
அப்போது பாண்டியனுர் அன்பாகத் தேர்நடத்தி
மெய்ப்பாகத் தாமும் மேல்நகரை விட்டார்கள்
கொந்தரும் காவேரி கொள்ளிடமும் தான்கலந்து
வந்தே இடைமருதார் வழங்குமடம் வைத்தார்கள்
செந்தா மரையாள் சிறந்த வெள்ளாற்றங்கரையில்
வந்தார்வணிகர் அங்கே வழிக்களைப்புத் தான் தீர்ந்தார்
தேசமது வெள்ளாற்றுத் தென்கரையில் நன்றாக
வாசமுள்ள ஓங்காரக் குடிதன்னில் வந்திறங்கி
ஆசு மதுரமுள்ள ஆயிரத்தைந் நூற்றுவர்கள்
நேசமுடன் வாழ்ந்திருக்க நீதிமுறை தான்வகுத்தார்

ஒப்புடனே நாமுமிந்த உயர்பாண்டி நாட்டகத்தே
எப்போதும் குற்றமின்றி இருப்போ மெனவுரைத்தார்
ஒப்பினுர் ஆயிரத்தைந் நூற்றுவரும் ஓர்மனதாய்ச்
செப்பமுடன் நாமிருக்கும் திட்டமிது என்றுர்கள்
அரியூரார் சுந்தரத்தார் ஆன இளசை நகரார்
மருவியே மூவோரும் வாழ்வோ மெனவுரைத்தார்
வாசமுடன் மூத்தோனே மருவி அரியூர்நகரில்
ஈசனேயும் அர்ச்சனேகள் செய்திருக்க என உரைத்தார்
இந்திரனே போன்று இருவர்க்கும் நடுவாக
வந்தவனேச் சுந்தரத்தில் வாழுமென வுரைத்து
வளமையுடைய தமிழ் வல்லவரைத் தானழைத்து
இளசை நகரத்தில் இருமென்று தாமுரைத்தார்
அன்றுவகை மூவருக்கும் ஐநூற்றுவர் எனவே
நன்ரும் பெயராக நலமாக வாழ்ந்தார்கள்
அன்றங் கிருந்த அரியூரார் ஆறுநகர்
நன்றியுடன் சுந்தரத்தார் நாலுநகரம் இருந்தார்
இளசை நகர்வேந்தர் ஏழுநகர மென,
வளமையுடன் இளசைவகை மாதைபுகழ் பட்டணமும்
குரைநகர் வேலேநகர் சொல்லரிய நல்நேமம்
பாரில் புகழ்படைத்த பண்பான ஏளகையும்
எங்கும் புகழ்பெறஇவ் வேழுநகர் உண்டாக்கி
சிங்கக் கொடித்தலேவர் செழித்தங் கிருந்தார்கள்
எங்கும் தமிழ்பெறவே இளசை நகர்தனிலே
கங்கை அணிந்தநல்ல கைலாச நாதருக்கு
கெர்ப்பக் கிரகம், அர்த்தக்கிரகம், கிளேகள் மகாமண்டபமும்
தெப்பக் குளமும் திருக்கோத் திருமதிலும்
அன்னசத்திர சாலேகளும் அளிசூழ்நந் தவனமும்
மன்னரசில் தானமிடும் மாளிகையும் கட்டிவைத்தோர்
கற்பகவி நாயகருக்கு கதித்த திருப் பணியும்
இப்புவியோர் மெச்ச இரணியூர் ஈசருக்கு
செப்பமுள்ள மண்டபமும் திருப்பணியும் செய்தவர்கள்
ஒப்புக்கு உரைப்பதற்கு ஒரு நகரும் இல்லாத
மாத்தூர் தனில்மருவும் மாதைஐநூற் றீசருக்கு
ஏற்றமுள்ள கர்ப்பக்கிரகம் இலங்குமகா மண்டபமும்
திருக்குளமும் பூவனமும் சிறக்க அமைத் திட்டவர்கள்
மருக்கமலம் பூங்கமலம் வளர்பெரிய பட்டணத்தில்
தான்தோன்றி ஈசருக்குத் தாரணியோர் மெச்சிடவே
வான்பெரிய மண்டபமும் மாமதிலும் கட்டியவர்
நயம் பிறக்கும் குரை நகரில் புகழ்வேண்டி
வயங்குதமிழ் நல்வணிகர் வான்தலேவ ளும்பெயரால்

திகழ்கின்ற நல்லிறைவர் தேசிக நாயகர்க்கு
மகிழ்வான ஆலயமும் வாவியும் உண்டாக்கி வைத்தோர்
வேலன் குடியில் மிகுந்த கண்டீஸ்வரர்க்கு
ஆலயமும் நற்பணியும் அன்புடனே ஆக்கிவைத்தோர்
வயங்குபுகழ் நேமம்எனும் வளம்பெரிய பட்டணத்தில்
ஜெயங்கொண்டநாதருக்குத் திருப்பணிகள் செய்தவர்கள்
நற்புவியில் ஏளகையில் நல்லவள ரொளியார்க்கும்
வர்க்கத் திருமுடைய வைரவநா தர்தமக்கும்
மருப்பணிவி நாயகர்க்கும் மற்றுமுள்ள தேவருக்கும்
திருப்பணிகள் செய்து சிறந்தநல் வாழ்வுபெற்றார்
மீனவனார் மெச்ச வெகுதலங்கள் உண்டாக்கித்
தேனாறுணையும் சிகண்டிமலை சீராக்கிப்
பாண்டி பதினைன்று என்னும் பதியில் மடம் வைத்தவர்கள்
வேண்டிய செல்வம் மிகுந்த புகழ்படைத்தோர்
காளை யொருவனுக்குக் கடிமணந்தான் செய்ய எண்ணி
வேளை மயக்கும் எழில்மேவிய பெண்ணைத் தேர்ந்து
நாள்முகூர்த் தம்பார்த்து நற்காப்புத் தான்கட்டி
நீள்புவியோர் மெச்சி நிறைந்தபணி யத்தனையும்
பழகுதமிழ் நல்வணிகர் பழக்கப்படி யணிந்து
அழகுக்கு அழகாக்கி அரசன்எனச் செய்தபின்பு
கொடையால் உயர்ந்த குபேரன் மகள் தனக்கு
அடையத் தவமிருந்த அணிகளையே பார்த்தெடுத்துப்
பூட்டுவன பூட்டிப் பொருந்துவதெல் லாம்முடித்து
தேட்டாளர் தங்கள் மனை சென்றங்கு இருந்தனராம்
பண்டிதருக்கு உள்ள பலவரிசை அத்தனையும்
கொண்டுசென்று வேவு கொடுத்தார் மருமகட்கு
மறையோர் சிறந்ததென வரையறுத்த நாள்குறித்து
முறையோர் உறவின்முறை மூன்றுநக ராதிபர்க்கும்
தென்னவனார் தங்களுக்கும் சென்றங் குரைத்தனராம்
என்னுடைய நாடதனில் இதுபோக நாள்என்று
சொன்னவர்க்குப் பூவினமும் துயிலாடையுங் கொடுத்து
நன்னெறிமசர் பாண்டியனார் நாற்றிசையும் மெச்சிடவே
செந்நெல் அரிசியொடு சிறந்தநல் பலாப்பழமும்
கன்னல் கதலிக்கனியும் காராவின் நெய்க்குடமும்
இளநீரும் பாற்குடமும் இஞ்சிமுதல் ஏலம்வரை
வளமார் தமிழ்நாட்டின் வான்பயர்கள் அத்தனையும்
பட்டாவளி முதலாய்ப் பல்கூறை உள்ளதெல்லாம்
கட்டாது உலுப்பைகட்டிக் காவவந்தார் பாண்டியனார்
அரியூரார் ஆறுநகர் ஆனகுல வேந்தர்களும்
சுருத்தெபறு சுந்தரத்தார் சொல்பெரிய நால்வரும்

இளசைநகர் முதலாய் ஏழுநகர் வேந்தர்களும்
அளவுமிகு சோபனத்தில் ஆயிரத்தைந் நூற்றுவரும்
வந்தார்கள் திசைகள் மகிழ்ந்து முகூர்த்தமதில்
செந்தாமரையாள் வாழ் சீரகத்தார் மார்பருக்கு
கல்யாண வாசல்தனில் கலைப்பவளக் கால்நாட்டி
வல்லார்புகழ் நல்ல வைரத்தால் விட்டமிட்டு
தங்கத் தகடதனுல் தான்வேய்ந்தார் காவணத்தைப்
பொங்கமதாய் எங்கும் புகழ்மேற் கட்டிகட்டி
கதலியுடன் தெங்கன்னல் கமுகுதனை நிறைத்து
பதுமமலர் மாலிகையும் பாதிரிப்பூ நற்சரமும்
கோமேத கம்வைரம் கொத்துமுத்து மாலைகட்டி
மாமேவு வீதியெல்லாம் வாகாகவே நிறைத்து
மண்டபமும் வீதிகளும் வரிசையாய்த் தானமைத்து
தெண்டிகளிலே உயர்ந்த சித்திரங்கள் தானெழுதி
தெருவீதியெங்கும் சிறப்பாய் அலங்கரித்து
திருவளரும் காவணத்தில் செம்பொற் குடம் நிறைத்து
தூங்கா விளக்குத் துலங்கித் திசைதோறும்
பாங்கு பெறவேதான் பணித்து நிலம்அழுத்திச்
சாந்தால் தரைமெழுகிச் சந்தனத்தால் கோலமிட்டு
பூந்தாமரை மலர்போல் பூம்பட்டுப் பாய்விரித்து
மேகவர்ணப் பட்டதனை மேடையதன் மேல்விரித்து
ஏக வெள்ளைப் பட்டதனை இன்பமுடன் மேல்விரித்து
இளசைநகர் வேந்தனுக்கு இலங்குமுடி சூட்டி
வளமையுடன் வீதிவலம் வரவேணும் என்று சொல்லி
வாலவயதுமண வாளருக்குப் பொட்டு மிட்டுக்
கோலவர்ணப் பட்டுடுத்திக் கோதில் தலைப்பாகை கட்டிக்
காதில் சவடி கடுக்கன் நிறையப்பூட்டி
மாதுவளர் மார்பில் வரிசையுடன் பதக்கம்
சர்வா பரணங்கள் தன்னுல் அலங்கரித்து
மருவிலா மேனிதனை மாலையினுலே நிறைத்து
வாகுடைய வால மணவாளப் பிள்ளைதனை
மாகனக மேனியனை மாமனுர் தான்எடுத்து
மெத்தையின் மேல்இருத்த மெல்லிநல்லார் தான்சூழச்
சித்தசனைப்போல் அவனும் சிறந்தங் கிருத்திடவே
ஆவின் நெய்வார்த்து அழகாய் விளக்கேற்றிக்
காவின் கனிவைத்துக் கதலித்தேங் காய்உடைத்து
விநாயகனுர் பூஜை விதமாகத் தான்நடத்தி
நாயகக் காலான நடுப்பந்தற் கால்தனிமல
தர்ப்பை அரசந்தழையும் சீரான மாந்தளிரும்
கற்பக விருட்சகக் கால்கதிக்கவே தான்நாட்டி

இரத்தினங்கள் ஒன்பதையும் நேராகவே சேர்த்துச்
சுற்றி அரசாணிதன்னைச் சுகமாய் அலங்கரித்து
ஆசாரமாக நல்ல அணிவணிகர் சூழ்ந்திருக்க
ஆசாரி முன்னின்று ஹரிஓம்ஹரிஓம் என்று
செந்நெல் பயறு பிர்த்துவரை எள்ளுடனே
நன்னலமாய்ச் சேர்த்து நலமாய் முளைதெளித்து
வைரவை டூரியத்தால் வாகாக வேசமைந்த
செயிர்தீர் முடியதனைச் செல்வனுக்கே தான்புனைந்து
அன்புசெறிவணிகர் அரிமணம் இட்டார்கள்
இன்பமுடன் வணிகர் எழுந்தருள வேணுமென்று
பேரிகை தம்பட்டம் பெரிதான டமாரம்
விரியமான தவுல் விருன நாதசின்னம்
தாரை சின்னம் கொம்பு தவடை மன்ளரிமுழங்க
பூரிகை மத்தளமும் புகழும் முரசொலியும்
எக்காளத்தின் ஒலியும் இராசகொடியும் முழக்கத்
திக்காளும் மன்னர் திடுக்கிட்டு இறங்கிடவே
ஊரில் வலம்வரவே உயர்வாய் அலங்கரித்த
சிரிலங்கும் வெள்ளானை தேசிகர்முன் கொண்டு வந்தார்
நங்கைதாய் பாதமதில் தான்மலர் தூவிப்பணிந்து
சிந்தை தனில் ஈசர் சிவகாமியை வணங்கி
தங்கள்குல வணிகர் தாளிணையைத்தான் தொழுது
சிங்கக் கொடிபிடித்துத் தெருவில் பவனிவர
மாமன் எடுத்து மதயானை மீதில்வைக்கக்
காமனைப்போல் ஆனைதனில் கர்த்தனைப்போ லேயிருந்து
பவளக்குடையும் நல்ல பட்டுக்குடை நெருங்கக்
குவளைக் கயல் விழியார் குஞ்சலங்கள் விசிவரத்
தங்கள்குல வணிகர் தக்கோர் புடைசூழக்
கொங்கை யசைந்தாடுமின்னார் குங்குமச் சேருடிவர
ஆனை குதிரை அணியணியாய் முன்னடக்கச்
சேனைத்திரை நெருங்கச் சின்னஞ்சிறுர் களிக்க
சிங்கக் கொடித்தலைவன் செல்லும் திருவீதி
கங்குல் ஒளிந்தோடக் கானல் விளங்கிவர
வாரணத்தில் ஏறி வருவார்க்கும் எட்டாத
தோரணங்கள் கட்டித் துலங்க அலங்கரித்த
மங்கையர்கள் காலில் வளர்ந்த சிலம்பொலியும்
சங்கீதத்தின் ஒலியும் தமிழ்சொல்லும் பேரொலியும்
ஆடிவரும் மாதொலியும் அரசொலியும் பின்னகைப்
பாடகக்கால் விரன் பவனிவரும் பிடுகண்டு
மாரனெய்ய மேவும் மலர்வாளி ஊடுருவ
ஆரம்பணி மடவார் அங்கவனைத் தானழைப்பார்

இடையிற் கலைதுவள இந்துமுகம் வேர்வொழுக
நடத்துடனுடி நவமணிகள் தான் நிறைப்பார்
நாரணான்காண் என்றுரைப்பார் நாரணனே யாமாகில்
சிரணங்கு சங்கு திகிரிகையில் இல்லையென்பார்
வள்ளி மணவாளரென்பார் வள்ளி மணவாள ரென்றுல்
தெள்ளியவேல் சேவற்கொடி கையில் இல்லையென்பார்
ரதிபுருஷன் காணுமென்பார் ரதிபுருஷன் ஆமாகில்
கதிமைபெறு காலமென்று கருங்குயில் கூவுமென்பார்
உள்ளாசைகொண்டு மன்னர்க் கொன்று குறை யுரைத்து
வெள்ளானை கண்டவுடன் விண்ணவர்கோன் என்றுரைத்து
நின்றுதிகைத்து நினைக்கும் அளவில் திருந்தி
நன்றியுடன் புனவை நன்முனிவன் சிடன்என்பார்
பாண்டி நாட்டாசான் பதந்தொழுநற் சிலனென்றும்
திண்டாத கற்புடைய தேசிகுலம்பன் என்றும்
சந்திரகுலம் ஏருத தருமன் இவனுகுமென்றும்
குந்திமகன் கர்ணனைப்போல் கொடுக்கும் தியாகி என்றும்
தொண்டித் துறைக்கும் சூலவண்டிக் காரன்என்றும்
மண்டல மெல்லாமுலவு வணிகர்குல மன்னன் என்றும்
விருதுசின்னம் காளம் விதமாய் முழங்கிடவே
மருளகன்ற நெஞ்சினராய் மனத்தில்அவனை நிறுத்தி
சிரகத்தார் மேனியின்மேல் செண்டுவிழ எறிவார்
மாரப்பயல் ஏவும் வாளியே தைக்குதுஎன்பார்
எங்கள் மனையில் எழுந்தருளீர் என்றுரைப்பார்
மங்கைப் பருவநல்லாள் மாணிக்க மார்பனுக்குத்
தருவோம் விளையாடத் தாம்வருவோம் என்றுரைப்பார்
மருளேயுங் கண்மடவார் வாரிர்மனையில் என்பார்
இப்படியே மாதர்உள்ளம் இயபத் தெருக்கடந்து
செப்பமுடன் வணிகர் பெருஞ் சேனைதளத்துடனே
சென்றே கயிலாச நாதர்திருச் சந்நதியில்
நின்று ஆனைவிட்டிறங்கி நீரால் முகங்கழுவி
வலப்பிரதட்சண மாய்வந்து திருக்கோயி லுட்போய்
இலக்கம்அறச் சமைத்த இரத்தின மணிப்பதக்கம்
கைலாச நாதர் நித்ய கல்யாணி யம்மனுக்கு
பயிலான முத்தாரம் பாங்குடனே தான்சாத்தி
குயில்போல் இசைபாடிக் கும்பிட்டு எழுந்திருந்து
மயில்போலும் மங்கையரும் மால்கொளவே நீறணிந்து
கங்கைச் சடையோனே கைலாச நாயகனே
எங்குலத் தேவந்த ஈசனே எப்பொழுதும்
மரபு தனக்கினம் வாராமல் காரும்என்று
அரவையணிந்தோனை அன்பாகப் போற்றிசெய்தான்

அப்போது நான்மறையோர் அழகு கயிலாசருக்கு
செப்பமுடன் சாத்தும் திருமாலை சந்தனமும்
திருநீறு மற்ற திருக்கைசிறப் புள்ளதெல்லாம்
தருவாம் வணிகருக்குத் தந்தார் மறையோர்கள்
எல்லோர்க்கும் நன்றாய் இவைகள் அளித்தபின்பு
வல்லார்க்கும் வல்லான் வணிகர் குலதீரன்
ஆனை மீதேறி அவ்வீதிதான் கடந்து
சேனை தளத்துடனும் செம்பொன் முடியிலங்கத்
தந்தகுல வணிகர் தான்நிறையும் வீதிவந்தான்
இந்தை இதழ்முகத்தான் இவ்வீதி வந்திடுங்கால்
அன்னை சுற்றம் அத்தனையும் ஆரத்தி தான்எடுத்து
வன்னக் குத்துவிளக்கு வைத்துவர வேற்றார்கள்
அவ்வீதி தான்கடந்து ஆரவா ரத்துடனே
செவ்விமொழி யாளிருக்கும் தெருவீதி தன்னில் வந்தான்
மாமேருபோல் இலங்க வண்ணப்பூம் பந்தலிட்டுப்
பூமலரா லேசமைத்த பொம்மைகளும் நின்றிலங்க
குஞ்சங் கவரியிடக் குத்துவிளக் கேற்றி
வஞ்சியரில் மூத்தோர் வரவேற்று வாழ்த்துரைக்க
மங்கையர்கள் மூப்பியர்கள் மைத்துனர்மார் எல்லோரும்
தங்கை மணவாளர் தன்னையெதிர் கொண்டு நின்று
மாணிக்கம் நீலம் வைரம் வைடூரியமாம்
ஆணிப்பொன் முத்து அவர்கள் கையில் நின்றிலங்க
ஆனை மேலிருந்ததங்கள் அரிவை மணவாளரிடம்
மேனிநிறைய அவர் விட்டங்கு எறிந்திடுவார்
கற்பூரம் நல்ல களபத்தால் எறிந்திடுவார்
இப்படியே எல்லாரும் எறிந்து விளையாடியபின்
ஒப்புடைய நல்வணிகர் உயர்யானை விட்டிறங்கிச்
செப்பமுள்ள மன்னரையும் செல்வரையும் முன்னடத்திப்
பாடல் முழங்கப் பல்லியங்கள் தான்முழங்க
மாடம் நிறைய வணிகருடன் உட்புகுந்தார்
வந்தவுடன் பட்டு வாகாக வேவிரிக்கச்
செந்தமிழ்சே ரும்வணிகர் சிறப்பாய் அமர்ந்தார்
அப்போது பெண்ணணங்கை அழகுக் கொருநிலையை
ஒப்பாரும் இல்லாத ஓவியத்து மாதனைய,
மங்கைதனை மாமன் நடத்தவல மாகவந்து
தங்கைதனை மணவாளர் தனக்கு வலப் புறமாய்
வைத்துமட மங்கையர்கள் வரிசையாய்ச் சுற்றிநின்றார்
மெத்தநலம் வேண்டுகின்ற வேள்வணிகர் சூழ்ந்துநின்றார்
வேழமுகத்து விநாயகனைத் தான் நினைத்து
வாழைக்கனி படைத்து வளமாய்த்தேங் காய்உடைத்து

ஓமம் வளர்த்தார் உயர்வணிகர் மூன்றைத்
தேமருவு நாயகிக்குத் திருப்பூட்டுதற் கிசைந்து
சங்கு தவுல் முரசு தவண்டை மள்ளிரிமுழங்க
மங்கையர்தம் நாயகிக்கு மணக்கூறை தான்உடுத்தி
மங்கலியம் நன்னை வணிகர் தொட்டுத் தான்கொடுத்தார்
செங்கையினால் வாங்கிச் செய்யதிரு மங்கலியம்
தரித்தான் கழுத்தில் சால மணவாளன்
தரித்தானே நாயகிக்கு தாட்டிமையாப்த்தான் புகழ
எல்லாரும் நன்றாய் இனிதுஊழி வாழ்கஎன்று
பல்லார் மதிக்கப் பாலருக்கும் பைங்கொடிக்கும்
அன்புசெறி வணிகர் அரிமணம் இட்டார்கள்
இன்பமுடன் மங்கை இயல்பான லெட்சுமிபோல்
பொங்கிக் களிகூர்ந்து புதுமைக் கலன் அணிந்தாள்
தங்கள் குலவணிகர் சாத்திரமெல் லாம்முடித்து
வரிசைச் சிறுமடவாள் வலதுவிரல் கைகோர்த்து
அரசாணிக்காலோடு ஆனதெய்வ வேதிகையை
தன்னைவல மாகவந்து தனிவீட்டினுட் புகுந்தார்
வன்னமண வாளருக்கும் மகள்தனக்கும் சீதனங்கள்
தும்பிப் பதக்கமுடன் சொர்ணமுத்து மாலைகளும்
செம்பொன் தளப்பன் திருவாழி மோதிரமும்
வெள்ளியும் வெண்கலமும் வேணதெல்லாம் கொடுத்தார்
வள்ளிமண வாளரைப்போல் மனது மகிழ்ந்திருந்தார்
தங்கை மணவாளருக்குத் தமையனார் சீதனமாப்
முன்கை வளையல்நல்ல மோதிரமும் தான்கொடுத்தார்
கண்டு மகிழ்ந்துநல்ல கனகமணி மண்டபத்தில்
வண்டுலவு பூஞ்சப்ர மஞ்சத்தின் மேலிருந்தார்
துஞ்சும் இருள்நீங்கிச் சூரியரும் தோன்றியபின்
மிஞ்சுபுகழ் வணிகருடன் மேதைத் தமிழ்கேட்டு
செந்தமிழ் வாணருக்குத் தேறப்பரிசு அளிந்து
ஐந்தருவைப் போலே அடைந்தாரை ஆதரித்து
தள்ளாமை சொல்லித் தமிழ்சொல்லிப் பேர்சொல்லிக்
கொள்ளவந்தார்க் கெல்லாம் கொடைகொடுத்து மீண்டதற்பின்
சொந்தமுடை வணிகர் சூழ்ந்திடவே தானிருந்து
வந்ததுரை மக்கள்தமை வழியனுப்பி வைத்தானும்
அம்புவியிலே பவிசாய் ஐந்நூற்றுவர் எனவே
இன்பமுடன் எல்லாரும் இனிதாக வாழ்ந்திருந்தார்
முடிக்குரிய நல்வணிகர் முன்பாடும் இவ்வாழ்த்தைப்
படிப்போருங் கேட்போரும் பண்புடனே வாழ்ந்திடுவார்
நூல்போற் பொருள்நிறைந்து நுண்ணறி வாழ்வுதர
ஆல்போல் தழைத்து நகர்அதிபரென வாழ்ந்திருப்பார்

சுபம்! சுபம்!! சுபம்!!!

கைவந்த கலை

வெ.சாமிநாத சர்மா

1933-ஆம் வருஷம்; அதாவது நான் பர்மாவுக்குச் சென்ற அடுத்த வருஷம். இரங்கூனுக்குச் சில மைல் தொலைவில் ஆற்று மார்க்கத்திலுள்ள மூப்பின் என்ற ஊரில் நடைபெற்ற முருகானந்த சங்கத்தின் துவக்க விழாவுக்குச் சென்றிருந்தேன். விழா, பிற்பகல் இனிது நடைபெற்றது. இராச் சாப்பாடும் முடிந்தது.

சாப்பாடு என்பதற்கு விருந்து என்றே இங்குப் பொருள் கொள்ளவேண்டும். நாட்டுக்கோட்டை நகரத்தார்களைப் பொறுத்தமட்டில், சிறப்பாக அவர்களுக்கு அறிமுகமானவர்கள் யார் வந்தாலுஞ்சரி, எத்தனை நாட்கள் தங்கினாலுஞ்சரி, அவர்களுக்கு இரண்டு வேளை சாப்பாடு செய்து வைப்பதென்பது இரண்டு வேளை விருந்தளிப்பது என்ற பொருளிலேயே வரும். இரண்டு வேளை யென்ன? காலைப் பலகாரமும் பிற்பகல் பலகாரமும் சேர்த்து நான்கு வேளை விருந்து என்று தாராளமாகச் சொல்லலாம்.

விருந்தோம்புதல் என்பது, நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்குக் கை வந்த கலை; அவர்களுடைய பரம்பரைத் தருமம்! விருந்தினரை 'வாங்க' என்று சொல்லி இன்முகத்துடன் வரவேற்பது முதல், அவர்கள் திரும்பிச் செல்வதற்கு விடை கொடுத்து அனுப்புவது வரை, ஒவ்வோர் உபசரணையும் தனித்துவமுடையதாகவும் தலை அமிசம் நிரம்பியதாகவும் இருக்கும். சாப்பாடு மட்டுமென்ன, குளிப்பதற்கு சோப்பு, உடுப்பதற்கு வேஷ்டி, படுப்பதற்குக் கொசுதாங்கி, மெத்தை, தலையணைகள், ஆகிய பலவற்றையும் விருந்தினருக்கு அளித்து உபயோகிக்கும்படி செய்வார்கள். அவைகளை யாரும் மறுக்கமுடியாது. மறுத்தால், தாங்கள் காட்டும் அன்பில், செய்யும் உபசரணையில் ஏதேனும் குறைபாடு இருக்கிறதோ என்று கருதிவிடுவார்கள். ஆகவே அவர்களுடைய அன்பையும் உபசரணையையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயம்; அவர்களுக்குக் காட்டுகிற மரியாதையுங்கூட.

இன்னொரு விஷயம். செட்டியார்கள் வீட்டுக்கு நாம் சாப்பிடச் சென்றால், வீட்டுக்குடையவர், அநேகமாக நம்மோடு பந்தியில் உட்கார்ந்து சாப்பிடமாட்டார். சாப்பிடக்கூடாதென்பது நோக்கமல்ல. 'நாமும் பந்தியில் உட்கார்ந்து விட்டால், சமையல்காரர்கள், சரியாக இலை பார்த்துப் பரிமாறுவார்களா' என்பது அவர் கவலை; தம்முடைய நேரான கண்காணிப்பிலேயே பரிமாறச் செய்யவேண்டுமென்பது அவர் நோக்கம். இதற்காக, பந்திக்கு முன்னால் நின்று கொண்டும், உலவிக் கொடுத்துக் கொண்டும், ஒவ்வோர் இலையாக விசாரித்து, அவ்வப்பொழுது தேவையான பதார்த்தங்களை பரிமாறச் செய்யும்படி பார்த்துக் கொள்வார். விருந்தினர்கள் 'போதும், போதும்' என்று எத்தனைதரம் கைகளை இலைக்கு முன்னால் நீட்டித் தடுத்தாலும் 'இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்' என்று சொல்லிச் சொல்லிப் பரிமாறச் செய்வார். பதார்த்தங்களை மிகுத்திவைக்கிற நிலையில்தான் விருந்தினர்கள் இலையை விட்டு எழுந்திருக்கவேண்டியிருக்கும். 'அன்புக்கு அடைக்குந் தாழ்' இல்லையல்லவா? இஃது இப்படி இருக்கட்டும்.

மூப்பினில் இராச் சாப்பாடு முடிந்ததும், நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தேன். அப்

பொழுது வயதான செட்டியார் ஒருவர் வந்து என் எதிரில் அமர்ந்து வணக்கங் கூறினர். மாநிற மேனி; சிரித்த முகம். அந்த முகத் தோற்றம், அவர் ஆசார சீலர் என்பதையும், பண்டைய பழக்கவழக்கங்களைக் கைவிடாதவர் என்பதையும் எனக்குத் தெரியப்படுத்தின. இரண்டொரு வார்த்தைகள்தான் பேசினர். அதிலிருந்து அவர், உலகமென்னும் பரந்த பள்ளிக்கூடத்தில் நீண்ட காலம் பயிற்சி பெற்றவர் என்பதை நான் தெரிந்துகொண்டேன். அவர் சொரிந்த அன்பும், காட்டிய பணிவும், 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற திருக்குறளை என் நினைவுக்குக் கொண்டு வந்தன.

அந்தப் பெரியவரின் விருப்பப்படிஅவருடைய கணக்குப்பிள்ளை, ஒரு பெரிய பர்மாதட்டில், சுமார் இரண்டு டஜன்வாழைப் பழம், ஒரு டஜன் மங்குஸ்தான் பழம், ஒரு டோரியாம்பழம், இவைகளைக் கொண்டுவந்து என் முன்பு வைத்தார்; அதனோடு, சுண்டக் காய்ச்சின பசும் பாலைக் கொண்ட உயர்ந்த ஒரு குவளையும் வந்து அமர்ந்தது. அதிலிருந்த பால், குறைந்தது பட்டணம்படி முக்கால் படிக்குமேலிருக்கும். இவை ஏன் கொண்டுவைக்கப்பட்டன என்று தெரியாமல் நான் சிறிது நேரம் திகைத்தேன். அந்தப் பெரியவர் லேசாகச் சிரித்துக் கொண்டு 'இவையெல்லாம் தங்களுக்குத்தான்; சாப்பாட்டுக்குப் பிறகு பழமும் பாலும் சாப்பிடுவது உடம்புக்கு நல்லது; நீங்கள் நீண்டகாலம் வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும் என்று ஆசிமொழிகள் பல புகன்றார். எனக்கு உடம்பு புல்லரித்தது; ஆனால் நடுக்கமுமெடுத்தது. அவருடைய அன்பும், பிறருடைய நல்வாழ்வில் அவர் கொண்டிருந்த அக்கறையும் என்னைப் புல்லரிக்கச் செய்தன. அவர் கொண்டு வைத்த பழங்களைத் தின்று ஜீரணிக்கமுடியுமா என்று நினைத்தபோது நடுக்கமெடுத்தது. சற்று முன்புதான் விருந்துச் சாப்பாட்டில் மூழ்கி எழுந்திருந்தேன். எனவே பெரியவரைப் பார்த்து 'என்னை மன்னிக்கவேண்டும். இவ்வளவையும் நான் எப்படி உட்கொள்ள முடியும்? பால் மட்டும் கொஞ்சம் அருந்துகிறேன்' என்று சொல்லி அரை ஆழாக்கு பாலை மட்டும் எடுத்துக் கொண்டேன். பெரியவருக்கு வருத்தந்தான். ஆனல் நான் என்ன செய்யட்டும்? என் முடியாமையை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொண்டேன்.

இந்த ஓரிடத்தில் மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில், ஆகார விஷயத்தில் என் முடியாமையைத் தெரிவித்துக் கொள்ளவேண்டியவனயிருந்திருக்கிறேன்.

நகரத்தார் பெண் மக்கள் விசேட காலங்களில் யாழ்ப்பாணம் மாதர்கள் போன்று காதுக்குக் கொப்பு என்னும் அணிகலனையும், "முடிச்சுக் கடுக்கன்" என்ற சவடியையும், "பிறைத்தேவி" என்னும் தலையணியையும், தங்க மணியும் பவளமுஞ் சேர்ந்த மணிக் கோவையையும், வெள்ளியாற் செய்த "இடைச்சூரி"யையும், தங்க மணிகளும், பவளங்களுஞ் சேர்ந்த கைக்கட்டையும், காலிலும் கையிலும் வெள்ளி மோதிரங்களையும், வெள்ளிக் கங்கணக் காப்புகளையும் அணிந்து கொண்டிருந்தார்கள்.




— மகாமகோபாத்தியாய பண்டிதமணி
கதிரேசச் செட்டியார்

பர்மாவில் நான் வதிந்த பத்து ஆண்டுக் காலத்தில், சைலா, உவாக்கமா, பியாப்பம் அப்மென், நத்தலீன், பக்கோ, புரோம், டாங்கோ இப்படி ஆற்று மார்க்கத்திலும் ரெயில் மார்க்கத்திலும் உள்ள பல ஊர்களுக்குச் சென்றிருக்கிறேன். எல்லாம் ஆங்காங்கு நடைபெற்றுவந்த சங்கங்களின் ஆண்டு விழாக்களுக்குத்தான். இந்தச் சங்கங்கள், பெரும்பாலும் செட்டியார்களையே முக்கியஸ்தர்களாகக் கொண்டு இயங்கி வந்தன. இவற்றின் விழாக்களை அநேகமாக, தைப்பொங்கல், தீபாவளி இப்படிப்பட்ட திரு நாட்களிலேயே வைத்துக் கொள்வார்கள். 'பண்டிகை நாட்களில் வீட்டில் தங்குவதில்லை' என்று என் வீட்டார் என் மீது குறைப்பட்டுக் கொள்வதுண்டு. ஆனால் பண்டிகை நாட்களில் வீட்டில் எவ்வளவு விமரிசையாகச் சாப்பாடு நடைபெறுமோ அதைக் காட்டிலும் பன்மடங்கு விமரிசையுடன் வெளியூர்களில் எனக்கு விருந்து நடைபெறும். எல்லாம் செட்டியார்களுடைய உபசரணைதான்.

தவிர, செட்டியார்களுக்கு எதையும் சிறிதாக எண்ணவோ செய்யவோ தெரியாது. எல்லாம் பெருமளவில்தான். ஒரு சிறிய உதாரணம். 1937-ஆம் வருஷ மத்தியில் பண்டித ஜவாஹர்லால் நேரு தமது மகளுடன் பர்மாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அப்பொழுது ஆற்று மார்க்கத்திலுள்ள உவாக்கமா என்ற ஊருக்கு அழைப்பின்பேரில் வந்தார். அங்குள்ள செட்டியார் சங்கத்தினர், அவருக்குப் பணமுடிப்பு அளிக்கவும், உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருந்தனர். இதற்காக அவரை, கோயிலுக்கருகிலுள்ள மண்டபத்திற்கு அழைத்திருந்தனர். அவரும் வந்தார். ஒரே ஜன நெரிசல். வயதுவந்த ஒரு செட்டியார் அவருக்குப் பணமுடிப்பை அளித்தார். உபசாரப்பத்திரத்தை என்னை வாசித்துக் கொடுக்கும்படி கூறியிருந்தனர். சுமார் இரண்டரை அடி அகலமும் ஐந்து அடி உயரமுமுள்ள அதில் ஓர் ஓவியனைக் கொண்டு அழகான எழுத்துக்களில் எழுதச் செய்திருந்தனர். அதன் நாற்புறமும் வேலைப்பாடுள்ள சட்டம் அமைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து நேரு பிரமித்துப் போனாரோ என்னவோ? 'இது என்ன?' என்று கேட்டார். 'தங்களுக்கு வாசித்துக் கொடுக்கப்பட இருக்கும் உபசாரப் பத்திரம்' என்றேன் நான். 'இவ்வளவு பெரிதையா? இதனை நான் அலகாபாத்துக்கு எடுத்துப் போகவேண்டுமா? கடவுளே? (Oh god!) எப்படி எடுத்துப் போவேன்'? என்று கேட்டார். 'இல்லை, இல்லை; நீங்கள் எடுத்துப்போக வேண்டாம். அலகாபாத்திற்கு இதை அனுப்பிவிடுவார்கள்' என்று நான் பதில் கூறிய பிறகுதான் அவருக்குச் சிறிது சமாதானம் ஏற்பட்டது. உரக்கச் சிரித்தும் விட்டார்.

இங்ஙனம் செட்டியார்களுடைய விருந்தோம்பல் முறைக்கும், எதையும் பெரிதாகச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்திற்கும் எத்தனையோ உதாரணங்களைச் சொல்லிக்கொண்டு போகலாம்.

பர்மாவில் நான் வதிந்த பத்து ஆண்டுக் காலத்தில் செட்டியார்களுடைய விருந்தோம்பலை நன்கு அனுபவித்திருக்கிறேன். தவிர, என்னுடைய கதர்வியாபாரத்திற்கும், பத்திரிகைத் தொண்டுக்கும், நூல்கள் பல வெளியிடுவதற்கும் அவர்களுடைய ஆதரவும் உதவியும் பெருமளவில் இருந்தன. இவைகளை இங்கு நன்றியுணர்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



பொருளாளர்கள்



அ. கணபதி செட்டியார்
அவர்கள்



P. S. PL. மெய்யப்ப செட்டியார்
அவர்கள்

★



A. தியாகராஜன், B.A. அவர்கள்
அமைப்பாளர், மலர்க்குழு



மு. அழகப்பன் அவர்கள்
அமைப்பாளர், கலைக்குழு

சென்னை நகரத்தார் சங்கம்

துணைத் தலைவர்கள்



எஸ். ஆர். எம். பி. எல்.
சுப்பிரமணியன் செட்டியார், B.A., B.Sc.
அவர்கள்



கண. ராமனுதன் செட்டியார்
அவர்கள்

★

செயலர்கள்



குமா. முருகப்பன்,
B.Com. (Hons.) B.L., A.I.C.W.A.



அ. மு. லெட்சுமணன், B.Com.

வணிகத் துறையில் நமது வாழ்வும் தாழ்வும்

காரைக்குடி பி. எல். இராமசாமி

வணிகத் துறையில் நகரத்தார் பெற்றிருந்த வளர்ச்சி நிலையையும் தளர்ச்சி நிலையையும் வரலாற்றுச் சான்றுகளுடன், படிப்பவர் மனத்தைத் தொடும் நடைப்போக்கில் தருகிறார் இக்கட்டுரை யாசிரியர்.

எனது நகரத்தார் இளைஞர்களே! நமது புகழ் பாடும் இனிப்பான செய்திகளுக்குப் பின்னாலே, நமது பாட்டன் பாட்டியரின் 'பொற் பேழைப் புதையல்' மறைந்து கிடப்பது உங்களுக்குத் தெரியுமா?

தமிழர்தம் கடலாதிக்கத்தில் பெரியதோர் பங்கு, நமக்கு உரியதோர் பங்கு உண்டு என் பது உங்களுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறதா?

இல்லை!. .இல்லை!. .

நீங்கள் அறியமாட்டீர்கள்!

''நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் குடி யேறிய பகுதி கள்ளர் நாட்டைக் காட்டிலும் காடாரம்பம். அதனால்தான் அந்த வகுப் பினர் திரைகடலோடித் திரவியம் தேட முற் பட்டார்கள்'' இப்படிச் சொல்லுகிறார் நம் நண்பர், ஒருவர்.[1]

நமது இனக்காரரர்கள் சொல்லுகிறார்கள் :— (அ) ''பர்மாவிற்கு நம்மவர்கள் வந்து சுமார் நூறு ஆண்டுகள் ஆகின்றன என்று மதிப்பிடப் பெறுகிறது.''[2] (ஆ) ''இற்றைக்குச் சற்றேறக் குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் சென்று தங்களுக்கே உரித்தான 'கொடுக்கல் வாங்கல்' தொழிலைச் செய்து வருகின்றனர்.''[3]

நம்மைப்பற்றி நாம் இப்படித்தான் எண்ணு கிறோம்—பிறரால் அறியவும் படுகிறோம். ஆனால், இந்த மதிப்பீடு உண்மைக்கு மிக நீண்ட தூரத்துக்கு அப்பாலே உள்ளதாகும்.

குடியேறிய பகுதி கடிய நிலமானால் பெயர்ந்து வாழத் தமிழகத்தில் வளநில வரிசைக்கா பஞ்சம்! 'அரிதாள் அறுத்துவர மறுதாள் பயி ராகும்; அரிதாளின் கீழாக ஐங்கலந் தேன் கூடு கட்டும்' தங்க நிலங்களுக்குச் சென்று தங்க வகையிருக்க, உப்பு நீரில் ஓடம் விடுவானேன்?

சோழநாட்டைச் சொர்க்க பூமியாக்கிக் கொண்டிருந்த வாணிக வல்லுநரை (செட்டி யார்கள்) தன்னாட்டையும் ''தங்க பூமியாக்கித்

[1] கு. ப. ராஜகோபாலன்—சக்தி, செப்டம்பர் 1940 இதழ் ப. 137-8.

[2] சொ. சுப. சுப்பிரமணியன் செட்டியார்—நகரத்தார் மாணவர் சங்க சிறப்பு மலர் (1964) ப. 40

[3] வி.ச. முத்தையா—நகரத்தார் மாணவர் சங்க சிறப்பு மலர் (1964) ப. 46.

தர வருக" எனப் பன்முறை அழைத்தான் பாண்டியன். "தக்கன தருவதெனில் தலை யசைப்போம்" என்றனர். "தருவேன்" என்றான். வாழ ஊரும் வகுக்கும் உரிமையும் வேண்டினர்—வழங்கினான்—வந்தனர். ஒன்பது கோவிலும் இருபத்துமூன்று ஊர்களும் பிரித்து, உரியவர் தொகையும் வகுத்து வைத்தனர். பின்பு, வாழ்ந்தனர்—வாழவைத்தனர்! 'காடு வெட்டிப் போட்டு, கடிய நிலந்திருத்தி வீடு கட்டிக் கொண்டு இருக்கலாம்' என்று 'அறிந்தே' அங்குக் குடியேறினர். கடலைத் தாண்டியது குலப்பழக்கமே தவிர பஞ்சத்துக் கோல மன்று!

அலை கடலைத் தாண்டி ஆன ஆண்டு நூறென்றும் வட்டிக்குக் கொடுப்பதே செட்டி மக்கள் தொழிலென்றும் சொல்லுவது பொருந்தாக் கூற்றாகும்.

("செட்டியார்கள் மலாயாவில் 'கொடுக்கல் வாங்கல்' தொடங்கி ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் ஆகின்றன." ஆனால், "செட்டியார் சமூகத்தினர் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே முத்து முதலியன கொண்டு பாய்மரக் கப்பலில் சென்றிருக்கின்றனர். ஆதியில் இவர்களில் ஒருவரான 'சந்திரதத்தன்' என்பார் தம் சொந்த மரக்கலத்தில் மலாயா வந்து காவிரிப் பூம் பட்டினம் திரும்பியதாக மணிமேகலை கூறுகிறது" என மலாயாத் 'தமிழ்நேசன்' ஆசிரியர் முருகு. சுப்பிரமணியம் கூறியிருப்பது அறியத் தக்கதாகும்.[4] மேலும் நிறைந்த சான்றுகள் பின்னுள.)

கொண்டுவிற்ற குலம்

'கொடுக்கல் வாங்கல்' இன்றைக்கு 'உரிய தொழில்' என்றாலும் 'வழிவழித் தொழிலா'? என்ற வினாவிற்கு ஆச்சிமார்களின் நாவிலேயே நல்லவிடை மறைந்து கிடக்கிறது!



கடலுக்கு அப்பால் கணவனை அனுப்பியிருக்கும் மஞ்சள் பூசிய ஓர் ஆச்சியை அழைத்து, "கொண்டவர் எங்கே?" என்று கேட்டால், "தொலைக்குக் கொண்டு விக்கப் போயிருக்காக" என்று பதில் வரும்.

'கொண்டு'+'விற்றல்'= கொண்டு விற்றல் —'கொண்டு விக்க' என வழங்குகின்றது. இச் சொல்லை இழைத்துணர்ந்தால், இச் சொல் இன்றைய 'லேவா தேவி' நூற்றாண்டில் உருவானதன்று என்பதும் முன்னொரு காலத்தே பொருட்களைக் கொள்வதற்கும் விற்பதற்கும் போன புகழ்ச் சரித்திர காலத்திலே உருவானதாகும் என்பதும் புலப்படும். காலம் தொழிலை மாற்றிய போதிலும் கன்னித்தமிழை முதுமையாக்கவில்லை!

'தமிழர் வாணிகம்' என, எது இன்று பெருமையாகப் பேசப் பெறுகிறதோ அதுதான் 'கொடுக்கல் வாங்கல்' தொழிலை செட்டியார்கள் தொடுவதற்கு முன்னால் அவர் தம் அன்றாட வாழ்வாக இருந்தது! நம்மை அறிய, நம்மை உள்ளடக்கிய தமிழக வரலாற்றை நாம் நன்கறிதல் வேண்டும்.

கிறித்து பெருமான் பிறப்பதற்கு முன்னரே, மூவாயிரம் ஆண்டுகளுக்கு மூத்ததாய் கி. பி. 1400 வரை 'செல்வச் சுரபி'யாகத் திகழ்ந்த தமிழரின் கடலாட்சிபற்றி எல்லாமும் சொல்லுதற்கு எழுந்ததன்று இக்கட்டுரை. செட்டியார்களைக் குறித்தமைந்து தெரிகிற குறிப்புகளை மட்டும் தொகுத்தும் வகுத்தும் தருவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

வணிகக் குழுக்கள்

முன்னைக் கடல் வாணிகம் இடையூறு மிக்கதாயிருந்தது. "முசிறித் துறைமுகத்தின் சூழல்களில் கடற் கொள்ளைக்காரர்கள் இருந்தார்கள்"[5] "அராபியக் கடலிலும் சீனத்துக்குச் செல்லும் வழியிலுள்ள கடல்களிலும் கப்பற் கொள்ளைக்காரர்களால் வணிகருக்குப்

([4]காசிச் சத்திர நூற்றாண்டு விழா மலரில் (1963) 'மலாயாவில் நகரத்தார்களின் தெய்வத் திருப்பணி' என்ற கட்டுரை.

[5]பினினி—திராவிட இந்தியா ப. 75.

வாழ்த்து

சென்னை நகரத்தார் செல்வமிகு நற்சங்கம்
பொன்னைப் புவிக்குதவும் பொற்புமிகு நற்கமல
அன்னையாய், நம்சமூகம் ஆறுதல்பெற் றுய்யும்வழி
தன்னைத் தலைப்பணியாய்த் தான்புரிந்து வாழியவே!

அ. முருகப்ப செட்டியார், (மாநகரி)
மேலாளர், இரங்கூன் நகரவிடுதி, சென்னை-1.
(மலர்க் குழு உறுப்பினர்)

பெருந்துன்பம் ஏற்பட்டது." [6] இயற்கையின் சீற்றத்தையும் எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது. மிகுந்த முதலும் தகுந்த துணையும் விழித்த காவலும் வேண்டியதிருந்த காரணத்தால் வணிகர்கள் ஒரு சிலராக இல்லாமல் மிகப் பலராக ஒன்றுகூடிப் பெருங் குழுக்களாக வாணிகம் செய்தனர்.

நானாதேசிகள், அஞ்சுவண்ணம், மணிக்கிராமம், நகரம் முதலிய குழுக்கள் பற்றிய சில செய்திகளைக் கல் வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

குழுவினர்தம் தொகைக்கேற்ப, 'ஐஞ்ஞூற்றுவர்' 'அறுநூற்றுவர்' 'எழு நூற்றுவர்' எனத் தொகைப் பெயர் இட்டு அழைக்கப்பெற்றனர். அதனைக் கிழ்வரும் கல்வெட்டு, செப்பேடுகளால் உணர்க.

(1) "ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு 20. இவ்வாண்டு கானக நாட்டு முனியந்தை திசையாயிரத்து 'ஐஞ்ஞூற்றுவர்' பேரால்..." [7]

(2) "'அறுநூறுவரும்' அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமும் இரக்ஷிக்கக் கடவர்."

நானாதேசிகள்

கல்வெட்டுக்கள் கூறும் வணிகக் குழுக்களுக்குள்ளே நானாதேசிகள் குழுவே, பெரியதும் காலத்தால் முற்பட்டதும் செட்டிமக்களால் நிறைந்து சிறந்ததுமாகும்.

"நானா தேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்க்கு சிறப்பாக.." [9] எனும் கல்வெட்டால் நானாதேசிக் குழுவில் 500 உறுப்பினர்கள் இருந்தார்கள் என்பதும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நோக்கில் ஆயிரம் திசைகளிலும் உள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்றுவந்தார்கள் என்பதும் தெளிவாகின்றன.

நமது மாற்றூர்க்கோயில் இறைவனின் பெயர் ஐந்நூற்றீசர் என்பதாகும். 'ஐந்நூற்றீசருக்கும்' 'ஐந்நூற்றுவருக்கும்' தொடர்புண்டோ என நோக்கும்போது மேலும் சில உண்மைகள் புலப்படுகின்றன.

மாற்றூர்க் கோவிலின் முதற் பிரிவினர் உறையூருடையார். உறையூர் அக்காலத்தில் பிரம்பூர் நாட்டைச் சேர்ந்ததாயிருந்தது [10] மேலும் பூம்புகாருக்கு அருகில் உள்ள சோழர்களின் முதல் தலைநகராகிய உறையூரின் பெயரால், பாண்

[6] டாலமி—உலக நூல்.
[7] 'Overgedrukt' Vol. L xxiv P. 617.
[8] Kottayam Copper Plates T. A. S. Vol. ii P. 90.
[9] op. cit. Vol. L xxii P. 6.
[10] கேரள சிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் உறையூருடையார் (நகரக் கோவிற் பிரிவு)



கை கூட்டும் வழிபாடு

நம் மரபினர் சிறப்பாக வழிபடும் இறை முருகப்பெருமானே யாவர். கடலகத்தில் இருந்து கொண்டு குறும்பு செய்து வந்த சூரபன்மாவைக் கொன்று கடற்குறும்பு நீக்கிய முருகப் பெருமானுக்குக் கடல் கடந்து வாணிகம் செய்யும் நாம் வெளிநாடு எங்கும் திருக்கோயில் அமைத்து விழா நடத்தி வழிபாடாற்றி எண்ணிய காரியங்கள் கைகூடப் பெற்றிருக்கின்றோம்.

கருமுத்து தியாகராசன் செட்டியார்
[தேவகோட்டை கந்தர்சஷ்டி விழாத் தொடக்கவுரையில்]

டிய நாட்டகத்து இவ் உறையூர் பெயர் பெற்றது.

"சோல்சிக்கு வடக்கே, கடற்கரை நாடு ஒன்றும் உள்நாடு ஒன்றும் உள. அவற்றுள் உள்நாட்டிற்கு அர்கூரு என்பது தலைநகரம். ஆங்கிருந்து, அர்கரிடிக் என்ற ஆடைவகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பெறுகின்றன" என்று 'செங்கடற் செலவு' நூலின் ஆசிரியர் கூறுகிறார்.

"சோல்சி என்று அவர் குறிப்பிடுவது **கொற்கையையே** ஆகும். கடற்கரை நாடு என்பது புகாரையும் உள்நாடு என்பது உறையூரையும் குறிப்பனவாம். அர்கூரு இன்றைய உறையூரே. **அர்கரிடிக்** ஆடை உறையூர்ப் புந்நுகிலே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை."[11] "உறையூர்ச் சேலைகளும் உயர்ந்த வகைப் பஞ்சும் உரோம் நாட்டு நகரங்களில் விரும்பி வாங்கப் பெற்றன.[12]

சோழநாட்டு உறையூரிலிருந்து குடியேறிய காரணத்தால்தான் பாண்டிய நாட்டிற்கு வந்தபின் நகரத்தாரில் ஒரு பிரிவினர் 'உறையூருடையார்' என அழைக்கப் பெற்றனர். உறையூரில் வணிகர் குழுக்கள் இருந்தன எனவும் அவற்றில் செட்டியார்களும் கலந்திருந்தனர் எனவும் காட்டும் சான்றுகள் பின்வரும் மணிக்கிராமம் என்ற தலைப்பின் கீழே தரப் பெற்றுள்ளன.

"நானா தேசிய எடுத்தபாத மூத்த செட்டி. . . . . ." எனவரும் கல்வெட்டு[13] ஒன்றிலிருந்து, நானா தேசிகள் குழுவில் செட்டியார்கள் இருந்தனரென்பதும் மூத்த (தலைமை)

[11] தமிழர் வாணிகம் ப. 61.
[12] தமிழர் வாணிகம் ப. 22.
[13] A. R. E. 121 of 1916.

சென்னை நகரத்தார் சங்கம் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில்
காரைக்குடி சிவநேசச் செல்வர்
ரேவு. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள் பாடிய

வாழ்த்துப்பா

சீரோங்கு சென்னைதிகழ் நகரத்தார் சங்கமிகச் சிறந்து வாழி!
ஏரோங்கு ஏ. வி. எம். எம்சோம சுந்தரனார் இனிது வாழி!
பேரோங்கு நாகப்பா, சோமலெ, வள்ளியப்பா, பெருமை வாழி!
பார்போற்று நகரத்தார் திருமுருகன் நல்லருளால் பாங்காய் வாழி!

தரத்தில் விளங்கினரென்பதும் தெரிய வருகிறது.

கூடிய வயதும் நீடிய அனுபவமும் மிக்காரை 'மூத்தவுக'என்று வழங்கி, அவர்கள் சொற்கேட்டு நடத்தல் செட்டியார்கள் பண்பாகும்.

'மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்' என்ற ஔவையாரின் கொன்றை வேந்தன் வரியும்;

'' முல்லைப்பூக் கட்டடமாம்
முகப்புஎல்லாம் உத்தரமாம்
முகப்பைத் திறந்துவிட்டால்
முல்லைப்பூ வாசனையாம்
உங்கள் ஐயா,
மூத்தவுக யோசனையாம்!''[14]

எனும் செட்டி நாட்டுத் தாலாட்டும் ஒப்பு நோக்கத்தக்கனவாகும்.

மைசூர்த் தனியரசில் கிடைத்த கல்வெட்டொன்று நானாதேசிகள் குழுவை விரிவாக விளக்கியுள்ளது.[15] ''ஐந்நூற்றுவர் மெய்க்கீர்த்தி'' என்பது அதன் பெயர்.

அக் கல்வெட்டு, ''நானா தேசிகள்—சேர, சோழ, பாண்டிய, மலைய, மகத, கோசல, சௌராட்டிர, தனுட்ச, குறும்ப, காம்போச, கௌளள, லாள, பர்வ்வர, பாரசீக, நேபாள, ஏகபாத, லம்பகர்ண, ஸ்திரீ ராஜ்ய முதலாம் நாடுகளுக்கு நில வழியாகவும் நீர் வழியாகவும் சென்று, யானைகளையும் குதிரைகளையும் இந்திர நீலம், சந்திரகாந்தம், முத்து, ஆணிக்யம், வயிரம், வயிடூரியம், கோமேதகம், புஷ்பராகம், பத்மராகம், பவளம், மரகதம் முதலாம் மணிகளையும் ஏலம், இலவங்கம், அகில், சந்தனம், கற்பூரம், கத்தூரி, குங்குமம், முதலாம் நறுமணப் பொருள்களையும் விற்று அவற்றிற்கு ஈடாக ஆங்குக் கிடைக்கும் அரும் பொருள்களை வாங்கிக்கொண்டு வந்து சேர்வர்'' என்று கூறுகிறது.[16]

சுமத்ரா தீவில் லோபோ - டோவா என்ற இடத்தில் - கி. பி. 1088-ல் வெட்டப் பெற்ற கல்வெட்டொன்று 'ஆயிரத் தைஞ்ஞூற்றுவர்' என்ற வணிகக் குழுவினர் அக்காலத்தில் சுமத்ராவில் தங்கி வாணிகம் புரிந்தனர் என்று கூறுகிறது.[17]

நானாதேசிகள் தங்கள் உடைமைகளைக் கொள்ளையரிடமிருந்து காப்பதற்குப் படைத்

[14] செட்டிநாடும் தமிழும் 'சோமலெ' ப. 159.
[15] Epigraphia Carnatica Vol. vii Sk. 101.
[16-17] தென்னிந்திய வாணிகம் ப. 100-1.



கோயில் சேவை

தமிழ் நாட்டில் எப்போது கோவில்கள் ஏற்பட்டன என்று குறிப்பிடுவது கடினமாக இருக்கலாம். ஆனால் தமிழகத்தில் உள்ள எல்லாக்கோயில்களிலும் நகரத்தார்களின் பங்கும் சேவையும் இல்லாத கோவில் இல்லை என்று கூறிவிடலாம். பொருள்களைத் தேடுவது ஒரு புறமிருந்தாலும், தேடிய பொருளைத் தர்மகாரியங்களுக்கும் ஆன்மீகத்தை வளர்ப்பதற்கும் நகரத்தார்கள் மிகவும் செலவுசெய்து முன்னணியில் இருந்து பணியாற்றியுள்ளார்கள். அவர்களது தர்ம காரியங்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்
மதுரை (7—3—65)

துணையோடு சென்றார்கள் என்பது பசனி கொண்டா கல்வெட்டில் காணும், ''நான்கு திசை யாயிரத்து ஐஞ்நூற்றுவப் பெருஞ் சமையமும் இச் சமையத்து திருவடிக்குப் பணிசெய்யும் எறிவீரரும் கொங்க வாளரும்...'' என்ற வரிகளிலிருந்து நன்கு தெரிகின்றது.[18]

நானாதேசிகள் குழுவினர் தாங்கள் சென்ற நாடுகளில் திருப்பணிகள் பலவும் செய்துள்ளனர் என்பது, பர்மாவில் பகான் என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது. ''..,...புக்கம் ஆன அரிவர்த்தனப் புரத்து (அரிமர்த்தனப்புரம்) நானாதேசி விண்ணகர் ஆழ்வார் கோயில் திருமண்டபமும் செய்து திருக்கதவும் இட்டேன், மலை மண்டலனுந் தூய மகோதையார் பட்டணத்து ஈராயிரன் சிறியனான சீகுல சேகர நம்பியேன்.''[19]

மைசூர்க் கல்வெட்டைப் பற்றி முன்னரே சொல்லப் பெற்றிருக்கிறது. அதன் பகுதியொன்று, ''நானாதேசிகள் குழுவின் உறுப்பினர்கள்,'' கவரை, காத்திரிகை, செட்டி, செட்டி புத்திரர்,[20] அங்காரகர், வீரர், வீரவணிகர், கண்டிகர், கவுண்டர், கவுண்டசாமி என்ற பட்டப் பெயர் உடையார்'' என்றும் ''பதினெட்டுப் பட்டணங்களும், முப்பத்திரண்டு விளார்புறமும் ஐந்நூறு வீரசாசனங்களும் பெற்றவர்.'' என்று கூறுகிறது.

18 கரந்தைக் கட்டுரைக் கோவை ப. 101.
19 Epigraphia Indica Vol. vii; pp. 197.
20 ஒப்பு நோக்குக:- ''......இவர்களை செட்டிப்பிள்ளைகள் என்றும் நானாதேசிகள் என்றும் சொல்லுவதுண்டு''
—செட்டிநாடும் தமிழும் ப. 8.

இதிலிருந்து, நானுதேசிகள் குழுவில் செட்டியார்கள் இருந்தனர் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி என உறுதிப்படுகிறது. பதினெட்டுப் பட்டணங்கள் எது என்று தெரியாத போதிலும் நமது இலுப்பைக்குடி அதில் ஒன்ருக இருக்கக்கூடும். அதன் முற்பெயர் 'புகழிடங்கொடுத்த பட்டணம்' என்பதாகும்.[21] நமது கோவில் பிரிவில் காணப்பெறும் ஐந்து 'புரங்கள்' முப்பத்திரண்டு விளார் புறங்களைச் சேர்ந்தனவாகவும் இருக்கலாம்.[22]

சூரைக்குடிப் பிரிவில் தேசிக நாராயணபுரம் என்று வருவதும் இறைவனின் பெயர் தேசிக நாதர் என்று இருப்பதும் நானுதேசிகள் குழுவில் செட்டியார்கள் வகித்த பெரும் பங்கினைக் காட்டும்.[23]

மணிக்கிராமம், அஞ்சுவண்ணம்

இக் குழுக்களைவெளிநாட்டு வரலாற்றுளர்கள் பல்வேறு வகையில் நோக்கியுள்ளனர்.

"அஞ்சுவண்ணம் யூதர் குழுவென்றும் மணிக்கிராமம் கிறித்தவக்குழு வென்றும் டாக்டர் பர்னல் எனும் ஆங்கில அறிஞர் சொல்லுகிருர்.[24] கிறித்தவ சமயத்திலிருந்து சைவத்துக்கு மணிவாசகரால் மாற்றப்பட்டாரின் கூட்டமே மணிக்கிராமம் என்கிருர் ரெவரண்டுபீட்.[25] 'மணிக்கியர்' என்ற கிறித்தவப் பிரிவினரின் கூட்டம் மணிக்கிராமம் எனத் தமிழில் மாறியது என்கிருர் டெயிலர் என்பவர்.[26] 'அஞ்சுமான்' என்ற அராபியச் சொல்லின் திரிபே அஞ்சுவண்ணம் எனச் சிலர் கருதுகின்றனர்.[27]

ஆயினும் கிடைத்துள்ள கல்வெட்டுக்களை நோக்கின் மணிக்கிராமம் அஞ்சுவண்ணம்

21கேரள சிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக் குடியான புகழிடங் கொடுத்த பட்டணத்தில் சூடாமணிபுரமுடையார்.

22(1) குலசேகரபுரம் (2) வீரபாண்டியபுரம் (3) மருதேந்திரபுரம் (4) சூடாமணிபுரம் (5) தேசிகநாராயணபுரம்.

23கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிகநாராயணபுரத்தில் புகழ் வேண்டியபாக்கமுடையார்.

24Epigrapia Indica P. 70.

25-26op. cit. P. 70.

27Overgedrukt Vol. L xxii P. 4.

வருவாய் முருகா!

வருவாய் வருவாய் முருகா—எங்கள்
வாழ்வை உயர்த்தவே வருவாய்!
தருவாய் முருகா தருவாய்—உன்றன்
தாளிணை யருளைத் தருவாய்!

வீர முருகா வருவாய்—எமக்கு
வெற்றி சேர்க்கவே வருவாய்!
சூர சம்மாரா வருவாய்—உடன்
துணையாய் எங்களைக் காப்பாய்!

கான மயிலுடைய முருகா—வள்ளி
கணவனுன எங்கள் முருகா!
வானப் புள்ளெனத் திரிய—நல்ல
வாழ்வை எமக்குநீ யருள்வாய்!

காளிதேவியின் மைந்தா—எங்கள்
கவலையை யோட்டவே வருவாய்!
வாழ்வில் துன்பத்தை நீக்கி—மகிழ்
மலரச் செய்யவே வருவாய்!

துயரம் மிகமிகப் பட்டோம்—இந்தத்
தொல்லை இனிச் சகிக்க மாட்டோம்,
அயர்வை நீக்கிடும் முருகா—இங்கு
ஆதரவாக நீ வருவாய்!

—வி. வெ. சொக்கலிங்கம்



என்பன தமிழகக் குழுக்களே என்பது தெள்ளிதின் விளங்கும். அக்குழுக்களில் செட்டியார்களும் இருந்தனர் என்று கல்வெட்டுக்களிலே காணப் பெறுவது பின்னும் அக் கருத்துக்கு வலிமை தருவதாக அமைகிறது.

(1) "....கோவாதலச் செட்டி அஞ்சுவண்ணம் கூட்டம் மணிக்கிராமத்தார் மக்கள்...."[28]

(2) மகோதையார் பட்டினத்து இரவிக் கொற்றனை சேரமான் உலோகப் பெருஞ் செட்டிக்கு மணிக்கிராமப் பட்டம் கொடுத்தோம்..."[29]

(3) "....திருவெள்ளறை திருவாணைக் கல் பெருமானடிகள் உச்சம் போது அமுது செய்தருளும் போது ஒரு பிராமணனை ஊட்டுவிதாக உறையூர் மணிக்கிராமத்து நாராயணன் ஆச்சன் இவ்வூர் கல்லால் வைத்த பொன் ஐம்பதின் கழஞ்சு."[30]

முதல் இரண்டு குறிப்புகளால், அஞ்சுவண்ணம் மணிக்கிராமம் ஆகிய குழுக்களில் செட்டியார்கள் இருந்தனர் என்பதும் உலோக வாணிகத்திற் சிறந்து விளங்கிய[31] செட்டியார் ஒருவருக்கு சேரமன்னனால் 'உலோகப் பெருஞ் செட்டி' எனப் பட்டம் தரப் பெற்றது என்பதும் தேற்றமாகின்றன. ஆனால், மூன்றாவது கல்வெட்டு மிகவும் ஆராய்ச்சிக்கு உரியதாகும். இக் கல்வெட்டில் காணும் உச்சம் போது (உச்சிப்பொழுது) அமுது (செட்டி நாட்டுப் பிச்சைக்காரர் 'அமுதுபிடி தாயே' என்றுதான் படியேறுவர்.) ஊட்டுவிதாக (ஊட்டுதல்) நாராயணன், கல் (படிக்கல்) கழஞ்சு (பொன் நிறுத்தலளவு) எல்லாச் சொற்களும் இன்றும் செட்டி நாட்டில் வழங்கி வருவதாக உள்ளன!

விருந்திடுவது, சத்திரம் சாவடி கட்டுவது, பிராமண போசனம் செய்விப்பது, நிமந்தம் விடுவது எல்லாம் இன்றுவரை நாம் செய்து வரும் பணிகளேயாகும்.



நகரத்தார்கள் சிறுபுதுமை, கார்த்திகைப் புதுமை, திருவாதிரைப் புதுமை முதலிய விழாக்களில், மொந்தன் வாழைப்பழங்களை இரண்டு மூன்று நான்கு துண்டங்களாக நறுக்கி நறுக்கித், தையல் இலை, தாமரையிலைகளிலிட்டும், பழனியிலிருந்து தைப்பூசத்திலும் பங்குனியுத்திரத்திலும் பெருமுயற்சியுடன் தருவிக்கப் பெறும் அபிடேக சந்தனத்தைக் கலயத்தில் கரைத்து வைத்துக் கொண்டு உணவுண்ணும் பந்தியில் பெருவிரலால் தொட்டுப் பொட்டு வைத்துக் கொண்டும் செல்வார்கள்.

—மகா மகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள்



தானம் வழங்கிய வணிகன் நாராயணன் என்ற பெயரினனாக இருப்பதும்[32] உறையூரினனாக இருப்பதும் அவ்வணிகன் செட்டியாரே என நிறுவுதற்கு ஆதாரமாகவும் உறையூரில் மணிக்கிராமம் என்ற செட்டியார்கள் அடங்கிய குழு இருந்தது என உறுதி செய்வதற்கும் துணையாக உள்ளன.

"கல்லால் வைத்த பொன் ஐம்பதின் கழஞ்சு" என்ற வரி நம்மவர் இசை பிடிமானத்தோடு இரண்டறக் கலந்துள்ளது. ஒப்பு நோக்க அதன் சில சொற்றொடர்களைக் காணுக. ..."இவர் பூஷணம் பூட்டும் பொன்

[28] Epigraphia Indica Vol. 18 P. 69.

[29] Epigraphia Indica Vol. iv pp. 295-6.

[30] Journal of oriental Research Vol. vi. P. 304.

[31] திராவிட இந்தியா ப. 73.

[32] (அ) கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான நாச நாராயணபுரத்தில்... (ஆ) கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிக நாராயணபுரத்தில்... (இ) எனக்குத் தெரிந்த ஒருவர் 'நவகோடி நாராயணன் செட்டியார்' என அழைக்கப்பெற்றார்.

ஒன்பது ஆறு கல்லொடை; பொன் பதிமுக் கழஞ்சு; வெள்ளி ஆறு கழஞ்சு; பொன் வளையல் ஏழு கழஞ்சு."

நகரம்

"பூம்புகார் நகரம் பழங்காலத்தில் "நகரம்" என்றும் "பட்டினம்" என்றும் வழங்கப் பெற்றது. காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து இங்கு வந்து குடியேறியதால் செட்டியார்கள் "நகரத்தார் எனப் பெயர் பெற்றனர்."

இக்கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதாகத் தோன்றிய போதிலும் கல் வெட்டுக்களை நோக்கி ஆராயின், ஒரு தக்க காரணமும் புலப் படுகிறது.

"பல ஊர்களைச் சேர்ந்த வணிகர்கள் ஒன்று கூடி அமைத்த கடல் வணிகக் குழுக்களைப் போன்றே ஓர் ஊரில் உள்ள வணிகர்கள் அனைவரும் கூடித் தமக்குள்ளே குழு அமைத்து வாழ்ந்தனர். அத்தகைய உள்ளூர்க் குழுக்களை 'நகரம்' எனப் பெயரிட்டு அழைக்கின்றன கல் வெட்டுக்கள்."

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ஊட்டத்தூர், காஞ்சிபுரம், மாமல்லபுரம், புதுக்கோட்டை, வாளையூர் மற்றும் பிற வணிகப் பேரூர்களிலும் 'நகரம்' இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

நடுவிக் கோட்டை, நாட்டரசன் கோட்டை, பட்டுக் கோட்டை, புதுக் கோட்டை, சாக் கோட்டை, அலவாக் கோட்டை என்பன போல நாட்டுக் கோட்டை என முற் பெயர் படைத்த நிலமொன்றில் நமது நகரம் இருந்திருக்கலாம். அதன் வழித் தோன்றலான செட்டியார்கள் 'நாட்டுக் கோட்டை நகரத்தார்' எனவும் 'நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள்' எனவும் பெயர் பெற்றிருக்கவும் கூடும்.

பிற குறிப்புக்கள்

"..உலோகப் பெருஞ் செட்டிக்கு.. வலஞ்சியமும் வலஞ்சியத்தில் தனிச் செட்டும் ஊர்ச் சொல்லும் முன்னடையும் அந்தோளமும் நாலு சேரிக்கும் தனிச் செட்டும் கொடுத்தோம்" எனும் பட்டயத்திலிருந்து நில ஆட்சியும் நிறைந்த சிறப்புகளும்[36] பெற்றமை தெரிகிறது.

33 செட்டிநாடும் தமிழும் ப. 7.
34-35 தமிழர் வாணிகம் ப. 88.
36 See Supra. 36



நாடெங்கும் மக்கள் பெருக்கம் ஏற்பட்டு புதிய புதிய வீடுகள் கட்டப்பட்ட வண்ணமாயிருக்கின்றன. பெருநகரங்களையொட்டி புதிய புதிய சிறு நகரங்களும் குடியிருப்புக்களும் உண்டாகிவருகின்றன. தில்லை நகர், மகாலிங்கபுரம் காலனி, கனக சபைநகர், நேரு நகர் போன்று ஒவ்வொருநாளும் ஏற்பட்டு வருகின்றன. ஆனால், இருக்கும் நகரங்கள் விரிவடையாமலும் கட்டப் பெற்ற வீடுகள் சன்னல் வேறாகவும் நிலைவேறாகவும் ஆணி வேறாகவும் கம்பி வேறாகவும் பிரிக்கப்படும் அவல நிலையை செட்டிநாட்டில்தான் காண்கிறோம். இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது நகரத்தார் சங்கங்களின் முதல் கடமை!

மு. அ. அருணாசலம் செட்டியார்
தலைவர், நகரத்தார் சங்கம்,
திருச்சிராப்பள்ளி.

(கோவையில் நடைபெற்ற நகரத்தார் மாநாட்டு ஆலோசனைக் குழு கூட்டத்தில்)



சிகரமென வாழ்க செழித்து!

நம்மவ் குலக்கொழுந்தாம் நங்கைநல்லார் வாடாமல்
செம்மலாம் காளையரைச் சேர்த்துவைக்க—வம்மின்
நகரத்தார் கூட்டிவைக்கும் நல்லதோர்மா நாடு
சிகரமென வாழ்க செழித்து!

சென்னையிலே கூடும் சிறப்புமுதல் மாநாடு
அன்னையெனத் தோன்றும் அருமையினால்—முன்னை
நகரத்தார் மாண்பெல்லாம் நாடிக் கொணர
சிகரமென வாழ்க செழித்து!

கல்லாதோர் கல்வியுற கற்றோரும் வேலைபெற
எல்லாமாய் நின்றசிவன் இன்னருளால்—நல்ல
நகரத்தார் மாநிலமா நாடுமுதல் ஓங்கி
சிகரமென வாழ்க செழித்து!

பழ. ஷண்முகம்
சித்தாந்த நன்மணி, இராமச்சந்திரபுரம்.

"நெல்லூர், நாராயணபுரம், ஆர்க்காடு, மயிலாப்பூர், திருவொற்றியூர், பூந்தமல்லி. நெடும் பிறை, தமனகச் சேரி, பெருங்க ளூர், திருநீறு ஆய நகர்களில் வாழ்ந்த வணிகர்கள் கி. பி. 1207-ல் ஒன்று கூடி திருப்பாசூர் கோவிலைச் சூழ மதில் ஒன்றை எழுப்புதற்காம் செலவிற்கென ஊர் ஒன்றை வாங்கி தேவதானமாக வழங்கினர்"[87]

"விஜயாலயன் காலத்தில், புதுக் கோட்டை நாட்டைச் சேர்ந்த முனிசந்தி என்ற ஊரில், நாறு தேசிகள் தம் பெயரால் ஒரு குளம் தோண்டி ஆண்டு தோறும் அதைச் செப்பனிடற்காம் செலவுக்காக நிமந் தம் ஏற்படுத்தினார்கள்.[88]

தங்கள் மனைவியரை, பெண்களை கடல் கடந்து வாணிக நாடுகளுக்கு அழைத்துச் செல்வதில்லை எனச் சில ஆண்டுகளுக்கு முன் வரை செட்டியார்களிடையே நிலவி வந்த பழக்கம் "முந்நீர் வழக்கம் மகடுவோ டில்லை" எனும் தொல்காப்பிய நெறியாக இருப்பதிலிருந்து பண்டைக் காலத்தி லிருந்தே தமிழ் வாணிக நெறி கொண்டு கலம் நடத்தியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

வாணிக அழிவு

"சோழ நாட்டுத் துறைமுகங்களில் இறக்குமதியாகும் பொருள்களின் மீது அதிக மான சுங்கம் விதிக்கப் பெறுவதாலே பிற நாட்டு வணிகர்கள் அங்கே போவதில்லை" என்று சௌ—சு—குவா எனும் சீன யாத்திரி கர் கூறியுள்ளார்.[89]

(1) பதின் மூன்றாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சோழப் பேரரசு வீழவும்

[87] *தமிழர் வாணிகம் ப. 87-8* (ராச நாராயணபுரம், தேசிக நாராயணபுரம்)
[88] *தமிழர் ப. 83*
[89] 'Chaw-Ju-Kua' P. 95.

நாடு தாழவுமாயிற்று. மூவேந்தர்களுக்குள் நிகழ்ந்த உள் நாட்டுப் போர்களும் வடக்குப் படையெடுப்புகளும் தாழ்வு நோக்கிக் காலடி வைத்தன. இடையே எழுந்த காளான் அரசுகள் எழுப்பிய முடிச் சண்டையாலும் கிடைத்தன கவர்ந்த பேராசையாலும் எஞ்சின அழித்த—'தொலை நோக்கு' இன்மையாலும் நீள் புகழ் அலை நீர் எழுத்தாயிற்று.

2. தமிழக வாணிகத்தோடு தொடர்பு கொண்டிருந்த மிகப் பெரிய நாகரிக நாடுகளான சீனம், எகிப்து, பாபிலோனியா, அர்மீனியா, மெசபடோமியா முதலாம் நாடுகளில் விளைந்த பேரழிவுகளும் அரசு மாற்றங்களும்.

3. மார்க்கோ போலோவும், இபன்பதூதாவும் அறிய முடியாதபடி ஆழ் கடல் அழித்து விட்ட காவிரிப்பூம் பட்டினத்தின் பேரிழப்பு.[40]

4. பதினைந்தாம் நூற்றாண்டிலே துருக்கியர் வலுவடைந்து, நில வழி நிகழ்ந்த வாணிகத்திற்குச் செய்த இடையூறுகள்,

5. "ஹிந்துக்கள் யாவரும் கொள்ளையடிக்கப்பட வேண்டியவர்கள். மறுத்தால் அவர்களை நரகத்திற்கு அனுப்ப வேண்டும்" என்ற வெறிக் கொள்கை படைத்த கஜினி முகமது இனத்தின் ஆட்சி"[41]

6. ஐரோப்பிய வணிகர்களின் நுழைவும் கர்நாடக மைசூர்ப் போர்களும்.

இவ்வாறு தொடர்ந்து நேர்ந்த கேடுகளால் தமிழர் வாணிகம் நாளுங் கரைந்து கனவாய் பழங்கதையாய்ப் போயிற்று. வாணிகரின் பேராற்றலும் பெருமையும் செப்பேட்டுக் கல்வெட்டுக்களுக்கே சொந்தமாகிப் போயின.

இன்று...மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னால் வாய்ப்பு மழை தூற்றலிட வாழ்ந்த பழமை துளிர்விட கடந்த நூற்றைம்பது ஆண்டுக் காலமாக நாம் மீண்டும் கடலைக் கடந்து வந்தோம். கொண்டு விற்றல் என்ற பழம் பெயரில் வட்டித் தொழில் புரிந்து வாழ்ந்தோம். இன்று அதற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது. வட்டித் தொழிலை விட்டு மீண்டும் கொண்டு விற்கும் வாணிகத்தை—வெளி நாட்டு ஏற்றுமதி வாணிகத்தை—நாம் தொடங்குதல் வேண்டும்.

முன்னைச் சிறப்புகள் பின்னை நாளில் ஏன் வரக் கூடாது? செயலாற்ற வேண்டியவர்கள் நாம்! செய்வோமாக! செழிப்போமாக!! ★



ஆட்சித் துணைவர்

முன்னாளில் அரசனுடைய ஆட்சிக்குத் துணையாகும் மந்திரி பிரதானியர்களை "அரசியல் சுற்றம்" என்பார்கள். அச் சுற்றம் ஐம் பெருங்குழு, எண்பேராயம் என இருவகைப் படும். எண்பேராயத்தில் அமைச்சர் முதல் படைத்தலைவர் வரை இருப்பர். அதில் நகர மாக்கள் அல்லது நகரமாந்தர் என்ற பிரிவும் உண்டு. இது அந்த அந்த நகரத்தில் விளங்கிய வணிககுலப் பெருமக்களையே குறிப்பதாகக் கொள்ள இடம் உளது. வணிகர், மன்னர் பின்னோர் என்பது மட்டுமின்றி அவர்கள் அரசின் ஆட்சிக்குத் துணைபுரியும் பதவிகளை ஏற்றலும் தொன்றுதொட்டு வரும் வழக்கமாகும், இன்று சென்னை, பம்பாய் போன்ற நகரங்களில் 'Sherif' எனப்படும் உயர்பதவி வணிகர்களுக்கே தரப்படும் உயரிய பதவியாகும்.

---

[40] மார்க்கோபோலோ—வெனிஸ்நகரத்து வாணிகன். இபன்பதூதா—முகமது துக்ளக்கிடம் ஓரதிகாரியாய் இருந்த வடஆப்ரிக்க நாட்டான். இருவரின் நூலிலும் தமிழர் வாணிகக் குறிப்புகள் உள்ளன. நாகபட்டினத்தையே பட்டினம் என இவர்கள் குறித்துள்ளனர்.

[41] அயல்நாட்டார் கண்ட இந்தியா ப. 10 (அல்பெருனி).

திருமகளே என்றைக்கும் நீங்கா திரு



விசு. அருணாசலம் அம்பத்தார்

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே' என்னும் பாரதியின் வாக்கிற்கிணங்க, நகரத்தார் எந்த நாட்டிற்குச் சென்றாலும் எம்மொழியைக் கற்றாலும் பெற்ற தாய்மொழியையும் பிறந்த பொன்னாட்டையும் மறப்பதில்லை.

பண்டைக்காலம் முதல் நகரத்தார்களின் தொழில்முறை வெளிநாடுகளில்தான் சிறப்புற நடைபெற்று வந்துள்ளது. தாய் நாட்டிலும் அதனைச் சிறப்புற நடைபெறச் செய்ய வேண்டியது இன்றைய சமுதாயத்தினரின் தலையாய கடமையாகும். தொழில்துறையில் வளர்ந்து வரும் நம் நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்குகொள்ள நல்ல வாய்ப்புக்கள் இருந்து வருகின்றன. அதனை நாம் நன்கு பயன்படுத்திக்கொண்டால், இந்நாட்டின் தொழில்வளர்ச்சிக்கும், பொருளாதாரப் பெருக்கத்திற்கும் பெருந்துணையாக இருந்தவர்கள் என்ற பெருமையும் உண்டு. சமுதாயத்தினரின் ஒற்றுமைக்கும், நல்லுணர்ச்சிக்கும் ஏற்றவாறு சிறு தொழில், பெருந்தொழில், கூட்டுறவு வாணிபம், இவற்றை அவ்விடங்களுக்குத் தகுந்த முறையில் அமைத்துச் செயலாற்றி வந்தால் மிகுந்த நற்பயனை அடைய முடியும் என்பது திண்ணம். நம்மவர்களில் அறிவு, ஆற்றல், பண்பு ஆகியவற்றில் சிறப்புமிக்கவர்களும், தொழில்துறை, பொருளாதார ஆய்வு, நுண்கலைத் திறன் முதலியவற்றில் தேர்ச்சி மிக்கவர்களும் பலர் இருக்கின்றனர். ஆதலின் இம் முயற்சியில் ஈடுபடுவதற்கு இன்னலின்றி, எளிய நிலையில் யாவராலும் இயலும். இதில் வெற்றிபெற உலைவின்றித் தாழாது முயற்சித்து நன்மை பெறுவோம்.

செல்வச் செழிப்பும், வளமும் நிறைந்து வாழ்வு தழைத்தோங்கிய காலத்தில் மக்கள் உள்ளம் இன்றுபோல் என்றும் வாழவேண்டும் என்று எண்ணுவது இயல்பு. வாழ்க்கையில் வறுமையும், செழுமையும் உயர்வும் தாழ்வும் மாறிமாறி வருவது இயற்கை. இதனைத் தெரிந்துதான் இன்பத்துள் இன்பம் விழையாமலும், துன்பத்துள் துன்பமுறுமலும் இருக்க வேண்டுமென்பது வாய்மொழி. நகர மக்கள் சிறந்தோங்கிய காலத்தில் பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் திருமகளை இந்நாட்டில் நீங்காதிருக்கும்படி கேட்டுக் கொண்டார். "அன்றைக்கு வந்த அம்மா இலக்குமியே, என்றைக்கும் நீங்கா திரு!" என்றார். அவர் சொல் பலிக்கும் விதத்தில், நாம் பலதுறைகளிலும் ஈடுபட்டு, உழைத்து, உயர்ந்து, பயன்பெற வாழவேண்டும்.

வேண்டும்

கதி. சுந்தரம்

சுற்றியுள்ள மக்களெலாம் தம்இனத்தைப் போற்றுதலைத் தொழிலாய்க் கொண்டார்;
பற்றற்ற ஞானியராய் வெளியுலகிற் பேசிவரும் பான்மை கொண்டார்;
கற்றோரும் மற்றோரும் தம்இனத்தைப் போற்றுதலைக் கருத்தாய்க் கொண்டார்;
தற்சுற்றம் போற்றுதலைத் தனவணிகர் கடமையென ஏற்றல் வேண்டும்.

நம்இனத்தார் எனும்நினைவு நெஞ்சத்தில் அழுத்தமுறப் பதிதல் வேண்டும்;
அம்புவியில் நகரத்தார் அறம்பெருக்கி வருவதனை அறிதல் வேண்டும்;
செம்மையுடன் நாணயத்தைப் போற்றிவரும் மரபதனைக் காத்தல் வேண்டும்;
தம்இனத்துள் திறம்உடையார் யாராக இருந்தாலும் போற்றல் வேண்டும்.

மன்னவரின் பின்னவராய் வாழ்ந்திட்ட வளமைநிலை உணர்தல் வேண்டும்;
மன்னுயிர்க்கு வாழ்வருளும் ஆலயங்கள் அமைத்ததனை மதித்தல் வேண்டும்;
அன்புடனே கலைக்கோயில் அமைத்துவரும் பெரியோரைப் புகழ்தல் வேண்டும்;
உன்னரிய திறமைமிகு தொழிலரசர் பெருமையதை உரைத்தல் வேண்டும்.

தனவணிகர் தொழிலெல்லாம் நாடோறும் தழைத்தோங்கி வாழ்க! வாழ்க!
மனத்தூய்மை மிகப்பெற்ற நகரத்தார் மாசற்ற உழைப்பு வாழ்க!!
சினம்அகற்றும் சிந்தையராய்த் தேயமெலாம் பணிபுரியும் செல்வர் வாழ்க!!
குணக்குன்றாய் வாழ்கின்ற தனவணிகர் தமிழ்ப்பண்பின் கொள்கை வாழ்க!

விருந்தோம்பும் முறையதனில் முதன்மைநிலை பெற்றுயர்ந்தார் வாழ்க! வாழ்க!
இருந்திருந்தே ஊட்டுகின்ற இவர்திறத்தை என்னென்பேன் என்றும் வாழ்க!
கரும்பினிலும் இனியமொழி கவினுறவே மொழிந்திடுவார் வாழ்க! வாழ்க!
அரும்புமலர் நல்லிறைவன் பேரருளால் தனவணிகர் ஆல்போல் வாழ்க!



வீண்செலவுகள் வேண்டுமா?



வெ. சு. அழகப்பன், M.O.L.,
(முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி)

''மணம்'' என்ருல் கலத்தல் என்பது பொருள். மணத்தின் பிறகு, குடி விளக்கமும் பெருக்கமும் பெறுகின்றது. மனம் திருத்தம் அடைகின்றது. பார்வையில் தெளிவும் விரிவும் ஏற்படுகின்றன. இவ்வாறு ஒரு குமரன் அல்லது குமரி வளர்ச்சி பெற வாயிலாக அமைவது, மணமாதலின் அச்செவ்வி நோக்கி ''திரு'' என்ற அடை மொழி சேர்த்தனர் பெரியோர். திருமணம் அல்லது கலியாணம் என்ற சொல் பண்டு இல்லை. மன்றல் வதுவை என்ற சொற்களே வழக்கில் இருந்தன.

அன்று பதினுறு வயது மகனுக்கும் பன்னிரு ஆண்டு மகளுக்கும் மணம் முடித்தனர்.

இன்றும், இவ்வகவையே, பருவம் எய்தும் வயது ஆகும். அன்று திருமணம் எவ்வண்ணம் நிகழ்ந்தது என்பது பற்றிய சில குறிப்புகள் அகம் 86, 136 ஆகிய பாடல்களில் உண்டு,

அந்நாள், திருமணத்தில் பார்ப்பனரால் வேதம் ஓதப் பெறவில்லை. தீவலம் இல்லை. அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் போன்றவையும் இல்லை. திருமங்கல நாண் பூட்டிய செய்திகூட அகப்பாடல்களில் காணப் பெற இல்லை. ''ஈகையரிய இழையணி மகளிர்'' என, புறப்பாட்டு கூறுவதால் 'தாலி' அணிதல் உண்டு என்பது உண்மை. நெடுநல் வாடையிலும், சிலம்பிலும் ''மங்கல அணி'' பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்தால் 'தீவலம் வருதல்' பற்றி அறிகிருேம்,

மங்கல காரியங்களை நல்லோரையில் தொடங்கி அரசன் ஆணையை முன்னிறுத்தி வாழ்த்தி வணங்கிய பின்னர் எதனையும் செய்வர். இன்றும் மணங்களில் மனையின் முன் அரசன் ஆணைக்கால் (அரசாணிக்கால்) நாட்டப் படுதல் காண்க.

புத்தாடை பூண்பதும், விருந்திடுதலும் அன்றும் இன்றும் உண்டு. இன்று இதனைக் கூறை உடுத்தல் என்கிருேம். (கூறை-ஆடை) இதிலும் ''கொரநாட்டுக் கூறை'' பெயர் பெற்றது. பரிசம் போடுதல் அன்றும் இன்றும் உள்ள வழக்கமேயாம். இதனை மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டாருக்குக் கொடுத்தனர். இப்பரிசம் அணிகலனுகவோ நிலமாகவோ, ஊராகவோ இருந்தது. இதனைப் புறநானூற்ருல் அறியலாம். நம்மவரால் எழுதப் பெறும் இசைவுப் பிடிமானத்தின் [இசைகுடிமானம்] வாசகப் போக்காலும் இச்செய்தி தெரிய வரும். (மணமகள் வீட்டார் பரிசிந்த பாங்கும் அதில் தெரிய வரும்).

இன்று பெண் வீட்டார்தான், மாப்பிள்ளை வீட்டாருக்கு வாளி முதல் வைர நகை வரை கொடுக்க வேண்டும். உணவு முதல் உண்டியல் வரை வழங்கல் வேண்டும்.

முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் மணமகன்தான் மணமகள் வீட்டாருக்கு ஆயிரக் கணக்காகக் கொடுத்துக் கொள்ள

வேண்டியிருந்தது. இதுவே சரி என்று வாதிடா விட்டாலும், சங்க கால மணமுறை இது தான் என்பது நினைவுகூரத் தக்கதாம்.

காலப் போக்கில் எதுவும் மாறும். மாறுவது இயல்பும் இயற்கையுமாகும். ஏழுநாள் திருமணம் மூன்று நாள் ஆயிற்று.

மணமகளுக்குக் கொடுப்பது நின்று மாப்பிள்ளைக்குப் பணம் கொடுப்பதாக மாறிவிட்டது. வருவோர்க்கு வரவேற்பில் வழங்கிய எலுமிச்சம் பழம் விலை ஏறியவுடன் விட்டு விட்டோம். இவ்வாறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. உண்மை ஆயினும் இன்னும் பல மாற்றங்கள் தேவை. அஃதாவது மனத்தில் மாற்றம்உண்டாயின் செயலில் மாற்றம் ஏற்படும்.

இன்று, திருமணம்—மூலதனம் இல்லாத வியாபாரமாக உள்ளது. நடுத்தர வகுப்பினர் பலரும் பெண் வீட்டாரிடம் பெருந் தொகை வாங்கிக் கலியாணச் செலவைச் சரிக்கட்டுவதோடு, மீதம் வைக்கவும் விரும்புகின்றனர். பெண்ணுக்கு வாங்கும் சீதனத்தை விட ''மாமியார் சாமான்'' கூடுதலாகக் கேட்பதன் நோக்கம் வேறு என்ன? சுருக்கமாகச் சொன்னால் ஒவ்வொரு பையனையும் நாம் ஏலம் போடுகிறோம். கூடுதலாகக் கொடுக்க முடிந்தோர் ஏலம் எடுத்து விடுகின்றனர்.



பொதுவாகக் கணவன் பெயரையோ, மாமனார் பெயரையோ கூறக்கூடாது என்பது ஆச்சிமார்களின் நம்பிக்கை. கணவன் மனைவியைப் பெயரிட்டழைப்பது போலவே, மனைவி கணவனை அடிக்கடி பெயரிட்டழைக்கும் பழக்கம் பிற நாடுகளில் உண்டு. நம் நாட்டு எழுத்தாளர்கள் எழுதும் நாவல்களில் வரும் பெண்களும் கூச்சமின்றிக் கணவன்மாரையும் கணவராகவிருக்கும் காதலர்களையும் பெயரிட்டழைக்கின்றனர். மேனாட்டு நாவல்களையே படித்துவிட்டு, நம் சமுதாயப் பழக்க வழக்கங்களைப்பற்றி அக்கறைப்படாமல் எழுதுவதால் இக் குறைபாடு ஏற்படுகிறது போலும்!

கணவன் பெயரைப் பலர் முன்னிலையில் கூறி அழைப்பது மதிப்புக் குறைவு என்பதால் அப் பழக்கம் உண்டாகியது. மாமனார் பெயரையும் அங்ஙனம் கூறுதல் கூடாது என்பது ஆச்சியர் கொள்கை. பொதுவாகப் பெரியவர்களை, இளம்வயதினர் பெயரிட்டழைத்தல் கூடாது என்ற பண்பாட்டின் சின்னம் இப் பழக்கம்.

அதற்காக இக்கட்டான, இன்றியமையாத இடங்களில்கூடக் கூறக் கூடாது என்று தடைவிதிக்கவில்லை. இன்று பல பெண்கள், கூறவேண்டிய சமயங்களிலும் தன் கணவன்மார் பெயரைக் கூற மறுத்து, கண்டவற்றையெல்லாம் கூறி விளங்கவைக்க முயன்று முடியாமல் திண்டாடுகின்றனர். குழப்பத்திற்கும் நகைப்பிற்கும் இடம் தந்து விடுகின்றனர். இது தேவையற்றது.

கண்ணகிக்கு ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டது. கணவனை இழந்தாள். அரசன் அவைக்குச் சென்றாள். ''யாரையோ நீ மடக்கொடி?'' என்று அவன் கேட்டான். அவளுக்குத் தான் யார் என்று கூற வேண்டிய சூழ்நிலை எழுந்தது. அவள் தயங்கவில்லை. 'ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு தொல்குடி, **மாசாத்துவான்** மகனாகி, உன்னால் கொலை செய்யப்பட்ட **கோவலன்** மனைவி நான், என் பெயர் **கண்ணகி**'' என்று கடிந்துரைத்தாள். தன் கணவன் பெயரையும், மாமனார் பெயரையுமே கூறித் தன்னை யாரென்று அறிவித்தாள் கண்ணகி நங்கை.

பெண்கள் கணவன் பெயரை எண்ணாமல் இருக்கிறார்களா அல்லது எழுதாமல் இருக்கிறார்களா? எண்ணும் பொழுதும் எழுதும் பொழுதும் ஏன் கூறக்கூடாது? மதிப்புக் குறைவு என்பதால் கூறுவதில்லை. ஆனால் இன்றியமையாத இடங்களிலும் கூறக் கூடாது என்ற தடை கிடையாது என்பதையும் ஆச்சிமார்கள் அறிந்துகொள்ளுதல் நலம்.

—**வலம்புரி அண்ணாமலை**


இதனால் மனப் பொருத்தத்தினும் பணப் பொருத்தம் மிகுதியாகி விடுகின்றது. இதுவே காதற் களத்தில் தோல்வியையும் ஏற்படுத்தி விடுகின்றது.

செல்வம் இன்றியமையாததே. "இல்லாரை எல்லாரும் எள்ளுவர்" "செறுநர் செருக்கருக்கும் எஃகம்" இதை விட வேறு இல்லை தான். இச்செல்வத்தைத் திருமணத்தின் மூலமாகத்தான் பெற வேண்டுமா? பெருந்தொகை கொடுப்பது பெண் பெற்றார் பாவக் கழுவாயா? இயலாதார் நிலை என்னவது? நகரத்தார் இனத்தில் கன்னிமார் பெருக வேண்டுமா? இப்போது ஏழையர் வீடுகளில் தனியே மூத்துத் தவிக்கும் தண்டமிழ்க் குமரியர் எத்துணைபேர் ஊர் தோறும் உள்ளனர்? இதனை நாம் அறியோமா? நான்கு பேர் கூடும் இடத்தில் நாத்தழும்பேறப் பேசவில்லையா? பேசிப் பயனென்ன? குறைத்துச் சீதனம் கொள்வாரில்லையே!

நடுத்தரத்தார் திருமணத்தைப்பொறுத்த மட்டில் மூன்று தவறு செய்கிறார்கள். (அ) வாரிச் சுருட்டி வரும் ஆடிக் காற்றுப் போல, மாமியார் சாமான் மூலம் ஒரே சமயத்தில் பையனுக்காகச் செலவழித்த தொகை முழுவதையும் பெறக் கருதுகின்றனர். [ஆ] பெருஞ்செல்வர் போல, சிலர் போலியாக நடந்து கொண்டு அதிக வராகன் கேட்கின்றனர். (இ) சிலர் அதிகமாகக் கேட்டுப் பெறுவதே தனிப்பெருமை என்று கருதுகின்றனர்.

பெருஞ் செல்வர்களும் இவ்வாறே இரண்டு பிழைகளைச் செய்கின்றனர். (அ) மிகுதியும் கொடுப்பதைப் பெருமைக்காக வெளிப்படையாகச் செய்து அல்லது பரப்பி நடுத்தரத்தாரையும் ஏழையையும் ஏக்கத்திற்கு ஆளாக்குகின்றனர். [கொடுப்பதைத் தனி வகையில் செய்யலாம்] [ஆ] செல்வர் தம்மை ஒத்த பெரிய செல்வரையே நாடி நடுத்தரத்தாரையோ ஏழையையோ நத்துதல் இல்லை. குடித்தகுதி அறிவு அழகு ஆற்றல் முதலியன உடையவராயினும் பொருளாதாரத் தகுதியை மிகுதியும் கருதாமல் கொள்வினை கொடுப்பினை செய்யலாம். ஆயின் இவ்வகையில் இன்னும் நம்மில் பலருக்கு மனப் பக்குவம் வரவில்லை. இம்முறையை எண்ணித் துணிந்து இயற்றிய பெரியார்களில் கலைத்தந்தை கருமுத்து "தி" அவர்களும் காரைக்குடி கல்வி வள்ளல் ராம. வீர. ராம அவர்களும் பெரிதும் பாராட்டுதற்குரியவர்களாவர். இவர்கள் சென்று காட்டிய சீரிய வழியை ஏனையோரும் ஏற்று நடப்பார்களாக.

இவற்றைக் கருத்திற் கொண்டு, மனத்தில் மனம் மாறினால், பெண்கள் இருப்புப் பொருளாய் இரார். பெற்றோரின் இதயத்தைக் கலக்கும் சுமைப் பொருளாய் நில்லார். நிலைமை மாறவில்லையாயின் சமுதாய ஒழுங்கு குலையும். பழைய நிலையே தொடருமாயின் விளக்கு வைத்துக் கொண்டே பாழும் கிணற்றில் வீழ்ந்தவன் கதையாய் நம் சமுதாயம் கீழ்நிலை எய்தும் ஆதலின் "எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு". ★



சங்க நூல்களில் 'நகர்' என்ற சொல் அரண்மனையையும் கோயிலையும் அரண்மனை போலும் பெரிய வீடுகளையும் குறிக்க வழங்கப்பட்டிருக்கிறது. 'செழுநகர் முற்றத்து' (பெரும்பாண் 435) 'பொன்துஞ்சு வியனகர்; (பெரும்பாண் 444) என்ற இடங்களில் நகர் என்ற சொல் செல்வம் நிலைபெற்ற பெரிய அரண்மனையைக் குறிக்கிறது. 'முக்கட் செல்வர் நகர்' (புறம்: 6) என்ற இடத்தில் சிவபெருமான் கோயிலை இச் சொல் குறிக்கிறது. 'கூடு விளங்கு வியன்நகர்' (புறம்: 148) என்ற இடத்தில் நெற்கூடுகள் மிக்கு விளங்கும் பெரிய வீட்டினை இது குறிக்கிறது. எனவே அரண்மனை போலும் வீடமைத்து வாழ்ந்தமையால் 'நகரத்தார்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டு வழங்கலாயிற்று என்பது. மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் கருத்தாகும்.

நகரத்தார் சமூக மரபும் அறநெறி வாழ்வும்

நாச்சியார்புரம் S. VN. நாகப்பன் B.Sc

கோவை நகரத்தார் சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டுவரும் இக் கட்டுரையாசிரியர், நகரத்தார்களின் செம்மை சான்ற சமூக மரபுகளையும் சிவநெறி வாழ்வையும் தொகுத்துத் தந்துள்ளார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அக் காலப் புவி அரசர்களின் கொடுமை தாளா மலும் பிற காரணங்களாலும் முதலாவதாக வாழ்ந்த நாக நாட்டில் ''சாந்தியாபுரி'' என் னும் நகரத்திலிருந்தும், பின்னர் உறையூர், புகார்' காஞ்சிபுரத்திலிருந்தும் வெளியேறினர் என்பர். பாண்டி நாட்டிற் குடியேறிக் கோட்டைகள் கட்டி வாழ்ந்து வந்தமையால், நாட்டுக்கோட்டையார் என்றும், புகார் நகரத்தில் நெடுநாள் வாழ்ந்தமையால் அதன் அறிகுறி யாக நகரத்தார் என்றும் பெயர் பெற்றனர் எனக் கருத இடமுண்டு.

புகார் நகரத்தில் சுமார் 1463 ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் 8000 குடியினரும் ஒரு சமயம் மானத்தைக் காக்கும் பொருட்டு மனைவி யருடன் உயிர் நீத்தனர் என்றும், பள்ளிக்கூடத் துப் பிள்ளைகள் சிலரே எஞ்சினர் என்றும், அவர்கள் பின்னர் பல ஆண்டுகள் கழித்து வேளாள மரபுப் பெண்களை மணந்து வாழ்ந் தனர் என்றும் சௌந்தர பாண்டிய மன்னனால் அழைக்கப் பெற்று, பாண்டிய நாட்டில், இளை யாத்தங்குடி, வயிரவன்பட்டி, பிள்ளையார் பட்டி, இலுப்பைக்குடி, இரணியூர், நேமம், மாற்றூர், சூரக்குடி, வேலங்குடி முதலிய ஊர் களில் இவர்கள் குடியேறினர் என்றும் தொன்மைமிக்க செவிவழிச் செய்திகளால் அறிகிறோம்.

அந்தக் காலத்தில், மிகச் சீரும் சிறப்பு மாய் வாழ்ந்து வந்துள்ளார்கள். 'மன்னர் பின்னோர்' என்ற சிறப்புக்குச் சற்றும் மாற்றுக் குறையாமல் வாழ்ந்துவந்துள்ளார்கள் என்ப தற்குச் சில கவிதைகள் சான்று பகர்கின்றன. அவையாவன:


செம்பொனில் உருக்கிவார்த்த
சிறுகட்டி அடுப்புக்கூட்டி
நம்பிய குளியல்போந்த
குடச்சங்கு நடுவிலேற்றிப்
பம்புதேன் உலைநீர்பெய்து
பவளத்தீ விறகுமூட்டி
அம்பொனின் மகளின் வெண்முத்
தரிசிச்சோ(று) ஆக்குவரால்.

பஞ்சுப் பொதிகொண்டு காவேரியூரைப்
பரவா தடைத்த வணிகேசர்
பட்டத்து யானைக்குக் கிட்டத்திற்போகாமல்
பார்த்து நிறுத்த வணிகேசர்

பகட்டான தங்கத்தகட்டைக்கிள்ளி மாற்றுப்
பார்த்துரை சொல்லும் வணிகேசர்
பற்றுக்கிணற்றுக் கயிற்றுக்குப் பொற்பணி
பாய்ச்சி இறைத்த வணிகேசர்
பாங்கான வெள்ளிக்கதவு பிடுங்கப்பின்
பைம்பொன் ருலிட்ட வணிகேசர்
பாண்டியநாட்டிற் குடியேறும் ஏழ்நகர்ப்
பார்த்திபராம் வணிகேசர் தானே.

இவர்கள் அரும்புகுத்தி வேளாள குலத்துப் பெண்களைத் திருமணம் செய்துகொண்டதால், திருமங்கல நாணுக்கு அரும்புக் கழுத்துரு என்ற பெயர் வரலாயிற்று.

கி.பி. 1500-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முகம்மதியர் கலகங்கள், சிற்றரசர்களின் சண்டைகள், பாளையக்காரர்களின் கொள்கைகள் ஆகிய காரணங்களால் மேற்கூறிய ஒன்பது கோயில் ஊர்களைச் சுற்றிச் சிதறிப் பல ஊர்களிலும் பரவி வசிக்கலாயினர். அக்காலத்தில் தான் "தொண்ணூற்ருறு ஊர்" கணக்கு வந்தது. தற்சமயம் சுமார் 78 ஊர்களில் தான் வசித்து வருகின்றனர்.



சிவநெறிச் செல்வர்களாகிய இவர்கள் காளி, பிடாரி, மாரி, கறுப்பர், ஐயனர் முதலிய தெய்வங்களைத் தொழுது குலதெய்வமாகக் கொண்டாடினர்.

இவர்கள் ஆதிமுதல் நிறைய முடிவைத்து, மாருமல் எப்போதும் தலைப்பாகை கட்டியும், காதுகளை வளர்த்து வண்டிக் கடுக்கனிட்டும், மூன்று விரற்பட அழியாது திருநீறு பூசியும், ஆடையைக் கொய்துகட்டி மடிவைத்து அதில் திருநீற்றுப் பையும், செபமாலையும் வைத்தும் வாழும் இயல்பினர். தீண்டாக் காலங்களில் தலைப்பாகையை அவிழ்த்து, தீண்டல் கழிந்தவுடன் மீண்டும் கட்டிச் சாப்பிட வாருங்கள் என்பார்களாம். இத்தலைப்பாகை ஒரு சாண் அகலமும், 18 முதல் 24 முழம்வரை நீளமும் இருக்குமாம். இன்றும் திருமணக் காலங்களில் தலைப்பாகை அணியும் பழக்கம் இருந்து வருகிறது.

முதலில் ஒரு குடும்பத்தில் பிறக்கிற ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும், ஆண்டு நிறைவு போன்ற விசேடத்தை இவர்கள் 'புதுமை' என்று கொண்டாடுவார்கள்.

(பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஆண் பிள்ளைகளைக் கார்த்திகைத் திங்கள் திருக்கார்த்திகை நாளில், வீடுகளில் வாழைநட்டு, திருவிளக்கேற்றி விநாயகர் கோவிலுக்கோ அன்றி சிவன் கோவிலுக்கோ குதிரையேறிச் சென்று சொக்கப்பான் கொளுத்தி, சோதி தரிசனம் செய்து வரச் செய்வர். இதை அரைக் கல்யாணம் என்றும் சூள்பிடி என்றும் சொல்வார்கள். அது சூப்பிடி என மருவி வழங்கும். சூள்பிடி என்பது அணையாத லாந்தர் (Lantern) விளக்குகள். மெழுகுதிரி விளக்குகள் இல்லாத காலத்தில் ஒருவகைக் காட்டு மரத்தை முழுவதும் பிளக்காமல், சிறிது சிறிதாகக் குத்தி வலைஞர்களால் செய்யப்படுவது. இதைக் குதிரைக்கு முன் பிடித்துக்கொண்டு செல்வார்கள். இன்றும் அந்தச் 'சூள்பிடி' என்ற சொல் மாறவில்லை. ஆனல் சூள்பிடியை தற்பொழுது வெண்கலத்தால் கோல் வடிவில் செய்து நெருப்புக்கொண்டு சொக்கப்பான் கொளுத்துகின்றனர்.)

கன்னிப் பெண்களுக்கு, கழுத்துருவின் சில உருக்களை எடுத்துக் கோத்துக்கட்டி, மார்கழி மாதம் திருவாதிரையில், மணிவாசகர் மார்கழி நீராடல், திருவெம்பாவையை ஆதாரமாக வைத்துப் புதுமையாகச் செய்கிருர்கள்.

ஆடிஆடி வாரோம்
அவரைக்காய் போடுங்கள்
பாடிப்பாடி வாரோம்
பாடவரங்காய் போடுங்கள்
கூடிக்கூடி வாரோம்
கொத்தவரங்காய் போடுங்கள்

என்று பாடச் சொல்வார்களாம்.

பெண் பிறந்த விடு சேய்மையிலுள்ள ஊராயிருப்பினும் மாப்பிள்ளை வீட்டுக்காரர் அங்கே சென்று திருமணஞ் செய்வார்கள்.

ஆனால் இடைக்காலத்தில் மாப்பிள்ளை திருமங்கல நாண் பூட்டுவதில்லை ; வயது சென்ற முதியவர் மாப்பிள்ளைக்காகத் தாலிகட்டும் வழக்கம் இருந்துவந்தது.

கழுத்துரு என்னும் திருமாங்கலியக் கோவை எல்லா அங்கங்களும் சேர்ந்து இருபத்திரண்டு வராகன் (10 பவுன்) எடையிலேயே அமைந்திருந்தது ; எழுபது ஆண்டுகளுக்குள்ளாகத்தான் நூறு பவுனாகப் பெருக்கப் பெற்றது.

ஆனால் இத்திருமாங்கலியக் கோவை அக்குடும்பத்திற்கு என்ன ஆபத்து வரினும், கடைசி வரையில் உருவாகுவே இருக்கும். இது ஒரு குடும்பத்துக்குப் பெரிதான, என்றும் அழியாத முதலாக இருந்தது. சிகப்புக் கற்களாலேயே பலவித அணிகலன்கள் முதலில் தோன்றின. பின்னர் இவைகளும் கண்ணைப் பறிக்கும் வைரத்தினலாயின. தங்கம், வெள்ளி, பித்தளை, பீதாம்பரம், பட்டுப்புடவை, சில்லரைப் பொருள்கள், வேடிக்கைப் பொருள்கள் பெண்ணுக்கென்று பெண் வீட்டாரால் அணியணியாய்ப் பரப்பப் பெற்றுத் திருமணங்கள் நடக்கும். பெண் வீட்டாருக்குச் செலவும் பல ஆயிரங்கள் ஆகும்.

எழுபது ஆண்டுகளுக்கு முன் இருந்த கூரை வீடுகளெல்லாம் மாறி, வானுற ஓங்கிவளர்ந்து எழுகடல் போல் விரிந்து கிடக்கும் ஏழ்நிலை மாடங்களை 78 ஊர்களிலும் கணக்கிட்டால் ஏறக்குறைய 78 கோடி ரூபாய்களாகும் என்று மதிப்பிடுகின்றனர்கள். சற்று ஏறக்குறைய நூற்றிருபது ஆண்டுகளுக் குள்ளேயே அறச்செயலால் இத்துணை வளம் பெற்று - தொன்மைப் பெருவாழ்வைப் பெற்றுள்ளார்கள்.

பண்டமாற்றுச் செய்தும், நெல், பஞ்சு, உப்பு வியாபாரங்கள் செய்தும், நாணயமாய்க் கொடுக்கல் வாங்கல் செய்தும் தங்கள் மானத்தையும், செல்வத்தையும் காப்பாற்றி வந்துள்ளார்கள்.

'ஏட்டுப் பள்ளிக்கூடம்' எனும் கண்டிப்பு மிக்க கல்விச் சாலைக்கு, ஆடைகளில் ஆற்று மணலும், கால்வாய் மணலும் கட்டித் தலைச் சுமையாய்க் கொண்டுசென்று, தரை புழுதி ஆக ஆக, மாற்றி மாற்றிப் பரப்பியும் ; கோதண்டம் எனும் கயிற்றில் தூக்கிவிட்டுக் குண்டெழுத்தாணியைக் கீழேவைக்கும் தண்டனைகளாகிய கொடுமைகளுக்கெல்லாம் உட்பட்டும் படித்துத் தேறிப் பல தொல்லைகளுக்குட்பட்டுச் ''செட்டி கப்பலுக்குச் செந்தூரான்

காப்புக்கட்டுப் புதுமை

இது ஆணையினும் பெண்ணையினும் தலைப் பிள்ளைக்குச் செய்யப்பெறும் விழா. இதனைப் 'பிறந்தநாள்' கொண்டாட்டம் போன்றதெனக் கருதுகின்றனர். மக்கட் பெருக்கமும் விளம்பரச் சூழல்களும் அற்ற முன்னளில் ஒரு குடும்பத்தில் குழந்தை பிறந்துள்ளமையைப் பலருக்கும் அறிவிப்பதற்கேற்றதாகவும் இது கருதப்பட்டது. மாமன் அல்லது அத்தையே காப்புக்கட்டுவதற்குரியவர். அவர்கள் குழந்தையைத் தட்டில் வைத்து மலர் போல ஏந்திச் சென்று பலரும் கொஞ்சிமகிழவும் வாழ்த்திச் சிறப்பிக்கவும் செய்வர். இப் புதுமையை தாயும் தந்தையும் உயிரோடு இருந்தால்தான் செய்யவேண்டும் என்பது விதி. தாயும் சேயும் நலமென அறிவிக்கும் மகிழ்ச்சி விழாவே இது. செல்வச்செருக்கினல் தாய் தந்தையர் இல்லாதபோதும் இப்புதுமைமைக் கொண்டாட நினைப்பது தவருகும்.



"துணை" என்னும்படியாகக் கடல்கடந்து சென்று 'கொடுக்கல் வாங்கல்' வாணிகம் செய்து ஊதியம் தேடினர்.

அவ்வண்ணம் வந்த வருவாயனைத்தையும் குடியிருக்கும் நகரங்களிலும், பாடல்பெற்ற தலங்களிலும் எண்ணற்ற பதி தருமங்களுக்கும் பசு தருமங்களுக்கும் பயன்படுத்தினர்.

இத் தன வைசிய மரபினர் பாண்டி நாட்டு ஆச்சாரியராகிய கலாமடம் ஈசான சிவாச்சாரியாரிடம் சிவ தீட்சையும், திருவைந்தெழுத்து உபதேசமும் பெற்றுக்கொண்டு வந்தனர். பெண்பாலார் வேளாளர் குலத்தில் பிறந்தமை நோக்கி வேளாள குருவாகிய துளாவூர் மடத்து நிரம்ப அழகிய தேசிகரிடம் தீட்சையும் உபதேசமும் பெற்று வந்தனர்.

நகரத்தார் நிருணயம் செய்த சாதிமுறை நியாயங்கள்:

1. மாதா, பிதா, குரு, தெய்வம்—குல தேவதை இவர்களை வணங்கிப் பூசிக்கிறது.

2. கோவில்களுக்கும் குரு நிலையங்களுக்கும் உள்ள கிராமம் முதலியவற்றை நகரத்தார் விசாரணையில் வைத்துக் கொண்டு, அவற்றால் வரும் ஊதியத்தை அந்தந்த தருமங்களுக்கே பயன்படுத்துகிறது.


3. சாதிமுறை நியாயங்களில் தவறி நடக்கிறதில்லை. நற் கருமங்களைச் செய்கிறது. ஆடவரும், பெண்டிரும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குரு ஸ்தானங்களிலேயே தீட்சா கிரியை முதலியன செய்துகொள்ளுகிறது. சிவ மதத்திலேயே இருக்கிறது. அந்நிய மதங்களில் சேர்வதில்லை. ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்து கொள்கிறதில்லை. தன் கோத்திரத்தில் 'புத்திர சுவீகாரம்' செய்து கொள்கிறது. (மாற்றூர்க் கோவில், இளையாத்தன்குடிக் கோவில் இரண்டினுட் பிரிவுகளில் சம்பந்தம் செய்துகொள்ளும் வழக்கம் புள்ளிகள் பெருகிவிட்ட காரணத்தால் பிற்காலத்தில் நிகழ்வதாயிற்று.)

4. இரத்தினம், சுவர்ணம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது. சீவவதையான வியாபாரங்கள் செய்கிறதில்லை. வாய்மை தவறாத மேலோர்களிடத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கிறது. தரும வட்டி வாங்குகிறது. குதிரை வாணிகமும், வெற்றிலை முதலிய அழுகற் சரக்கு வியாபாரமும் செய்யக் கூடாது.

5. திருட்டு வாணிகம் செய்யக்கூடாது. பிறன் மனைவியைச் சேரக்கூடாது. தாசிகளிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடாது.

6. நகர முறை தவறினவர்களையும், இராச தெண்டனைக்குட்பட்டவர்களை-

மருந்து குடித்தல்



மணமானதும் தலைக்குழந்தைக்குக் கருக்கொண்டிருக்கும் தாய்க்கு மருந்து கொடுத்தலாகிய இவ்விசேடம் நடைபெறும். இது கருக்கொண்டபின் ஐந்து, ஏழு என்ற ஒற்றை எண் மாதங்களிலேயே நடைபெறுதலும், நாத்துன் நங்கையரே (நாத்திமார்களே) மருந்து இடித்துக் கொடுக்கும் உரிமையுடையராதலும் காணலாம். இதில் "விளையாட்டுப் பெட்டி வேவு" என்று பிறக்கவிருக்கும் குழந்தைக்கு வேண்டிய விளையாட்டுச் சாமன்களை வேவு எடுத்தலும் உண்டு. இதனைத் "தீர்த்தம் சாப்பிடுதல்" என்றும் கூறுவர். அது பிற்கால வழக்கு.

யும், சோரஞ் செய்தவர்களையும் நட்புக் கொள்ளக்கூடாது.

7. கடலுக்கு மேற்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வைகைக்கு வடக்கு, வெள்ளாற்றுக்குத் தெற்கு இந்த நான்கு எல்லைகட்குட்பட்ட வேளாளர் பூமியாகிய இந்நாட்டிலேயே குடியிருக்கிறது.

8. பெண்டிர் சுவாமி தரிசனம், தீர்த்த யாத்திரைகளுக்கு ஆடவர்களுடன் போய்வர வேண்டும். எந்த விஷயங்களிலும் முன் வழக்கப்படி நடந்து வருகிறது.

9. கோவில் வாசலிலாவது மடத்து வாசலிலாவது நகரக் கூட்டம் கூடிச் சாதி நியாயம் பேசுகிறது.

10. மேற்கண்ட ஒன்பது கோயில் நகரத்தார்கள் அவரவர்களுக்குரிய கோவில்களிலிருந்து சுவாமிக்குச் சாத்தின மாலையும், விபூதிப் பிரசாதமும் வந்துதான் திருமணம் நடத்தல் வேண்டும்.

திருமணம் நடக்கிற விவரத்தைப்பற்றிக் கோவில் வாசல்களில் தாம்பூலம் வைத்து முன்னமே தெரிவித்தல் வேண்டும்.

இரணியூர்க் கோவிலாரும், பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் சகோதரர்களின் வமிசத்தாராதலால் தம்முள் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது. மற்றைக் கோவில்களில் செய்து கொள்ளலாம்.

தமிழ் நாட்டுத் திருக்கோவில்களின் சீர்கேடான நிலையை நீக்கும் பொருட்டு சிவபிரானே நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் உள்ளத்தில் புகுந்து திருப்பணி செய்யத் திருவுளம்பற்றி யருளினர். அது முதற்கொண்டு பல ஆண்டுகளாக நகரத்தார்கள் சைவ சமயத்தையே மேற்கொண்டு, விபூதி உருத்திராக்கம் பஞ்சாட்சரம், சிவாலயதரிசனம் முதலியவற்றில் பற்றுடையவராயும், சிதம்பர தரிசனத்திற்கும், காவிரி நீராடலுக்கும் அடிக்கடி சென்று வருபவர்களாயும், செல்வம் பெற்றதன் பயன் சிவதருமம் புரிதலே என்பதைச் செவ்வனே உணர்ந்தவர்களாயும் இருந்தமையால் நகரத்தார்கள் வடநாடுகளிலும், சோழநாடு, பாண்டிநாடு, நடுநாடு, தொண்டைநாடுகளிலும் செய்த அறச்செயல்கள் பலவாகும்.

வேவு எடுத்தல்

சீர் வரிசைகளை, ஊர்வலம்போலக் கூலியாட்களின் தலையிலேற்றிக் கொண்டு செல்லுதலை இன்று "வேவு எடுத்தல்" என்ற சடங்காகக் குறிப்பர். ஆடிவேவு, கார்த்திகை வேவு, பொங்கல் வேவு, பிள்ளையார் நோன்பு வேவு, மாமவேவு என இவை பலவகை. பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொண்டுசெல்வனவும், மாமன் முறையினர் தம் தங்கைதமக்கையரின் விசேடங்களுக்கு-அனுவல்கட்குக் கொண்டு செல்வனவும் ஆகிய சீர்வரிசைகளை இது குறிக்கிறது. எப்படிப் பார்த்தாலும் மாப்பிள்ளை வீட்டார்க்கே வருமானம் என்ற "பொருட்சிறப்பைப்" போற்றுபவர்கள் இதன் உட்பொருளையும் அறிதல் நலமாகும். தமது பெண் சென்ற இடத்தில் சிறப்போடு வாழ, அவளுக்குத் தந்தை சொத்தில் பங்கில்லை என்ற உரிமைக் குறையை அகற்ற, அவளுடன் பிறந்த ஆண் மக்கள், அவள் வீட்டில் நடைபெறும் ஒவ்வொரு விசேடத்திற்காகும் அனைத்து உணவு வகைகளையும் தலைத்தூக்காகத் தாமே தம் ஊரிலிருந்து தூக்கிச்செல்வது தொன்மையான பழக்கம். பின்னர் கூலியாட்களைக் கொண்டு தூக்கிச் சென்றனர். பின்னர் வண்டிகளில் கொண்டு சென்று, ஊரை அடைந்ததும் அங்ஙனம் கொண்டு சென்றனர். இன்றைய வேவுச் சடங்குகளில் வேவு எடுத்தலையும் வேவு இறக்குதலையும் கவனித்தால் இதன் சிறப்பு விளங்கும்.

குறிப்பாகக் கொங்கு நாட்டில், திருப்பாண்டிக்கொடுமுடி, திருக்கருவூர், திருப்பேரூர், திருவெண்ணெய்மலை, திருமுருகன் பூண்டி, திருநணு (பவானி) காங்கயம், சிவன் மலை, சென்னிமலை, பல்லடம் முதலிய பல ஊர்களில் உள்ள கோயில்களுக்குத் திருப்பணி செய்தும் நந்தவனங்கள், விடுதிகள் முதலியன அமைத்தும் அருள்நெறித் தொண்டு செய்து வந்துள்ளனர்.

பொதுவாக நகரத்தார்களின் அறச் செயல்களின் அன்றையப் பொருளளவு மொத்தம் சுமார் 10½ கோடி ரூபாய் ஆகும். இதன் இன்றைய மதிப்புப் பன்மடங்கு அதிகமும் ஆகும்.

வடநாட்டில் குறிப்பாகக் காசி, பிரயாகை, அயோத்தி, கயை, கல்கத்தா, காளிகாட், தாரகேசுவரம், கோதாவரி, நாசிக் பஞ்சவடி முதலிய இடங்களிலுள்ள நகரத்தார் நிறுவனங்களின் விலைமதிப்பும், விசாலாட்சி கோயில் போன்ற திருப்பணிகளின் பொருளளவும் மதிப்பரியனவாகும்.

காசி நகரச் சத்திரத்திலிருந்து விசுவேசர் கோயிலுக்குச் சம்போ கொண்டுசெல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசி மாதம் சிவராத்திரி வரை குளிர்காலமாக இருப்பதால் விசுவேசுவரருக்குக் குளிர்காலச் சட்டை (மக்மல் பட்டு) அணிவிக்க நகரத்தார்கள் கட்டளை ஏற்படுத்தி அவ்வாறு நடைபெற்று வருகிறது. அனைத்தும் சிவமயம் இவர்கள் கொள்கையன்றோ? ஆண்டவன் குளிரால் அவதிப்பட இவர்கள் அன்புகுடி கொண்ட நெஞ்சம் அனுமதிக்குமா? எனவே அதற்காக ஒரு கட்டளை. இதுபோல் இன்னும் பல ஏற்பாடுகள் காசிமா நகரில் செய்துள்ளார்கள். இத் தருமங்களும், நிறுவனங்களும் இவர்களுக்கு அனைத்து இந்தியப் புகழைத் தேடித் தந்துள்ளன என்றால் அது மிகையாகாது.

இராமநாதபுரம் திருச்சி மாவட்டங்களில் மிகக்குறைந்த எண்ணிக்கையோடு வாழ்ந்து வரும் நகரத்தார்கள் தம்முடைய அறிவாலும், ஆற்றலாலும், அறம்செய்யும் தொண்டாலும், உலக மக்களுக்கெல்லாம் அறிமுகமாகியிருக்கிறார்கள். பர்மா, சைகோன், மலேயா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் தென்னிந்தியச் சிற்ப, ஓவியக் கலைகளில் உருவாகிய நெடிதுயர்ந்த எத்தனை எத்தனையோ கலைக் கோயில்கள் இவர்கள் தொண்டின் சிறப்பைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்திலும், மதுரையிலும், சிதம்பரத்திலும், சென்னையிலும் இன்னும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எண்ணற்ற பகுத்தறிவுக் கோவில்கள் இவர்களால் ஏற்படுத்தப்பட்டு, இயங்கி வருகின்றன.

மருத்துவ மனைகளும், தொழில் வளர்ச்சிக் கழகங்களும், தேவார பாடசாலைகளும், வேத பாடசாலைகளும், சத்திரங்களும், பசுமடங்களும் நந்தவனங்களும் கணக்கற்றன.

இவர்கள் இயற்கையிலேயே இலக்கியப் பண்பும், கவிதை நயமும் பெற்றவர்கள். தமிழ்ப் புலமை சான்றவர்கள். சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க வாழ்பவர்கள். பலதுறைத் திறன்மிக்கவர்கள். இவர்கள் முன்னோர்கள் செய்த அறத் தொண்டின் பயனாக, இவர்கள் எத்துறையில் நுழைந்தாலும் விரைவில் முன்னேறி விளங்குபவர். வட்டித் தொழிலையே செய்ய எண்ணாமல் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு, எஞ்சியுள்ள வெளிநாட்டுத் தொழில்களை மிக மிகக் குறைத்து இந்நாட்டில் முதலீடு செய்தால் இவர்களுக்கு நல்ல ஒளிமயமான எதிர்காலமுண்டு.

உறவுச் சொற்கள்

நம் சமூகத்தில் கற்றறிந்த பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு, "அப்பச்சி, ஆத்தாள், ஆச்சி, ஐயா, ஆயா" என்பன போன்ற உறவுச் சொற்களுக்குப் பதிலாக அப்பா, அம்மா, அக்கா, "பாட்டன், பாட்டி என்ற சொற்களைப் பழக்கப்படுத்தி விடுகிறார்கள். இது தவறு. நமது தொன்மையான வழக்காறுகளை விட்டு விடுதல் கூடாது.

—இராஜா சர். முத்தையா செட்டியாரவர்கள்



மகராசர் பேரன்

ஆறு அழகப்பன்

தங்கத்தால் ஊசிகொண்டு
தரத்தில்ஒரு மையுமிட்டு
பொன்னாலே ஊசிகொண்டு
மேபுருவமும் மையுமிட்டு
பத்துப்பொன் மெத்தை
பசும்பொன் தலகாணி
ஐந்துபவுன் தட்டு
அதுநிறைய வெற்றிலை
சாதிக் களிப்பாக்கு
சங்குசுட்டோர் சுண்ணும்பு
ஏலங் களிப்பாக்கு
இளங்கொடிக்கால் வெற்றிலை
செதுக்காமல் தின்னெறக்கும்
ஜனகனார் பேரனே?
பட்டெடுத்துத் தொட்டிகட்டி
பவுன்உரைத்துப் பொட்டுமிட்டு
தொட்டியிலே அட்டணக்கால்போட்டுத்
தூங்கிறது யார்மகனே
இன்னார் மகனே
இந்திரவார் பேரனே
மன்னர் மகனே
மகராசர் பேரனே
சீதை மகனே
திருச்சபையார் பேரனே
பெருமாள் மகனே
புண்ணியவார் பேரனே?
வெள்ளி எடைக்கெடையாம்
வெங்காயம் பொன்னெடையாம்
தங்கம் எடைக்கெடையாம்
தந்தவர்கள் பஞ்சவர்கள்
பஞ்சவர்கள் நாடு
பழமாச் செளியுதின்னு
பழம்கோதித் தின்னவந்த
பாலகனை யாரடிச்சா
கனிகோதித் தின்னவந்த
கைப்பொருளை யாரடிச்சா?

தங்கத்தால் இட்டுவட்டி
சாதமிட வெள்ளிவட்டி
வெள்ளியினால் இட்டுவட்டி
விதத்தில் ஒரு தொட்டிகட்டி
பட்டெடுங்கள் தொட்டிகட்ட
பவுன் உரையுங்கள் பொட்டுமிட
பொன் உரைத்துப் பொட்டுமிட்டு
பொழுதுறங்கப் பாய்விரித்து
பஞ்சாச்சரம் போல
பட்டு மெத்தையுமே விரித்து
பாருங்கடி தாதிகளா
படுத்துறங்கும் பாவினையை
ஆட்டுங்கள் அன்ன ஊஞ்சல்
அழுகை அமருமட்டும்
ஊட்டுங்கள் பாலமிர்தம்
உறக்கம் தெளியுமட்டும்
தங்கச்சிமிழ் கடஞ்சு
தண்ணீர்படாமல் சேர்த்து
வெள்ளிச்சிமிழ் கடஞ்சு
வெய்யில்படாமல் சேர்த்து
பொன்னுச்சிமிழ் கடஞ்சு
புனுகுபடாமல் சேர்த்து

—வழங்குமிடம் - கோனூபட்டு

உடற்கலையரசு

சாண்டோ சோமசுந்தரனுர் அவர்கள் 1899-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி தோன்றினுர்கள். உடற்கலையில் ஆர்வம் மிக்கவராய்த் தம்முடைய பத்தொன்பதாவது வயதிலிருந்து உடற்பயிற்சி பயின்று வந்தார். விடாமுயற்சி செய்து சுகாதார சாத்திரம், உடற்கூறு சாத்திரம் போன்ற சாத்திரங்களைப் பயின்று, மேல் நாட்டுப் பலசாலிகள், உடற்பயிற்சியாளர்கள், உடற்பயிற்சிப் பேராசிரியர்களோடு, தொடர்புகொண்டு, 1925-ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஏர்லி E. லீடர்மான் (EARLE E. LIEDERMAN) அவர்களால் நடத்தப்பட்ட சர்வதேசப் போட்டி INTERNATIONAL CONTEST-யில் வெற்றி பெற்றுத் தங்கப்பதக்கமும் நற்சாட்சிப் பத்திரமும் பரிசு பெற்றுர். இந்திய நாட்டு உடற்பயிற்சியையும், மேல் நாட்டு நவீன விஞ்ஞான சாத்திரிய உடற்பயிற்சியையும், ஆராய்ந்து மக்களுக்கு வேண்டியவாறு உடற்பயிற்சி அளித்து உடற்பயிற்சி பேராசிரியரானுர். உடற்பயிற்சி, சுகாதாரம், ஆண்மை, அழகு, பலம், உடற்கட்டு, இவைகள் போன்றவையில் மக்கள் தக்க கவனம் செலுத்துமாறு எண்ணற்ற துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு, சபைகளில், சங்கங்களில், பொதுக்கூட்டங்களில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும், மக்களைத் தட்டி எழுப்பி உடற்கலையில் ஆர்வம் உண்டாகும்படி செய்தார். பல உடற்பயிற்சி சாலைகளை ஏற்படுத்தினுர். 1930-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 11, 12-ஆம் தேதிகளில் தாம் பிறந்த ஊரான மேலச்சிவற்பட்டியில் முதன் முறையாகத் தமிழ்நாட்டுப் பலசாலி மகாநாட்டைக் கூட்டினுர். அந்த மகாநாட்டில், தமிழ் நாட்டுப் பலசாலி என்ற பட்டம் இராஜா சர் அண்ணுமலை செட்டியார் அவர்களால் அளிக்கப்பட்டது. வெள்ளிக் கோப்பையும், தங்கப் பதக்கமும், முதல் பரிசாகப்பெற்றுர். 1932-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 13, 14-ஆம் தேதிகளில், செட்டி நாட்டில் தமிழ் நாட்டுப் பலசாலிகள் 2-அவது மகாநாட்டை நடத்தினுர். பல உடற்பயிற்சி மகாநாடுகளையும், 1933-ஆம் வருடம் மேலச்சிவற்பட்டி அழகாபுரியில் தனவைசிய இளைஞர் உடற்பயிற்சி மகாநாட்டையும் நடத்தினுர். 1934-ஆம் ஆண்டு உடற்பயிற்சிப் பிரச்சார சபையை ஏற்படுத்தித் தம்முடைய கடைசி மூச்சு வரை நடத்தி வந்திருக்கிறுர். காரை நிறுத்தல், யானையை மார்பில் ஏற்றிக்கொள்ளுதல் போன்ற வீரச் செயல்களையும் அனேக பலச் செயல்களையும் மக்களுக்குச் செய்து காட்டினுர், உடற்கலையரசு என்ற பட்டம் 25-2-45-ல் மதுரைத் தமிழர் மன்றத்தாரால் அளிக்கப்பட்டது. உடற்கலை சம்பந்தமாக இருபது (20) புத்தகங்களுக்கு மேல் எழுதி வெளியிட்டிருக்கிறுர். இன்னும் சில புத்தகங்கள் வெளியிடக் கூடிய நிலையில் எழுதி இருக்கிறுர். உடற்கலைக்காகவே வாழ்ந்து 1962-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28-ஆம் தேதி மறைந்தார்.



21



சூளுரைப்போம்!

தி. இராமநாதன்
பத்தாம் வகுப்பு மாணவன், கல்கத்தா

நகரத்தார்கள் வட்டித் தொழிலிலேயே மிகவும் ஈடுபாடுடையோராகத் திகழ்ந்தனர். அவர்கள், ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்பதற்கிணங்க, மலேயா, தாய்லந்து, பர்மா, சிலோன், இந்தோனேஷியா, இந்தோசீனு முதலிய தென் கிழக்காசிய நாடுகளுக்குக் கடல் கடந்து சென்றும், கல்கத்தா, பம்பாய், தூத்துக்குடி, நாகப்பட்டினம், சென்னை முதலிய உள்நாட்டுத் துறைமுகப் பட்டினங்களிலும், வாணிகம் செய்து பொருளீட்டினர்.

செட்டியார்கள், ''நாம் பிறக்கும்போது கொண்டு வந்தது ஒன்றுமில்லை; பின்னுல் நம்மை வந்தடைந்திருக்கும் பொருள்களையும் நம்முடன் எடுத்துச் செல்லுதல் இயலாது; ஆயினும் 'புகழ்' என்ற ஒன்றை நம் இறப்பிலும், நாம் கொண்டு செல்ல இயலும்.'' என்பதை உணர்ந்து, தாம் சென்று வசித்தவிடங்களிலெல்லாம்,

> ''இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
> இனியநீர்த்தண் சுனைகள் இயற்றல்
> அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆலயம் பதினுயிரம் நாட்டல்''

ஆகிய அறங்களை 'ஒல்லும் வகையால் எல்லாம் ஓவாது' செய்தனர். அவர்கள் வசித்த இடம் என்று ஒன்றைச் சுட்டினுல், அங்கு சிவனுக்கோ, முருகனுக்கோ நிச்சயமாக ஓர் ஆலயம் இருக்கும். அவர்கள் தெய்வத் திருப்பணிக்காகச் செலவு செய்த ரூபாய்கள் கோடிக்கணக்காகும். எங்கு சென்றுலும் தாய் மொழியை மறக்க மாட்டார்கள். வேற்று நாடுகளிலும்கூடத் தமிழிலேயே கணக்கு வைத்துக்கொண்டமை மேலும் அவர்கள் தாய்மொழிப் பற்றை உறுதிப்படுத்தும். எனவே, தேசப் பற்றும், மொழிப்பற்றும் தெய்வ பக்தியும் நகரத்தார்களின் பிறப்பியல்பு என்ருல் அது மிகையாகாது.

செட்டிமார்கள் பிற வணிகர்களைப் போலவே பொருளை ஈட்டுவதிலும், நாட்டுவதிலும், சிறப்புற்றிருந்தா ராயினும், ஏழை எளியவர்கட்கு இரங்கித் தான தருமம் செய்தலைத் தங்கள் தலையாய கடமையாகக் கொண்டனர். தங்கள் தன வளர்ச்சிக்குத் தருமமே தலைசிறந்த துணை என்று அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். முற்காலச் செட்டியார்களைப் போன்ற, தருமத்தில் சிறந்திருந்த வகையினரை வரலாற்றிலேகூடக் காணமுடியாது. இவர்கள் சைவ ஆலயங்களை மட்டுமின்றி, வைணவ ஆலயங்களையும், மற்றும் கல்விச் சாலைகளையும், மருத்துவ விடுதிகளையும், அன்ன சத்திரங்களையும், பொது மக்கள் பயன்படுத்துவதற்காக ஏராளமாகக் கட்டியுள்ளனர். தவிர வெயில் காலத்தில் நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல் முதலியன அமைத்துத் தருமம் செய்தனர். சுருங்கச் சொன்னுல் செட்டியார்கள் தருமமே கருமமாகக் கொண்டு வாழ்பவர்கள் எனலாம்.

ஆயினும் நம் மூதாதையர்கள் வாணிபத் தொழிலின்றி வேறு தொழில்களில் ஈடுபட்டாரல்லர். தமது குழந்தைகட்கு வாணிகக் கல்வியே போதித்து வருவாராயினர். நம் நகரத்தார் மாணவர்கள் கல்விக்காகச் செலவிட்ட காலம் மிகவும் சொற்பமானதே. அவர்கள் படிப்பு, எண் சுவடி, அல்லி அரசாணி

நகரத்தார் அறத்தின் சிறப்பு

அமைச்சர் உயர்திரு, இராமையா அவர்களின் பாராட்டு

இந்நாளில் அறங்கள் பலரால் பெருந்தொகைக்குச் செய்யப்படுகின்றன. ஆனால் அவற்றுக்கும் நகரத்தார்கள் இப்பகுதியில் செய்யும் தருமங்களுக்கும் இரண்டு முக்கியமான வேறுபாடுகள் இருக்கின்றன.

முதலாவது நகரத்தார்கள் தங்கள் திறமையால் முயற்சியால், உழைப்பால் அரசாங்க உதவி எதுவுமின்றி வெளிநாடுகளில் போய் பலவகை இன்னல்களையும் பொருட்படுத்தாது சம்பாதித்து இந்தியாவுக்குக் கொண்டுவந்த பணத்திலிருந்து தருமம் செய்கிறார்கள்.

இரண்டாவதாக இந்தப் பணங்கள் யாவும் ஒழுங்கான கணக்குப்படி, அரசாங்கத்துக்கு வரி செலுத்தியபிறகு, உள்ள மூலதனத்திலிருந்து செலவு செய்யப் படுகின்றன. பெரிய நகரங்களில் உள்ள பெரும் தொழில்காரர்களைப்போல, வரி கொடுக்காது ஏமாற்றிய பணத்திலிருந்து செய்யப்படும் தருமம் அல்ல.

—வலையபட்டி பாப்பாயி ஆச்சி மருத்துவமனைப் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் அமைச்சர் வே. இராமையா *(21-4-1965)*

மாலை, பவளக்கொடி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகியவற்றுடன் எல்லை எய்திவிடும். அவர்கள் தமது பதி மூன்று, பதினான்காம் வயதிலேயே தத்தம் தந்தையர்களுடன் கடல் கடந்து சென்று வாணிகத் துறையில் இறங்கி விடுவர்.

அவர்கள், தாம் கற்ற கணக்கியல் கல்வி (எண் சுவடி) பொருளை ஈட்டவும்; மற்ற நீதி நூல்கள் ஈட்டிய அப்பொருளைத் தக்க வழியில் செலவு செய்யவும் பயன்படும்போது இதைத் தவிர வேறொன்றும் கற்க வேண்டியதில்லை என்றே எண்ணினர். அக்காலத்தில் செட்டியார்கள் தம் குழந்தைகளை முதன் முதலில் பள்ளிக்கு அனுப்புவதை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். அப்போது. ஏழை எளியவர்கட்குப் பொன்னும், பொருளும். உடையும், இனிய தின்பண்டங்களும் வாரி வழங்குவர். அவர்கள் கல்வியினைப் பெரிதாக மதித்தனர். ஆயினும் அதனைக் கற்போர் மிகக் குறைவாகவே இருந்தனர். அக்காலத்திலே சிறிதளவு கற்றவருக்கும், தகுந்த மதிப்புக் கிடைத்ததனால் மக்கள் மேன்மேலும் கற்க முன்வரவில்லை.

ஆனால், தற்போது மனிதன் வளர்ச்சியுற்று நாகரிக மடைந்துவிட்டான். எனவே அவன் வாழ்க்கைத் தரத்திற்கேற்பக் கல்வித் தரமும் உயர்ந்துவிட்டது. அவன் சந்திர மண்டலத்தையும் சூரியமண்டலத்தையும் அடையும் நாள் நெருங்கிவிட்டது. எல்லோரும் அதிகம் படிக்க ஆரம்பித்துவிட்டனர்; இந்நிலையில் இன்று கற்றவனுக்கு மதிப்புக் குறைந்து கொண்டே போகிறது. எனவே உலகில் மேன்மையுற விரும்புபவன் மேன்மேலும் படித்துக்கொண்டேயிருக்கிறான்; இதற்குச் செட்டியார்கள் மட்டும் விதிவிலக்கன்று. அவர்களும் கல்வித் துறையிலே மேம்பட்டுவிட்டது வெள்ளிடைமலை. இன்றைக்கு மருத்துவர்களும் பொறியியலர்களும், வழக்கறிஞர்களும், மொழி ஆராய்ச்சி வல்லுநர்களும் செட்டிமார்களில் பெருகி வருகின்றனர்;

நகரத்தார் அறம்

நடுவு நிலைமை தவறுவதால் வரும் செல்வம் நன்மை தருவதாயினும், அதைக் கைவிடுக.

நடுவு நிலைமை யுள்ளான் செல்வம் அழியாது; அவன் சந்ததிக்கும் பயன் தரும்.

சொல்லில் கோணுதல் இல்லாமையே நடுவு நிலைமையாம்.

—திருவள்ளுவர்.

எனினும், இந்நிலையிலும் செட்டியார்கள் வாணிகத்தை விட்டுவிடவில்லை. ஆனால் வருங்கால நகரத்தார் சமுதாயம் இத்தொழிலை விடாது மேற்கொண்டு நடத்தும் என்று சொல்வதற்கில்லை. இன்று அரசியல்களில் தலையிட்டுத் தொண்டுபுரிவோரும், பெரும் பதவிகள் வகிப்போரும், செட்டியார்களில் பலராவர்.

அன்று செட்டியார்கள் சிதறியிருந்தனர்-பலமற்றவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் இன்று நம் தாய் நாட்டிலே நாம் அனைவரும் ஒன்றுகூடி விட்டோம். இன்றைய நகரத்தார் மாணவ சமுதாயம் தங்கள் தவற்றை உணர்ந்துவிட்டது. இன்று நகரத்தார் மாணவன் ஒவ்வொருவனும் முழுமூச்சுடன் கற்கின்றான். எத்தனையோ நகரத்தார் மாணவர்கள் அயல் நாடுகட்குச் சென்று கல்வி பயின்று வருகின்றனர். வெளி நாட்டிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், பகலிலே அலுவலகம் சென்று உழைத்தபின், இரவிலும் ஓயாது கல்லூரி சென்று கற்று வருகின்றனர். "ஏதோ அலுவல் செய்கிறோம்; ஊதியம் பெறுகிறோம்; இப்படியே நம் வாழ்நாளைக் கழித்து விடுவோம்" என்று அவர்கள் கனவிலும் நினைத்தவரல்லர். கல்வியின் பயனை உணர்ந்துவிட்ட அவர்களைத் தடுத்து நிறுத்தவும் இனி எவராலும் முடியாது.

இன்றைய நகரத்தார் சமுதாயம் வாணிபத்துறையில் மட்டுமே புகழ் பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறது. என்றாலும்கூட, வருங்கால நகரத்தார் சமுதாயம், அதாவது இன்றைய நகரத்தார் மாணவர் சமுதாயம் ஒன்றுகூடி விட்டது. "நாங்கள் அனைவரும் ஒன்றாய்த் திரண்டு பாரத பூமியில் எங்கள் தருமத்தை நிலைநாட்ட வந்திருக்கின்றோம். இனி வேற்று நாட்டிற்குச் செல்ல மாட்டோம் எங்கள் நகரத்தார் சமுதாயம் விரும்பி அழைக்கும் தாய் நாடாகிய, பாரத நாட்டிலேயே ஊன்றித் தருமம் பல செய்து, ஒன்று சேர்ந்து, ஒற்றுமையுடன் கல்வித் திறனறிந்து கற்று, அதனுதவியால் உழைத்து மேம்பட்டு இந்தியாவிலேயே ஒரு தனிச் சிறப்பிடம் பெற்றுவிடுவோம்," என்று உறுதி கொள்கிறது.

எனவே நகரத்தார் மாணவர்களே! இந்த நிமிடத்தில் நம் குலத்தின் அறிவு, புகழ் வெளியுலகத்தில் பரவாமல் இருப்பதை நாம் அறிவோம். போன நிமிடம் நகரத்தார்களின் அறிவொளி சற்றே மங்கி இருந்ததையும் நாம் அறிவோம். ஆனால், "போன நிமிடம் போய்த் தொலைந்தது. இந்த நிமிடம் சத்தியமில்லை. நாளை வரப்போவது சத்தியம்! மிகவும் விரைவிலே செட்டியார் குலத்தின் ஒளி, பாரத தேசம் முழுவதிலும், ஏன், உலகம் முழுவதிலுமே, பரவ வழி வகுப்போம்" என்று சூளுரைப்போம், வாருங்கள்!

★

பலநூல்கள் பதிப்பித்தும் பலபெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்

நலமுடைய கலாசாலை புத்தகசாலை
பலவும் நாட்டியுந்தங்

குலமுயர நகருயர நாடுயர
உழைக்கின்றார் கோடி மேன்மை

நிலவுற இச் சங்கத்தார் பல்லூழி
வாழ்ந்தொளிர்க நிலத்தின் மீதே!

—மகாகவி பாரதியார்

★

கோவலன் நிழல்

சுப. அண்ணாமலை, எம்.ஏ., எம்.லிட்.

இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரம் ஓர் அவலக் காப்பியம். நல்லவனாகிய கோவலன் கொலைக்களப்பட்டதே இக்காப்பியத்தின் தலையாய அவல நிகழ்ச்சி. பாண்டியன் நெடுஞ்செழியன், அவன் தேவி, கவுந்தியடிகள், மாதரி, கோவலனின் தாய், கண்ணகியின் தாய்—ஆகியோர் கோவலனின் இறப்பினால் தனித்தனியான துன்பஉணர்வின் வாய்ப்பட்டு இறந்தமை அவல வுணர்ச்சியை மேலும் பெருக்குகிறது. காப்பியத் தலைவியாம் கண்ணகி தெய்வமாகித் தன்னை வணங்கியவர்க்கெல்லாம் வரம் தருவதோடு காப்பியம் முடிவுறினும், இந்த அவல நிகழ்ச்சிகள் கற்பவரின் உள்ளத்தைவிட்டு அகலாது நிற்கின்றன. கண்ணகி மறுமையில் தெய்வமானாள் எனினும் அவளது இம்மை வாழ்வு அவலத்திலேயே முடிந்தது.

இந்த அவலக் காப்பியத்தில் கதைத்தலைவனாம் கோவலனின் அழிவிற்குக் காரணமாகும் 'கொடியோன் (Villain)' யார்? பொற்கொல்லனா அன்றி அவன் சொற்கேட்ட பாண்டியனா? இருவரும் அல்லர். ஒரு காப்பியத்தில் கதைத் தலைவனுக்கு எதிரியாகத் தோன்றும் 'கொடியோன்' ஏறக் குறையக் கதைத் தொடக்க முதல் செயற்பட்டு, அதன் திருப்பங்களை உருவாக்குபவனாதல் வேண்டும். செகப்பிரியரின் ''ஜூலியஸ் ஸீசரில்'' காஷியஸ் இத்தகைய கொடியோனாக உள்ளான். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் ''மனோன்மணீய'' நாடகத்தில் குடிலன் இத்தகையவனே. ஆனால் சிலப்பதிகாரத்தில் பொற்கொல்லன் தோன்றிச் செயல் புரிவது, கதையின் இடையில் ஒரு நாளே. அவனே கோவலன் கொலைக்களப்பட்டமைக்கு நேர்முகக் காரணமாயினான் எனினும், புகார் நகரை நீத்துக் கோவலன் மதுரைக்கு வரவில்லை என்றால் அவன் தன் வஞ்சகச் செயலை நிகழ்த்தியிருக்க இயலாதன்றோ?

பாண்டிய மன்னன் கோவலனை ஆராயாது கொல்வித்தான் என்பது கொண்டு இக் காப்பியத்தின் 'கொடியோன்' அவன் எனல் இயலாது. அடிகள் அவனை யாண்டும் 'தீயவன்' எனக் கூறவில்லை; மாறாகத் 'தீதுதீர் சிறப்பின் தென்னவன்' என்றே குறிப்பிடுகின்றார். கண்ணகி உரைத்த வழக்கைக் கனிவோடு கேட்டுக் 'குற்றம் புரிந்தவன் தானே' என்று உணர்ந்தவுடன் உயிர்நீத்த அக் கொற்றவனைக் கொடியோன் எனல் தகாது.

கொடியோனாவான் கதைத் தலைவனுடனே பழகி, அவனது குறைபாட்டையே (Weakness) தனக்குத் துணையாக்கிக் கொண்டு சூழ்ச்சி வலை வீசி, அவனை அதில் அகப்படுத்தி அழியச் செய்பவனாவான். பொற்கொல்லன் சூழ்ச்சி செய்தான் எனினும், தொடக்கமுதல் கோவலனுக்கு பகையாய்த் தோன்றி வந்தவன் அல்லன். கோவலனைக் கொல்வது அவனுடைய தலையாய நோக்கமன்று. தான் அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்து கொண்டதால், எவ்வாறேனும் தண்டனைக்குத் தப்பிவிட வேண்டும் என்பதே அவன் நோக்கம். அதனை எவ்வாறு நிறைவேற்றிக் கொள்வது என்று ஒரு திட்டம் தேடிக்கொண்டிருந்தான். கோவலன் அன்றி, வேறு எந்தப் புதியவன் அகப்பட்டிருப்பினும் அவனைத் தன் சூழ்ச்சியில் சிக்க வைத்திருப்பான். ''புலம் பெயர் புதுவனிற் போக்குவன் யான்' (வேறு நாட்டவனாகிய புதியவன் மேல் பழியைச் சுமத்திவிடுவேன்) என்று அவன் கருதியதாக அடிகள் கூறும் குறிப்பை நோக்குக. கோவலன்பால் பொற்கொல்லனுக்குப் பகைமை இல்லை; அவனைக் கொல்வதே கருதி அவன் சூழ்ச்சி செய்யவில்லை. ஆகவே அவன் காப்பியத்தின் 'கொடியோன்' ஆகான். அவனிடம் கோவலனை அகப்பட வைத்தவனாக யாரையேனும் நாம் குறிப்பிட முடிந்தால், அவனுக்கு அத்தகுதியைக் கொடுக்கலாம். அவன் யார்?

கோவலனின் பண்பமைப்பை (characterization) ஊன்றி நோக்குவோர், அவனுள் மறைந்திருக்கும் மற்றொருவனைக் காணலாம். மேற்போக்காக நோக்குவார்க்குத் தோன்றும் கோவலன் நல்லவன்; புகழுக்குரிய குணங்களை உடையவன்; கலைஞன்; ஏழைகட்கு இரங்கும் அருளாளன்; கொடை வள்ளல்; ஆபத்தில் அகப்பட்டவரைத் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் வீரச் செயல் புரியும் கருணை மறவன். அவன் மாதவியுடன் வாழ்ந்த காலத்தில் புரிந்த நற்செயல்கள் மூன்றினை மதுரைப் புறஞ்சேரியில் மாடலன் கூறக் கேட்கும்போது, யாரும் அவனை வியந்து பாராட்டுவர். 'கோவலன் செய்தவை எல்லாம் நற்செயல்களே; அவ்வாறிருக்கக் கண்ணகியோடு கானகத்தில் நடந்து துன்புற்றதற்குக் காரணம் பழவினை போலும்!' என்று வருந்துகிறான் மாடலன்.

"இம்மைச் செய்தன யான் அறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒரு தனி உழந்து இத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"

ஊன்றி நோக்குவோர்க்குக் கோவலனுள் தோன்றும் மற்றவன் இடைவிடாது இன்பம் துய்க்கும் விருப்பமுடையவன்; ஆடம்பரத்தை விரும்புபவன்; உணர்ச்சி வசப்படுபவன்; பொய் மான உணர்வு உடையவன்; அவசரக்காரன்; கைப்பொருள் இல்லையேல் கலங்குபவன்; கலையை நுகர்வதில் தன்னல நோக்கு உடையவன்; பன்னாள் பழகினும் பிறர் பண்பு புரிந்து கொள்ளாதவன்; அவர் பால் ஐயம் கொள்ளவும் தயங்காதவன்.



கோவலனது பண்பமைப்பில் இருந்த இந்த இருவேறு தன்மை அவனை மனஉறுதியற்றவனாகச் செயற்பட வைத்தது. இந்த மனவுறுதியின்மையே அவன் வாழ்வின் தலையாய இரண்டு திருப்பங்களை உருவாக்கியது. 'கடக்களிறு அடக்கிய கருணை மறவனுள்ளே மனக்களிறு அடக்க வகையறியாது ஒருவன் மறைந்து நின்று, அவனை அவல முடிவிற்கு அழைத்துச் செல்கிறான். கோவலனின் அழிவிற்கு அவனே பொறுப்பாளியாகின்றான்.

கோவலன் கண்ணகியுடன் முதன் முதலில் தனித்திருந்தபோது, 'தோழியர் அவளுக்குப் புனைந்திருந்த ஒப்பனைகள் எல்லாம் மிகையானவை; அவளது இயற்கை அழகே மிகச் சிறந்தது' என்று பாராட்டினான். ஆனால் நாட்போக்கில் அவனுள் இருந்த 'மற்றவன்' தன் ஆடம்பர விருப்பத்தாலும் இடைவிடாது இன்பம் துய்க்கும் வேட்கையாலும் கண்ணகி நன்கு புனைந்து கொண்டு தன்னுடனே இன்பம் துய்க்க வேண்டும் என்று விரும்பினான் என ஊகிக்க இடமுண்டு. பெரியவர்களைப் பிரிந்து தனிமனையில் வாழத் தொடங்கியதும் கண்ணகி இல்லறக் கடமைகளில் மிக்க:நாட்டம் செலுத்தினாள்.

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர்கோடலும்"

ஆகிய மனையறங்களைப் பெரு விருப்பத்தோடு செய்தாள். 'மண்மேல் நிலையாமை கண்டவர்போல்' இன்பங்கள் அத்தனையும் துய்த்துவிடத்துடித்த கோவலனுக்குத் தன் கற்பின் காரணமாக, 'யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கை' காரணமாக அவள் இசைந்து இடம் கொடுத்தாள் எனினும் நாட்போக்கில் அவள் நாட்டமெல்லாம் அறத்தின் பாலேயே சார்ந்தது. 'மாதரார் தொழுது ஏத்தும் வயங்கிய பெருங் குணத்துக் காதலாள்' என அடிகள் அவளை அறிமுகம் செய்திருப்பதை நோக்குக. பெருங் குணங்களைக் காதலிப்பவள் சிற்றின்பத்தை விரும்புவாளோ? எனினும் அவள் கணவனிடம் காட்டிய அன்பு அணுவளவும் குறையவில்லை. அவளிடம் கோவலன் குறைகாணவில்லை;காண முயலவும்இல்லை, ஆனால்அவனுள் இருந்த 'மற்றவன்' எழுந்து செயல்படும்போதெல்லாம் அவள்பால் வேட்கை நிறைவு

கொள்ளாதவனாக இருந்து வந்திருக்க வேண்டும். ஆண்டு சில கழிய, இந்த 'மற்றவனின் ஆட்சி' ஓங்கி வந்திருக்கவேண்டும்.

இந்நிலையில் மாதவியின் ஆடல் அரங்கேற்றம் அரசவையில் நிகழ்ந்தது. அதைக் காணக் கோவலன் சென்றான் என அடிகள் குறிப்பிடவில்லையேனும், குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். 'நகர நம்பியர் திரிதரும் மருங்கில்' விலை கூறுபவள் போல் நிறுத்தி வைக்கப்பட்ட கூனியிடம் இருந்ததும் அரசன் மாதவிக்குப் பரிசாக அளித்ததுமாகிய பொன் மாலையைக் கூனியிடம் அதன் விலை யாது எனக் கேளாமலேயே கோவலன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் கொடுத்து வாங்கியமை, அவன் மாதவியின் அரங்கேற்றத்தைக் கண்டு 'பொன் இயல் பூங்கொடி' தென்றலில் அசைவது போன்ற அவளது ஆடற் கோலத்தில் மயங்கியிருந்தான் என்பதையும், 'அரசன் அவளுக்குப் பரிசம் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன்' என அறிவித்ததைக் கேட்டிருந்தான் என்பதையும் ஐயமறக் காட்டும். அவனிடம் கலையுணர்வு மட்டுமே இருந்ததெனின் அரங்கேற்றம் கண்ட அளவில் இல்லம் திரும்பியிருப்பான். இடைவிடாமல் இன்பம் துய்க்கும் விருப்பத்தைத் தன் இல்லத்தில் நிறைவு செய்துகொள்ள இயலாமல், மனதைக் கட்டுப்படுத்தாமல் இருந்த அவன், கலை நிகழ்ச்சியை நுகர ஒரு வாய்ப்புக் கிடைத்தபோது, கலை நுகர்வின் வழியே காமவுணர்வு தோன்றுவதற்கு இடம் கொடுத்துவிட்டான். அன்றைய சமுதாயமும் உயர்குடிப் பிறந்த ஆடவர்க்கும் பரத்தையுடன் வாழும் ஒழுக்கத்தை விலக்கவில்லை. எனினும் காமமே பற்றி யாரேனும் ஒரு பரத்தையை நாடும் புன்மையும் கோவலனிடம் இல்லை. கலை நுகர்வோடு இணைந்து பெருகிற்று அவன் காமம்.

மாலையை வாங்கிக்கொண்டு மாதவியின் மனையிற் புகுந்தான். புகுந்தவன் அவளது கொள்ளை அழகிலும், ஈடு காண முடியாத ஆடற்கலைத் தேர்ச்சியிலும், விண்ணும் மண்ணும் வியக்கப் பாடும் இசைப் புலமையிலும், யாவற்றினும் மேலாக, 'அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல்' முதலிய இல்லறக் கடமைகள் இன்றி எப்பொழுதும் இன்பமே துய்த்தற்கு ஏற்றதாக, அவள் மனை 'மண மனை'யாக இருந்த சூழ்நிலையிலும் தன்னை மறந்து, தன் குலப் பெருமையை மறந்து, மாசற்ற கண்ணகியை மறந்து மயங்கி விட்டான். அரசவை

வளவு

'வளவு' என்ற சொல் வளவு என்று வழங்குகிறது. இது Campus என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல். சில குறிப்பிட்ட இனத்தார் வாழ்வதற்கென வளைத்து அமைத்துக்கொண்ட இடங்கள் வளவு எனப்பட்டன. உதாரணம் மேலூருக் கடுத்த கீழவளவு, மேலவளவு என்பன. குறிப்பிட்ட இனத்தார், உறவினர் வாழும் குடியிருப்புகளும் (colony) வளவு எனப் பட்டன. திருநெல்வேலி தெற்குப் புதுத்தெருவில் உள்ள நெல்லையப் பப்பிள்ளை வளவு, சம்பிரதி பிள்ளை வளவு, கால்வாய்ப் பிள்ளை வளவு (-திருநெல்வேலி மாவட்டம்: சோமலெ) என்பன எடுத்துக் காட்டுகளாகும். நகரத்தார்கள் வாழும் பொது விடுகள் வளவுகள் எனப்படுதலும் அதனுள்ளிருக்கும் அறைகளையே, அவ்வீட்டிற்குரிய அண்ணன் தம்பிகள் அல்லது அடுத்த உடன் பங்காளிகள் 'என்விடு, உன்விடு' எனப் பிரித்துச் சுட்டி வாழ்வதும் காணலாம். இது தனித் தனி என்று பிரிந்து வாழும் "புள்ளிமரபையும்", கூடிவாழும் 'கூட்டுவாழ்க்கை' இயல்பையும் ஒருசேரப் புலப்படுத்துகிறது. யாழ்ப்பாணத்தில் வளவு என்பது நிலம் என்ற பொருளிலும் வழங்குகிறது, முதற்கண் தனித் தனியாகவும் எதிர் எதிர் வரிசையாகவும் விடுகள் கட்டி வாழ்ந்து, பின்னர் அவற்றை வளைத்துப் பேரில்லமாகக் கட்டிய வரலாற்று வளர்ச்சியை உணர்த்துகிறது.

யில் மாதவியைக் கண்டது முதல் கோவலனின் நிழலான 'மற்றவனே' மிக்க வன்மையோடு அழுத்தத்தோடு செயற்பட்டான் என்று உணர்ந்து கொள்ளவேண்டும். அவனுக்குக் கண்ணகியின் நினைவே இல்லை என்பது மட்டும் அன்று; தன்னுடைய இன்ப உலகில் மாதவி தவிர வேறு பெண் இல்லை என்று உணரும் நிலையை அடைந்தான். முற்றும் மாதவி வயமானான்.

"மணமனை புக்கு மாதவி தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தென்"

'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே' என்பன முதலிய உலவாக் கட்டுரையால் கண்ணகியைப் பாராட்டிய கோவலன் ஏதோ ஒரு மறப்புலகில் ஆழ, அவனுள் இருந்த மறு கோவலன்' எழுந்து மிக உரிமையோடு மாதவியுடன் வாழத் தொடங்கினான்.

உயர்குடிப் பிறந்த ஆடவர் தம் மனைவியரைப் பிரிந்து பரத்தையோடு உறவாடுவதை சங்க இலக்கியத்திலும் காண்கிறோம். தம் மனைவியர் பூப்பு எய்தும் காலத்தில் (மாதம் ஒரு முறை) பன்னிரண்டு நாட்கள் அவர்களைப் பிரியாமல் இருக்கவேண்டும் என்பதை அந்த ஆடவர் மறந்தாரில்லை. கோவலனோ தன் மனையகத்தை மறந்தே விட்டான். சின்னாட்கள், சில திங்கள், சில்லாண்டுகள் கழித்தேனும் அவன் கண்ணகியிடம் சென்று வந்ததாகக் குறிப்பில்லை. அவ்வாறு அவன் சென்று வந்திருந்தால், மாதவிபால் சினம் கொண்டு அவன் தன் மனையைக் குறுகியபோது, வீட்டு வேலைக்காரி தூரத்தே அவன் வருவதைப் பார்த்து ஐயுற்று, 'நம் மன்னவர் போல் தோன்றுகிறதே' என்று மருட்சி தோன்றப் பார்த்து, அவன் நெருங்கியவுடன் ஐயம் தீர்ந்து கண்ணகியிடம் சென்று,

'நீடிய காவலன் போலும் கடைத்தலையின் வந்துநம் கோவலன்' என்று மகிழ்ச்சி தோன்றக் கூறியிருக்கமாட்டாள். சிலம்பு தவிரக் கண்ணகியின் பிற அணிகலன்களையும் 'குலந்தரு வான்பொருட் குன்றத்'தையும் ஏவலர் வாயிலாகவே வீட்டிலிருந்து பெற்றுச் செலவு

இரண்டாம் கட்டு



செட்டிநாட்டிலுள்ள பெரியபெரிய வீடுகளின் அமைப்பு உணர்ந்து போற்றத் தக்கது. வெப்பம் மிகுந்த காலத்திற்கேற்ற முகப்புகளும், குளிர் மிகுந்த காலத்திற்கேற்ற அறைகளும் உள்ள அவ்வீடுகளின் பண்டகசாலை, உள்வீடு, வெளிவீடமைந்த பெரிய அறைகள், வளைவு குறிப்பிடத்தக்கன. இவைதவிர இரண்டாங்கட்டு, மூன்றாம்கட்டு என்றபகுதிகளும் உள. வெளிநாடு சென்று ஒவ்வொரு கணக்கும் கொண்டுவிற்றுத் திரும்புங்காலை, மேலும் ஒரு கட்டுக் கூடுதலாகக் கட்டும்போது இரண்டாவது தடவையாகக் கட்டுவதை இரண்டாங்கட்டு என்றும் மூன்றாவது தடவையும் அவ்வாறு கட்டுவதை மூன்றாங் கட்டு என்றும் காரணப் பெயரிட்டு அழைப்பர். நல்லவேளையாக நான்காம் கட்டும் கட்டவில்லை. காரணம் மேலும் பல கணக்குகள் செட்டியார் கொண்டுவிற்றுத் திரும்பும்வரையிலும், முதற்கட்டு முன் வீதியையும், மூன்றாம் கட்டு பின் வீதியையும் எல்லையாகக் கொண்டிருக்குமாதலால் அதற்குமேல் கட்டுவதற்கு இடம் இராது.

செய்தான் போலும். இதனை நோக்கினும் 'மற்றைக் கோவலனே' மாதவியின் வீட்டில் மிக்க அழுத்தத்துடன், செல்வம் தவிரத் தன்னைச் சார்ந்தார் எவரது நினைவும் இன்றி வாழ்ந்தான் என்பது புலப்படும்.

மாதவியின் அழகு, ஆடல் ஆகியவற்றுடன் அவளது கற்புடைமையும் காதலன்பும் கோவலனுடையதை ஒத்த இன்ப உணர்வினை அவளும் நெஞ்சகத்தில் நிறைத்துக் கொண்டமையும் அவன் அவள் வீட்டில் நிலையாகத் தங்கிவிட்டதற்குக் குறிப்பிடத்தக்க காரணங்களாகும் அவனது கூட்டுறவில் அவள் எல்லையில்லாத

இன்பம் கண்டாள். தன்னை முழுவதுமாக அவனிடம் அளித்துவிட்டாள். அவனது ஆடம்பர விருப்பத்தை அறிந்து, எந்நேரமும் ஏதேனும் ஒரு வரிக்கோலத்தைப் (ஒப்பனை) புனைந்து கொண்டு அவனுடன் உறவாடிக் களிப்பூட்டினாள். பின்னர், கோவலன் அவளை வெறுத்து நீங்கியவுடன் அவள் வசந்தமாலையிடம் கொடுத்தனுப்பிய கடிதத்தை ஏற்க மறுத்த போது, அவன் இந்த வரிக்கோலங்களை எல்லாம்—'காண் வரி, கண்கூடுவரி, உள்வரி, தேர்ச்சி வரி' முதலியவற்றையெல்லாம் நினைவு கூர்வதைக் காண்க. மாதவியும் கோவலனும் கலையாலும் காமத்தாலும் பிணைப்புண்டு தம்மை மறந்த ஒன்றிப்பில், இன்பச்செருக்குப் பொங்கித் ததும்பும் செல்வ வாழ்வில் பல்லாண்டுகள் கழித்தனர்.

> "கலவியும் புலவியும் காதலற்கு அளித்தாங்கு
> ஆர்வ நெஞ்சமோடு கோவலற்கு எதிரிக்
> கோலம் கொண்ட மாதவி"

கோவலனின் வேட்கை மிகுதியினை நன்கு உணர்ந்த மாதவி, தன் மனத்திலும் அந்த அளவிற்கு அவ்வுணர்வினைப் பெருக்கிக் கொண்டு கோலங்கள் புனைந்து கொண்டு, அவனுக்குக் கலவியும் புலவியும் அளித்தாள் என்பது இவ்வடிகளிற் புலனாகும் கருத்து.

கோவலன் இவ்வாறு வாழ்ந்த ஆண்டுகளில் நல்ல நண்பர்களையும் அறிஞர்களையும் சந்திக்க வாய்ப்பு இருந்தது. அவர்கள் அவனது பொருந்தா ஒழுக்கத்தைச் சுட்டிக்காட்டி அறிவுரை கூறினராதல் வேண்டும். அஃது அவன் காதில் ஏறவில்லை. பின்னர், மதுரை ஆயர்பாடியில் கண்ணகியிடம் தன் பிழைகளை எண்ணிக் கலங்கி உரையாடியபோது,

> 'பொருளுரையாளர் நச்சுக் கொன்றேற்கு
> நன்னெறி உண்டோ"

என்று அவன் புலம்புவதால் இதனை அறியலாம். 'உண்மையை எடுத்துக் கூறிய நல்லவர்களின் விருப்பத்தை நசுக்கிவிட்டேனே, எனக்கு நல்ல கதி உண்டோ?' என்பது இதன் பொருள் தன் தீயொழுக்கத்தை நன்மை என்றே கருதி அவர்கள் அறிவுரையை வன்மையாக மறுத்து விட்டான் என்பது இதிலிருந்து விளங்குகிறது.

அழகுமீசையும் ஆற்றல் மீசையும்

'மீசை: என்பது ஆற்றலுக்கு அடையாளம்; அழகின் சின்னமன்று. இன்று நம் இளைஞர் பலர் அழகுமீசை என்று அரும்புமீசை வைக்கின்றனர். பெரியவர்கள் பலர் இம்மீசை வைக்கும் பழக்கத்தைக் கண்டிக்கின்றனர்.

மீசை என்ற சொல் 'வீசை' என்று இருக்கவேண்டும். விச்சு என்றால் நீளம். வீசுதல் என்றால் நீளுதல். மணம் நீண்டு பரவுதலை வீசுதல் என்கிறோம். நீளப் போய்விட்டவனை 'ஓரே வீச்சிலே போய்விட்டான்' என்கிறோம். அதிகமாகக்கொடு என்பதனைச் சேலம் மாவட்டத்தார் 'விச்சாகக் கொடு' என்பர். தூர எறிந்தான் என்ற பொருளில் 'வீசி எறிந்தான்' என்கிறோம். இதனை விசிறி எறிந்தான்' என்று சேலம், வடார்க்காடு மாவட்டத்தார் கூறுவர். எனவே 'வீசை' என்பதுதான் சரியான சொல். சிலர் வீசைக் கணக்கில் மீசை வைத்திருப்பதாலும், அப்பெயர் வரவில்லை.

இருல்மீன், பூனை ஆகியவற்றின் மீசை நீண்டிருக்கும். இதனால்தான் நீண்ட மீசைக்காரனை 'இருல் மீசைக்காரன்' என்கிறார்கள். குட்டை மீசையும், அரும்பு மீசையும், தொங்கு மீசையும் 'வீசை' என்ற பெயருக்கு அருகதையற்றவை. எல்லா முகங்களுக்கும் மீசை பொருத்தமாக அமைவதில்லை. வீரம் செறிந்த, ஆற்றல் விளங்கும் முகங்களுக்குத் தான் அது அமைப்பாக இருக்கும். அதனால் தான் இக்காலத்தில் இளைஞர்கள் அரும்பு மீசையும், இட்லர் மீசையும் வைத்துக்கொள்கின்றனர். அவை அழகு மீசையே தவிர, ஆற்றல் மீசை ஆகா!

— டாக்டர் மெ. சுந்தரம்

மனைவி கீரியைக் கொன்றதற்காகச் சினந்து அவளைப் பிரிந்து கானகம் சென்ற அந்தணனை அழைப்பித்து மனைவியுடன் மீண்டும் வாழ வைத்துப் பெரும் பொருள் வழங்கினான் கோவலன். அப்பொழுதும் அவன் கண்ணகியை நினைவுறாதது வியப்பே. ஊருக்கு உதவியவன் தன்னைத் திருத்திக்கொள்ளவில்லையே! நல்லுணர்வின் வாய்ப்பட்டுச் செயலாற்றும் போதும் 'மறு கோவலன்' தன் ஆட்சி குன்றாமல் செருக்கி வாழ்ந்தான் என்பதே இங்கு அறியக் கிடப்பது.

இவன் கலையுணர்வையும் பழுதற்றதாக விட்டு வைக்கவில்லை. அதில் தன்னல நோக்குக் கொண்டான், மாதவியின் ஆடல், கலையென்னும் அளவில் யாவராலும் பொதுவில் சுவைத்தற்கு உரியது என அவன் உணர மறுத்தான். இன்பவேட்கையால் அவளோடு ஒன்றி நின்றான் என்றால், இந்தத் தன்னல நோக்கால் அவளிடமிருந்து பிரிந்து நின்றான் எனலாம். ஆண்டுதோறும் இந்திர விழா நிகழ்ந்தபோது பொது மன்றில் மாதவி ஆடியதை அவன் விரும்பவில்லை. அவ்விருப்பமின்மையை முதற் சில ஆண்டுகளில் மனத்தில் மறைத்து வைத்தான். பிந்திய ஆண்டுகளில் அதன்பொருட்டு மாதவியிடம் ஊடல் கொண்டான். கானல் வரி நிகழ்ச்சிக்குச் சின்னாள் முன்பு மாதவியின் இந்திரவிழா ஆடலும் கோலமும் அணியும் முடிந்தபின், அதேபோல ஊடல் கொண்டான். அதைத் தன் முகத்திலும் புலப்படுத்தினான்.

"ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள
ஊடற் கோலமோடு இருந்தோன்"

மாதவியிடம் ஆண்டெல்லாம் கலையை நுகர்ந்தவன், அதனை அவளினும் வேறாகப் பிரித்துணரமாட்டாமல், 'அவள் தன் உடைமை, அவள் கலையும் தன் உடைமை' எனக் கருதினான், கலையின் வழியே அவள்பாற் சென்ற தன் காமத்தை அடக்க முடியாமல் வாழ்ந்ததாலேயே அவள் இந்திரவிழாவில் கடமையாற்றியதை அவன் விரும்பவில்லை. ஆம், மனவுறுதிமிக்க மாதவி இந்திரவிழாவில் கடமையுணர்வோடுதான் ஆடல்நிகழ்த்தினாள். அரசன் அளித்த 'தலைக் கோலிப்' பட்டத்தை உரிய முறையில் சிறப்பிக்க வேண்டியவள் அல்லளோ?

குடியேற்றம்

காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிவுற்ற பிறகு மறவர் நாட்டில் செட்டியார் சமூகத்தினர் குடியேறினர். இக்குடியேற்றம், மகாவித்துவான் இராகவ அய்யங்கார் குறிப்பிடுவது போல, முற்காலச் சோழர் காலத்திலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். அதுவும் ஒரே சமயத்தில், கூட்டாகக் குடியேறியிருக்க வேண்டும். என்பது, இச் சமூகத்தவர் அனைவரும் ஒரே வட்டாரத்தில் மட்டும் சூழ்ந்திருப்பதனால் உறுதிப்படுகிறது. தென்னாட்டில் வேறு எந்த இனத்தவரும் இங்ஙனம் ஒரே இடத்தில் குழுமியிருக்கவில்லை.

S. திருவேங்கடாச்சாரியார் எம். ஏ., எல். டி.
(Tho Sothupatis of Ramnad-p-90)

முன்பும் விழாவை ஒட்டிக் கோபம் கொள்வது வழக்கமாதலின், இம்முறை அதை அமைதிப்படுத்த அவனது ஆடம்பர விருப்பத்தை மிக நன்றாக நிறைவேற்ற முயன்றாள். விழாவிற்காகப் பூண்டவற்றினும் மேம்பட்ட ஒப்பனையைப் புனைந்து கொண்டாள். அதை அடிகள் வருணித்துள்ளவாறு நோக்குவோம்:

'கூந்தலில் வாசநெய் தடவிப் பத்துத்துவர் ஐந்து விரை, முப்பத்திரண்டு வகை ஓமாலிகை- இவ்வளவும் ஊறிய நீரில் மூழ்கி, அகிற்புகையால் கூந்தலை உலர்த்தி, மான்மதச் சாந்து பூசி ஒப்பனை செய்துகொண்டாள். பாதம் முதல் தலைவரை ஐந்து வகைக் காலணி, ஐந்து வகை மோதிரம் உட்பட இருபத்தெட்டு நகைகளை அணிந்து கவர்ச்சிப் பாவையாய்க் கோவலன் முன் நின்றாள். இந்திர விழாவைவிட மிக மேலாக அவளது உறவை மதித்தான் என்பதை இந்த மேம்பட்ட ஒப்பனையாற் புலப்படுத்தினாள். அவளுக்கு இத்தனை ஆடம்பரத்திலும் விருப்பம் என்பதற்காக அன்று. தன் உள்ளம் கவர்ந்தவனின் ஊடலை அவன் விருப்பின் வழியே நின்று தீர்க்கவே ஆகும். கலவியோடு புலவியும் அவனுக்கு அளித்தாள். அவனும் களித்தான். எனினும் அவன் மனத்தில் தோன்றிவிட்ட 'கசப்பு' நீங்கவில்லை.

அவள் கானல் வரி பாடியபோது அந்தக் கசப்பு வெறுப்பாக மாறிவிட்டது. அதனை மாதவி அறியவில்லை, அவன் பாடிய கானல் வரிப் பாடல்களில் பெண்மையின் கற்பைப் புகழ்ந்து கூறிய குறிப்பு அவனது 'கசப்பின் விளைவாக எழுந்ததே. அதையும் மாதவி அறியவில்லை. அவன் வேறோர் பெண்ணிடம் கருத்துச் செலுத்துகிறான் என்று அவளை எண்ணச் செய்தன அவன் பாடிய அகப்பொருட் டுறைப் பாடல்கள். 'அவன் தன்னிலை மயங்கினான்' என்று கருதிய மாதவி, வழக்கம்போல் ஊடலை மேற்கொண்டு அவனைத் திருத்த எண்ணினாள். தானும் ஒரு காதற் குறிப்புடையாள் போலப் பாடினாள். அன்புள்ள இடத்திலன்றோ ஊடல் பயன் தரும்? கோவலனின் உள்ளத்தில் அவள் மேலிருந்த அன்பு மறைந்துவிட்டிருந்தது. வெறுப்பு ஆட்கொண்டிருந்தது. ஆகவே அவனுக்கு மாதவியின் பாடல்களில் இருந்த 'காதற் குறிப்பு'ப் பெருங்கோபத்தை உண்டாக்கியது.

''பொய்ம்மையே வாழ்வாகக் கொண்டு தன்னை ஏமாற்றிவிட்ட மாயக்காரி'' என்று தன்னுடன் பல்லாண்டு பழகிய மாசற்ற பெண்ணைப் பற்றி அவசர முடிவிற்கு வந்தான். ''உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை நெகிழ்ந்தனனாய்''ப் பிரிந்து சென்றான். கண்ணகியைப்பிரிந்து கொடுமை இழைத்ததுபோல் மாதவியையும் பிரிந்து கொடுமை செய்தான். 'மறு கோவலனின் ஆடல்' இவ்வளவில் நின்றதா?

கண்ணகியோடு மதுரை செல்ல அவன் செய்த முடிவும் அவசர முடிவே. பின்னர் அவனே அதைப் பிழையென உணர்ந்து வருந்துகின்றான். கவுந்தி யடிகளிடம்,

''நெறியின் நீங்கியோர் நீர்மையேனாகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை உழந்து
சிறுமை உற்றேன்''

என்று புலம்புகிறான். ஆயர்பாடியில் கண்ணகியிடம், ''எழுக என எழுந்தனை, என் செய்தனை?'' எனக் கேட்கின்றான். 'நான் மதுரைக்குச் செல்லப் புறப்படு என்றவுடன் புறப்பட்டுவிட்டாயே என்ன செயல் செய்தாய்?' என்பது இதன் பொருள். மதுரைக்கு வராமல் சொந்த ஊரிலேயே இருந்திருக்கலாம் என்பதே அப்பொழுது அவன் எண்ணிய எண்ணம். ஆம், அவன் வராதிருந்திருக்கலாம். பரத்தையுடன் வாழ்ந்ததன் காரணமாக அவனைச் சமுதாயம் ஏசாது. கண்ணகியோ சிறிதும் கோபம் கொள்ளவில்லை. பெருஞ்செல்வனின் ஒரே மகனாகிய கோவலன் செல்வம் செலவழிந்ததால் மனைவியின் காற் சிலம்பை விற்கவேண்டுமென்பதில்லை. தந்தையின் கடல் போன்ற செல்வம் அவனுக்கன்றி யாருக்கு? அவரிடம் சென்று, குற்றத்தை ஒப்புக்கொண்டு, மகன் என்னும் அன்புத் தொடர்பை அவருக்குப் பணி செய்வதன் மூலம் புதுப்பித்துக்கொண்டால் அவர் மீண்டும் வாணிகத்திற்குப் பொருள் தரத் தடையில்லை. மகன் பிழையைப் பொறுது தந்தை சினந்தாலும் நாளடைவில் அவனை மன்னிப்பதே இயற்கை. அவ்வாறிருக்கவும் கோவலன் பெற்றோரிடம் செல்லாமல் கண்ணகியை அழைத்துக்கொண்டு புகாரை நீங்கவும் சிலம்பை மதுரையிற் கொண்டு சென்று விற்கவும் முடிவு செய்தது ஏன்?

சிலப்பதிகாரப் பரம்பரை

'ஊர்க் கலியாணம் சொல்லுதல்' என்பது நம் பழக்கங்களில் ஒன்று. திருமணத்திற்கு முன்னர், சில வீடுகளில் சென்று கதவைத் தட்டி அழைத்து, உயர்ந்தவகைக் கொழும்புப் பாக்கும் வெற்றிலையும் வைத்துக் கலியாணம் சொல்லுவர். சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடலில் 'மாநகர்க்கு ஈந்தார் மணம்' என்ற பகுதி, காவிரிப்பூம்பட்டினத்து மக்களுக்குக் கண்ணகி கோவலனுடைய கலியாணம் சொன்ன செய்தியைக் கூறுகிறது அன்று 'யானை எருத்தத்தின் மேலேறிக்' கூறினர். இன்று யானைகள் இல்லை யென்பதற்காகப் பூனைகளாகி விடவில்லை. நடந்து சென்றே, அம்முறையை நிறைவேற்றுகின்றனர்!

முற்றிலும் தேவையற்ற இந்த முடிவு கோவலனது 'பொய் மான' உணர்வின் விளைவாகும். மாதவியிடம் கொண்ட தவறான ஐயத்தினால் அவள் வேறு ஒருவனுடன் வாழ்வதைப் பார்த்துக்கொண்டு புகாரில் இருக்கக் கோவலன் விரும்பவில்லை. பெற்றோரிடம் சென்று தவற்றை உரைக்கவும் அவன் பொய் மானம் இடம் கொடுக்கவில்லை. புகார் நகர வாழ்வை முன்போலக் கருதினான். 'மாதவி மற்றொருவருடன் வாழ்வாள்; தந்தை முகத்தைத் திருப்பிக் கொள்வார்; உறவினர் பழிப்பர்; நண்பர்கள் இடித்துரைப்பர்' என்னும் அவன் கற்பனைகள் அவனை வாட்டின. ஓடிவிடத் துடித்தான். ஆடம்பரமாகச் செலவு செய்து வாழ்ந்தவனாகையால் கைப்பொருள் இல்லாமையும் அவனை வாட்டியது. புகாரில் வாழ விருப்பம் இல்லாதபோது அப்பொருளை வேறு ஓர் ஊரில்தானே தேடவேண்டும்? எனவே மதுரைக்குச் செல்ல முடிவு செய்தான். இவை பொய் மான உணர்வின் விளைவுகள். மாதவி கோவலனுக்குத் துரோகம் செய்தாள் என்றே வைத்துக்கொண்டாலும் அவன் ஏன் புகாரை நீத்து ஓடவேண்டும்? பொருளையே விரும்பி வண்டுபோல ஆடவரிடம் மாறி மாறி உறவாடும்பரத்தையரே இல்லாத ஊரா புகார்? அவர்களை நம்பி ஏமாறிய ஆடவர் அங்கு வாழாமல் ஓடிவிட்டார்களா? அந்த வகையில் பிழை செய்வதும், குட்டுப்பட்டுத் திருந்துவதும் அக்காலச் சமுதாயத்தில் சாதாரணமானவை. மறு கோவலனும் பொய் மான உணர்வினன் அதைப் 'பெரிதுபடுத்தி' எண்ணிவிட்டான். வேதனை தரும் கற்பனைகளைத் தானே உருவாக்கிக் கொண்டான். ஓடிவிடத் துணிந்த துணிவினிடையே, கண்ணகியை இந்நாள் வரை பிரிந்திருந்ததால் இனி அவளுக்கு நன்மை செய்வதாக எண்ணி அவளையும் உடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான். இஃது அவசர முடிவு. ஒருநாள் அல்லது இரண்டு நாள் தாழ்த்திச் செல்லலாம் என்று அவன் தங்கியிருந்தால் பெற்றோரைக் கண்டிருக்கக்கூடும். அவன் முடிவும் மாறியிருக்கக்கூடும். இரவோடிரவாகப் புறப்பட்டுவிட்டான்.

> "வினை கடைக்கூட்ட வியங்கொண்டான் கங்குல்
> கனை சுடர் கால்சீயா முன்"

என்னும் அடிகளில் அவனது அவசரம் புலப்படுவதைக் காண்க.

மாதவி நுண்ணறிவினள்; ஆதலால் கௌசிகனிடம் கோவலனுக்குக் கொடுத்தனுப்பிய கடிதத்தில் மிக நாகரிகமாக இப் பிழைகளைச் சுட்டிக் காட்டினாள்:

> "குரவர் பணி அன்றியும் குலப் பிறப்பாட்டியோடு
> இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு? அறியாது
> கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்"

பெற்றோர்க்கும் பணி செய்யாமல் கண்ணகியோடு இரவு நேரத்தில் நகரை நீத்து நெடுவழி நடக்குமாறு என்ன தவறு நடந்துவிட்டது என்று அறியாமல், தன் தவறு உண்டோ என்றும் புரியாமல் கலங்குவதாகக்

ஊருணியும் செட்டிநாடும்

நீர்வளம் குறைந்த பகுதிகளாதலின் இன்றையச் செட்டி நாட்டு ஊர்தோறும் 'ஊருணி' மிகவின்றியமையாத ஒன்றாகும். அவை உணவு போலத் தேவைப்படுவன; உயிர்போல உதவுவன. திருவள்ளுவர்,

> ''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு''

என்று ஒப்புரவு அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். 'ஊருணி' என்ற சொல்லாட்சி மிக்கதும், இன்றியமையாமையை உணர்ந்ததுமாகிய இப் பகுதியினைச் சார்ந்தவராகத் திருவள்ளுவரைக் கருதுதல் கூடும் என்று, காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை குறிப்பிட்டார்கள். சொல்லுக்காக மட்டுமின்றி, ஊருணி போல் உதவும் பேரறிவாளர்களாகிய செல்வர்களையுடைமையானும் இது பொருந்தும் எனலாம்.

குறிப்பிட்டாள். ஆம். கோவலன் கண்ணகியுடன் புகாரிலேயே தங்கிக் குரவர் பணி செய்திருந்தால் துன்பமே இல்லை. அவற்றைச் செய்யாதது அவன் புரிந்த பெரும் பிழை.

மாதவியின் அறிவுடைமை என்னே! அவளது கடிதமே கோவலனுக்கு அவன் பிழையை உணர்த்திற்று.

“தன் தீது இலன் எனத் தளர்வு நீங்கி
என்தீது என்றே எய்தியது உணர்ந்தான்.”

குரவர் பணி செய்ய வேண்டியிருப்பவும் அது செய்யாது வந்த தன் தவற்றைப் பொறுத்தருளுமாறு வேண்டி மாதவியின் கடிதத்தையே தன் பெற்றோர்களுக்குக் கொடுத்தனுப்பினன். காதலர்க்கு எழுதிய ஒரு கடிதம் மகன் தந்தைக்கு எழுதிய கடிதமாகவும் பொருத்தமாக அமைதலை எத்துணை பாராட்டினும் தகும்.

வழியிடையில் மாதவியின் கடிதத்தைப் பார்த்தவுடனேயே ‘மறு கோவலன்’ விடைபெற்றுவிட்டான். ஆனால் அவன் ஆடிய கொடு வினையாட்டங்களின் பயனை நல்ல கோவலன் அனுபவிக்கத் தொடங்கிவிட்டான். ‘செய்யாதன செய்தோம்; செய்யவேண்டியதைச் செய்யவில்லை’ என்று உணர்ந்து அளவிற்கு மீறிய கழிவிரக்கத்தால் உள்ளம் மெலிந்தான். ஒருநாள் விடியலில் அவன் கண்ட கனவும் அவனது உறுதியைக் குலைத்தது. பின்னால் அவனுக்கு நேரப்போவதை அக்கனவு காட்டியது. அது நடந்துவிடும் என்று நம்பி, தான் வாழ்விழந்தது போல் உணரத் தொடங்கினன். கண்ணகியும் புகாரில் அதுபோன்ற ஒரு கனவு கண்டிருந்தாள். எனினும் தன் மனவுறுதியால் அதைப் பொருட்படுத்தவில்லை. கணவனிடமும் சொல்லவில்லை.

கோவலனே கழிவிரக்கத்தாலும் கனவாலும் உள்ளம் கலங்கினன். ‘‘மாயங்கொல்லோ வல்வினை கொல்லோ யான் உளம் கலங்கி யாவதும் அறியேன்’’ என அவன் புலம்புவதைக் கேட்கிறோம். யாவதும் அறியாத குழப்பமே பின்னர் அவனது அவல முடிவிற்குக் காரணம்.

குழப்பத்தோடு சிலம்பை எடுத்துக் கொண்டு கண்ணகியைப் பிரிந்தான். அவளது தனிமையை நினைந்தான்; சற்று நின்றான்; கண்ணீர் கலங்கியது. அதை மறைத்தவாறே தன் உணர்வு குன்றிய நிலையில், விவேகத்திற்கு விடை கொடுத்துவிட்டு மதுரை வீதியில் நடந்தான். தன் தந்தையின் பெயரைக் கேட்டாலே பெறுதற்கரிய விருந்து கிடைத்தது போல் மகிழும் தன் குல வணிகரை நாடவில்லை. முதல்நாள் அதற்கென்றே ஊருக்குள் செல்வதாகக் கவுந்தியடிகளிடம் விடை பெற்று வந்தவன், அவர்களைச் சந்திக்காமல் பைத்தியம் போல எல்லா வீதிகளிலும் சுற்றிவிட்டு, தன் உண்மை உணர்வு நிலையை மறைப்பதற்காகக் கவுந்தியடிகளிடம், ‘நீதுநீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்’ பற்றி வருணித்தான். இப்பொழுது எதிரே வந்த பொற்கொல்லனை நம்பினன். அவன் அரண்மனை சென்று, ஊர் காவலராம் கொலையாளிகளை அழைத்து ‘சிலம்பு காண வந்தவர்’ என அறிமுகப்படுத்



ஒரு வீட்டில் மகப்பேறு வாய்த்தால் அக்கம் பக்கத்தினர் உற்றார் உறவினர் அனைவரும் சென்று “பிள்ளையுண்டா? பேரன் உண்டா? பேர்த்தி உண்டா?” என்று பெற்றோரையும் பாட்டன் பாட்டியரையும் பேறு கேட்டலும், அதற்கு உரியவர்கள் “ஆமாம், உங்களுக்குத்தான்” என்று மரியாதையுடன் விடை கூறுதலும் செட்டி நாட்டுப் பழக்கம். இதனை அவர்கள் “போறு கேட்டல் என்பர். பேறு என்பதே போறு என மருவிவிட்டது.

‘மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு’

என்ற வள்ளுவர் வாக்குப் போல, இவர்களும் பேறு கேட்டுப் பிறர் இன்பம் கண்டு மகிழ்தல் அறிந்து போற்றத் தக்கதாகும்.

தியபோது, ஐயங்கொள்ளவில்லை! பொற் கொல்லன் தன்னைக் 'கள்வன்' என்று கூறிக் கள்வரின் தந்திரங்கள் பற்றிப் பெரியவொரு சொற்பொழிவு நிகழ்த்தியபோது பொங்கி யெழவில்லை. அவன் உணர்வு பெரிதும் குன்றி விட்டிருந்தது. அவன் முக்காற் பங்கு இறந்த வனாகவே இருந்தான். கொல்லனும் காவல ரும் தன்னைக் ''கள்வன்''; என்று சொல்லிய சொல் அவனைக் கொன்றே விட்டது. பொய் மானவுணர்வுக்கே இடங்கொடுத்தவன் உண் மையான மான உணர்வைத் தடை செய்ய முடியுமா?

அவன் இவ்வாறு சாகாமற் சாகவில்லை யெனில், கொலைஞர்களை எதிர்த்துப் போராடி யிருப்பான். கடக்களிறு அடக்கிய கருணை மறவன் வாளா விருந்திருப்பானா?

கல்லாக் களிமகன் வீசிய வாள் அவன் உடலை இரு கூறாக்கியது. கட்டழகுக் காளை, மாபெருங் கலைஞன், உயர்குடிப் பிறந்தோன், ஏழைகட்கு இரங்கும் செம்மல், அந்தணரைக் காக்கும் அண்ணல்—இவ்வாறு மண் தேய்த்த புகழோடு வாழ்ந்த கோவலன் 'கள்வன்' எனக் குற்றஞ் சாட்டப்பட்டு, அதை எதிர்க்காமல் வாய் பேசாப் பதுமையாய்க் கொலைக்களப் பட்டான்.

அவனது இந்த அவலமுடிவைத் தொடக்க முதல் உருவாக்கி வந்தவன் வேறு யாருமல லன்; அவனுள் இருந்த, அவனது நிழலாகிய 'மறு கோவலனே!' ஆதலின் அவனே இக் காப்பியத்தின் 'கொடியோன்' என்று கூறத் தகும் 'தகுதி' உடையவன்.

ஒருவேளை தன் வாழ்க்கையில் இரண்டு கூறுகளாகப் பிரிந்து வாழ்ந்து, ஒரு கூறும் உயர் பண்புகள் எல்லாம், மறு கூறும் தீய பண்புகளால் வன்மையாக நசுக்கப்பட, அதன் விளைவாக மனவுறுதி குன்றித் தன்னுணர்வு இழந்து அவல முடிவிற்கு ஆட்பட நேர்ந்தால் அதனை அவனது ஊழ்வினை என்னாது வேறு என் னென்பது?

கோவலனின் நிழலாகிய 'கொடியோனின்' செயற்பாட்டால் கதையில் திருப்பம் ஏற்பட்ட இரண்டு இடங்களிலும் அடிகள் ஊழ்வினையை அவற்றிற்குக் காரணமாகக் காட்டுகிறார். கோவலன் கொலைப்பட்டபோதும் அதையே குறிப்பிடுகிறார்.

கோவலனுக்கு அவனையன்றி வேறு பகை வர் இல்லாதது மட்டும் அன்று. சிலப்பதிகாரக் கதை மாந்தருள் யாரும் யாருக்கும் பகை யல்லர். மேலும் பொற்கொல்லனைத் தவிர யாவரும் நல்லவர்கள். இந் நல்லவர்களுக்குத் துன்பம் நேர்வதே காப்பியத்தில் சித்தரிக்கப் படும் அவலம்;

இச்சோகத்தின் இடையிலும் உயர்ந்தனர் இருவர். அவர்களே கண்ணகியும் மாதவியும். கோவலனின் பிரிவால் கொடுந்துன்பத்திற்கு ஆளான கண்ணகி நாளடைவில் அதைத் தாங்கிக்கொள்ளும் மனத் திட்பம் பெற்றாள். புகாரில் பேசாப் பதுமையாய், கணவனது மீளுகைக்காகத் தெய்வத்தையும் வேண்டிக் கொள்ள விரும்பாமல் அது 'பீடன்று' எனச் சொல்லும் ஆறிய கற்புடன் வாழ்ந்தாள். கணவன் பேசாப் பதுமையாகிக் கொலைப் பட்டு விட்ட மதுரையில், அவனுக்கு வந்த பழிச்சொல்லைப் போக்க முன் அறியாத மன்ன னிடம் நாவீறு காட்டிச் சீறிய கற்பால் அருஞ் செயல் புரிந்து தெய்வமாக உயர்ந்தாள்.


கோவலனைப்பிரிந்து, இழந்துவிட்ட மாதவி தன் மனவுறுதியால் கணிகையர் குலத்தையே எதிர்த்துப் புரட்சி செய்பவளாய்ச் செல்வம் எல்லாவற்றையும் துறந்து, கலையுணர்வைக் கைவிட்டு உடல் அழகைச் சிதைத்துக்கொண்டு புத்தமதத் துறவியானாள். மகள் மணிமேகலைக் கும் 'கணிகையர் வாழ்க்கை' வேண்டா எனக் கூறி அவளுக்கும் துறவு அளித்தாள்.

கண்ணகி, மாதவி இருவரும் பெண்பாலர். அவர்களின் பெண்மை ஊழ்வினையையும் வென்று உயர்ந்தது. ஆனால் கோவலனது ஆண்மை அவனது 'நிழலாலேயே' உறுதி குன்றிச் சீர் குலைந்தது. ஊழ்வினைக்குப் பலி யாகிவிட்டது. ★

ஒழுகுதல் என்பது வகை

முத்தமிழ்க் காவலர்

கி. ஆ. பெ. விசுவநாதன்



திருக்குறள் முழுவதும் நாலாயிரத்து ஐந் நூற்றி மூன்று சொற்களால் அமைக்கப் பெற் றது. சில சொற்கள் பலமுறை வந்து ஏறத் தாழ பதினேராயிரம் சொற்களாகக் காட்சி யளிக்கின்றன.

இவற்றுள் ஒழுகுதல் என்ற ஒரு சொல் மட்டும் திருக்குறளில் ஐம்பத்தேழு இடங்களில் வருகிறது. அவற்றில் 'ஒழுகல்' என்ற சொல் நடந்துகொள்ள என்ற. பொருளில் மூன்று இடங்களில் வருகிறது. (111, 446, 855). நடந்து கொண்டால் என்ற பொருளில் 'ஒழு கின்' என்பது நான்கு இடங்களில் வருகிறது: (394, 359, 892, 974). 'ஒழுகலான்' என்பது மூன்று இடங்களில் வருகிறது. (30, 445, 1073). இது நடந்துகொள்ளுதலால் என்ற பொருளில் வந்தது.

'ஒழுகுதல்' என்று ஒரு குறளில் வருகிறது. (444.) இது நடந்து கொள்ளல் என்ற பொரு ளில் வந்தது. 'ஒழுகுபவர்' என ஒரு குறளில் வருகிறது. (908). இது நடந்து கொள்பவர் என்ற பொருளில் வந்தது. 'ஒழுகான்' என்று ஒரு குறளில் வருகிறது (474), இது நடந்து கொள்ளாதவனுய் என்ற பொருளில் வந்தது.

'ஒழுகப்படும்' என்பது இரண்டு இடங் களில் வருகிறது. இது நடக்கத்தகும் என்ற பொருளில் ஒன்றும் (154), செய்யப்படும் என்ற பொருளில் ஒன்றும் (98)-ஆம். நடந்து கொள்ளும் என்ற பொருளில் 'ஒழுகும்' என்ற சொல் ஆறு இடங்களில் வருகிறது. (141, 278, 551, 563, 603, 874) அதே சொல் 'செய்து திரிகின்ற' என்ற பொருளில் ஓர் இடத் தில் வருகிறது (907.)

நடந்துகொள்ளுதல் என்ற பொருளில் 'ஒழுகல்' என்ற சொல் ஐந்து இடங்களில் வரு கிறது. (140, 286, 487, 524, 845.)

அதே சொல் 'நடந்து கொள்க' என்ற பொருளில் இரண்டு இடங்களில் வருகிறது. (602, 694).

'நடந்து கொள்பவர்' என்ற பொருளில் ஒழுகலான் என்பது ஐந்து இடங்களில் வந் துள்ளது (143, 246, 691, 896, 921).

'நடந்து கொள்பவன்' என்ற பொருளில் ஒழுகுவான் என்ற சொல் 326-வது குறளிலும் 'நடந்து கொள்வாணுய்' என்ற பொருளில் 1197-வது குறளிலும் காணப்படுகிறது.

'ஒழுக்க' என்ற ஒரு சொல் ஆறுவது குற ளில் காணப்படுகிறது. இது 'ஒழுக்க நெறி' என்ற பொருளில் வந்தது.

'ஒழுக்கி' என்ற ஒரு சொல் 48-வது குற ளில் வருகிறது. இது 'ஒழுகப் பண்ணி' என்ற பொருளில் வந்தது.

'ஒழுக்கு' என்று 20-வது குறளில் காணப்படுகிறது. இது நீரோட்டம் என்ற பொருளில் வந்தது. அதே சொல் ஆச்சாரம் என்ற பொருளில் இரு குறள்களில் வருகிறது. *(148, 161).* ஒழுக்கத்தில் உடையராதல் என்ற பொருளில் 'ஒழுக்க முடைமை' என வருகிறது *(அதி. 14).*

கூடா ஒழுக்கம் என்பதும் அதே பொருளிலாம் (அதி. 28).

'ஒழுக்கத்தின்' என்ற ஒரு சொல் 136-வது குறளில் 'ஒழுக்கத்தினின்றும்' என்ற பொருளிலும் 137-வதில் 'ஒழுக்கத்தினால்' என்ற பொருளிலும் வந்துள்ளது.

'ஒழுக்கத்தின்கண்ணே நின்று' என்ற பொருளில் 'ஒழுக்கத்து' என்ற சொல் 21-வது குறளில் வந்துள்ளது.

இவை தவிர 'ஒழுக்கம்' என்ற சொல் பதினொரு இடங்களில் காணப்படுகிறது, *(131, 132, 133, 134, 135. 138, 139, 271, 275, 415, 952.)* இவை அனைத்தும் 'நடத்தை' என்ற பொருளில் வந்தவை.

இறுதியாக இச்சொல் ஒன்பது குறள்களில் கடைச் சொல்லாக அமைந்துள்ளது. இவ்வொன்பதும் ஒன்பது சுவைகளாக (நவரசங்களாக) காட்சியளித்து நம் உள்ளத்தை பெரிதும் மகிழ்விக்கின்றன. அவைகளைக் கண்டு மகிழுங்கள்.

1. பெட்டாங்கு ஒழுகுவார்

''நட்டார் குறை முடியார் நன்றாற்றார் நன்னுதலாள் பெட்டாங் கொழுகுபவர்'' என்பது ஒரு குறள். (908.) பெண் வழிச் சேரல் என்ற தலைப்பில் வந்தது.

''தான் விரும்பியவாறு நடவாமல் அதற்கு நேர்மாறாக தன் மனையாள் வேண்டியவாறு ஒழுகுபவரால் தம் நண்பர்க்கும் உதவ முடியாது; அறச்செயல்களைச் செய்யவும் இயலாது'' என்பது இதன் கருத்து.

2. பிழைத்து ஒழுகுவார்

''எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகுவார்.'' என்பது

சிலப்பதிகாரப் பரம்பரை

''மாமுது பார்ப்பான், மறைவழி காட்டிடத் தீவலம் செய்து'' கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றது. இன்று அம்முறை வழக்கிலிருப்பதும் உண்மையே. அதற்கும் மேலாகக் கண்ணகி திருமணத்தை வாழ்த்திய மகளிர் கைகளில் ''விரித்த **பாலிகை** முளைக் குட நிரையும்'' இருந்தது. நம் வீட்டுத் திருமணங்களில், மணைக்குப் பக்கத்தில் இன்றும் **''முளைப் பாலிகை''** இருக்கிறதே! கால மாறுதல்கள் உண்டு; எனினும் மூலம் மாறவில்லையே!

ஒரு குறள். *(895)* இது பெரியாரைப் பிழையாமை என்ற தலைப்பில் வந்தது.

''தீயால் சுடப்பட்டவனும் உயிர்பிழைக்கக்கூடும். நன் மக்களைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றாலும் பிழைக்க இயலாது'' என்பது இதன் கருத்து.

3. புரிந்து ஒழுகுவார்

'' விரிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகுவார் ''

என்பது ஒரு குறள்.

(143) இது பிறனில் விழையாமை என்ற தலைப்பில் வந்தது.

''தம்மீது நம்பிக்கை கொண்டுள்ள இல்லத்தில் தீமை புரிந்து ஒழுகுவது தவறு. அவர் உயிரோடிருப்பினும் சிறந்தவரே யாவர்.'' என்பது இதன் கருத்து.

4. பூண்டு ஒழுகுவார்

''அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்
வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்.''

என்பது ஒரு குறள். (30) இது நீத்தார் பெருமை என்ற தலைப்பில் வந்தது.

"மனிதர்களிடத்து மட்டுமல்ல; பறவை, விலங்கு முதலிய எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டு ஒழுகுபவரே அந்தணராவர்" என்பது இதன் கருத்து.

5. செய்து ஒழுகுவார்

"பொருணீங்கிப் பொச்சாந்தா
ரென்பாரருணீங்கி
யல்லவை செய்தொழுகுவார்." என்பது

ஒரு குறள். (246), இது அருளுடைமை என்ற தலைப்பில் வந்தது.

"இரக்கமின்றி தீய செயல்களைச் செய்து ஒழுகுகிறவர்கள் எல்லாம் முன்னுள் நல்லவைகளைச் செய்யாமையால் துன்புறுகின்றமையை மறந்தவர்கள்" என்பது இதன் கருத்து.

6. செய்து ஒழுகலான்

"தேவரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுகலான்"

என்பது ஒரு குறள். (1073). இது கயமை என்ற தலைப்பில் வந்தது.

"தாம் தாம் விரும்பிய வாறெல்லாம் செய்து ஒழுகுதலால் தேவர் என்பவரும் கயவர் என்பவரும் ஒரே தன்மையினராவர்" என்பது கருத்து.

7. சேர்ந்து ஒழுகுவார்

"அகலாதணுகாது தீக்காய்வார் போல்க
விகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்"

என்பது ஒரு குறள். (691) இது மன்னரைச் சேர்ந்து ஒழுகுதல் என்ற தலைப்பில் வந்தது.

"அரசர், அமைச்சர், அதிகாரிகள் ஆகியவர்களிடம் நெருப்பினிடம் மிகவும் நெருங்கி விடாமலும், மிகவும் அகன்று விடாமலும் தீக் காய்வது போன்று சேர்ந்து ஒழுக வேண்டும்" என்பது இதன் கருத்து.

திருக்கோயில் பணி

பூசையில்லாத பழங் கோயிலெல்லாம்
புதுப்பித்துப் பொங்க விடுவாராம்
விசுமாந்தனைக் கோயிலெல்லாம் மெத்த
மெத்தக் கொண்டாடிப் புகழ்வாராம்

— பாடுவார் முத்தப்ப செட்டியார்

8. கொண்டு ஒழுகுவார்

"உட்கப் படாஅ ரொளியிழப்ப
ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்"

என்பது ஒரு குறள். (921) இது கள்ளுண்ணாமை என்ற தலைப்பில் வந்தது.

"கள்ளை விரும்பிக் குடித்து ஒழுகும் மக்கள் எப்போதும் புகழைப் பெறார். தம் முன்னோரால் ஏற்பட்ட பெரும் புகழையும் குடிப்பெருமையையும் கூட இழந்து விடுவார்." என்பது இதன் கருத்து.

9. நின்று ஒழுகுவார்

"பருவரலும் பைதலுங் காணான் கொல்காம
ணொருவர்கணின் றொழுகுவான்"

என்பது ஒரு குறள் (1197). இது இன்பத்துப் பாலில் தனிப்படர் மிகுதி என்ற தலைப்பில் வந்தது.

"என் உடம்பின் பசப்பினாலாய பருவரலும் படர்மிகுதியும் மன்மதன் அறிய மாட்டானோ. அறிந்தால் இருவரிடத்தும் ஒப்ப நில்லாமல் ஒருவரிடத்து மட்டும் நின்று துன்புறுத்த மாட்டானே" எனத் தலைவி தன் தோழியை வினவுவதாக அமைந்தது இக் குறள்.

இவை ஒன்பதும் ஒன்பது துறைகளில் ஒன்பது சுவையை நமக்கு ஊட்டி மகிழ்விக்கின்றன.

திருக்குறளை ஊன்றிப் படிப்பது நல்லது. படித்ததை உணர்ந்து மகிழ்வது அதைவிட நல்லது. அதன்படி நடந்து ஒழுகுவது எல்லாவற்றிலும் நல்லது. ஏனெனில் திருக்குறள் நடந்து ஒழுகுவதற்காகத் தோன்றியுள்ளது. ★

முத்தமிழ் வள்ளல்



மயிலை.சீனி.வேங்கடசாமி

தமிழ்ச் சமுதாயத்திலே நாட்டுக் கோட்டை நகரத்தாருக்கு முக்கிய இடம் உண்டு. தொன்று தொட்டுத் தமக்கென ஒரு நாகரிகமும் பண்பாடும் படைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிற தமிழ்ச் சமுதாயத்திலே அன்று தொட்டு இன்று வரையும் நாட்டுக் கோட்டை நகரத்தார் ஒரு சிறந்த அங்கமாக இருந்து வருகிறுர்கள். இருந்து வருவதுமட்டு மல்ல, தொல்காப்பியர் காலமுதல் இன்றளவும் இந்தச் சமூகத்தார் தமிழர் நாகரிகம் பண்பாடு கலை முதலியவற்றைப் போற்றிப் பாதுகாத்து வருகிறுர்கள். பழைய பண்பாடுகளைப் போற்றி வருவது நகரத்தார்க்குரிய சிறந்த இயல்பாக இருந்து வருகிறது. இதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். ஆனல் இப்போது அதுபற்றி ஆராய வேண்டுவதில்லை. நகரத்தாரின் பண் பாடுகளை ஆராய்வதற்கென்றே அமெரிக்காவி லிருந்து ஒருவர் வந்திருப்பதாக எனது நண்பர் திரு. 'சோமலெ' அவர்கள் கூறினர்கள்,

காடுகளிலும் மலைகளிலும் ஒதுங்கி வாழும் மக்களைப் பற்றி ஆராய்ச்சிக்காரர்கள் ஆராய் வது உண்டு. ஆனல், நாகரிகமும் நற்பண்பும் பெற்று செல்வம் படைத்து நல்வாழ்வு வாழ் கிற ஒரு முக்கிய சமுதாயத்தைப்பற்றி ஆராய் வதற்கென்று மேல்நாட்டிலிருந்து ஒரு ஆராய்ச் சிக்காரர் வந்திருக்கிறுர் என்றல் அது நகரத் தாரிடம் ஏதோ தனிப் பண்பு இருக்கிறது என்பதைச் சுட்டுகிறதல்லவா?

நாட்டுக்கோட்டை நகரத்தார் அந்தந்தக் காலங்களுக்கேற்பவும் சூழ்நிலைகளுக்கேற்பவும் அந்தந்தத் தேவைகளுக்கு ஏற்பவும் தமிழ் நாட் டிலே நல்லறங்களைச் செய்து வந்திருக்கிறுர் கள் என்பதை வரலாற்றை அறிந்தவர் அறிந் திருக்கிறுர்கள். நகரத்துப் பெரியார்கள் காலந்தோறுஞ் செய்துள்ள அறச் செயல்களை எழுதப் புகுந்தால் அது பெரியதோர் விரிவுரை யாக நீண்டுவிடும். ஆனதுபற்றி. காலஞ் சென்ற கலைவள்ளல், செட்டிநாட்டரசர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் தமிழகத் துக்குச் செய்துள்ள கலைத் தொண்டுகளை மட் டும் நினைவு கூர்வதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

செட்டிநாட்டரசர் அண்ணுமலைப் பெருமா னடிகள், முத்தமிழ் வள்ளலாகத் திகழ்ந்து அம் முத்தமிழ் என்றென்றும் வளர்ந்தோங்கு வதற்கு வழி வகுத்துச் சென்றுர்கள். இவ்வரும் பெருந்தொண்டுகளைச் செய்து மறைந்த அப் பெரியாரின் புகழ் உடம்பு என்றும் அழியாது அவர் தமிழகத்தில் அமரராக விளங்குகின்றுர்.


இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழை, தொன்றுதொட்டு வளர்த்து வந்தனர் தமிழ்ப் பெரியோர். முத் தமிழை வளர்ப்பது தமிழ்ப் பண்பாட்டை வளர்ப்பதற்கொப்பாகும். ஏனென்றல், தமி ழரின் கலை நாகரிகம் முதலிய பண்பாடுகள் இந்த முத்தமிழிலே ஊடுருவியுள்ளன. அத ஞல்தான் பழங்காலத்திலிருந்த சேர சோழ பாண்டியர்களும் அவர்கள் காலத்துக்குப் பின் னர் ஆண்ட குறுநில மன்னர்களும் முத்தமிழ்க் கலைகளைப் போற்றிப் பாதுகாத்து வந்தனர்.

பிற்காலத்திலே தமிழ்மன்னர்கள் மறைந்து குறுநில வேந்தரும் போய் தமிழகம் அயல் நாட்டவருக்கு அரசியலில் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலே, முத்தமிழ் போற்றுவார் இன்றி அல்லல்பட்ட நேரத்திலே, வாடிக் கிடக்கும் பயிருக்குக் கார் மேகம் மழை பெய் தது போல், முத்தமிழ் வள்ளல் அண்ணுமலைப்

பெருமானடிகள் தோன்றி முத்தமிழ்க் கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள்.

முத்தமிழ்க் கலைகளில் ஒன்றான இயற்றமிழ்க்கலைகாலந்தோறும் வளர்ந்துகொண்டே இருக்கும் இயல்பினையுடையது. ஆனால் அதை தகுந்த முறையில் போற்றுவாரின்றி இருந்த போது, நமது செட்டி நாட்டரசர் இக்கலை வளர்ந்தோங்குவதற்கு வழிகோலினார். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் அண்ணாமலை நகரிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் புதுமையாக நிறுவி இயற்றமிழ்க் கலைகள் வளர்வதற்கு ஆக்கம் அளித்துள்ளார்கள். அவர்கள் அமைத்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகம் என்னும்பெயருடன் விளங்குகிறது.

அண்ணாமலை அரசரின் ஆர்வம்



RAJAH
SIR ANNAMALAI CHETTIAR
OF CHETTINAD

THE PALACE
CHETTINAD

25 · 3 · 1944

சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ் நாட்டின் பல்கலைக் கழகமல்லவா என்று சிலர் கேட்கக்கூடும். சென்னைப் பல்கலைக் கழகம் பாரத நாட்டின் பழைய பல்கலைக் கழகங்களில் ஒன்றாக இருந்தும், உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகமாக இருந்தும் அது தமிழ்ப் பல்கலைக் கழகம் என்னும் பெயரைப் பெறவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒன்றே தமிழ்ப் பல்கலைக் கழகம் என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்குகிறது. 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' என்று தமிழர் ஆர்வத்தோடு பெருமையோடு செம்மாந்து இறுமாந்து பேசும் உயர் நிலையைப் பெற்றுள்ளது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இந்த உயர்நிலை என்றென்றும் ஓங்கி உயர்ந்து நிற்பதாக.

முத்தமிழ்க் கலையில் அடுத்தபடியாக இருப்பது இசைத் தமிழ் என்னும் இசைக்கலை. முற்காலத்தில் தமிழகத்திலே உயர்நிலை பெற்றிருந்த இசைத் தமிழ் அண்மைக் காலத்திலே சிறப்புக் குன்றிப் போற்றுவாரற்றுப் புறக்கணிக்கப்பட்டு மறைந்து போகும் நிலையிலிருந்தது. இசைத் தமிழ் மறக்கப்பட்டு மறைக்கப் பட்டு ஒதுக்கப்பட்ட நிலையை யடைந்திருந்தது. இந்த நிலையிலே, முத்தமிழ் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழ் இசைச் சங்கம் நிறுவி இசைத் தமிழை வளர்த்தார்கள். இசைத் தமிழை வளர்ப்பதற்கு 'தமிழ் இசை இயக்கம்' ஒன்றைத் தொடங்கி நாடெங்கும் பிரசாரம் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது. செட்டி நாட்டு வள்ளல் சற்றும் பின் வாங்காமல் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்ற தக்காரின் துணையுடன் தமிழ் இசை இயக்கத்தையும் தமிழ் இசைச் சங்கத்தையும் போற்றி வளர்த்து நிலைநிறுத்தினார்கள். இவருடைய அரிய பெரிய முயற்சியினாலும் வள்ளற்றன்மையினாலும் இசைத் தமிழ்க் கலை இன்று சீரும் சிறப்பும் அடைந்து செம்மாந்து அரியணையில் வீற்றிருக்கின்றது.

சென்னைமா நகரத்தில் அழகுடன் விளங்கும் அண்ணாமலை மன்றம் இசைத் தமிழின்

தாயகமாக மிளிர்கின்றது. இங்கு இசைச் செல்வி வாழ்கிறாள். இச் சங்கம் இசைத் தமிழை எங்கும் பரப்பி வருகிறது. தேவாரம் திருவாய்மொழி போன்ற பழம்பண் ஆராய்ச்சிகளும் இங்கு ஆராயப்படுகின்றன. தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் இசைக் கல்லூரிகளும் நடைபெறுகின்றன. இவ்வாறெல்லாம் இசைத் தமிழை வளர்த்த பெருமை அண்ணாமலை வள்ளலாருக்கே உரியதாகும்.

மூன்றாவது கலையாகிய நாடகத் தமிழை வளர்ப்பதற்கு அடிகோலியவரும் அண்ணாமலை வள்ளலாரே யாவார்கள். இசைத் தமிழுடன் தொடர்புடையது நாடகத் தமிழ். பரத நாட்டியமும் நாடகத்தில் அடங்கும். பரத நாட்டியத்தையும் நாடகக் கலைகளையும் தமிழ் இசைச் சங்கம் வளர்த்து வருகிறது. அண்ணாமலை மன்றத்தில் இசைத் தமிழோடு நாட்டியக் கலைகளும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறு முத்தமிழ்க் கலைகளைப் போற்றி வளர்த்துப் புத்துயிர் கொடுத்த பெருமையும் சிறப்பும் அண்ணாமலைச் செட்டியாருக்கே உரியதாகும். ஆகவே, அவர் தமிழ் நாட்டுப் பெரியார்களில் ஒருவரன்றோ? 'செயற்கரிய செய்வார் பெரியர்'. பெரியார் அண்ணாமலைச் செட்டியார் கலை வள்ளலாகத் திகழ்ந்தார். முத்தமிழை வளர்த்த அவர் முத்தமிழ் வள்ளல் என்னும் சிறப்புப் பெயருக்குரியவராவார். செட்டிநாட்டரசர் முத்தமிழ் வள்ளல் அண்ணாமலைப் பெருமானடிகள் புகழ் வாழ்க.

அழகப்ப வள்ளல் முதலிய வேறு பெரியார்கள் பலர், நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் இருந்தனர் என்பதைப் பலரும் அறிவர். அவர்களைப்பற்றி யெல்லாம் எழுத இயலாமைக்கு வருந்துகிறேன். இப்பெரியார்கள் நகரத்துச் செட்டியார் மரபுக்குப் பெரும் புகழைத் தந்தனர் என்பது ஓர் உண்மைதான். அதைவிட இன்னொரு பெரிய உண்மை என்னவென்றால், அவர்கள் தமிழ் நாட்டுக்கும் பெரும் புகழைத் தந்துள்ளனர் என்பதே.

கடைசியாக நாட்டுக்கோட்டை நகரத்தாருக்கு ஒரு வேண்டுகோள். காலம் விரைவாக மாறிக்கொண்டிருக்கிறது. உலகம் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. விஞ்ஞானம் இப்பெரிய உலகத்தை மிகச் சிறியதாகச் சுருக்கி விட்டது. உலகத்திலே பெரிய மாறுதல்கள் நம்மை யறியாமலே நேரிடுகின்றன. நாட்டுக் கோட்டை நகரத்துச் சமூகத்திலேயும் இந்த மாறுதல்கள் விரைவில் ஏற்படும். அப்போது, பழைமையாகப் போற்றிவரும் கலாசாரங்களும் பண்பாடுகளும் மறைந்துபோகும்.

நாட்டுக் கோட்டை நகரத்தாருக்கிடையே தொன்று தொட்டு இருந்து வரும் பழைய கலாசார பண்பாடுகள் பழைய தமிழ்ப் பண்பாடுகளாக இருப்பதனாலே, அவை மறைந்துபோவதற்கு முன்பே, தக்க ஆராய்ச்சிக்காரர்கள், அப் பண்பாடுகளை எல்லாம் ஆராய்ந்து புத்தகமாக எழுதி வெளியிட வேண்டும், பாதுகாக்கப் பட வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள். இதை நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் விரைந்து செய்வார்கள் என நம்புகிறேன். ★

சிலப்பதிகாரப் பரம்பரை

சிலப்பதிகாரத்தில் இரண்டாவது காதை "மனையறம்படுத்த காதை" திருமணத்திற்குப் பின்னர் கண்ணகி-கோவலன் இருவரும் குடியாகித் தனி மனைப்படுத்தப்பட்ட தனி வாழ்வுக்கு உரியராக்கப்பட்ட செய்தியை இது கூறுகிறது. அதனை இளங்கோவடிகள் 'வேறுபடு திருவின் வீறுபெறக்காண' (வரி: 87) என்று குறிப்பிடுகிறார். இதற்கு உரைகாரர்கள் வேறுபடுதிரு-பலவிதமான செல்வங்கள் என்றே உரை கூறியுள்ளனர். செட்டிநாட்டுச் சான்றோர் ஒருவர் இதற்கு உரையெழுதியிருந்தால் 'வேறுபடு' என்ற வரிக்கு 'தந்தை குடும்பத்திலிருந்து வேறுபடுத்தித் தனிக்குடி யாக்கி, அவர்களின் இல்லறச் சிறப்பைக்காண' என்றுதான் விளக்கியிருப்பார். ஏனெனில், நாம் இம்முறையை இன்றும் '**வேறு வைத்தல்**' என்றே அழைக்கிறோம். அஃதாவது தலைக்குடியிலிருந்து ஓர் இளைக் குடி வேறாக-தனியாக அமைகிறது அல்லவா?

வளர்பிறை

டாக்டர் வ. சுப. மாணிக்கம் எம்.ஏ., எம்.ஓ.எல்.பிஎச். டி.,
(முதல்வர், அழகப்பா கல்லூரி.)

நம் சமூகம் முப்பது ஆண்டுகட்கு முன் முழு நிலவாக விளங்கியது. வாழ்க்கைத் துறையில் வறுமை என்பதில்லை. வீடு, வாசல் உணவு முதலான அடிப்படைத் தேவைகள் நமக்குக் குறைவில்லை. இந்தச் செழிப்பிற்கு நம் வெளிநாட்டுத் தொடர்பு ஒரு காரணம். செலவுக்கு ஏற்ற வரவு இருந்தது மற்றொரு காரணம். உலகத்தின் புதிய அரசியல் சூழ்நிலை காரணமாக அயல்நாட்டுத் தொடர்பு மிகவும் குறைந்துவிட்டது. மீதியுள்ள சிறு தொடர்பும் போய்விடுதற்கு நாட்கள் பல ஆகா. உள்நாடே இனி நம் வாழ்விற்கு உரிய நாடு.

முப்பதாண்டுகளாக நம் சமூகத் திங்கள் தேய்பிறையாகின்றது என்று சொல்லலாம்.

இதனை வளர்பிறை யாக்குவது எப்படி? இக்கட்டுரையில் தொகுப்பாகச் சில கருத்துக்களை எழுதுகின்றேன். பொருளாதாரச் சரிவு ஏற்பட்டதைத் தெளிவாக நாம் அறிந்தும் அதற்கேற்ப நம் வாழ்வு முறைகளை மாற்றிக் கொள்ளவில்லை. சீர்திருத்தம் செய்ய முயன்ற சிலரும் தோல்வியே கண்டனர். இச் சமுதாயத்தைத் திருத்த முடியாது என்ற அளவுக்கு நம்பிக்கை கூட வளர்ந்துவிட்டது. நம் நகரக் கூட்டங்கள் செய்த கட்டுப்பாடுகள் ஏறுமாறாகவே முடிந்தன. நம் முன்னோர்கள் ஆற்றிய அறங்களே இச் சமூகத்தை இன்னும் காக்கின்றன என்று சொல்லவேண்டும்.

1. இனப்பெருக்கம் :

திருமணம் என்பது இன்றியமையாத இயற்கைப்புணர்ச்சி. மணச் சடங்குகள் வேண்டியனவே. ஆனால் மணஞ் செய்வது எளிதாக இருந்தாற்றான் திருமணங்கள் ஏராளமாக நிகழும். கன்னியர்களின் தொகை குறையும். இன எண்ணிக்கை பெருகும். எண்ணிக்கை பெருகினாற்றான் குடியரசு நாட்டில் அரசியல் செல்வாக்கும் பிற நலங்களும் ஏற்படும். இன்று நம் இளைஞர்கள் பிற சமூகத்து இளைஞர்கள் போல, மாதச் சம்பள வேலைகளில் அமர்கின்றார்கள். ஐம்பது நூறு இருநூறு என்ற அளவிலேதான் நம் வருமானங்கள் உள. வாழ்க்கைச் செலவு மிகுந்து வரும் இந்நாளில் மாதச் சம்பளத்தில் என்ன மிஞ்சும்? இன்று நம் சமூகத்தில் தாமே பொருளீட்டிப் பெண்ணுக்குத் திருமணம் செய்யக்கூடிய பேராற்றல் படைத்தோர் ஒருவர் இருவர்தான். முன்னோர் தேடி வைத்த செல்வத்தைக்கொண்டும், வீடு வாசல்களை விற்றும், ஒரு சில செல்வர்களிடம் நன்கொடை பெற்றும் சில திருமணங்கள் நடைபெறுகின்றன. இப்போதே மணமாகாக் கன்னிப் பெண்கள் 5000 பேர் இருப்பர். நம் இளைஞர்கள் மாதச் சம்பளம் வாங்கி வாழ்வு நடத்தும் வருங்காலத்து, குமரியர் தொகை இன்னும் ஆயிரம் ஆயிரமாகப் பெருகும். இதனால் இனப் பெருக்கம் குறைவதுமாத்திரமன்று, பலவகைச் சீர்கேடும் தோன்றும். சிறிது நினைத்துப் பார்த்தால், சமூகத்தின் எதிர்காலம் புதிராகின்றது. பெண் வீட்டான் சீர்திருத்தம் பேச முடியாது. அவன் எந்த வேண்டுகோளுக்கும் இசைந்து மகளைத் தள்ளவேண்டியவன் ஆகின்றான். ஆண் வீட்டானே பெண்ணுடையான் பாரத்தைக் குறைக்கவேண்டும். கேட்பனவற்றை அளவாகக் கேட்கவேண்டும். இவ்வுணர்ச்சி ஏற்பட்டுவிட்டால் சமூகம் மறுபடியும் வளர்பிறையாகும்.

2. சாமான் வாங்காமை :

நம் திருமணத்தை எளிதாக்குவது எப்படி? பெண்ணுக்குச் சாமான் வாங்காமை ஒரு வழி. சாமான் பரப்பக்கூடாது என்ற கட்டுப்பாடு உடைபட்டுவிட்டதை நாம் அறிவோம். சாமான் வைக்கும் உணர்ச்சி கொஞ்ச காலமாக ஆண்களையும் பிடித்திருக்கின்றது. பழைய சாமான் கடைகள் செட்டிநாட்டில் மிகுதி. இது சமூகத்தின் வறுமைக்கு எடுத்துக் காட்டு. வீட்டு நிலைகளையும் சன்னல்களையும் அடுக்குகளையும் விற்று வாழ்க்கை நடத்த வேண்டிய கீழ்நிலைக்கு நாம் போய்க்கொண்டிருக்கிறோம். நாம் இன்று பரப்பிக் காட்டும் சாமான்கள் ஒருநாள் பழைய கடையில் பரப்பிக் காட்டப்படும் என்ற ஞானம் பரவுமானால் சாமான் பற்றுக் குறையும். வெளிநாட்டிற் கொண்டுவிற்ற காலத்துச் சாமானுக்கெனத் தனிப் பணம் தந்தனர் முதலாளிகள். அதனால் சாமான் வாங்கும் ஆசையுண்டானது இயல்பே. பஞ்சப்படி வாங்கும் இக்காலத்துச் சாமான் வாங்குதல் அறிவுடைமையாகாது. மேலும் பரப்பிய சமான்களை வைப்பதற்குக்கூடப் பலருக்கு வீடு இல்லை. வாடகைக்குப் பிடித்து வைக்க வேண்டும். சாமான் வைக்கும் பற்று ஒழிந்தாலல்லது நம் இனத்துக்கு எதிர்கால வளர்ச்சி இல்லை. ஒவ்வோர் ஊர்க்கோயிலிலும் இரண்டு மூன்று திருமணங்களுக்கு வேண்டும் சாமான்களை வைத்துக்கொண்டு உதவுவதே சிக்கன முறையாகும்.

3. திருமண அழைப்பு :

பெண்பாரம் என்பது பெரும்பாரம். திரு. வி. க. பெண்ணின் பெருமையை விரிவாகப் பேசுகின்றார். ஏன்? அவர் நம் சமூகத்தில் பிறக்கவில்லை. திருமணத்துக்குக் கொடுக்கின்ற அழைப்பு எண்ணிக்கையில் நம் ஆடவர்களுக்கு ஒரு புதுமோகம் பிறந்திருக்கக் காண்கின்றேன். 'இவர் கல்யாணத்தில் பெருங்கூட்டம்' என்ற புதுச் சொல்லைக் கேட்க ஒவ்வொரு செட்டியாரின் செவியும் அவாவுகின்றது. மாப்பிள்ளை வீட்டுக்காரன் வழங்கும் அழைப்பிதழுக்கு விருந்திட வேண்டியவன் பெண் வீட்டுக்காரன் ஆகின்றான். கல்லூரியில் படிக்கும் மாணவ மாப்பிள்ளைகள், தாம் வேறு அழைப்பு வழங்குகின்றனர். எத்துணைபேர் வருவார் என்பது பெண் பெற்றானுக்குத் தெரியாது. நாலா திசைகளிலும் வருகின்றவர்களை யார் என்று அறியாமலே, தாட்டிலை போடவேண்டியது அவன் பொறுப்பு. இன்றைய விலையேற்றத்தில் உணவுச் செலவு மட்டும் சாதா

சிலப்பதிகாரப் பரம்பரை

சிலப்பதிகாரம் அடைக்கலக்காதையில் **'எட்டி சாயலன்'** (வரி 163) என்பவன் குறிக்கப்படுகிறான். மணிமேகலையில் பளிக்கறை புக்க காதையில் **'எட்டி குமரன்'** (வரி 58) என்பவன் குறிக்கப்பட்டுள்ளான். சீமாறன் பரசக்கர கோலாகலன் ககலத்தில் **'எட்டி சாத்தன்'** என்ற அரசியல் தலைவனுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (செட்டி நாடும் தமிழும். பக். 63) எட்டி என்பது ஒரு பட்டப் பெயர், அப்பட்டம் பெற்றவர்கள் பெரும் வணிகர்கள். அப்பட்டத்திற்கடையாளமாகப் பொற்பூவும் மோதிரமும் அரசனால் அளிக்கப் படும். இப்பட்டப் பெயரை முதலில் சேர்த்து முன்னைய உதாரணங்களில் போல அழைப்பதுதான் பழங்கால வழக்கம். இன்று யாழ்ப்பாணத்தில் 'முதலி' என்பது பட்டப் பெயராய், பெயருக்கு முன்னர்ச் சேர்த்து வழங்கப்படுவதைக் காணுகிறோம். இங்கும் 'செட்டியப்ப செட்டி' என்று சிலருக்குப் பெயருண்டு. இப் பெயரைக் கேள்விப்பட்ட ஒரு வெளிநாட்டு நண்பர், 'ஏன் ஐயா மற்றவருக்கெல்லாம் பெயரின் கடைசியில்தான் 'செட்டி' என்று ஓர் அடைமொழியுண்டு. உனக்கு முதலிலும் ஒரு 'செட்டி' வருகிறதே, என்று அப் பெயருக்குரியவரைக் கேட்டாராம்! எட்டி என்பது முன் அடைமொழியாக இருந்தே, பின்னர், பின் தொடரும் அடைமொழியாகிச் 'செட்டி எனவும் மருவி வழங்குகிறது.

ரணக் குடும்பத்துக்கு நாலாயிரம் ஆகும். பெண் வீட்டாராயினும் ஆண் வீட்டாராயினும் திருமணத்தை உறவினர்கள் அளவில் வைத்து முடிப்பது நல்லது. அழைப்பு மாரி வழங்கி விருந்தினர்கள் வரவேண்டும் என்று எண்ணும் சிறப்பு வாய்ந்தோர் இன்னொரு நாள் தம் இல்லத்திலோ தம் வணிகத்தலத்திலோ வைத்துக் கொள்ளலாமே.

4. நகரத்தார் கல்விமடம் :

'சிந்தனை நின் தனக்காக்கி' என்ற திருவாசகப்படி எப்போதும் நம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் திருமண நினைவு தான். ஒரு பெண் பெற்றவனும் ஒரு பத்துப் பெண் பெற்றவனும் மகளுக்கு மணம் செய்வது எப்படி? என்று கவலைப்படுகின்றான். முழுகியிருக்கும் மக்களைப் பார்க்குந்தோறும் பெற்றோர் உள்ளம் நலிகின்றது. மணப்பேச்சு எடுத்தால், என்ன கேட்பார்களோ என்று அவர் உள்ளம் பதறுகின்றது. நம் சமூகத்துப் பிறந்த காரணத்தால் பல பெண்களுக்குத் திருமண இன்பம் இல்லை எனின், தாய்மையைப் போற்றாத ஒரு சமூகத்துக்கு எவ்வளவு நாள் வாழ்வு இருக்கும்? இறைவன் முற்பிறப்பில் பாவஞ் செய்தவர்களை நம் சாதியிற் பெண்ணாகப் பிறக்கச் செய்தானே என்று வேடிக்கையாக எண்ணுவது உண்டு. நம் பெண்கள் கூந்தல் வனப்பிலோ குடும்ப வேலை செய்யும் ஆற்றலிலோ, கணவன் பல ஆண்டுகள் அயல்நாட்டில் இருக்கும் காலத்திலும், கற்புக் கடன்பூண்டு, குழந்தைகளை வளர்க்கும் குடிப்பொறுப்பிலோ, குடும்பத்துக்கு வேண்டியனவற்றை உரிய காலத்தில் வாங்கிப் புடைத்து வரிசையாக அடுக்கிப் பேணும் அறிவுத் திறத்திலோ குறைவற்றவர்கள் என்று சொன்னாற் போதாது, நிறைவு கண்டவர்கள்.

இன்று படித்து வரும் பெண்கள் கல்வித் தரத்திலும் சிறக்கக் காண்கின்றோம். எல்லாம் இருந்தும் என்ன பயன்? "மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று" என்று உலகு புகழ் வள்ளுவர் நம் சமூகக் கொடுமையை ஞானத்தாற் கண்டுதான் கூறி வைத்தாரோ? ஓர் இனம் தன்பால் பிறந்த பெண்ணைக் கன்னியாகவே வைக்கும் எனின், அது பிறப்புக் கொடுமையல்லவா? இக்கொடுமையைச் சிந்தித்தார் நம் சமூகத் தலைவர் ஒருவர். காரைக்குடி ராம. வீர. ராம. இராமசாமி செட்டியார் என்ற அப்பெரியார் ஆண்டுதோறும் பதினாயிரத்துக்குமேல் நம் இளைஞர்க்குக் கல்விக் கொடை செய்பவர். தம் வீட்டிலே நம் சமூக ஏழைப் பெண்களுக்குத் திருமணம் நடத்தி வருபவர்; ஒரு காலத்து உலகை வாழ்வித்த இச் சமூகத்தைக் கவனிப்பார் பிறரில்லை;

செல்வத் தொழில் புரிவோம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

தொழில் ஒரு சக்தி; தொழிலே ஒரு நாட்டின் எழில். தொழில் வளத்தாலேதான் ஒரு சமுதாயத்தின் புகழ் ஓங்கும். ஷேக்ஸ்பியரும் ஷெல்லியும் உலகு அறியப் பரவியது இங்கிலாந்து தேசத்தின் வணிகர் பணத்தினாலே தான். தமிழ் நாட்டுத் தன வணிகர் இது காறும் கடல் கடந்து பொருள் செய்தனர். பர்மா, இலங்கை, மலேசியா, சைகோன், பேங்காக் முதலிய நாடுகள் எல்லாம் இப்பொழுது தமிழருக்குக் கதவடைத்து விட்டனர். தமிழ் வணிகர் இனி தமிழகத்தில் தமது திறமையை ஊன்றித் தாமும் செழித்துத் தாய் நாடும் செழிக்கப் பாடுபட வேண்டும். வணிகர் செழிப்பே அறத்தின் தழைப்பாகும்.

செல்வத் தொழில் புரிவோம்-நாம்
சேமமுற இந்தப் பூமி நலம் பெறக்
கல்விக் கடல் கடப்போம்—நல்ல
காவியம் ஓவியம் கைத்தொழில்
வாணிகம்
பல்வகை யந்திரங்கள்—பூத
பௌதிக சக்திப் புதுமைகள் காணுவோம்
எல்லையில்லா அறிவால்—வானை
எட்டி நாம் பட்டினம் கட்டிப்
பெருகுவோம்
இன்பத் தொழில் புரிவோம் !

—கவியோகி சுத்தானந்த பாரதி

சமூகமும் தன்னைக் கவனிக்கவில்லை என்று வருந்துபவர் ஒரு புரட்சி செய்தாலல்லது திருமணத் தீமைகளை அகற்ற முடியாது என்பதைத் தெளிந்த இப்பெரியார் கன்னி மடம் என்ற ஒரு புதிய நிறுவனத்தை அமைக்க வேண்டும் என்று என்னிடம் வெளியிட்டார். இக்கருத்து என்னைப் பெரிதும் கவர்ந்தது. மாப்பிள்ளைச் சந்தைக் கிராக்கியைக் கலைப்பதற்குக் கன்னிமடம் வழி செய்யும். திருமணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் பெற்றோர்க்குச் சுமை குறையும். கன்னியர்க்கு ஒருவகை விடுதலை உணர்ச்சியும் மணிமேகலை போல் தொண்டுணர்ச்சியும் ஏற்படும். ஆண் பெண் திருமணச் சந்தையில் நடுநிலையும் எளிமையும் தோன்றும் என்பது என் நம்பிக்கை.

5. பிணநாள் விருந்து:

திருமணமாவது எதிர்பார்த்து நடப்பது. பொருளில்லாவிட்டால் நடத்தாமலும் நிறுத்திக்கொள்ளலாம். ''இறப்பதனுக்கு என் கடவேன்'' என்றபடி, பிறந்தார் எல்லாம் இறப்பது இயல்பு. நம் சமூகத்தில் பிறந்து இறந்தார் ஒவ்வொருவர்க்கும், அவர் வாழும்போது எப்படி வாழ்ந்தாலும், இறந்தபின் பெருஞ்செலவு செய்கின்றோம். திருமணத்திற்குச் சமையற் குழுவைக் கூப்பிடுவது போல இதற்கும் கூப்பிடுகின்றோம். ஈமத்திற்குத் தயாரிப்பது தாமதித்தாலும் சமையலைச் சுறுசுறுப்பாக்குகின்றோம். பாயாசம் வையாத ஒரு குறைபாட்டைத் தவிர, வேறு எவ்வகையாலும் மண விருந்துக்கும் பிண விருந்துக்கும் வேறுபாடு காண்கிலேன். மணவிருந்தாவது சின்னாளில் முடியும். இம் மறுமை விருந்து ஒருவர் எவ்வளவுநாள் வந்து கேதம் கேட்டாலும் செய்யவேண்டியதாகின்றது. ''உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்'' என்றார் ஒரு சங்கப் புலவர். எஞ்சியிருக்கும் சிறு சொத்தும் இவ்விருந்தில் கரைந்து விடுகின்றது. நம் சமூகத்தவர் ஒருவர் இறக்கும்போது, கேதம் கேட்பதல்லது சாதம் கேட்பதில்லை என்ற வழக்கம் ஏற்படுநாள் எந்நாளோ அந்நாள் நமக்கு ஓர் வளர்பிறை நாளாகும்.

6. படிப்புதவி:

நம் இளைஞர்களின் படிப்புத்தரம் சிறப்பானது. பெரும் பட்டம் பெற்றுப் பல்துறைப்

தோது பார்த்தல்

செட்டி நாட்டுச் சீர் முறைகளில் 'தோது' பார்த்துச் செய்தல் என்ற வழக்கம் இருந்து வருகிறது. பழங்காலத்தில் இம்முறை பாராட்டக்கூடிய முறையாக இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதுள்ள சமூக அமைப்பில் இது 'தோதா'க இல்லை; சூதாக இருக்கிறது. அவரவருக்கு எது தோதோ, அப்படித்தான் செய்யவேண்டும். இந்தக் கருத்தில்தான் முன்பு இச்சொல் பயன்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது இதன் பொருள் மாறி மற்றவர்களைப் போல் நாமும் செய்ய வேண்டும்; ஏழைகளும் செல்வர்களின் 'தோது'க்கு ஏற்பக் கடன் வாங்கியாவது செய்யவேண்டும் என்ற நிலை உருவாகிவிட்டது.

கையிலுள்ள ஐந்து விரல்களைப் போல, சமூகத்திலும் பல நிலையினர் உள்ளனர். ஒருவர் வேலையை ஒருவர் செய்ய முடியாது. கை வேலைகளில் ஐந்து விரல்களும் ஒன்றுபட்டு இயங்குவது போல, பொதுச் செயல்களில் எல்லோரும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும். தனி வாழ்வில் அவரவர் தோதுக்கு ஏற்பச் செய்வதையே பெருமையாகவும் சிறப்பாகவும் போற்ற வேண்டும். கடன் வாங்கிப் பிறர் தோதுக்கு ஏற்பச் செய்வதைப் பிழையாகக் கருதி வெறுக்க வேண்டும். அஃதாவது ஏழை வீட்டில் பெண் கொள்ளும் செல்வர், அந்த ஏழையின் தோதறிந்தே யாவும் பெற்றுக்கொள்ள வேண்டும். விரலுக்கேற்ற வீக்கம் போல, குடிக்கேற்ற வாழ்க்கை முறை அமைதலே நல்லது. தனி வாழ்வுச் சிதைவுதான், சமூக வாழ்வுச் சிதைவாக மாறுகிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

டாக்டர் மெ. சுந்தரம்.

பயிற்சியுற்று முன்னேறத் துடிக்கும் காளைகள் நம்மிற்பலர். ஆனால் இவர்தம் கல்விக்கு நம் சமூகம் அளிக்கும் உதவிப்பாடு மிகமிகக் குறைவு. சில சங்கங்கள் கடனாக உதவி வழங்குகின்றன. செல்வர் சிலர் தனி உதவியும் செய்ப. பல சமூகங்கள் முன்னேறும் வேகத்துக்கு ஓரளவு ஒப்பாக நம் சமூகம் கல்வியிலும் பதவியிலும் முன்னேற வேண்டுமெனின் கடனுதவி கூடாது. கல்விக்குக் கடன் கொடுத்தல், மெய்யாகக் கூறின், உதவியும் ஆகாது. ஒரு பதினைந்தாண்டுகளாவது சம்பள உதவி விடுதி உதவியெல்லாம் இனாமாக நம் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட சமூகங்கட்கு அரசினர் செய்யும் முழுவுதவி போல நம் சிறுவர்கட்கு நாம் செய்யத்தான் வேண்டும். இவ்வகையில் கண்டிப்புக் கூடாது. தேர்வில் தோற்று மீண்டும் படிக்க விரும்புகிறவர்கட்கும் உதவிக் குறைவு இருத்தலாகாது. பெண் கல்வியில் பெரிய அக்கறை வேண்டும். அவர்கள் விடுதியிற் சேர்ந்து படிப்பதற்கும் உடைச் செலவிற்குங்கூட முழுவுதவி செய்ய வேண்டும். முழுதும் படித்த குடும்பங்கட்குப் பரிசும் வழங்கலாம். சமூகத்தின் கல்விப் பொறுப்பைச் சமூகம் முழுதும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சமயத்துறைக்குப் பன்னூறுகோடி செலவளித்த நம் சமூகம் தன் வளர்ச்சிக்கு ஒரு கோடியேனும் செலவழிக்கக் கூடாதா? ''ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்'' என்ற பெரும் புலவர் குற்றத்துக்கு நாம் ஆளாகலாமா? ஒற்றுமையான மனமில்லையென்பது தவிர, இன்றும் நம் சமூகத்தில் பணம் இல்லை என்று சொல்ல முடியாது. அதனை விவரிப்பதற்கு இது இடனில்லை. அறக்குழு வைத்திருக்கும் நம் செல்வர்கள் வேறு வகையாகச் செய்யும் அறங்களைப் பதினைந்து இருபதாண்டு நிறுத்திக் கொண்டு நம்மனோர்கள் கல்வி வளர்ச்சிக்கு அறஞ்செய்ய முன்வருவார்களாக.

7. வருவாய் வழிகள் :

நம் சமூகம் உழைப்புக்கு அஞ்சும் சமூகம் அன்று. சமூகப் பெருஞ் செலவு யாரையும் கடினமாக உழைக்கத் தூண்டுகின்றது. தெளிவோடும் நம்பிக்கையோடும் வழிகாட்டினால் நம் வளர்ச்சி பிற சமூகங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் இருக்கும். நகர கோயில் முதலான நல்லமைப்புகள் இன்னும் நம்பால் உள்ளன. சமூக நாட்டம் கொண்ட பெருஞ் செல்வர்கள் நம்மில் உளர். கற்க இடந்தரும் நிறுவனங்கள் நம்மிடம் உண்டு. என்ன நம்மிடம் இல்லையெனின், சமூக முன்னேற்றத்தைக் காட்டி, எல்லாரையும் கூட்டுவிக்கும் தலைமையாளரும் தலைமையான நிறுவனமும் நமக்கு இல்லை. இனி இவையும் இருக்கும் என்று நம்புவோமாக. சமுதாயச் சீர்திருத்தம் என்பது பெண் சீர்திருத்தமாகும். பெண்களின் அறிவோட்டத்தை மெல்ல மெல்லத் திருப்பினாலல்லது சமூகத்துக்கு வளர்பிறை இல்லை. தொழில்நாட்டம் அறிவோட்டத்தைப் புதுமையாக்கும். நகரக் கோயில்களில் தையலாட்களை நியமித்து நம் பெண்களுக்கு இனாமாகத் தையற் பயிற்சி யளிக்க வேண்டும். சிறுமிகளுக்கு இசை நடனப்பயிற்சிகள் அளிக்கவேண்டும். தடுக்கு, கொட்டான், கடகம் முதலிய கைத்தொழில்களில் நம் பெண்கள் வல்லவர்கள். தேன் குழல், முறுக்கு, சீடைக்காய், அதிரேசம் ஊறுகாய் இவை செய்வதிலும் வல்லவர்கள்.

சிலப்பதிகாரப் பரம்பரை

'கணவனைப் பேணுதல்' என்பது தமிழக மகளிர்க்கு இயல்பான கற்பு நெறியாகும். கண்ணகி, மதுரையில் மாதரி வீட்டில் தங்கியிருக்கும்பொழுது கணவனுக்குத் தானே சமைத்து, உணவளித்துப் பேணுகிறாள். முதலில் தண்ணீர் தெளித்துத் தரையை மெழுகுகின்றாள். அங்குக் குமரி வாழையின் குருத்து இலையை விரித்து உன்ன அழைக்கின்றாள். தடுக்கிட்டு உட்காரச் செய்து உணவளிக்கின்றாள். உண்டு மகிழ்ந்து இருக்கும் கணவனுக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்துப் போட்டுக்கொள்ளச் செய்கிறாள். நமது மகளிரிடம் இந்நற் பழக்கங்கள் இன்றும் இருப்பது போற்றுதற்குரியதாகும்.

இத்தொழில்களை ஊர்தோறும் பெருக்கி எங்கும் விற்பனை செய்வதற்கு நகரத்தார் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கலாம். இவற்றால் வறுமை நீங்கும். குடிதோறும் பொருளாதாரம் பெருகும். பெண்களின் மனமும் புதுமை பெறும். தொழிலில் உயர்வு தாழ்வு என்பதில்லை. மானத்தோடு எவ்வேலையும் பெண்களும் ஆண்களும் பார்ப்பதில் இழிவில்லை.

8. நகரத்தார் கழகம் :

இத்தகைய பொதுத் தலைமைக் கழகம் ஒன்று அமைத்துச் சமூக முன்னேற்றப் பணி தொடங்குதல் நல்லது. தலைவர், செயலர், உறுப்பினர் என்ற சிக்கற் போர் ஏற்படாதவாறு தேர்தலின்றிக் கழகம் பணி செய்ய வேண்டும். தேர்தல் எவ்வகையானும் கூடாது. வேறுவழி காணவேண்டும். பெருஞ் செல்வர்கள்தான் நிதி கொடுக்க வேண்டும் என்பதில்லை. வருவாய் உடைய நம் எவரிடத்தும் அளவான மகன்மை பெறலாம். சிறுதுளி பெருவெள்ளம் அன்றோ?

முன்னேற்றக் கருத்துக்களைச் சொல்லிவிடுதல் எளிது. சொல்லிய வண்ணம் சமூகத்தைச் செய்வித்தல் எளிதன்று. ஓரிரு ஆண்டுகள் பிரசாரம் தேவை. இப்பிரசாரம் பெண்களிடத்து மிகத் தேவை. ஊர்தோறும் உள்ள நம் கோயில்களில் நம்மவர்களைக் கூட்டி வழிகளை எடுத்துச் சொல்வது நல்லது. சமூகப் போக்கை எளிதாக வளைத்துவிட முடியாது. வளையவில்லையே என்று சோர்ந்து விடவும் கூடாது. தளராமையே தொண்டின் இலக்கணம். புண்படாதவாறு பண்போடு பிரசாரம் செய்தால், நம்பிக்கை பிறக்கும். உறுதி தோன்றும். மாறுகிறோம் என்பதறியாமலே மாற்றம் ஏற்படும். நன் மாற்றம் ஏற்படின் மறுபடியும் நம் சமூகம் வளர்பிறையாக விளங்கும். முறையோடு முயல்வார்க்கு எல்லா முன்னேற்றமும் உண்டு.

அம்பு போடுதல்


ஆண்டுதோறும் புரட்டாசி மீ கிலுக்கி எடுப்பும் பத்தாம் நாளன்று அம்பு போடுதலும் ஆகிய பண்டிகையை நகரத்தார் கொண்டாடுவர். இந்தியா முழுவதும் விஜய தசமி என்றும், தசரா என்றும் கொண்டாடும் பண்டிகையை நகரத்தார் கிலுக்கி எடுப்பென்றும், அம்பு போடுதல் என்றும் கூறுவதில் சில தனிச் சிறப்புக்கள் உள்ளன,

கிலுக்கி எடுப்பு: சிறு பிள்ளைகளை முதன் முதல் பள்ளிக்கு வைக்கும் கொண்டாட்டமாகும் இது. 'குரு'வையும் பிற பள்ளி மாணவர்களையும் விட்டிற்கழைத்து, குரு காணிக்கை கொடுத்து, பிள்ளைகளுக்கெல்லாம் பொறிகடலை தின்பண்டங்கள் கொடுத்துப் பிள்ளையைக் கூட்டிபோய்ப் பள்ளியில் சேர்ப்பார்கள். இதனால் இருநன்மைகள் ஏற்படுகின்றன. முதற்கண் புதிதாகச் சேரும் பையனுக்குக் கூச்சம் குறைகிறது; அடுத்து எல்லாப் பையன்களுக்கும் புதியவனின் வீடும் வழியும் தெரிந்து விடுகின்றன. இன்னும் புதிதாகப் பள்ளிகளில் சேரும்போது கூச்சம் போய்விடுகிறது கூட்டம் மிகுதியாக இருப்பதால். "குருதட்சிணை" கொடுக்கிறார்கள், வேறு விதமாக!

அம்பு போடுதல் : பத்தாம் நாளன்று சாமி புறப்பாடும், பின்னே ஊர்ச் சிறுவர்கள் அணியணியாகச் செல்லுதலும் வழக்கம். ஊர் நடுவிலோ, ஊர்ப்புறத்திலோ இருக்கும் ஆலமரம், வாழைமரம் போல்வனவற்றில் அம்பு குத்துவர். முதலில் சாமி சார்பாக ஐயர் அம்பு எய்வார். இங்ஙனம் சாமி அம்பு போட்டதும் எல்லோரும் அம்பு போடுவர். செட்டி நாட்டு ஊர்தோறும் இது வழக்கம். பிற பகுதிகளிலும் உண்டு.

பழங்காலத்தில் மழவர் என்ற வீரர் பரம்பரையினர் படைக்கலம் பயின்ற இளைய வீரரை அரங்கேற்றும் விழா ஒன்று கொண்டாடினர். அதற்குப் "பூந்தொடை விழா" என்று பெயர். (அகம் : 187) தொடை என்றால் அம்பு தொடுத்தல் என்று பொருள். போர் கருதித் தொடுக்காமல் பயிற்சி கருதித் தொடுப்பதனால் இது 'பூந்தொடை' விழா வாயிற்று, **'மகார் நோன்பு'** என்றும், **'கிலுக்கி எடுப்பு'** என்றும்' **'அம்பு போடுதல்'** என்றும் செட்டி நாட்டார் வழங்கி வரும் சொற்கள் இப் பூந்தொடை விழாவாகிய படைக்கலப் பயிற்சி விழாவினைத்தான், நாம் தசரா நாட்களில் கொண்டாடி வருகிறோம் என்பதை வலியுறுத்தும் சான்றுகளாக அமைந்துள்ளன.

செட்டிமார் பண்பு



காரைக்குடி ரெ. முத்துக்கணேசன்

உற்றார் பசிபோக்கும் ஊரார் பிணிபோக்கும்
கற்றார் கலைவளரக் காப்பாகும் — பெற்றார்க்குக்
கண்ணாகும் பேருழைப்புக் கையாகும் வாழ்வார்க்குப்
பண்ணாகும் செட்டிமார் பண்பு!

முல்லை மணங்கமழும் முக்கனியின் தேன்துளிக்கும்
கல்லைக் கனிவிக்கும் காதலுறும் — எல்லைவளர்
மங்காத நீதி மணமங்கை மாண்பொலிக்கும்
சங்காகும் செட்டிமார் சால்பு!

புலம் பெருக்கி வாழ்வர் புகழ்பெருக்கி நிற்பர்
நலம்பெருக்கி வாழியரோ! நாளும் — தலம்பெருக்கிப்
பாவணிந்த பூம்புகார்ப் பட்டினத்துத் தோன்றிவந்த
மாவணிக ராம்செட்டி மார்!

★

நகரத்தார் திருமணங்களில் காணப்படும் அகநானூற்று மணமுறைகள் சில

பொதுவாக நமது திருமணமுறைகள் பல சிலப்பதிகாரக் காலத்துப் பழக்கங்களைப் பின்பற்றியன என்றுதான் கருதப்படுகிறது. ஆனால் அதற்கும் முந்திய சங்க காலத்துப் பழக்கங்களையும் நாம் விடவில்லை என்பதற்கு அகநானூற்றில் சில சான்றுகள் உள்ளன.

திருவிளக் கேற்றுதல்



நம் வீடுகளில் திருமணம் தொடங்கும்போது, உள்வீட்டில் திருவிளக்கேற்றி வைப்பார்கள். திருமணம் முடியும் வரை, எத்துணை வகை மின்விளக்குகளால் வீட்டை அழகுபடுத்தினாலும் உள்வீட்டில் இத்திருவிளக்கு ஒளிதந்து கொண்டிருக்கும். இதனை அகநானூறு 'மனை விளக் குறுத்து' (86) என்று குறிப்பிடுகிறது. மனையின்கண் விளக்கேற்றி அஃது ஒளிதந்துகொண்டிருக்கும்படி செய்தலை இது குறிக்கும்.

அரிமணமிடுதல்

மணமக்களை நெல்லும் பூவும் எடுத்து நீரில் நனைத்துப் போட்டுப் பெரியவர்கள் வாழ்த்துதலை அரிமணமிடுதல் என்று நாம் சொல்லுகிறோம். களத்தில் அறுவடையாகும் போது முதலில் தெய்வத்திற்கு 'அரி' எடுத்து வைத்து வணங்குவார்கள் அரி என்பது நெல்லைக் குறிக்கும், மணம் என்பது பூவைக் குறிக்கும். இரண்டையும் கூட்டி வாழ்த்துதல் வளமும், இன்ப வாழ்வும் பெறுக என்பதற்கு அடையாளம். அகநானூற்றில்,



'நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க' (அகம் : 86)

நீரில் நனைத்துச் சொரிந்த புதுமலர்களும் நெல்லும் மணமகளின் கூந்தலிலே விளங்க வாழ்த்தினர் என்பதுதான் இதன் பொருள்.

காப்புக் கட்டுதல்



மங்கல நிகழ்ச்சிகளில், அந்நிகழ்ச்சிக்குரியவர்கள் கையில் காப்புக்கட்டுவது வழக்கம். அகநானூற்றில் திருமண நிகழ்ச்சிகளை விவரிக்கும் பாடலில் அறுகம்புல் தண்டுகளால் வெள்ளி நூலில் கோத்த ஒரு காப்புக் கட்டப் பெற்றதாக வருகிறது. (சோமலெ : செட்டிநாடும் தமிழும் பக்-23). அதில் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''மெல்லிய பூவையுடைய. வாகையின், சிறிய புறத்தையுடைய, கவர்த்த வாகை இலையையும், பள்ளத்தில் படர்ந்ததும், முதல் மழைக்குத் தழைத்ததும், நீலமணிபோலும் நிறமுடையதுமாகிய அறுகினது பாவை போலும் கிழங்கிடத்துள்ள தண்ணிய நறுமணமுள்ள அரும்பையும் சேரக்கட்டிய வெள்ளிய நூலைக் காப்பாச் சூட்டுவர்.'' (அகம் 136)

முற்போக்கு எண்ணமும் முன்னேற்றமும்

மு. அ. அருணாசலம் செட்டியார் அவர்கள்

நமது நகரத்தார் சமூகம் பல ஆண்டுகளுக்கு முன் காவேரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டிய நாட்டில் குடியேறி வெள்ளாளர் பெண்களை மணம் செய்து இருபத்திரண்டு பிரிவாய் ஒன்பது கோவில்களைக் கொண்டு தொண்ணூற்ருறு ஊர்களில் வாழ்ந்து வந்ததாய்த் தெரிகிறது.

கடல் கடந்து வாணிபம் செய்து பெரும் பொருளீட்டி நமது நாட்டில் கோவில், குளம், சத்திரம், பாடசாலை, நந்தவனம், பசுமடம் முதலிய தருமங்களைச் செய்து வந்தார்கள். நகரக்கூட்டம், தொண்ணூற்ருறார் வட்டகைக் கூட்டம் கூடி அவர்களுக்குள் உள்ள வழக்குகளை பஞ்சாயத்தின்மூலம் தீர்த்துக் கொண்டு ஒற்றுமையோடு சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

நகரக்கூட்டம் தொண்ணூற்ருறார்க் கூட்டம், வட்டகைக் கூட்டம் இருந்த காலத்தில் மிக ஒற்றுமையோடு சமூக வளர்ச்சியானது வியாபார வளர்ச்சிக்கு உதவி பெரும் பொருள் ஈட்டினுர்கள். அதன் பிறகுதான் கோவில்களைப் பெரிதாகக் கட்டி ஊர்க் கோவில் கூட்டம், நகரக் கோவில் கூட்டங்கள் என்றும் நடைபெற்றது. அக்கூட்டங்கள் கோவில் தர்மங்களை மட்டும் கவனிக்கும் கூட்டங்களாக ஆகிவிட்டன. நகரத்தார் தொழில் பொருளாதார வளர்ச்சியில் சிறிதும் கவனம் செலுத்தவில்லை. அதனுல் பெருகி வந்த பெருஞ்செல்வம் குன்றி, புதிய தொழில் முயற்சியினுல் செல்வம் ஒரு சிலரிடம் மட்டுமே தங்கி பெரும்பாலான மக்கள் தற்காலம் வறுமையில் வாழ்ந்து வருகிருர்கள். இந்திய நாடெங்கும் எல்லா நகரங்களிலும் வீடுகள், பங்களாக்கள், பல மடங்களாகக் கட்டி மிக விரிவடைந்து வரும் இக்காலத்தில், செட்டிநாடு ஒன்று மட்டுமே கட்டிய வீட்டைப் பிரித்து விற்றும், சாமான்களை விற்றும் வாழும் பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது. பர்மா, செய்கோன், இலங்கை போன்ற வெளிநாட்டு வியாபாரம் வீழ்ச்சியுற்று நமது சமூக மக்களின் முதலில் எழுபது சதவிகிதத்துக்கு மேல் போய் விட்டது.

அதை மீட்டுக் கொள்ளவோ, நஷ்ட ஈடு பெறவோ நமது நகரக் கூட்டங்கள் எந்தவித உதவியும் செய்யவில்லை. நம்மிடையே ஒற்றுமை குறைந்து பொருமை மிகுந்து வறுமை குடிகொண்டு விட்டது.

நமது சமூக மக்கள் வெளிநாட்டுத் தொழில் ஒன்றை மட்டுமே நம்பிக் காலத்துக்கேற்ற கல்வி கற்று முன்னேருது இருந்துவிட்டார்கள். இதை எண்ணியே நமது சமூகப் பிரமுகர்களில் திரு. டாக்டர் அழகப்பசெட்டியார் அவர்கள் செட்டிநாட்டிற்கு மத்தியில் கலைக் கல்லூரி, இஞ்சினியரிங் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதலியவைகள் அமைத்ததினுல் நமது சமூக இளைஞர்களில் மிகுதியானவர்கள் படிக்க வாய்ப்புப் பெற்று பெரும் பயன் அடைந்து வருகிருர்கள்.

நமது சமூகப் பிரமுகர்களில், செல்வர்கள், செட்டிநாட்டுக்கு இடையில் பெரும் தொழில்களை அமைத்தால் நமது சமூக மக்கள் இன்னும் பெரும் பயன் அடைவார்கள். நாம் இருந்து வரும் நாடும் பயனடையும்.

நமது சமூகம் தற்பொழுது எவ்வளவு புள்ளி, எவ்வளவு மக்கள் தொகை கொண்டதாக இருக்குமென சரியான கணக்குகள் இல்லை. சுமார் பதினேழு ஆயிரம் புள்ளி, எழுபத்தையாயிரம் மக்கள் கொண்டதாய் இருக்கலாம். நம்மிடம் தகுந்த அமைப்பு

களும், போதிய பணவசதியும் இருக்கிறது. அதை நமது சமூக முன்னேற்ற வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க வகையில் திட்டங்கள் செய்வதே நமது முதலாவது கடமையாகும்.

நமக்கு ஒன்பது கோவில்கள், ஏறக்குறைய பல ஊர்களில் நகரக் கோவில்கள், அதற்கு மணியக்காரர்கள், வேலை ஆட்கள் முதலிய அமைப்பு இருக்கிறது. அவைகளில் புள்ளி வரி வசூலிக்க ஒருவகையான கணக்கு இருக்கிறது. அவைகளை மாற்றித் தற்காலத்துக்கு வேண்டியபடி, பிறப்பு, இறப்பு, கல்யாணம் ஆன தேதி, விலாசக் குறிப்பேடு, வயது, படிப்பு, வேலை விபரத்துடன் பதிவு செய்து அத்தாட்சிப் பத்திரம் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

நகரத்தார் இருபத்திரண்டு கோத்திரங்களாகப் பிரிந்து வாழ்ந்தனர். ஒரு கோவிலில் பல கோத்திரமுள்ளவர்கள் தங்களுக்குள் கம்யாணம் செய்து கொள்வதை இன்றும் காணலாம். மாத்தூர், இளையாற்றங்குடிக் கோவிலாளர்கள், அந்தக் கோவிலைச் சேர்ந்த ஏழு பிரிவுகளுக்கிடையே திருமணம் இன்னும் செய்து கொள்ளுகிறார்கள். பொதுவாக ஒரே ரத்தக் கலப்பு உள்ளவர்களிடையே திருமணம் செய்து கொள்ளுவது வருங்கால சந்ததி வளர்ச்சிக்கு நல்லதில்லையென்று விஞ்ஞான மூலம் நமக்கு நன்றாய்த் தெரிகிறது. ஒரு நிலத்தின் நெல் விதையை அதே நிலத்தில் பல முறை போட்டால் பலன் குன்றிவிடுகிறது, வாழைப் பயிர் மூன்று தடவைக்கு மேலானால் பலன் குன்றி விடுகிறதென்று அழித்துப் புதிதாய்ப் பயிர் செய்வதை இன்றும் காணலாம். இதேபோன்று மக்கள் சமூகத்திலும் ஏழு தலைமுறைக்கு இரத்தக் கலப்பின்றி செய்தால் நல்ல அறிவுள்ள ஊனமில்லாத அழகிய மக்களைப் பெறலாம். பொதுவாய் அத்தை மக்கள், மாமன் மக்களை திருமணம் செய்வது இரண்டொரு தலைமுறைக்குப் பின் பெரும் சந்ததியின்றியோ பிற குறைகளுடனோ ஆகி விடுவதைக் காணலாம். பல தலைமுறைகளுக்கு முன் ஒன்றாய் உள்ள இரணிக் கோவிலார் பிள்ளையார் பட்டியார் ஒரு கோயிலார் மற்றொரு கோயிலாருடன் சம்பந்தம் செய்து கொள்ளலாமென்றும் கலப்பு மணத்தில் பிறந்தவர்களுடன் கல்யாணம் செய்யலாமென்றும் ஏற்பாடு செய்யலாம்.

எந்த சமூகம் கலந்து வாழ்கிறதோ அது விரிவடைந்து பெருகி வாழ்ந்து வருகிறது. குறுகிய அமைப்புள்ளது அழிந்துவிடுகிறது. ஆகையால் கூட்டத்தில் எண்ணிப் பார்த்து தக்க சீர்திருத்தங்கள் செய்யலாம். இந்திய நாட்டின் அரசியல் அமைப்பு சாதி மத வேறுபாடின்றி ஒன்று சேருவதே. மக்கள் சமூக அமைப்பு, ஒன்றுபோல பழக்க வழக்கங்கள், படிப்பு, அறிவுப் பெருக்கு அமைவது, மக்கள் வாழ்க்கைக்கு மிக உதவியாக இருக்கும் என்று எண்ணியே அமைந்துள்ளது. அம்மாதிரி சமநிலையில் உள்ளவர்களுடன் திருமணம் செய்வது நல்லது.

பர்மாவில் இருந்து பெரும் பொருள் வந்திருக்கிறது. அங்குள்ள தர்ம ஸ்தாபன அமைப்பு சீர்குலைந்துவிட்டது. அந்த அமைப்


சிலப்பதிகாரப் பரம்பரை

இல்லற வாழ்க்கையின் பெருங் கடமைகளாகக் கண்ணகி கூறியன நான்கு. அவை: அறவோர்க்குக் கொடுத்தல்; அந்தணர்களைப் பேணுதல்; துறவிகளை எதிரேற்று உபசரித்தல்; தொன்மைச் சிறப்புடையதாகிய விருந்தினர்களை உபசரிக்கும் பண்பை மேற்கொள்ளுதல் என்பன. கணவன் தன்னுடன் வாழ்ந்திருந்தால் இவையனைத்தையும் செய்து மகிழும் பேறு பெற்றிருக்கலாமே என்று கண்ணகி ஏங்குகிறாள். இன்றும் செட்டி நாட்டுப் பெண்கள் "வாழை இலை பரப்பி வந்தாரைக் கையமர்த்தி வருந்திப் பாடுபட்டு நல்ல விருந்து வைக்கும்" பண்பைப் பாட்டாகப் பாடுவதுடன், அன்றாட வாழ்விலும் மேற்கொள்ளும் இயல்பினராக விளங்குதல் கண்கூடு.

பின் கீழ் உள்ள காசிச் சத்திரம், கல்கத்தா, கயா, அயோத்தி, பிரயாகை, கோதாவரி, ரெங்கூன் நகர விடுதி போன்ற இன்னும் அநேக சொத்துக்கள் இருக்கின்றன. ரங்கூன் நகரத் தெண்டாயுதபாணி, மோல்மேன். பாசின், ஈந்தட்டா, எவுண்டம், மாந்தலே, லேப்பட்டான், போன்ற இன்னும் அநேக ஊர்களில் உள்ள சுவாமிகளின் வைரம், தங்கம், வெள்ளி நகைகள், வெள்ளி ரதம், கோவில் மடம் போன்ற இன்னும் இதர சொத்துக்கள் ஏராளமாய் இருக்கின்றன. கொழும்பு, செய்கோன், மலேயா போன்ற இடத்திலும் ஏராள மான பொதுத் தர்மச் சொத்துக்கள் கொண்டு வரவேண்டியதாயிருக்கிறது. இவைகளை ஏற்று நடத்த நமது சமூகத்தினரில் பெரும் பிரதிநிதித்துவம் உள்ள ஒரு சபையை தக்கபடி அமைத்து அதைக் கொண்டு இவைகளையும் இன்னும் வரவேண்டிய பணம், நகை, சொத்துக்களையும் மீட்டு பாதுகாத்து பெருக்கி சமூக ஏழை மக்கள் படிப்பு, கல்யாணம், தொழில், வாழ்க்கை வசதிகள் பெருக வழி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்துக்குத் தலைநகர் மதுரையில் இருக்கிறது. அங்கு கலெக்டர் அலுவலகம் இருக்கிறது. அங்கிருந்து நமது மாவட்டத்தைக் கவனிப்பது போதியதாய் இராது. இப்படி உள்ள அமைப்பு எங்குமே யில்லை. இது மிக விசனிக்கத்தக்கது. இதை நமது மாவட்டத்தில் உள்ளவர்கள் கவனியாது கவலையின்றி இருக்கிறார்கள். ஏழை மக்கள் இதனால் மிக அவதியுறுகிறார்கள்.

மாவட்ட வளர்ச்சி மிகக் குன்றிவிட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். இராமநாத புரம் மாவட்டத்தையே கீழ ராமநாதபுரம் மேல ராமநாதபுரம் என்று பிரித்து கீழ ராம நாதபுரத்துக்குக் காரைக்குடியைத் தலைநகர மாக அமைத்து அங்கு காவேரி, வைகைத் தண்ணீர் கொண்டு வரவும், பெரிய ஆஸ்பத்திரி, மருத்துவக்கல்லூரி அமைக்கவும் தொழில் அதிபர்கள் தொழிற்சாலைகளை அமைத்து நாட்டு மக்கள் நலம் பெறச் செய்து நாட்டை வளப்படுத்த நமது சமூகப் பெரியார்கள் முயற்சிக்க வேண்டும். பெரிய நகரங்களில் தொழில் செய்து உத்தியோக வேலைகளில் இருப்பவர்கள் நியாயமான வாடகையில் தங்க விடுதி, வீடு வசதிகள் செய்யலாம்.



பட்டத்து யானை

ஒரு நகரப் பெருமகனார் :-''ஆமா, இந்தப் பட்டத்து யானை என்ன விலை பெறுமிங்கிறேன்?

மற்றவர் :—அது எப்படியும் இப்ப விலைக்குப் பத்தாயிரத்தை விடாது...

ஒ. ந. :—'ஆமா, செலவு என்ன ஆகும்?'

மற்றவர் :—என்ன? பாகனுக்குச் சம்பளம், கவளச் சோறு, அது, இதுன்னு எவ்வளவோ இருக்கு. முதலாவது யானை நிக்கிறதுக்கு எவ்வளவு பெரிய இடம் வேணும்? அதுக்கு வாடகை எவ்வளவு ஆகும்? மொத்தம், மாதம் இருநூறு முந்நூறுக்குக் குறையாது.

ஒ. ந. :—'அடேப்பா! லட்ச ரூபா வட்டியைத் தின்னிடும் போலிருக்கே!

மற்றவர் :—பத்தாயிரத்துக்கு வாங்கிறது பெரிசில்லே—லட்ச ரூபா வட்டியை முழுங்குதே, அதுதான் அதிகம். . . . . .

ஒ. ந. :—சும்மாவா சொன்னான். .'யானையைக் கட்டித் தீனிபோட முடியுமா'ன்னு!

[''பட்டத்து யானைக்குக் கிட்டத்தில் போகாமல் பார்த்து நிறுத்த வணிகேசர்'' —என்று ஏழுநகரத்தார் பள்ளில் வரும் வரிக்கு ஒரு சிறு விளக்கம் இது.]

செட்டிநாட்டுத் தடுக்கு

செட்டிநாட்டுத் தடுக்குச் சிறப்புடையது, அழகு மிக்கது, ஈராயிரம் ஆண்டுத் தொன்மையுடையதுமாகும். தடுக்கிட்டு, உணவுண்ண அழைக்கும் பழக்கம் இன்றும் செட்டிநாட்டில் உண்டு. பனையினது குருத்து ஓலையில், பல வண்ணங்கள் உள்ளனவாகத் தடுக்குகளையும், பெட்டிகளையும் பிற பல பொருள் களையும் தமது கைத்திறமையால் நகரத்தார் பெண்மக்கள் இன்றும் செய்து வரு கின்றனர். பனங் குருத்துக்களைப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதிலும், பதப்படுத்து வதிலும் வகிர்வதிலும், முடைவதிலும், பொத்துதலிலும் அவர்க்கு நிகர் அவர் களே. சில மகளிர் முடைவதில் தனித்திறனும், மற்றும் சில மகளிர் பொத்துதலில் தனித் திறனும் உடையவராகவிருப்பர். அந்த அந்த வேலையை அவ்வவற்றில் தனித்திறனுடையாரே செய்வர். இங்ஙனம் தனித் திறமையை வளர்க்கும் முறை யில் வேலையைப் பகிர்ந்துகொள்ளும் தன்மை (Division of labour) இவர்களிடம் நெடுங்காலமாக இருந்துவருகிறது.

கண்ணகி கோவலனுக்குத் 'தாலப்புல்லின் வால்வெண் தோட்டு, கைவன் மகடூஉக் கவின்பெறப் புனைந்த செய்வினைத் தவிசு' இட்டு உணவு படைத்தாள் என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. 'பனையினது தூய வெள்ளை நிற ஓலையைக் கொண்டு, தொழில் வன்மை படைத்த பெண்ணொருத்தி, அழகுபெற முடைந்த தொழிற் சிறப்புடைய தடுக்கு' என்பது இதன் பொருள்.

இம் 'முடைதல்' தொழிலை வளர்த்து, நம் மகளிரிடத்தே முடங்கிக் கிடக்கும் கலையார்வத்தைப் போற்றி, செல்வம் தேடும் வகையில் பல பெரிய தொழில் நிறு வனங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும், வெளிநாடுகட்கு இக்கைத்தொழிற் கலைப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டுமென்றும் பலரும் விருப்பம் தெரிவிக்கின் றனர். இன்று வெளிநாட்டுச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தரும் ஏற்றுமதி வாணிகத்தை நடத்துபவர் என்று, திரு. ஆ. நாகப்ப செட்டியாரவர்களை அரசி னரும் மற்றும் அனைவரும் பாராட்டுகின்றனர். இப் பனையோலைத் தொழிலை வளர்க்க முன்வந்தால், வெளிநாட்டார் விரும்பி ஏற்பராதலின் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டும் பெருமை நம் மகளிர்க்கே சென்று சேரவும் இடமுண்டு.


பனை ஓலை நம் நாட்டில் எளிதாகக் கிடைப்பது. அமெரிக்கப் பெண்களின் கைகளில், தூய வெண்ணிறப் பனையோலையினால் முடைந்ததும், பல வண்ணங்கள் பெற்று விளங்குவதுமாகிய கைப் பைகள் சென்று தங்கும் காட்சியையும் அதன் மூலம் நம் கைகளில் டாலர்கள் வந்து தங்கும் காட்சியையும் ஒருகணம் கற்பனை செய்து பாருங்கள். ஆடவர்களுக்குக்கூட இத்தொழிலில் ஊக்கம் பிறந்துவிடும்!

'தடுக்கு' செட்டி நாட்டில் வழி வழியாக வந்த மரபுடையது. 'அடே அப்பா, மருமகளை இப்படித் தாங்கித் தடுக்கிடுறாளே. மத்தவங்க கொண்டுவராததை அவளென்ன அப்படிக் கொண்டாந்துட்டா' என்று, செட்டி நாட்டுப் பெண்டிர் கூறுவர். ''அவளுக்கெப்படிக் கலியாணம் சொல்றது, போனதுக்கே அவ தடுக்குப் போடல்லேன்னுட்டாளே'' என்று கூறுவர். தடுக்குப் போடுதல் என்பது ஒப்புதலுக்கும் (Acceptance) தடுக்குப் போடாதது மறுத்தலுக்கும் (Refusal)பொருளாகின்றன. இல்லற வாழ்வில், கணவனைப் பேணும் மனைவியின் அன்புச் சின்னமாக இலங்கு கின்றது! எதிர்காலக் கணவன்மார்கள், தமக்குத் தம் மனைவிய ரிடப்போகும் கவின்மிகு தவிசாகிய, அழகுத் தடுக்குகளை நினைத்து நினைத்துக் கனவு காணுவர், இல்லையா?



கோவை நகரத்தார் சங்கத் தொடக்க விழாக் காட்சிகள்










நகரத்தார்
மாநில மாநாடு

●

கோவையில் கூடிய
ஆலோசனைக் கூட்டக்
காட்சிகள்



டாக்டர் மெ. சுந்தரம், M.A., M.Litt., PH.D.,
(தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகக் கிளை, மதுரை.)

ஆட்சித் துறையில் அரசனுக்கு உறுதுணை புரியும் குழுக்கள் இரண்டு சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. அவை (1) ஐம்பெருங் குழு, (2) எண் பேராயம் என்பன. ஐம் பெருங்குழு என்பது போர்க் காலத்தில் பணி யாற்றுவது. இது ஒரு சிறு வட்டம். இதனை விரிவுபடுத்தியதே எண்பேராயம் என்பது. அமைதிக் காலத்தில் நாட்டிற்குப் புரியும் நன்மைகள் பற்றி ஆய்ந்து பணியாற்றுவது இதன் வேலை. எண்பேராயத்தின் உறுப்பினர் எண்மர். அவர்கள்,

'நகர மாந்தர் நளிபடைத் தலைவர்
கனகச் சுற்றம் கடைகாப் பாளர்
இவுளி மறவர் யானை வீரர்
கரணத் தியலவர் கரவிதி மாக்கள்'

ஆவர். இவர் தம்முள் 'நகர மாந்தர்' என்பார் யாவர் என்பது ஆராய்தற்குரியது.

நகர மாந்தர் என்பார் 'குடிமக்கள்' என்று வரலாற்றுப் பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் தமது 'பாண்டியப் பேரரசு' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளனர். அக்கூற்றுப் பொருந்துமாறில்லை. 'நகர மாந்தர்' என்பது நகரத்தாரையே குறித்தல் வேண்டும் என்பது கீழ்வரும் சான்றுகளில் புலனாகும்.

(1) எண்பேராயத்தில் உறுப்பினராய் இருக்கும் எண்மரும் அரசனாலேயே அப்பத வியில் அமர்த்தப்படுவோர் ஆவர். இவ்வுறுப் பினர் பதவிக்குத் தேர்தல் இல்லை.

(2) வணிகர் போர்க் காலத்தில் அரச னுக்குப் பொருள் கொடுத்து உதவுவோர் ஆவர்.

(3) குடிமக்கள் அத்தனை பேருக்கும் குழு வில் வேலை இல்லை. மேலும் சாதாரணப் பொது மக்களைச் சிறப்புக் குழுக்களில் சேர்க் கும் வழக்கம் அக்காலத்து இல்லை. அங்ஙன மாயின் (நகர மக்கள் மட்டுமின்றி) நாட்டு மக்களையும் சேர்க்க வேண்டும். அங்ஙனம் சேர்த்தால் அதற்குப் பெயர் குழு அன்று; கூட்டம் என்று கூற வேண்டும்.

(4) வணிகத்தில் தலைமை இவர்களிடம் தான் இருந்தது.

(5) நீர் வணிகத்திற்கு உரியோராய் இவர் கள்தாம் திகழ்ந்தனர்.

இன்ன பிற சான்றுகளால் 'நகர மாந்தர்' என்பது நகரத்தாரையே குறித்து வழங்குவ தாயிற்று.

மேலும் நகரத்தில் இருந்த அனைவரையும் 'நகரத்தார்' என்ற சொல் குறிக்கவில்லை. நகரத்தில் வாழும் வணிகரை மட்டுமே அது குறித்து நின்றது.

'நகர மாந்தர் திரிதரு மருகில்' என்னும் சிலப்பதிகார அடி இதற்குச் சான்று பகரும். படைத் தலைவர் போன்று அரசியல் பதவி இல் லாததால் 'மாந்தர்' எனப்பட்டனர்.

வாணிகத் துறையில் பழம்பெருமை

நில வாணிகம், நீர் வாணிகம் ஆகிய இரண்டில், நீர் வாணிகத்தில் இவர்கள் பெறற்கரிய பெருஞ் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தனர். புகார், கொற்கை, காயல், நாகை ஆகிய கீழைக் கடற்கரைத் துறைமுகங்களில் இவர்கள் பேரளவில் கடல் வாணிகம் புரிந்து வந்தனர்.

அவை அனைத்தும் வரிசையாக, இயற்கையாகவே அமைந்திருந்தமை கல வணிகத்திற்குப் பெருந்துணை புரிந்தது. வெளி நாட்டு வணிகம் இவர்களிடம்தாம் செழித்துச் சிறந்திருந்தது. 'தொலைக்குப் போயிருக்கிறான்' என்ற செட்டி நாட்டு வழக்கு இது குறித்து எழுந்ததுதான். வணிகத்தின் பொருட்டுக் கடல் கடந்து செல்லும்போது பெண்களை உடன் அழைத்துச் செல்லுதல் இல்லை. இம் மரபினைத் தான்,

''முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை'' என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இங்ஙனம் கடல் வணிகத்தில் இவர்கள் தலைமை எய்தியிருந்தே நிலைமையால்,

''மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப' என்று ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனாரால் போற்றிப் பேசப்படுவாராயினர்.

அரசன் இவர்களுக்குச் செய்த பெருஞ் சிறப்பினை,

''மாராயம் பெற்ற நெடுமொழி யானும்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மாராயம் என்பது அரசனிடம் பெறும் பெருஞ் சிறப்பாகும். அரசன் அவ்வமயம் எட்டி, காவிதி போன்ற பட்டங்களை அளித்து வணிகர்களைச் சிறப்பிப்பான். இந்த 'எட்டிப்' பட்டத்தினைப் பெண்டிர் கூடப் பெற்றிருந்ததாகக் கல்வெட்டு, அகராதி ஆகியவை கூறுகின்றன.

'எட்டி' என்பதுதான் பிற்காலத்தில் 'செட்டி' என மருவி வழங்கலாயிற்று. 'மாணிக்க எட்டி' என்ற ஒரு வணிகன் பெயர் கல்வெட்டில் காணப்படுகின்றது. செட்டி என்பது சேட்டி என்று வடநாட்டில் வழங்கப்பட்டது. ஏனெனில் வட இந்திய மொழிகள் பலவற்றில் எகரம் இல்லை; ஏகாரந்தான் உண்டு. பின்னர் 'சேட்டி' என்பது 'சேட்டு' எனத் திரிந்தது.

'வணிகன்' என்பதைத்தான் 'பனியன்' என்று வடநாட்டில் வழங்கி வருகின்றனர். காந்தியடிகள் இந்தப் 'பன்யா' இனத்தைச் சேர்ந்தவர்தான். வட இந்திய மொழிகளில்

தொல்காப்பிய மரபு வழியில் நாம்



தொலைக்குக் கொண்டுவிற்கப் போகும் நகரத்தார் நல்லநாள் பார்த்துப் புறப்பட்டு, தம் ஊரிலேயே பிறிதோரிடம் சென்று தங்கியிருந்து பிறகு வெளிநாடு செல்வர். இதனைப் புறப்பட்டிருத்தல் என்பர். விட்டிலிருந்தே உணவு வரும், விட்டாரும் வருவர். ஆயினும் ஒரு வாரம் பத்துநாள் வரை கூடத் தம் ஊரிலேயே தங்கியிருப்பினும் புறப்பட்டுவிட்டதாகப் பொருள்.

முற்காலத்தில் அரசர்கள் படையெடுத்துச் செல்லுங்காலத்தில், நல்ல நாள் பார்த்துக் குடையையும், வாளையும் கொண்டு செல்லச் செய்வர். பின்பு அரசர்கள் வீரர்களுடன் சென்று போர் மேற்கொள்வான். இதனைக் குடைநாட்கோள், வாள்நாட்கோள், என்பர். தொல். புறத்திணை. 68.

அரசர் போர் வெற்றி கருதிநாள் பார்த்துப் புறவிடு செய்தமைபோல் வணிகர் ஊதியம் கருதிப் புறப்பட்டிருக்கும் வழக்கம் மேற்கொண்டனர். மன்னர் பின்னோராகிய வணிகருக்கு மன்னர் மரபுதானே வந்துற்றது.

வகரம் பகரமாக மாறும். (எ. டு) வங்காளம் பெங்கால். வணிகன் என்பது குலப்பெயர், பொதுப் பெயர்.

'வாணிகன் பெறுமே வைசிய வாழ்க்கை' என்பது தொல்காப்பியம். எட்டி என்பது அரசனுல் சிறப்புப் பெற்ற வணிகர் தலேவனின் சிறப்புப் பெயர் [பட்டம்]

'எட்டி குமரன் இருந்தோன் தன்னே' என்று மணிமேகலே கூறும்.

இன்றைய நிலே

இங்ஙனம் சொல் நலத்தாலும் பொருள் வளத்தாலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி 'கோடியுந் தேடிக் கொடிமரமும் நட்டு' கொற்றம் பரப்பிய கோவேந்தர் மரபினர் இன்று,

'குடைநிழல் அமைர்ந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர்'

என்ற பழம் பாடலுக்கேற்ப, சமுதாயத்தில் நலிவடைந்து. மெலிவடைந்து காட்சியளிக்கின்றனர்.

பல்வேறு புறச் சூழ்நிலேகளால் மெலிவடைந்த நம் சமூகத்தின் நலிவு போக்க வேண்டுவது நம்மனேர் தலேயாய கடனுகும். நம்மினத்தின் எழில் முகத்தில் இனந்தெரியாத மருக்களும், பருக்களும் படர்ந்துள்ளன. அவற்றை எங்ஙனம் போக்குவது? நம் அன்னே முடியிழந்து, அணியிழந்து, கோல் இழந்து, கொற்றம் இழந்து, காவிரிப் பூம்பட்டினம் போல் காட்சியளிக்கின்ருள். அந்த அவலக் காட்சியை எவ்வாறு மாற்றுவது? திரை கடலோடித் திரவியம் தேடித் தந்த கலம் ஆழ் கடலில் அமிழ்ந்து கொண்டிருக்கிறது. எல்லாம் கடலின் அடிவயிற்றில் சேர்ந்து விட்டன. எஞ்சியிருப்பது பாய் மரந்தான். அந்த பாய்மரந்தானும் பரம்பரைக்குக்கிடைக்குமா? அல்லது அதுவும் தன் இனத்தார் அடி வயிற்றிற் சென்று விடுமா? எதிர்காலமே விடைகூற வல்லது.

தொல்காப்பிய மரபுவழியில் நாம்



இறந்த வீரர்களுக்குக் கல்லெடுத்து வழிபாடு செய்வது பற்றித் தொல்காப்பியம் கூறுகிறது. புறநானூற்றிலும் இக் கல்லெடுத்தல் பற்றிப் பல பாடல்கள் உள்ளன. இன்றும் நகரத்தார் மரபில், "காட்சி கால்குகாள், நீர்ப்படை, நடுதல், சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று இருமூன்று வகையில் **கல்**" (தொல். புறத்திணையியல்-60) என்று கூறப்பட்ட இவை அனைத்தும் சடங்கு முறைகளாக நடைபெறுகின்றன. **கழித்தல்** என்றும் **கல்லெடுத்துப் புலால் ஊற்றிக்கொள்ளுதல்** என்றும் வரும் சடங்குகள் அனைத்தும் தொல்காப்பியர் கூறும் கல்லெடுத்தல் பற்றிய செய்திகளுடன் ஒப்புமையுடையன. இவற்றின் பொருளை இதுவரை யாரும் முழுதும் புரிந்து கொண்டதில்லே. கழிக்கும்போது ஐயர் உடன் வருகிருர். ஆற்றங்கரை செல்கிறேம். அங்குக் கல்காண்டல்-எடுத்துவரல் நீர்ப்படை செய்தல்-நடுதல்-பூசை செய்தல் யாவும் சடங்குகளாக நடத்தப்படுகின்றன. இசை வேதம் ஓதுதல், வைதிகச் சடங்குகளுடன் கலப்புற்று, வெறுமனே திட்டுக் கழித்தல் என்று தவருகப் புரிந்துகொள்ளப் படுகின்றன. கழித்து வந்ததும் விளக்கேற்றி வைத்ததும் எல்லோரும் அங்ஙனம் முறை செய்து வந்தவரை வீழ்ந்து வணங்கித் திருநீறு பெற்றுக்கொள்ளுதலும், உறவினர்கள் அரிசி மூட்டை முதலியன காணிக்கையாக வைத்தலும், எல்லோரும் கட்டாயமாக உடனிருந்து அந்தி நேரத்தில் புலாலுடன் இன்றேல் புலாலுக்குரிய இடத்தில் காயுடன் ஒரே சமயத்தில் உணவு கொள்ளுதலுமாகிய செயன் முறைகள் நடைபெற்று வருகின்றன. கல்லெடுத்தல் என்பதில் "**கல்**" என்ற தொல்காப்பியப் புறநானூற்றுச் சொல்லாட்சியே வழங்குகிறது. சமூக மரபை விடாது பின்பற்றும் பழமை மனப்பான்மையால் நிலேத்து விட்ட சிறப்புகளில் ஒன்று இது.

மார்கழி மாதம் திருவாதிரை நாள் (நட்சத்திரம்) அன்று பெண் மக்கட்கு திருவாதிரைப் புதுமை நடைபெறும். மார்கழி நீராடல், திருவெம்பாவை, திருப்பாவைக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது இது. ஆண் மகட்குக் கார்த்திகை மாதம் கார்த்திகை நாள் (நட்சத்திரம்) அன்று, கார்த்திகைப் புதுமையாகிய சிறப்பு நடைபெறும். இவை இரண்டற்கும் பல ஒற்றுமைகள் உண்டு.



இவை இரண்டும் 'புதுமை' என்ற பெயரை உடையன. திருமண வயதை ஒட்டிய இளம் மகளிர்க்கும் மைந்தர்க்கும் நிகழ்த்தப் பெறுவன. ஒரே நாளில், செட்டி நாட்டில் உள்ள எல்லா ஊர்களிலும், ஏறத்தாழப் பத்து வயதை ஒட்டிய மகளிர்க்கும், மைந்தர்க்கும் இச்சிறப்பு நிகழும். இவற்றில் மகளிரும் மைந்தரும் அணி அணியாகப் பங்குகொள்வர். இவை இரண்டற்கும் 'அரைக் கலியாணம்' என்ற பெயர் உண்டு. ஓர் ஊரில் வயது வந்த, விரைவில் திருமணம் செய்தற்கு உரியராகத் தக்க பெண்களும், ஆண்களும் எந்த எந்தக் கோயில் பிரிவில் குடும்பத்தில் யார் யார் உளர் என்பதை அனைவரும் அறிந்து கொள்வதற்கு, அந்நாளையச் சூழ்நிலையில் இவை வாய்ப்பளித்தன. அவ்வகையில், இவற்றை இன்றையத் 'திருமண விளம்பரச் (Matrimonial advertisment) சூழ்நிலையுடன் ஒருவாறு ஒப்பிடலாம். மகளிர் அணிபல பூட்டி, அழகு நலம் காட்டி வரிசை வரிசையாக, வீடுதோறும் சென்று, "ஆடி ஆடி வாரோம் அவரைக்காய் போடுங்க, பாடிப் பாடி வாரோம் பாடவரங்காய் போடுங்க, கூடிக் கூடி வாரோம் கொத்தவரங் காய் போடுங்க," என்று பாடி, தம்கைகளில் வெள்ளிப் பாத்திரங்களை ஏந்தி, உணவுப் பொருட்களை விரும்பிக் கேட்டுவரும் காட்சி இன்பக் காட்சியாக இருக்கும். பத்துப் பனிரெண்டு வயதை எட்டிப் பிடித்திருக்கும் இளம் மைந்தர்களெல்லாம் மாப்பிள்ளைக் கோலம் பூண்டு, கோல மயில் ஏறி உலாவுமொரு முருகனைப் போல, குதிரைகள் மீதேறி ஆடவர்கட்குரிய தனிமிடுக்குடன் வரிசையாக நகர்வலம் சென்று கோயில்களில் வழிபட்டு வரும் காட்சி மகிழ்ச்சி தருவதாகும். இவை இரண்டும் திருவாதிரை, திருக்கார்த்திகை என்று சிறப்பு அடைமொழி பெற்ற நாட்களில் கொண்டாடப்படுகின்றன. மேலும் திருவாதிரை சிவபெருமானுக்கும், திருக்கார்த்திகை முருகப் பெருமானுக்கும் உரிய நட்சத்திரங்களென்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்விரு புதுமைகளும் நடத்தப்பட்ட பிள்ளைகளுக்குத்தான், இறுதிக் காலத்தில் எரித்தல் முதலிய ஈமச் சடங்குகள் உண்டு;



இன்றேல் புதைக்கப்படுதல்தான் உண்டு. ஆண் மக்கள் சிவதீட்சை பெறக் கார்த்திகைப் புதுமை செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் கூறுவர். ஆடவரைப் பொறுத்தவரை இது 'உபநயனம்' போன்றதொரு சடங்காகும்.

கோவலனுகிய வணிககுலப் பெருமகனுக்கு மகளாக வாய்த்த மணிமேகலை 'ஆதிரை' என்ற வணிககுலக் கற்புக்கரசியிடம் முதன் முதலாகப் பிச்சை ஏற்ருள் என்று மணிமேகலைக் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. திருவாதிரை நாளன்று வணிககுலப் பெண்கள் வீடு வீடாகச் சென்று உணவுப் பொருட்களை விரும்பி ஏற்கும் காட்சி, இப்பழங்கால மரபை ஒட்டியது எனலாம். (சோமலெ—செட்டிநாடும் தமிழும்—பக்: 39). இதுபோலவே கார்த்திகைப் புதுமையும், மன்னர் பின்னேராகிய வணிக குல இளைஞர்கட்குக் குதிரையேற்றமாகிய பயிற்சி முடிந்தபின் அரங்கேற்றம் செய்யப்பெற்ற சடங்கு என்று கருத இடமுண்டு. இதனைச் சூள்பிடி (சூப்பிடி) என்று கூறுவதும் வலியுறுத்தும்.

['' தருமபுர ஆதீன வித்துவான், திருவண்ணாமலை ஆதீன விரிவுரையாளர், மதுரை ஆதீனச் சித்தாந்த சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர் மாமணி, பாலகவி'' வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் (தத்புருஷ தேசிகர்) அவர்கள் நம் மரபு வழி நாகரிகத்தை இங்கு சுட்டிக்காட்டுகிறார்.]



கன்னியம் மிக்க புண்ணிய பூமியாகிய தென்பாண்டித் திரு நாட்டில், தொன்று தொட்டு வருகின்ற பெருமையும் சிறப்பும் உடையவர்களாய் வாழ்ந்து வருகின்றவர்கள் நமது நகரத்தார் மரபினர்கள். மக்கள் எண்ணிக்கையாலும், பொருளாதாரத்தாலும் மேம்பட்டிருக்கின்ற இன்னும் எத்தனையோ மரபினர்கள் இங்கு இல்லாமலில்லை. ஆயினும் அவர்கள் எல்லோரையும் விட அதிகமான செல்வாக்கையும் புகழையும் நம் மரபினர்கள் பெற்றிருக்கிறார்களென்பது உரிமை பற்றிச் சொல்வதன்று. உண்மை பற்றி உரைப்பதேயாகும்.

காரைக்காலம்மையார், பட்டினத்தார் போன்ற அருளாளர்கள் தோன்றிய நமது மரபு, இன்றைக்கும் அந்த அருள் வழியிலிருந்து மாறுபாடடையாமல் ஓரளவு ஒழுகி வருகிறது. தெய்வத்தை முன்னிறுத்தியன்றி எதனையும் செய்யாச் சிறப்புடைய மரபு நமதுமரபு. மங்கலத்திற்கும் — அதனோடொப்ப அதன் மறுதலைக்குங்கூடச் சமய சாதனங்களை இன்றியமையாதனவாகக் கொள்ளும் மாட்சிமையைத் தனவணிகமரபினரிடத்தன்றி வேறெவரிடத்திலும் காண முடியாது.

''கோயில் விளங்கக் குடி விளங்கும்'' என்ற பழமொழி நம் தனவணிக நாட்டில் வழங்குகிற அளவுக்குப் பிற இடங்களில் வழங்குவதாகத் தெரியவில்லை. வாணிபத்தின் பொருட்டுச் சென்ற பிற நாடுகளிலெல்லாம் வானளாவிய கோபுரங்களுடன் கோயில்களை எழுப்பி வைத்திருக்கிற பெருமை நகரத்தார்களுக்கல்லாமல் வேறு யாருக்கு உண்டு?

நமது மரபினர்களது வரலாறு நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரத்தில் நமது மரபினர் முதலில் ''நாக நாட்டுச் சாந்தியாபுரி நகரத்தில் வாழ்ந்த காலத்தில் கோபதீசுவர சுவாமி தெரிசனமும், சதாசிவ குருபீடத்தில் தீக்ஷாகிரியையும் கைக்கொண்டு மரகதவிநாயகர் பூசையுடன் இரத்தின வியாபாரமும் செய்து கொண்டிருந்தார்களெனவும், பின்னர்த் தொண்டை நாட்டுக் காஞ்சிபுரத்தில் வாழ்ந்திருந்த காலத்தில் சத்தி புரீசுவரர் தெரிசனமும் அருணகிரி சிவாசாரிய குருபீடத்தில் தீட்சா கிரியையும் கைக்கொண்டு முன்பு போல் மரகத விநாயகர் பூசையுடன் இரத்தின வியாபாரமும் செய்து கொண்டிருந்தார்களெனவும், பின்னர் சோழ நாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்த, காலத்தில் உருத்திராபதீசுவர சுவாமி தெரிசனமும் ஈசான சிவாசாரிய குருபீடத்தில் தீக்ஷாகிரியையும் கைக்கொண்டு சோழ மன்னர்களுக்கு மகுடம் சூட்டுதல், மாளிகைகளில் தங்கக் கலசம் வைத்துக்கொள்ளுதல் முதலிய உரிமைகளையுடையவர்களாய் விளங்கினார்களெனவும் கூறப் பெற்றுள்ளது.

பாண்டி நாட்டிற்கு இவர்கள் வந்தகாலம் கலியுகம் 3808-ல் என்று தெரிகிறது. அப்போது இந்நாட்டை ஆண்ட செளந்தரபாண்டிய மன்னனிடம் அநேக சிவாலய—மடாலயங்களைப் பூரண சுதந்திரத்துடன் பெற்று அந்தக் காலம் முதல் அவற்றை முறையாகப் பரிபாலித்து வருகிறார்கள். கடலுக்கு மேற்கும், வைகை ஆற்றிற்கு வடக்கும், பிரான்மலைக்குக் கிழக்கும், வெள்ளாற்றுக்குத் தெற்குமாகிய

இந்நான்கெல்லைகளுக் குட்பட்ட பகுதியே 'செட்டிநாடு' என்று குறிக்கப் பெறுவது. பாண்டி நாட்டுக்கு இவர்கள் வந்து குடியேறிய பின்பு முடிவு செய்துகொண்ட சமூக நடை முறைகளுள் ஒன்று 'மாதா, பிதா, குரு, தெய் வம் முதலிய பெரியோர்களுக்கு மட்டும் வந் தனை வழிபாடு செய்கிறதன்றி, அரசர்களையும் உத்தியோகத்திலிருக்கிற பிராமணர்களையும், மற்ற எவரையும் வணங்குவதில்லை" என்ப தாகும். இந்த முடிவு நமது மரபினரது அழுத் தமான கடவுட் கொள்கையையும், தத்தம் நெறி வழியே ஒழுகாதவர் பிறப்பால் உயர்ந்த மரபினராயினும் மதிக்கத் தகுந்தவர் அல்லர் எனக் கொண்ட உறுதியையும் நன்கு காட்டும்.

அரசர்களையும், உத்தியோகத்திலிருக்கிற பிராமணர்களையும் தமக்கு மேம்பட்டவர்க ளாக மதிக்காதிருந்த நம் மரபினர் இன்று யார் யாருக்கெல்லாமோ தம்மைக் கீழ்ப்பட்டவர்க ளென நினைத்து வேண்டாதவற்றையெல்லாம் செய்து வருகிறார்களென்று சொல்லாமலிருக்க முடியவில்லை. ''சிவ மதத்திலேயே இருக்கிறது; மற்ற மதங்களில் சேருகிறதில்லை" என்பது நம்மவர் கொண்ட சாதிமுறை நியாயங்களில் ஒன்றாகக் காணப் பெறுகிறது. ''சிவத்துக்கு மேலொரு தெய்வமில்லை" என்னும் அடிப் படைக் கொள்கையையுடைய சிவ மதத்தில் நின்று, அம்மதத்தினர்க்குரிய சிவதீட்சைகளை முறையாகப் பெற்று, அறநெறி முறையில் ஒழுகவேண்டிய நம்மவர்கள், தற்காலத்தில் எத்துணையோ வகையான மாறுபட்ட கொள் கைகளில் சிக்குண்டு அவலநிலைக்கு ஆளாகி வருகிறார்களென்பதும், இந்நிலை இப்படியே நீடித்துக்கொண்டு போகுமானால், மிக விரை வில் நம்மவரது சமயவாழ்வு ஒளி குன்றிவிடு மென்பதும் நினைவிலிருத்தவேண்டியனவாகும்.

''தீவினை விட்டு ஈட்டல் பொருள்" என் னும் முதுமொழியை விடாது கடைபிடித்து வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள்.

''நெடு நுகத்துப் பகல்போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉ மிகை கொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது''


காவிரிப்பூம்பட்டினத்தில் நம் மரபினர் வாழ்ந்திருந்ததைச் சங்க இலக்கியம் எடுத்துப் பாராட்டிப் பேசுகின்றது. ஈட்டப் பெற்ற செல்வம் அறவழியில் வந்ததாயின் அது கொண்டு செய்யப் பெறுகின்ற செலவும் அற வழிப்பட்டதாய் அமையும். அங்ஙனமின்றி அது மறவழியில் ஈட்டப்பெற்றதாயின் அதன்

தொல்காப்பிய மரபு வழியில் நாம்

"படைப்பு" என்பதும் "சாமிக்குப் படைக் கிறது" என்பதும் நகரத்தார்கள் தெய்வ மாகிய தம் முன்னோர்களைக் கருதிச் செய்வ தாகும். திருமணம் முதலிய மங்கல விழாக்கள் வருமேல் அவற்றுக்கு முந்திய நாட்களில், நம் முன்னோரை வணங்கும் இப் படைப்பை மேற்கொள்வர். இதில் புலால் அவசியமென்றும் அஃதின்றேல் கோழியும் முட்டையும் அவசியமென்றும் அதுவும் கூடா தென்றால் அவற்றுக்குப் பதிலாகப் பணியாரம் வைத்து வணங்கலாம் என்றும் கூறுவர்.

வாழ்வரசியாக இளம் வயதில் இறந்து விட்ட பெண்களுக்கும் கண்ணகி வழிவந்த மரபினர் படைப்பிட்டுக் கும்பிடுவர். படைப் புக்கு என்று தனியறை இருக்கும். இறந் தவர் சைவ உணவு உட்கொள்பவராயின் சைவ உணவையும், இறைச்சிஉணவு உண் பவராயின் இறைச்சி யுணவையும் படைப்பர்.

"கல்லெடுத்துப் புலால் ஊற்றிக்கொள்ளு தல்" என்ற சடங்குடன் இப் படைப்புத் தொடர்புடையதாக உளது. தொல்காப்பி யத்திலும் கல்லெடுத்தல் பற்றிய சூத்திரத்தில் "சீர்த்தகு மரபில் பெரும்படை" என்று வரு கிறது. அதற்கு, நச்சினார்க்கினியர் "அக் கல்லைத் தெய்வமாக்கி, அதற்குப் பெருஞ் சிறப்புகளைப் படைத்தல்" என்று உரை யெழுதுகிறார். தொல்காப்பியர் குறிப்பிட்ட சமுதாயச் சடங்கை, அதே பெயரால், அம் முறைப்படியே மூவாயிரம் ஆண்டுகட்குப் பின்னரும் நாம் பின்பற்றி வருகிறோம்.



போக்கும் அவ்வழியிலேயே ஆகிவிடும். இவ்வுண்மையைத் தருக்க நூல் வல்லாரும் உலகியலநுபவமுடையாரும் நன்கறிவர்.

பழங்காலத்தில் நம் முன்னோர்கள் தேடிய செல்வமனைத்தும் அறவழியிலேயே வந்ததாதலின் அவர்களது செலவு முறையும் நல்வழிப்பட்டதாகவே அமைந்திருந்தது. ''காசு வீணிற் செலவிடார். உசிதமானதிற் கன திரவியங்கள் விடுவார்'' என்று வணிகரியல்பைப் பற்றிக் குமரேச சதகம் கூறுகின்றது. புண்ணியங்களிற் சிறந்த சிவ புண்ணியத்திற்குப் போட்டியிட்டுக் கொண்டு செலவு செய்த மரபு தனவணிக மரபென்று சொன்னால் அதை எவரும் மறுக்க முடியாது.

பொருளீட்டுவதில் கொண்டிருந்த ஆர்வத்தைவிட எத்தனையோ மடங்கு மிகுதியான பேரார்வத்தைச் சிவ புண்ணியந் தேடுவதிலும் அதற்காக அரும்பாடு பட்டுச் சேமித்துவைத்த பொருளைச் செலவிடுவதிலும் நம்முன்னோர்கள் கொண்டிருந்தார்கள். முடியுடை வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களுக்குப் பிறகு அவர்கள் எழுப்பிய திருக்கோயில்களைச் சிவாகம நெறி வழுவாது புதுப்பித்துத் திருப்பணி செய்து ''மன்னர் பின்னோர்'' எனப் பெறும் தங்கள் பெயர்களுள் ஒன்றை உலகத்தார்க்கு மெய்ப்பித்துக் காட்டிப் புகழையும், புண்ணியத்தையும் கொள்ளைக் கொண்டவர்கள் தனவணிக மக்கள்.

சிவாலயத் திருப்பணி, வேதபாடசாலை, சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை, குருபூசை மடம், பசு மடம், நந்தவனம், அன்னசத்திரம், கல்விச்சாலை முதலிய பதி புண்ணிய பசு புண்ணிய நிறுவனங்களை ஏற்படுத்திப் பாதுகாத்து வருதலையே வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு நமது முன்னோர்கள் வாழ்ந்திருந்ததனால் அவர்களது வாழ்க்கையில் எவ்விதத்துன்பமும் வராது. அமைதியே எப்பொழுதும் நிலவிக்கொண்டிருந்தது. செட்டி நாடல்லாத வேறிடங்களில் செட்டியார்களல்லாத மற்றவர்களால் நடத்தப்பெற்று வரும் அற நிறுவனங்களுக்குப் பொருள் சேகரிக்கக் கருதுபவர்கள் இந்தக் காலத்திலும் முதற்கண் செட்டிநாட்டைத்தான் நினைவு கொள்ளு

தொல்காப்பிய மரபுவழியில் நாம்

திருமண நாளுக்கு முதல்நாள் மாலை பெண் விட்டாரின் ஊருக்கு, மாப்பிள்ளை விட்டார் புறப்பட்டுச் செல்வர். அன்று இரவு மாப்பிள்ளை அழைப்பு நிகழும். அப்போது மாப்பிள்ளை ஒரு பையைத் தோளில் போட்டுக்கொண்டு செல்லுதல் வழக்கம். அதனை வள்ளுவப்பை என அழைப்பர் இதில் ஒரு சிறப்பு இருப்பதாகத் தெரிகிறது. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என்பது ஓர் அகத்திணை மரபாகும். தான் காதலித்த பெண்ணை மணப்பதற்குத் தானே பொருள் தேடி வந்து மணக்க வேண்டும் என்பது பழங்காலச் சமுதாயப் பழக்கம். அங்ஙனம் பொருள் சேர்த்து வந்ததற்கு அடையாளமாகத்தான் இன்னும் இப் பை இக்கால மாப்பிள்ளைகளால் சுமக்கப்படுகிறது போலும்.



கிறார்களென்பது உலகறிந்த உண்மையாகும். அவர்கள் எண்ணியாங்குப் பயனடைவதும், எல்லா இடங்களையும் விட இங்கேதான் மிகுதியாக இருக்கிறதென்பதை அநுபவமுடையார் அனைவருமறிவர்.

இங்ஙனம் பல்லாற்றாலும் புகழ்பெற்றுச் சிறந்தோங்கிய நமது மரபு, இன்று உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்பெறுகின்ற பொருளாதார முதலியவற்றிலும், ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாது வேண்டப்பெறுகிற சமய ஒழுக்கத்திலும் மிகப் பின்னடைந்து வருகிறது. ஒருவனது உலகியல் வாழ்வு சிறப்பதற்கு அவனது முன்னைத்தவமே காரணம். இதனை ''மேலைத் தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம்'' என்னும் மூதுரையால் அறியலாம்.

''தவம் சமய வாழ்விலிருந்து தழைப்பது. எங்கெல்லாம் மக்கள் சமய வாழ்வுடையவர்களாக இருக்கின்றார்களோ அங்கெல்லாம் அமைதியும் இன்பமும் குடிகொண்டிருக்கும். இதனை உணர்ந்து ஒழுகியவர்களது பரம்பரையில் வந்தவர்கள் நாம். ஆனால் உயிர்நாடியான சமய வாழ்க்கையில் முன்னோர்களைப் போல நாம் கவனம் செலுத்தாது வாழ்ந்து வருகிறோம். அதனாலேயே உலகியல் பற்றிய அளவில் ஒரளவு அல்லல் நம்மைப் பற்றிக் கொண்டிருக்கிறது.

''சைவமாம் சமயஞ்சாரும் ஊழ்பெறல் அரிது'' என்பது சிவஞான சித்தியார். வேதாகமங்களில் விழுமியதாக விதந்து கூறப்பெற்றது சைவ சமயமாதலின் அந்த மெய்ச் சமய நெறியில் நின்றொழுகும் புண்ணியம் அரிதிற் கிடைப்பதாகும். அவ்வரும் பெரும் புண்ணிய வாய்ப்பு இயல்பாக அமையப் பெற்றிருந்தும் அதனையறியாமல் நம்முடையதல்லாதனவும் படிக்கிரமத்தில் எவ்வளவோ தாழ்ந்திருப்பனவுமான நெறிகளைப் பின்பற்றி நம்மவர் செல்லுவது பெரிதும் வருந்துதற்குரியதாயிருக்கிறது.

''கோடி ஜந்மார்ச்சிதை: புண்யை:
சிவேபக்தி ப்ரஜாயந்தே''

என்னும் சிவகீதை ''கோடிப் பிறப்புகளில் ஈட்டிய புண்ணிய வசத்தினாலேயே சிவனிடம் பக்தி உண்டாகிறது'' என்று கூறுகின்றது. திருநீறு, உருத்திராக்கதாரணம் ஸ்ரீ பஞ்சாட்சர செபம் ஆகியவற்றைப் பிறப்புரிமையாகக் கொண்டிருந்த தனவணிக மக்கள், இன்று அவற்றைப் புறக்கணித்து வாழ்வது மட்டுமின்றி மிக உயர்ந்ததாயிருக்கின்ற சிவநெறியைக் கடைபிடித்தொழுகும் நக்கார்களைப் பார்த்து ஏளனஞ் செய்யும் அளவுக்கும் இன்று வந்துவிட்டார்களென்றால் இனி எதிர்காலத்தைப் பற்றிப் பெருங் கவலைப்பட்டுத்தான் ஆகவேண்டும்.


சைவ சாதனங்களாகிய திருநீறு, உருத்திராக்கம், ஸ்ரீ பஞ்சாட்சரம் ஆகியவற்றை நாம் கைக்கொள்ளுவதற்குரிய தகுதி நமக்குச் சிவ தீட்சையினாலேயே வருவதாகும். சைவாகமங்களிற் கூறப் பெற்றதும் மும்மலங்களையும் நீக்குவதும் உயர்ந்ததுமான தீட்சையைக் காட்டிலும் மற்ற வருணாச்சிரமங்கள் உயர்ந்தனவல்ல. தீட்சையினாற்றான் மோட்சம் கிடைக்கும். அஃதின்றி முத்தியை விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கத் தொடங்கிய குருடர் போல்வர்' என்று வாயு சங்கிதை கூறுகின்றது.

முற்காலத்தில் விதிப்படி ஏழாம் ஆண்டு முதல் ஒன்பதாம் ஆண்டுக்குள் சமய தீட்சையையும் பின்னர் முறையே விசேட, நிர்வாண தீட்சைகளையும் பெற்றுச் சாதகர்களாக நம் முன்னோர்கள் வாழ்ந்திருந்தார்கள். பின்னர் உபதேசம் என்னும் பெயருடன் உருமாற்றமும் செயல் மாற்றமும் பெற்றுத் தோன்றிய சமயதீட்சை கூடத் திருமணத்தின் பின்னர் தான் பெறும்நிலை வந்தது. இப்போதோஎண்பதாண்டுகள் நிறைந்து பேரன் பேத்தியர் குடும்பங்களுடன் வாழ்கின்றவர்கள் கூட உபதேசத்தைப் பற்றிய எண்ணம் சிறிதுமில்லாது உண்பதும், உறங்குவதுஞ் செய்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சமய நெறியில் நின்றொழுகுதற்குரிய தகுதியைத் தருவதாகிய சிவ தீட்சைகளைத் தகுதியுடைய ஆசாரியரிடம் பெற்றுச் சரியை, கிரியை, யோகமாகிய தவங்களைக் கடைப்பிடித்து அதனால் கிடைக்கும் இம்மை நலம் மறுமை நலங்களை அடைந்து இன்புறுதல் அறிவுடைமையாகும். இதுவே நமது மரபினது மரபு.

நலம் பெருகுக!

நகரத்தார் சங்கம், கோயமுத்தூர்



துணைத் தலைவர்
P. S. S. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்



செயலாளர்
N. K. நாகப்ப செட்டியார் அவர்கள்

நகரத்தார் சங்கம், திருச்சி ஏழாம் ஆண்டு நிறைவு விழா 21-4-1956



முன் வரிசை :—திருவாளர்கள் VE. A. வயிரவன் செட்டியார், சுப. அருணாசலம், கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார், பி.ஏ., A. M. M. முருகப்ப செட்டியார், மு. அ. அருணாசலம் செட்டியார் (தலைவர்), AR. A. RM. சொக்கலிங்கம் செட்டியார், எம்.எல்.ஏ., AV. K. ஆவிச்சி செட்டியார் (துணைத் தலைவர்).

பின் வரிசை :—திருவாளர்கள் S சண்முகம், T. N. S. தேனப்ப செட்டியார், O. PR. உடையப்ப செட்டியார், S. RM. S. சுப்பையா செட்டியார் (செயலாளர்), RM. அருணாசலம், M. S. V. மெய்யப்ப செட்டியார், R. இரத்தினம், M. P. சொக்கலிங்கம் (செயலாளர்), CT. VE. CT. சிதம்பரம் செட்டியார்.

களை

கண. சிற்சபேசன், எம்.ஏ.,
(தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி, மதுரை.)

நல்ல விளை நிலத்தில் பயிர்களைப்போலவே தோற்றம் தந்து ஊறு செய்வது களை. (தான் வளர்ந்து, பயிரை வளரவிடாது செய்து, தானும் பயனற்றுப்போவது களை.) மனிதர் களைப் போலவே தோற்றந் தந்து சமுதாயத்தைக் கெடுப்போரும் களை போல்பவரே. அது போலத்தான் ஒரு சமூகத்தில் எண்ணற்ற பல பழக்கங்கள் களைகளாக முளைத்து நிற்கின்றன.

அவற்றைக் களைய முற்படுவோரை மரபுக் கரங்கள் தடுத்து நிற்கின்றன. களைகள் தம்முள் மகிழ்ந்து செறிந்து நிறைந்து காணப்படுகின்றன. அதுதானே விளை நிலத்திற்கு இலக்கணம்!

நகரத்தார் சமூகத்தில் இது போன்ற தேவையற்ற—ஒழிக்க வேண்டிய களைகள் மண்டிக் கிடக்கின்றன. அவற்றை ஆராய்ந்து வேரோடு ஒழிக்க வேண்டுவது நம் கடமை. அவற்றைப் பற்றிய எண்ணமே நம் நெஞ்சில் எழாமல் போகின்ற அளவு உறுதி பிறக்கட்டும்.

1. முறை :—நம் சமூகத்தின் வாழ்வியலும் பொருளியலும் தாழ்ந்து போனதற்குக் காரணம் நம் சமூகத் தாய்மார்களே. அவர்களால் உருவாக்கப்பட்டதே நமது சமுதாய உறவு முறை வாழ்வு. பெண்களுக்குத் தேவைக்கு மேல் உரிமை தந்தால் எந்தச் சமுதாயமும் தாழ்ந்து போகும் என்பதற்கு நம் சமூகம் ஒன்றே போதிய சான்றாகும். இதற்குப் பழங் காலத்தில் நாம் ஏற்றுக்கொண்டிருந்த வாணிபத் தொடர்பே காரணம். மலேயா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்குப் பழங்காலத்தில் போகத் தொடங்கிய நகரத்தார் ஆண் மக்கள் பெண்டிரை உடன்கொண்டு சென்றாரில்லை. அவர்கள் மூன்றாண்டிற்கு ஒருமுறை திரும்பி வந்து ஓராண்டு வரை தங்கி, மீண்டும் கப்பலேறினர். இதனால் பெண்டிர் தாமே தனித்து வாழும் கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு ஒரே நேரத்தில் கணவரை வழியனுப்பி வைத்த பெண்டிர் கல்வி கற்றிருந்தனரோ எனின் அன்று! அன்று!! ஆகவே சமூக வேலிக்குள் 'முறை' என்ற முறையற்ற ஒரு களை தோன்றிற்று.

முறை என்பது கொடுப்பதும் பெறுவதுமாகும். பணத்தையோ பொருளையோ பெறுவது, திருப்பிக் கொடுப்பது. முறையைப் பற்றி நமது ஆச்சிமாரின் கற்பனைத் திறத்தில் நூற்றில் ஒரு பங்கு பெற்றிருந்ததால்தான் கம்பரால் ஏறத்தாழ 12000 பாடல்கள் பாட முடிந்தது. இவர்களது கற்பனைத் திறனின் முழு வேகத்தையும், ஆற்றலையும் காண விழைவோர் 'கல்யாண முறைச் சிட்டை' என்ற நூலிற் புகுந்து ஆய்க! வற்றல் வகைகளைக் கண்டு தெளிக'

தோது: மேற்கூறிய குறைகள் கூடத் தனி மனிதனைத் துன்புறுத்துவன. ஆனால், சமூகத்தையே வேரில் தாக்கும் ஒரு களை 'தோது' என்பது. 'தோது' என்ற சொல்லுக்கு 'ஒப்பு' எனப் பொருள் கூறலாம். இத் தோது என்ற பழக்கம் என்று மறைகிறதோ அப்போது நம் சமூகம் விழிப்புறத் தொடங்குகிறது என மகிழலாம். பொருள் இருப்பவனோடு இல்லாதவன் தோது போட நினைக்கிறான்; முடிவில் கடன் தொல்லையில் ஆழ்கிறான். இருப்பவனோ தன்னிடம் இல்லாத

பொருளை வைத்திருக்கும் மற்றொருவனோடு தோது போட நினைக்கிறான். முடிந்தால் மகிழ்கிறான், முடியாவிட்டால் மன நோய் பெறுகின்றான். பெண்ணுக்கும் பையனுக்கும் தோது பார்க்க வேண்டிய காலம் போய் வெண்கலத்திற்கும், மரப்பொருளுக்கும் தோது பார்க்கும் காலம் வந்துள்ளது. விருந்துக்கும்.

புகழ்: பழங்காலத்தில் நம் சமூகத்தில் ஒருவர்க்கொருவர் உதவி செய்தனர். அதனை வெளியில் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால், இன்றோ சமூகத்தில் பல பெரியவர்கள் புகழ் பெற வேண்டுமென்ற விருப்புடையவராக உள்ளனர். இதற்குத் தலையாய காரணம் புகழின் மேல் அவர்கள் கொண்டுள்ள காதலே யாகும். அதில் தவறில்லை. ஆனால் முகத்துக்கெதிரே புகழ்ந்து, பின்னே அவமதிக்கும் பொருந்தாத புகழ் மொழிகளுக்கு அடிமையாகி விடுகின்றனர். இதனால் அப்பெரியவர்களை அடுத்துப் புகழ்ந்து வாழ்ந்து ஏமாற்றி வரவும் முடிகிறது. அப்பெரியவர்கள் இனிமேலாவது விழிப்புறட்டும். முகப் புகழ்ச்சி கூறும் போலிக்குழுவை விலக்கி உதவி நிற்கும் உண்மைக் கூட்டத்தைக் கண் திறந்து பார்க்கட்டும்.

மெலிவு: உடலின் மெலிவு சிலபோது நன்மைக்கும் பயன்படலாம். மிகச் சிறந்த செயல்களைச் செய்து உலகில் உயர்ந்தவர்கள் மெலிந்த உடல் கொண்டவர்கள்—ஆனால் வலிய நெஞ்சம் படைத்தவர்கள். நம் சமூகத்தவர்க்கும் 'கொண்டு வேலை' செய்த காலத்தில் இவ்வலிமை மிகுதியாக இருந்தது. நினைத்தும் பார்க்க முடியாத வேற்று மொழி பயின்ற நாடுகளில் சின்னஞ்சிறு பருவத்தில் சென்றவர்கள்கூடச் செல்வம் வாரி மீண்டனர். தொழில் தொடங்க அவர்கள் மன மெலிவு கொண்டாரில்லை. ஆனால் இன்றோ நமது சமூக இளைஞர்கள் இம்மெலிவு கொண்டவராயினர். குறைந்த முதலீட்டில் வாணிபந் தொடங்க முடியாதெனத் தளர்ச்சியுற்று எல்லோரும் வேலை தேடி உழல்கின்றனர். வேலையிற் பெறும் ஊதிய அளவில் வாழ முடியாத நிலைக்கு ஏற்கனவே நமது வாழ்வு பன்னூறு மடங்கு உயர்ந்திருக்கிறது. செல்வக் காலத்தில் உயர்ந்த வாழ்வு அல்லாக் காலத்துக் குறையவேண்டுவது முறை. ஆனால் குறைய முடியாதவாறு சமூக 'மரபு ஆணிகள்' அதனை அங்கேயே நிறுத்தி வைத்திருக்கின்றன. அந்த ஆணிகளை அகற்ற வல்ல ஆற்றல் மிகுந்த இளமைக் கரங்கள் என்று தோன்றுமோ?

இதுபோன்ற எண்ணற்ற களைகள் மண்டிக் கிடக்கின்றன. இவை ஒழிய வேண்டும்—ஒழிக்கப்பட வேண்டும். இயலாதெனக் கருதுகின்ற சிலர் நெஞ்செரிந்து மனம் நொந்து 'எல்லார் கையிலும் வறட்சி வந்துற்ற பிறகு, எல்லாம் தானே நின்றுபோகும், அப்புறம் ஆச்சிமார் பிடிவாதமெல்லாம் நின்று போகாதோ' என நினைக்கின்றனர். இத்தகைய நிலையும் ஊறு விளைவிப்பதாகும். தறிகெட்டு ஓடுகின்ற பரியைப் பற்றி நிறுத்த முயல்வதுதான் ஆண்மையே அன்றி, 'ஓடட்டும், குதிரைகளைப்புற்று நிற்கத்தானே போகிறது' என நினைப்பது ஆண்மையாகாது.

ஊருணி

— தி. ந. வி. சு.

நான் முன்பு ஒரு சமயம் காரைக்குடிக்கு வந்திருந்தேன். அப்போது, ஒரு சிறு குழந்தை 'நாங்கள் ஊருணிக்குப் போகிறோம்' என்று கூறியது. அது கூறியதைக் கேட்டதும், 'அடே! இச் சிறு குழந்தை எவ்வளவு அழகான தமிழ்ச் சொல்லைக் கூறுகிறது!

'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு'

என்ற குறளில் கூறப்பட்ட 'ஊருணி' என்ற சொல்லை இக்குழந்தை கூறுகிறதே! - ஒரு வேளை இதற்குச் சொல்லிக் கொடுத்திருப்பார்களோ!' என்று ஐயுற்றேன். ஆனால், 'ஊருணியிலேயே கால் முகம் கழுவிக் கொள்ளலாம்', 'கோயிலுக்கு முன்னாலே ஊருணி இருக்கிறது' என்றெல்லாம் அங்கிருந்த பல அன்பர்கள் பேசுவதைக் கேட்ட போதுதான், இச் சொல் அங்கு வழக்கத்தில் இருக்கிறது என்பதை அறிந்தேன்.

—அழ. வள்ளியப்பா எழுதிய '1944 ஜூலை 9' என்ற கட்டுரையிலிருந்து.

இன்றைய பர்மாவில் நகரத்தார்கள்

சொ. சுப. சுப்பிரமணியன் செட்டியார்

நகரத்தார்கள் பர்மாவிற்கு வந்த காலம் முதல் லேவாதேவித் தொழிலே முக்கியமாகக் கொண்டிருந்தார்கள். 1930-ம் ஆண்டுக்குப் பிறகு லேவாதேவித் தொழில் ஓரளவு குறைந்து, நிலச்சுவான்தார்களாக மாறிஞர்கள். ஆனுல், யுத்தத்திற்குப் பிறகு 1948-ம் ஆண்டு முதல் மீண்டும் லேவாதேவித் தொழில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பெற்று பல இடங்களில் செய்யப்பெற்று வந்தது. 1945-ம் ஆண்டு லேவாதேவிச் சட்டப்படி லைசன்ஸ் பெற்று செய்யப்பெற்று வந்த இந்தத் தொழில் பல ஆண்டுகள் நன்ருக நடந்தது. வியாபாரத்திற்கு மிகவும் உதவியாக இருந்த இத்தொழிலே சர்க்கார் ஏற்று நடத்த முயன்று 1962-ம் ஆண்டு ஒரு புது லேவாதேவிச் சட்டத்தை இயற்றிப் பழைய லேவாதேவிக் காரர்கள் தொழில் செய்ய முடியாதபடி நிறுத்திவிட்டார்கள். பழைய லேவாதேவி லைசன்ஸ்தாரர்களுக்கு லைசன்ஸ்கள் புதுப்பித்துக்கொடுக்கப் பெறவில்லை. நாளடைவில் அவைகள் காலாவதியானதால் தொழில்கள் நிறுத்திவிடப் பெற்றன. 1945-ம் ஆண்டுச் சட்டப்படி லைசன்ஸ் அமுலில் உள்ளவர்கள் தான் கோர்ட்டுகளில் பிராது போடவோ, டிக்கிரிபெறவோ, நிறைவேற்றவோ முடியும். ஆகையால், லைசன்ஸ் காலாவதியானவர்கள் தங்களின் பணங்களை வசூல் செய்ய முடியாமல் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிருர்கள். நடவடிக்கைகள் எடுக்க முடியாது என்று தெரிவதால், கடன் பெற்றவர்கள் திரும்பக்கொடுக்கும் எண்ணத்தை விட்டுவிட்டார்கள்.

நகரத்தார்களில் பலருக்கு வேறு சொத்துக்களும் இருக்கின்றன. அவை யாவன: வீடுகள், எண்ணைக் கேணிகள், மர மில்கள் வகையரு. சமீபத்தில் எண்ணைக் கேணிகளை தேசியமாக்குவதாக சர்க்கார் வெளியிட்டுள்ளார்கள். மர மில்களை சொந்தத்தில் மரம் வாங்கி அறுவை செய்ய இயலாதவிதமாக சட்டங்கள் இயற்றப்பெற்று, குறிப்பிட்ட மில்களில் சர்க்கார் குத்தகையாக மரம் அறுவை செய்து கொண்டு வருகிருர்கள். பெரும்பாலான மில்கள் வேலையில்லாமல் இருக்கின்றன. வீடுகள் இன்னும் பாதிக்கப்படவில்லை. ஆனுல், வீடுகளின் மதிப்பு மிகவும் குறைந்து முந்திய மதிப்பிலிருந்து பாதிக்கும் குறைவாக இருக்கிறது. வீட்டில் குடியிருப்பவர்கள், அவர்கள் தொழில் பாதிக்கப் பெற்றிருப்பதால் சேவா ஒழுங்காகக் கொடுக்க முடிவதில்லை. வரிவகையருக் கட்டுவதுகூட பல இடங்களில் சிரமமாக இருக்கிறது.

நகரத்தார்களில் குறிப்பிட்ட ஒரு சிலர் பர்மியக் குடிமக்களாகப் பதிந்து கொண்டுள்ளார்கள். அவர்கள் பர்மாவில் தொடர்ந்து இருந்துவர முடியும். என்றுலும் குடிமக்கள் உரிமை பெற்ற மற்ற இந்தியர்கள் இந்நாட்டின் போக்கைக் கண்டு மனம் தளர்ந்து குடியுரிமையை ரத்துச் செய்துகொண்டு இந்தியா திரும்புவதால் நம்மவர்களும் நாளடைவில் அவர்கள் அனுபவத்தையும் சூழ் நிலையையும் கொண்டு ஒரு முடிவுக்கு வரக்கூடும். அந்நியர்களுக்கு வக்கீல் தொழில், டாக்டர் தொழில், இறக்குமதி ஏற்றுமதித் தொழில், டாக்ஸி, பஸ், லாரி போக்குவரத்துத் தொழில், சர்க்கார் பஜாரில் கடைகள் பெற்று வியாபாரம் செய்தல் முதலியவைகள் மறுக்கப்பெற்ருலும், பர்மிய பிரஜா உரிமை பெற்றவர்களுக்கு அவ்வித மறுப்பு இல்லை. இருந்தாலும் தனியார் வியாபாரத்திற்குத் தற்போதைய பர்மாவின்

எங்கள் சமூகம் இனிதுடன் வாழ்க !

அறங்கள் யாவினும் அரியது ஆகிய
அருங்கலை பரப்பும் பெருங்கலைக் கழகமும்,
அரன்கழல் போற்றும் அடியவர் இருக்க
ஆகமம் வளர்க்கும் பாடக சாலையும்,
தரமிகு மக்களைத் தரணிக் களித்திடும்
தாய்க்குலம் கற்றிடத் தக்கநற் பள்ளியும்,
எங்கும் துவக்கிய எங்கள் சமூகம்
எல்லாம் நிறைந்து இனிதுடன் வாழ்கவே!

—V. நாச்சியப்பன் B.E.,

சூழ் நிலை உகந்ததாகவில்லை. தனியார்களின் சொந்த சௌகரியங்களை அனுசரித்து தீர்மானிக்க வேண்டிய பிரச்னை அது. ஆனால், அந்நியர்கள் இவ்விடத்தில் தங்கி தங்கள் வாழ்க்கையை சரிவர நடத்தி வருவது இயலாத காரியம்.

நகரத்தார்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களிலெல்லாம் கோவில்கள், நந்தவனங்கள், மடங்கள் முதலியவைகள் உண்டாக்கி, சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார்கள். முந்திய பர்மாவில் இரங்கூன் உள்ளிட்ட சுமார் 130 ஊர்களில் 1260 கடைகள் வைத்து தொழில் செய்து வந்தார்கள். இப்போது சுமார் 20 ஊர்களில் 250 கடைகளுக்குப் பிரதிநிதிகள் இருக்கக்கூடுமென்று நினைக்கிறோம். சுமார் 200 நகரத்தார்கள் பர்மாவில் இருக்கக்கூடு மென்றும் தெரிகிறது. நகரத்தார்கள் இல்லாத ஊர்களிலுள்ள தாவர சொத்துக்கள் பல தேடுவாரற்றுக் கிடக்கின்றன. அவைகளைப் பார்த்து பராமறித்துவர நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தில் முயற்சித்து வருகிறார்கள்.

பர்மாவில் எல்லா ஊர் நகரத்தார்களுக்கும் பொதுவான ஸ்தாபனங்கள் இரண்டு இன்றுவரை செயல்பட்டு வருகின்றன. அவை யாவன: 1. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா; 2. கம்பை தனவைசியர் கல்விக் கழகம். நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம் பெரும்பாலும் நில நட்டயீட்டைக் கவனித்து வருகிறது. அத்துடன் மேற்பார்வைக்குத் தகுந்த நபர்கள் இல்லாத சொந்தச் சொத்துக்கள், பொதுச் சொத்துக்கள் இவைகளையும் இணங்கியவரை மேற்பார்வை செய்து வருகிறது. கம்பை தனவைசியர் கல்விக் கழகம் முன்பு திருக்கம்பையில் மிகவும் விசேடமாக ஒரு ஹைஸ்கூல் நடத்தி வந்ததை பிறகு சர்க்கார் எடுத்துக்கொண்டுவிட்டதால் அந்த நட்டயீட்டுத் தொகையைக் கொண்டு பல நகரத்தார் மாணவர்களுக்கும், நகரத்தார் வழி வந்த மாணவ மாணவிகளுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுத்து வருகிறார்கள். பல வருடங்கள் இந்தியாவிலிருந்து பல அறிஞர்களை வரவழைத்து சமய, இலக்கியப் பிரசங்கங்கள் நடத்தச் செய்தார்கள். சமீபத்தில் திறக்குறளை பர்மிய மொழியில் மொழிபெயர்த்து புத்தகமாக அச்சிட்டு இலவசமாக விநியோகித்தார்கள். நகரத்தார்களுக்கு சைவ சமயக்கல்வி பயில பண உதவிகள் செய்து வருகிறார்கள். அது அவர்களுக்குப் பலவிதங்களில் உதவியாக இருந்து வருகிறது.

தொழில் வசதியில்லாததால் நகரத்தார்கள் பெரும்பாலும் தாய்நாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். தாய் நாட்டிலுள்ள நம் சகோதரர்கள், அவர்களை ஆதரித்து எல்லாவித உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

காவிரிப் பூம்பட்டினம்

தமிழண்ணல் இராம பெரிய கருப்பன் எம்.ஏ.

முன்னொரு காலத்தில், அலை கடல் சூழ்ந்த உலகெலாம் புகழ்பெற்றுத் திகழ்ந்த 'காவிரிப் பூம்பட்டினம்' கிரேக்க உரோம நாடுகளுடனும் வாணிகத் தொடர்புகொண்டு தன்னிகரற்றுத் திகழ்ந்தது. சோழப் பேரரசர்களின் துறைமுக நகரமாகவும் அவர் நாட்டுத் தலைநகரமாகவும் வணிகப் பெருமக்கள் வாழும் இடமாகவும் அது இருந்தது. காவிரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் இருந்தமையால் அதற்குப் 'புகார்' என்றும் பெயர் வழங்கியது.

தொன்மைச் சிறப்புமிக்க இப்பட்டினத்தைப் பற்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப் பாலை போன்ற சங்க கால நூல்களும் பிற சங்கத் தொகைப் பாடல்கள் பலவும் வரலாற்றுச் சான்றுகளைத் தருகின்றன. கி. பி. முதல் நூற்றாண்டில் மேனாட்டினின்றும் தமிழகம் போந்த தாலமி, பெரிப்ளூஸ் நூலாசிரியர் போல்வாரும் இந்நகரத்தைப் பற்றிய குறிப்புக்களைத் தந்துள்ளனர்.

இப் பெருநகரம் பட்டினப்பாக்கம், மருவூர்ப் பாக்கம் என்று இருபகுதியாக விளங்கியது. இவற்றுள் மருவூர்ப்பாக்கம் என்பது பரதவர்களும் வெளிநாட்டு வணிகர்களும் பிறரும் கலந்து வாழ்ந்ததும் கடற்கரையை ஒட்டிக் கிழக்குப் பகுதியில் அமைந்ததுமாகும். இவ்விரு பகுதிகளும் சந்திக்கும் நடு இடம் பெரிய மரச் சோலைகளையுடையதாய் 'நாளங்காடி' எனப்படும் கடைவீதியை உடையதாக இருந்தது.

புகார் நகரம் பலவூர்களைத் தன் கிளைப் பகுதியாகக் கொண்டு, சுமார் நான்கு காவதம் (30கல்) பரப்புடையதாக விளங்கியது. கருவேந்தநாதபுரம், கடாரங்கொண்டான் என வழங்கும் ஊர்கள் இதன் மேற்கெல்லையாகவும், திருக்கடவூர் தெற்கெல்லையாகவும் கலிக்காமூர் வடக்கெல்லையாகவும் கடல் கிழக்கெல்லையாகவும் அமைய இவ்வெல்லைகட்குட்பட்ட சிற்றூர்கள் பலவற்றையும் தன் அங்கமாகக் கொண்ட பெருநகரமாகக் காவிரிப்பூம்பட்டினம் திகழ்ந்தது.

நெய்தவாசல், மணிக்கிராமம், சாய்க்காடு, முதலிய பல சிற்றூர்கள் வரலாற்றுச் சிறப்புடையனவாய்க் கல்வெட்டுக்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. 'காவிரிப் பூம்பட்டினம்' என்ற தமது நூலில் திரு. டி. வி. சதாசிவபண்டாரத்தாரவர்கள் இந்நகர அமைப்பினை நன்கு விளக்கியுள்ளார்கள். இவற்றுள் மருவூர்ப்பாக்கம் கடல் கோளால் அழிந்தது. புதைபொருள் ஆராய்ச்சி செய்வார், இன்று சிற்றூராகவிருக்கும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புக்களை எவ்வகையாலும் வெளிக்கொணர முயலுதல்வேண்டும். தமிழ்நாடு அரசினரும், மத்திய அரசினரும் இதற்கெனத் தனி முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும். வெளிநாட்டாரின் உதவிகளைப் பெற்றாயினும் கடலுள் மறைந்த இந்நகரத்தின் நாகரிகச் சின்னங்களை வெளிக் கொணர்தல் வேண்டும். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே உலகில் சிறந்த நகரமாக இலங்கிய புகார் நகரத்துப் பெருமைகளை உறுதிப்படுத்துதற்கு அது மிகவும் பயன்படும்.

இங்கு அமரர் தருக் கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம், சூரியன் கோட்டம், சிவன் கோட்டம், முருகன் கோட்டம், இந்திரன் கோட்டம், புறம்பணையான் வாழ் கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம் முதலிய பல கோயில்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. கோட்டம் என்றால் கோயில் என்று பொருள்.

தொழில் வளர்ச்சியில் இந்நகர் ஈடும் எடுப்புமின்றி உயர்ந்திருந்தது.

கடல் வாணிகம், உள்நாட்டு வாணிகம் இரண்டிலும் இது தன்னிகரற்று விளங்கியது. கடற்கரையோரமாக விருந்ததும், காவிரியாறு பாய்ந்ததுமே இச்சிறப்புக்களுக்குக் காரணம். பட்டினாலும் பருத்தி நூலினாலும் எலி மயிரினாலும் பலவகை ஆடைகள் நெய்யப்பட்டன. முத்து, பவழம், அகில், சந்தனம், மணி, பொன் முதலிய பொருள்களும் எட்டுவகைக் கூலங்களும் (தானியங்களும்) இங்கே கொட்டி வைக்கப்பட்டுக் குன்றுகள் போலக் குவிந்து கிடந்தன. அப்ப வாணிகர் முதல் ஆட்டு இறைச்சி வாணிகர்வரை இங்கு வாழ்ந்தனர். உப்பு


முதல் உயர்ந்தவகைப் பாத்திரங்கள்வரை இங்கு வாணிகம் செய்யப்பட்டன.

பல்வேறு நாட்டுத் தொழில் வல்லுநர்களும் இங்கே கூடி வாழ்ந்தனர். மகத வினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர், யவனத் தச்சர் யாவரும் இருந்தனர். கடல் வழி வந்த குதிரைகள், கரிய மிளகுப் பொதிகள், இமயம் தந்த மாணிக்கக் கற்கள், பொதிய மலைச் சந்தனம், தென்கடல் முத்து, கங்கை பாயும் வட நாட்டுப் பொருட்கள், சோழநாட்டு நெல், ஈழ நாட்டு நுகர்பொருட்கள், கடாரம்—சீனம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த பொருட்கள் யாவும் மலை போற் குவிந்து கிடந்தன.

அப்பொருட்களில் 'புலிச்சின்னம்' பொறிக்கப் பட்டு அனுப்பப்பட்டனவென்றும் அறிகிறோம். இங்கு வாழ்ந்த வணிகப் பெருமக்கள் மிகவும் நடுநிலையாளர்களாக இலங்கினார்கள்.

> 'நெடு நுகத்துப் பகல்போல
> நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
> வடுவஞ்சி வாய்மொழிந்து
> தமவும் பிறவும் ஒப்பநாடிக்
> கொள்வதூஉம் மிகைகொளாது
> கொடுப்பதூஉம் குறைகொடாது
> பல்பண் டம் பகர்ந்துவீசும்
> தொல்கொண்டித் துவன்றிருக்கை

என்று, வணிகர்களின் பெருஞ்சிறப்பு விளக்கப்



பட்டுள்ளது. இதில் 'கொண்டி' என்பதற்கு 'ஈட்டிய பொருள்' என்று உரை கூறுவர். அதனைக் கொண்டுபோய் விற்றலால் ஏற்பட்ட சொல் எனலாம். இது, நகரத்தார் மரபினர் 'கொண்டுவிற்றல்' என்று சொல்லும் வழக்குத் தொடரோடு தொடர்புடையதாக இருக்கிறது.

ஏற்றுமதி இறக்குமதி வாணிகம் இங்கு சிறப் புற்று நிகழ்ந்த விதத்தை,

> 'வான் முகந்தநீர் மலைப் பொழியவும்
> மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
> மாரிபெய்யும் பருவம்போல
> நீரின் நின்று நிலத் தேற்றவும்
> நிலத்தின் நின்று நீர்ப்பரப்பவும்'

என்று பட்டினப்பாலை கூறுகிறது. இங்கு சுங்க வரித் துறை (Customs) மிகத் திறமையுடன் செயலாற்றியதை, 'உல்கு செயக் குறைபடாது' பண்டங்கள் வந்துகொண்டேயிருந்தன என்றும்,

'பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்' எனவரும் வரி இங்கு இசை, நாடகத் தமிழ் சிறப்புற்றிலங் கியலமையை நிலை நிறுத்துகிறது. மற்றும் களிப்பு மிக்க ஆடல் பாடல்களிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் இந்நகரத்து மக்கள் இன்பப் பொழுது போக்கினர்.

சமயத் துறையில் பலவகைக் கோயில்களைப் பெற்று விளங்கியமைக்கு ஏற்ப, இப்பட்டினத்து மக்கள் 'இந்திரவிழா' எனப் பெயரிய விழா வொன்றை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். பிற்காலச் சோழர்களின் ஆட்சியில் கி.பி. பனிரெண்டாம் நூற்றுண்டுவரை இந்நகரின் பெருமைகள் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. இந்நகரத்தில் பிறந்த வணிகர்கள் மணிக் கிராமத்தார் என்ற பெயருடன் வெளி நாடுகளுக்குச் சென்றதாகக் கல்வெட்டுக்கள் கூறும். அவ்வூர் இன்றும் அதே பெயரில் வழங்குகிறது.

கோவலன்-கண்ணகி இருவரும் இந்நகரத்து வணிகக் குலத்தினர் ஆவர். இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்ட காரைக் காலம்மையாரும், இல்லையே என்னுத இயற் பகையாரும், பெரும் தத்துவ ஞானியாகிய பட்டினத்தடிகளும் இந்நகரத்தில் வாழ்ந்தவணிக குலப் பெருமக்களேயாவர்.

இக் காவிரிப்பூம் பட்டினத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் நகரத்தார்கள். அவர்கள் அங்கு சிறப்புற்றுத் திகழ்ந்ததற்கு ஒப்ப. பின்புபாண்டிய நாட்டிலும் குடியேறிக்கோட்டைகள் கட்டி வாழ்ந்தனர்.

'முட்டாச் சிறப்பிற் பட்டினம்' என்று தட்டுப் பாடு இல்லாத இப்பட்டினம் போற்றப்பட்டுள்ளது. இங்கு புதை பொருள் ஆராய்ச்சி செய்தால் பல பேருண்மைகள் வெளிப்படும். தமிழர் நாகரிகம் கிரேக்க நாகரிகத்திற்கு இணையானது—மேற்பட்டதும் கூட என்ற உண்[illegible] நிலைநிறுத்தப்படவேண்டும். இதற்காக ம[illegible] மாநில அரசுகளைத் தூண்டுவதில் நகரத்[illegible] களுக்கும் பெரும்பங்கு உண்டு. அரசின[illegible] இவ்வேண்டுகோளை மனங்கொண்டு ஆ[illegible] செய்யவேண்டும். காலம் நோக்கி இக்கட[illegible] யைச் செய்தால் ஞாலம் போற்ற வா[illegible] 'புகாரின் புகழ்' என்றென்றும் நிலைபெற[illegible] வழிபிறக்கும்.

★

வேற்றுமையில்  ஒற்றுமை

ஏ. தியாகராசன் எம்.ஏ.

பாரத சமுதாயம் மொழி, இன மதப் பாகு களினால் தனித் தனிச் சமூகங்களாகப் து கூடி வாழுகின்ற சமுதாயமாகும். சமூகங்களின் தொகுப்பே பாரத சமுதாய லாம்.

ரத சமுதாயத்தின் வளர்ச்சி பல தனிப் . இனங்களின் வளர்ச்சியினைப் பொறுத் க்கிறது. ஏதாவது ஓர் இனத்தின் வளர்ச்சி தடுக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட இனத்தின் வளர்ச்சி தடைப்படுவதோடல்லாமல சமுதாய வளர்ச்சியும் நாளடைவில் தடைப்பட்டுவிடும். ஏன்? அழிவையே கொண்டு வந்துவிடும்! னவே சமுதாய வளர்ச்சியை மொத்தமாகக் ற வேண்டின் தனிப்பட்ட இன வளர்ச்சியில் கறை காட்டுவது அவசியமாகும்.

க்கருத்தினை எளிதாக்க ஓர் உதாரணத்தைத் கிறேன்.

யிரோடு ஒன்றிய உடலைச் சமுதாயத்திற் உடலின் பல்வேறு அங்கங்களைத் தனிப் ட சமூகங்களுக்கும் அல்லது இனங்களுக்கும் பிடுவோம். இனி உடலின் அங்கங்கள் ரிய வளர்ச்சி கண்டு அதனதன் வேலையைச் ம்மையாகச் செய்தால்தான் உடல் இயங்கும். டலில் ஒன்றிய உயிரும் வாழும். அவ்வாறின்றி உடலின் அங்கங்கள் குறைப்பட்டிருந்தால் உடல் அழகின்றித் தோன்றும்; அல்லது பாதிக்கப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்ட அங்கம் நோயுற்றிருக்கும். நோய்வாய்ப்பட்ட பாகத்திற்கு உடனடியாகச் சிகிச்சை அளித்துக் குணப்படுத்தாவிட்டால் பாதிக்கப்பட்ட பாகம் புரையோடி நோய்க் கிருமிகள் இரத்தத்தில் கலந்து அதனை நஞ்சாக்கி உயிருக்கே ஆபத்தைத் தேடித் தந்துவிடும்.

இதனைப் போன்ற சமுதாயத்திலே வாழ்ந்து வருகின்ற சமூகங்களின் தனிப்பட்ட வளர்ச்சி தடைப்பட்டு நோய்வாய்ப்பட்டால் பாதிக்கப்பட்ட இனம் மட்டும் அழிவதோடு நில்லாமல் சமுதாயத்தையே அழித்துவிடவும் ஏதுவாகிறது.

எனவேதான் சமுதாய நலனில் அக்கறை கொள்வோர் அச்சமுதாயத்திலுள்ள சமூகங்களின் தனிப்பட்ட வளர்ச்சியைப்புறக்கணிக்கக் கூடாதென்று வலியுறுத்துகிறேன்.

இங்கு ஔவையாரின் பாடலை நினைவு கொண்டால் என் கருத்து இன்னும் தெளிவாகு மென்று கருதுகிறேன்.

"வரப்புயர நீர் உயரும்
நீருயர நெல் உயரும்
நெல்லுயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்"


முதலில் தனிப்பட்ட ஒருவன் தன்னைப் பற்றியும் தன்னைச் சார்ந்தோரின் நலனைப் பற்றியும் அக்கறை கொளல் வேண்டும். பின்புதான் நாட்டைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் எண்ண முற்பட வேண்டும். தன்னையும் தன் குடும்பத்தையும் செம்மை செய்ய முயலாத ஒருவன் தன் நாட்டின் நலனைப் பேண முயலுவானென்று எப்படி எதிர் பார்க்க முடியும். தன்னோடு பழகும் சுற்றம், சூழல் சமூகம் ஆகியவற்றிடம் அன்பு காட்டும் மனப்பான்மையுள்ளவனுக்கே நாட்டுப்பற்றிலும் உலக நன்மையிலும் ஆர்வம் உண்டாகும். இதுவே இயற்கை.

தனிப்பட்ட இனத்தின் வளர்ச்சியில் அவ்வினத்தைச் சார்ந்தோர் அக்கறை கொளல் வேண்டும். இவ்வாறு இனங்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு விட்டால் சமுதாய வளர்ச்சி மிக எளிதாக அமைந்து விடும்.

நகராத்தார்கள் தம் இன வளர்ச்சியில் அக்கறையும் செய்ய வேண்டிய செயல்களில் விரைவும் ஊக்கமும் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பர்மா, இலங்கை மலேயா செய்கோன் முதலிய நாடுகளில் தொழில் துறை செய்து வந்த நாம் இன்று அந் நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ் நிலைகளின் காரணமாக அந் நாடுகளை விட்டுத் தாயகம் திரும்பிப் புனர்வாழ்வு அமைத்துக் கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

நம்மைப் பற்றிச் சிந்திக்கவும், நம் வாழ்வின் சீரமைப்புக்கு வழி வகை செய்து கொள்ளவும் நமக்கொரு அமைப்புத் தேவை. ஏனெனில் சிந்தனைகளை உருவாக்கவும் அதனைச் செயல்




மலரேந்தி முகமலர்த்தி மகிழ்ச்சி காட்டி
மன்னருக்குச் செண்டளித்து மாலை சூட்டிக்
கலைநிகழ்ச்சித் தலைவரினைச் சென்னைச் சங்கத்
தலைவரவர் வரவேற்கும் காட்சி காணீர்!

•

இராஜா சர் மு. அ. முத்தையா செட்டியாரவர்கள் தலைமையில் 9-8-1964ல் ''மெழுகுவர்த்தி'' என்ற நாடகம் நடைபெற்றது. சென்னை நகரத்தார் சங்கத் தலைவர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் அன்னாரை வரவேற்கும் காட்சி.

சென்னை நகரத்தார் சங்க ஆண்டு விழாக் காட்சிகள்
(11—4—1965)



ஏற்றுமதி வாணிகத்தில் ஏற்றமிகு புகழ்படைத்த ஆ. நாகப்ப செட்டியாரவர்கள்
தலைமையுரை நிகழ்த்துகிறார்கள்.

பண்டிதமணி

வடமொழி வாணரும் தென்மொழி வாணரும்
ஆங்கிலப் பயிற்சியில் ஓங்கிய நிபுணரும்
வேட்டுப் பலமுறை கேட்டுச் சிரசர
கம்பிதஞ் செய்திடக் கவின்பிர சங்கம்
புரிதரு திறலினன் புலவர்க் கருந்துணை
சுத்திய நடையொடு பத்திய நடையினால்
அழகுற வியற்றப் பழகிய குருசில்
தமிழ்மொழி நாளும் தழைத்திட வெண்ணி
அன்பரைக் கொண்டே இன்புற அவணவண்
பாட சாலைகள் பலவமைத் தவற்றைப்
பாலினஞ் செயப்புரி சீலமு துடையான்
தவமகன் மேலைச் சிவபுரி யவைக்கண்
இவையும் பிறவும் இயல்பா யமைந்தமை
கண்டித மணிபல பண்டித ரளித்த
பண்டித மணியெனும் பட்டம் பெற்றோன்
சிவனடி யவரைச் சிவனென மதிக்கும்
மாசிலாப் புகழ்க் கதிரேசன்
என்னும் பெயர்கொண் டிலங்கு சீரியனே!

—டாக்டர் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர்

தாழ்விலாச் செல்வர் தமிழகத்து நகரத்தார்

சித்தாந்த கலாநிதி உரைவேந்தர் ஔவை துரைசாமி.

செல்வர்களைப் பொதுவாகப் பிற இடங்களில் தனவணிகர் என்பது வழக்கமாயினும், தமிழ்நாட்டவர் நகரத்தார் என்றே குறிப்பிடுவர். நகரத்தார் என்பது நகரத்தில் வாழ்பவர் என்று இந்நாளில் பொருள்படும். ஆனால் அதன் உண்மைப் பொருள் வேறு. தமிழர் வீடு அமைக்கும் வகையில் நகர் என்பது ஒன்று. சங்க இலக்கியங்கள் பெருஞ்செல்வர் மனைகளை, நகர் என்றே குறிக்கின்றன. "பொன்னுடை நெடுநகர்," "பெருவளம் பழுனிய கொழுநகர்" என்ற சொற்றொடர்கள் சங்கநூல் பயின்றோர் நன்கறிந்தவை; நகர் என்பது இரண்டாயிரம் கோலுக்குக் குறையாத பரப்புடையது: சுற்றிலும் தாழ்வாரமும், சிற்றறைகளும், நடுவில் வெயில் முற்றமும், மாடியில் நிலா முற்றமும், புறவிறையும், உச்சியிற் கலசங்களும், பல்வேறு ஓவிய வேலைப்பாடுகளும் நிறைந்து குறுநில மன்னர் பெருமனை போல விளங்குவது; இந்த நகர்களையே இச்செல்வர்கள், தமது ஊர்களில் அமைத்து வாழ்வதால் இவர்கள் நகரத்தார் எனும் சிறப்புற்றிருக்கின்றனர்.

இப்பெருமக்களின் வாழ்க்கை முறையும், மனைகளில் நடைபெறும் சிறப்புக்களின் பெயரும் தனித் தமிழிலே அமைந்து இவர்களனைவரும் பழந்தமிழ்ப் பெருவணிகச் செல்வர்கள் என்பதை நன்கு காட்டுகின்றன. மணமான மக்களை வேறு வைத்தல் முதலிய இவர்களுடைய ஒழுகலாறுகள் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உரைக்கும் குறிப்புக்களோடு ஒத்தியல்வதே இதற்குப் போதிய சான்றாகும்.

"பதியெழுவறியாப் பழங்குடி" எனப் பண்பு மேம்பட்ட இந்நகரத்தார் ஆதியில் புகார் நகரம் கடல் கோட்கு இரையாகிக் கட்டழிந்தமையின், வேறு நாடு செல்ல வேண்டியவராயின போது, ஏனை உறையூர், மதுரை, காஞ்சி, வஞ்சியாகிய நகரங்களை நாடாது. தாள்வலம படைத்த வேள் பாரியின் பறம்பு நாட்டை வரைந்து கொண்டதில் அழகிய கருத்தொன்றுண்டு. உழவர் உழுதவழியும், உழாத வழியும் மக்கள் நெடிது வாழ்தற்கேற்ற வளம் சுரக்கும் வாய்மையுடையது அப்பறம்பு நாடு. முடிவேந்தர் மூவரும் ஒருங்கு முற்றிய வழியும், வெல்லுவது இயலாத நல்லறக்காவல் நன்கமைந்தது; மன்னர் மதிக்கும் மரபினராதலின் அதற்கேற்ற எழுநிலை மாடங்கள் சேர எழுப்பினும், நெளிந்து வாய்பிளக்கும் நீர்மையில்லாத நிலநலமுடையது; எனவே இப்பகுதியில் நகரத்தார் குடியேறியது எத்தனை மதிநுட்பம் என்பதை எண்ணுங்கால் இன்பம் பெருகுகிறது. இங்ஙனம் நிலவியலறிந்து, நெடுமனை யெடுத்தலும், வாணிகத் தொழிற்குரிய பொருளறிவும் இப்பெருமக்களுக்குக் கருவிலே வாய்த்த திருவாயினும், வெளிநாடு செல்லுதல் வேற்றவரோடு பழகுதல், விருந்தோம்புதல் என்ற பண்புகள் பிற எவரிடத்தும் காணலாகா முறையில் வீறு கொண்டு விளங்குகின்றன.

நாடு காத்து அறம் வளர்த்தல் அரசருக்கு ஆயினாற்போல் பொருள் காத்து வாணிகம் பேணித் தொழில் வளர்த்தல் நகரத்தாரது நற்பணியாக இருந்தன; நாட்டு அரசு முறைமாறினும், நகரத்தார் தமது தொழில் முறை மாறாது, இன்றும்

பண்டு செய்த பெரு வாணிகத்தையும், பெருந்தொழிலையும் மேற்கொண்டு நாட்டுக்குப் பொருளும் புகழும் தேடித் தந்த வண்ணம் உள்ளனர்.

இவற்றிற் கெல்லாம் மேலாக இப் பெருமக்கள் தாம் ஈட்டிய செல்வத்தைப் பயன்படுத்தும் முறை நாட்டவர் நன் குணர்ந்து பாராட்டற்குரியதாகும். நமது நாட்டில் முடியாட்சி நிலவிய காலத்தில் நகரத்தார் பர்மா, மலேயா, இலங்கை ஆகிய நாடுகட்குக் கடல் கடந்து சென்று பெரும் பொருள் ஈட்டிக் கொணர்ந்தது வரலாறு கண்ட உண்மை. செல்வம் பெருகித் திரண்டு வந்த காலத்தில் செல்வர் மனம் தேய்ந்து சுருங்கும் என மேனாட்டறிஞர் ஒருவர் கூறினார். (Where wealth accumulates, man decays) அதற்கு நேர் மாறாக, நகரத்தார் உள்ளம் தாம் கடந்த கடலினும் பெரிதாய் விரிந்து, வானினும் பெரிதாய் உயர்ந்து நாட்டில் வாழும் மக்கட்கு நற்பயனை விளைவித்தது. 1300 ஆண்டுகட்கு முன் 'ஞான சம்பந்தர்' முதலிய நால்வரும் தோன்றிச் சிவநெறியைச் செம்மை செய்தனர். நாடெங்கும் உலாப் போந்து ஆங்காங்குள்ள சிவன் கோயில்களைத் தமது தெய்வத் திருப் பாடல்களால் சிறப்பித்து, மக்கள் மனத்தில் சிவஞானச் செல்வமும், சிவ வழிபாடும் செழிக்கச் செய்தனர். அரசர்களும் அவர் வழி நின்று, அக்கோயில் களைக் கற்களாலமைத்து மக்கள் வாழ்வை அக்கோயில்களோடு பிணைத்துப் பெருமை எய்துவித்தனர்.

சிவப்பணி புரிந்த திருவுடை மன்னர் உருக் குலைந்து மறைந்ததோ, சிவாகமப் பித்துற்ற சேதி நாட்டரசனை மெய்ப் பொருள் முத்தநாதன்கைவாளால்குத்துண்டு வீழ்ந்ததோ, நகரத்தார் நல்லுள்ளத்தைச் சிதைக்க மாட்டாவாயின. சிவப்பணியில் கோடிக் கணக்கில் செலவிட்டனர். சிவாகமப் பணியைச் சிறக்கச் செய்தனர்; நான்மறை ஆகமப் பாடசாலைகளை நன் முறையில் நிறுவி வளர்த்தனர்.

"'காலநிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர்; என்று அன்று இறைவன், ஞான சம்பந்தருக்கும், : நாவரசிற்கும் உரைத்தது, நமக்கும் ஒத்தது'' என்று கொண்ட நகரத்தார், கால நிலைமை மாறிய வழியும், தமது மரபு நிலை மாறாது பல்கலைக் கழகமும், பல்தொழிற் சாலைகளும் நிறுவிக் கல்விப் பணியும், தொழிற் பணியும் புரிந்து நாட்டின் அறிவும், பொருளும் பெருகும் பெருஞ் செயலைப் புரிந்து வருகின்றனர். இவர்களை நினைக்குங்கால் நம்மிடையே இருந்து மறைந்தவரும், இன்னும் இருந்து இன்பம் செய்பவருமாகிய நான்கு பெருமக்கள் நம் மனக்கண்ணில் மாண்புறத் தோன்றுகின்றனர்.

அவர்களில் முதற்கண் காட்சி தருபவர் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் ஆவர். அவரது அகன்றுயர்ந்த மார்பும், அருள் நிறைந்த பார்வையும், பீடுநடையும், பெருமிதத் தோற்றமும் எண்ணுந் தோறும் இனிமை தருகின்றன. அவர் காலத்தில் நாட்டில் கல்வி நீர் பாயாத கரம்பைகள் பல்கியிருந்தன. கல்வி வேட்கை மக்கள் உள்ளத்தை வெதுப்பிக் கொண்டிருந்தது. தில்லைக் கூத்தன் திருவடிக்கு அன்புசெய்யும் திருமிக்க குடியிற் பிறந்தவராதலின் அவர் உள்ளத்தில் அப் பெருமானுடைய திருவருள் பரவுதலும், தில்லையின் எல்லையில் திருவேட்களத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவ முயன்று வெற்றி கண்டார். தனிச் செல்வர் ஒருவருடைய நன்பொருள் முயற்சியால் ஒரு பல்கலைக் கழகம் அமைவது அன்றுவரை உலக வரலாறே கண்டறியாத ஒன்று.

அடுத்து நம் மனத்தகத்தே தோன்றுபவர் வள்ளல் அழகப்பா. பெருந்தொழில் செய்து பெரும் பொருளீட்டிய இப்பெருந்தகை காரைக்குடியில் எழுப்பியுள்ள செழுங்கலை நியமம் அவரது புகழ் வடிவாய் விளங்குகிறது, பழந் தமிழ்மன்னர் "புகழ் எனின், உயிருங் கொடுக்குவர்'' என்பர்; அவர் பின்னோராகிய இப்பெருமகன் உயிரேயன்றி, உடல், பொருள் ஆகிய எல்லாவற்றையும் நாட்டுமக்களின் கல்விப் பேற்றுக்கு வழங்கினர்.

இனி நம்மிடையே இருந்து நலம்பல புரிந்து ஏந்து புகழ்கொண்டு இலங்கும் பெருஞ் செல்வர் இருவருள் முன்னணியில் நிற்பவர் கருமுத்து தியாகராசனாரவர். தனி முயற்சியால் பெருந்தொழில் மேற்

கொண்டு, கலங்காச் செய்கையும், துளங்கா உள்ளமும் சிறந்து, 'கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்' என்று எந்நாட்டவரும் பாராட்டும் ஏற்றமுடையவர்; நாட்டில் நல்வாழ்வுக்கு இன்றியமையாதன கல்வியும், தொழிலுமே என்று நாவால் நவில்வதை நயவாது செயலிடையுருவாக்கி ரூபா ஒன்றரைக் கோடிக்கு மேல் கல்வி வளர்ச்சிக்குச் செலவிட்டுத் திகழும் செல்வத் தோன்றல் நம் தியாகராசனார். தனி ஒருவராய்த் தாளாற்றிப்பொருளிட்டி இத்துணைப் பெரும் பொருளை மக்களின் கல்விக்களித்த மாண்புடைச் செல்வர் கருமுத்து தியாகராசர் தவிர வேறு ஒருவரையும் காண்கிலோம். "இனி யார் உளரோ? நின் முன்னும் இல்லை," என்று சான்றோர் அன்று கூறியதைத்தான் நாமும் இன்று கூற வேண்டியுள்ளது.

"குலவிச்சை கல்லாமற் பாகம்படும்" என்பது பழமொழி. நகரத்தார்க்கு "யாதும் நாடே, யாவரும் கேளிர்." சிலரைப் போல அவர்களது நாடு கடல்களாலும், மலைகளாலும், ஆறுகளாலும் எல்லை சுருங்குவதன்று. பரந்த நிலவுலகே அவர் கடகு நாடு; நிலத்து வாழ்மக்கள் அனைவரும் அவர்க்கு நண்பரும், கேளிருமாவர். அவரது மரபினராதலால், தியாகராசரது பெருமனையில் ஆங்கிலரும், அமெரிக்கரும், சப்பானியரும், எப்பாலோரும், எப்போதும் வந்தவண்ணமிருக்கின்றனர். பாரதநாட்டு எப்பகுதியினரும் எப்பொழுதும் விருந்தினராய் இருந்த வண்ணம் இருப்பர்; கருமுத்து தியாகராசரின் தொழில் பரப்பு ஆந்திர நாடு, கன்னட நாடு, கேரள நாடு என்ற நாடுகளைத் தமிழோடு தன்னகத்தே கொண்டு தழைத்து நிற்கிறது. இவரது பொருள் நலத்தால் பல்லாயிரக் கணக்கில் தமிழர்களேயன்றி ஆந்திர, கன்னட, கேரள நன்மக்கள் நேரிய தொழில் செய்து சீரிய வாழ்வு நடத்தும் செந்நெறி பெற்றுத் திகழ்கின்றனர். இவ்வண்ணம் வேற்றுமையின்றிப் பல்கோடி மக்கட்கு வாழ்வளித்துப் புரக்கும் தொழில் வேந்தராய் அவர் விளக்கமுறுவது, "குலம் செய்தவம்" என்று கம்பன் கூறுவதுபோல், நகரத்தார் மரபு செய்த நற்றவம் என்போமாயின் அஃது ஒரு சிறிதும் மிகையாகாது. அவரது மக்கட் செல்வமும், மனைமாண்பும் தமிழும், சைவமும் தழையத் தழைக்கும் சால்பு கொண்டு சிறக்கின்றன.

கருமுத்து தியாகராசரை நினைக்கையில் சென்னையில் பெருந்தொழில் தலைவராய்ப் பிறங்கும் அ. மு. மு. முருகப்ப செட்டியாரது புகழுருவம் காட்சியளிக்கின்றது. அவரது தொழிற் புலமையை நமது நாட்டரசு நன்கு பயன் படுத்திச் சீர் பெறுவது நகரத்தார்க்குப் பெருமை தருவதோடன்றி நாட்டு மக்களனைவர்க்கும் மகிழ்ச்சியளிக்கிறது. இவர்களை அடியொற்றித் தொழிலிலும், வாணிகத்திலும் நகரத்தார் இனத்து இளைஞர்கள் அறிவும், ஆற்றலும், அயரா உழைப்பும் கொண்டு வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கின்றனர்.

நகரத்தார் இனம், மேற்கூறியவாறு தொழிலிலும், வாணிகத்திலுமேயன்றித் தமிழ்ப் புலமைத் துறையிலும் அரும்பணி புரிந்து பெரும்புகழ் கொண்டதாகும். பாவன்மையும், நாவன்மையும் பெற்றோர் பலர் எனினும், அண்மையில் நம்மினின்று மறைந்த பண்டிதமணி மகா மகோபாத்தியாய கதிரேசனாரையும், "குமரன்" என்ற இதழின் ஆசிரியராய்ச் சிறந்த எழுத்தாளராய் இலங்கிய முருகப்பரையும் யாவர்தான் மறக்க முடியும்? அவர்களுடைய புலமை நலத்தை வியந்து பரவாதவர் யார்? கடல் கடந்து பொருளீட்டும் கவின் வணிகக் குடியில் தோன்றிய பண்டிதமணி 'தமிழ்க் கடலும்; வடமொழிக்கடலும் தனித்துக் கடந்து புலமைச் செல்வம் ஈட்டித் தந்த ஏற்றமுடையராவர். வடநூற்கடலைக் கடந்து சுக்கிரநீதி, அருத்த சாத்திரம், முதலிய அறிவுச் செல்வத்தைத் தமிழகத்துக்குத் தந்து தாவாப் புகழ் பெற்றவர் நம் பண்டிதமணி. அண்ணாமலைப்பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவராய் அவர் உருவாக்கித் தந்த தமிழ்ப் பேரறிஞர் மிகப் பலராவர். "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப" மொழியும் அவரது சொற்பெருக்குச் சொல்லுக்குச் சொல் இலக்கிய நயம்

வாய்ந்தது. திருவாசகத்துக்குப் பொருள் விளக்கம் தருவாராயின், அது, "தேனாய், இன்னமுதமுமாய்த் தித்திக்கும்" சிறப்பினைக் கற்றவரேயன்றிக் கல்லாதவரும் உள்ளங்கொண்டு உவகையுறுவர். திருவாசக முழுதிற்கும் அவரது கதிர்மணி விளக்கம் கிடைக்காமற் போனது நமது தவக்குறை. திருச்சதகம் முதலிய மூன்றற்குக் கிடைத்தது, நகரத்தார் செய்த நற்றவம்.

'முருகப்பா' அவர்கள் "குமரன்" ஆசிரியராய் வாரி வழங்கிய சீர்திருத்தக் கருத்துக்கள் மிக்க தெளிவு வாய்ந்தவை. அவரது செந்தமிழ் நடை தேனும், பாலும் கலந்தாற் போலும் இனிமை நிறைந்தது. நேர்மை வடிவமான அவர் கம்பரது இராமாயணத்தில் ஈடுபட்டு ஒரு பகுதியோடு நின்றார்; ஏனைப் பகுதிகளை, அவர் ஆய்ந்து தருதற்குள் நமது நல்லூழ் சாய்ந்தொழிந்தது. இன்றும் தமிழ்க் கடல் இராய சொ. அவர்கள் மேலே குறித்த புலமைச் செல்வர்களை நினைப்பிக்கும் முறையில் தமிழ் பழுத்த உள்ளூர்ப் பயன் மரமாய் இலக்கிய இன்பக்கனி வழங்கி வருகின்றார். கவிஞர் கண்ணதாசனார், இலக்கியச் செறிவுடைய பாட்டுக்களை நல்கித் திரையுலகைச் சிறப்பிக்கின்றார். இயற்புலவர் பலர் மறுமலர்ச்சி இலக்கியம் படைக்கின்றனர். டாக்டர் வ. சுப. மாணிக்கனார், காரைக்குடி அழகப்பா கல்லூரி முதலவராய் கல்விச் செல்வக் கவின்பணி புரிகின்றார்.

"வாழைக் கன்றும் கனியுதவும்" என்பது போல், நகரத்தார் இனத்து நம் செல்வர்கள் தமது முன்னோர் போலத் தொழிலும், வாணிகமும், புலமையும் ஒருங்கு நிறைந்து நமது நாடு தள்ளா விளைபுலனும், சலியா மொழி வளமும் உடைமை நினைந்து தக்க செயல் புரிந்து தாழ்விலாச் செல்வராய், மிக்க புகழ் கொண்டு மேன்மை பெறுக என ஆலவாயண்ணலின் கோலவார் கழலைக் கும்பிட்டு, "வேண்டத் தக்கது அறிவோய் நீ, வேண்டமுழுதும் தருவாய் நீ!" என வேண்டி அமைகின்றேன்!

காசே தெய்வம்

—சே. கனகசபை பி.ஏ.—

நாட்டார் புகழும் நகரத்தார் குலத்தில்
வாட்ட சாட்டமாய் வளர்ந்தொரு ஆண்மகன்
அகவை இருபதை அடைவனேல் அவனை
மகளிரைப் பெற்ஞேர் சீனியைச் சுற்றி
வளைத்திடும் எறும்பெனச் சுற்றி வளைப்பர்!
பணம்படைத் திட்டோர் பதினு ருயிரம்
தனம் தரு வோம் என மணமுர சறைவர்,
பெண்ணின் வடிவம் கண்ணிற்கு விருந்தோ
எண்ணிய வண்ணப் பொன்னிள மானே?
என்றவன் வினவ—இளைஞனை அழைத்துக்
கொண்டவர் இல்லில் இட்டுக் குழைந்து
பண்டம் பற்பல வகை பரி மாறி
தெண்டனிட் டந்தத் தேவனை வணங்கச்
சம்மதம் என்னும் சரிக்கறி குறியாய்
அம்மகன் தலையினை அசைத்தால்—அந்தத்
தலை அசைப் பினிலே விளைவது திருமணம்!

x x x

பெருஞ்செட்டி நாட்டில் பெண்ணெனப் பிறந்தால்
வேணடிய அம்சம் மூன்றென விரியும்!
பொன்னிறப் பொலிவெனும் பொல்லா அழகும்
பெற்றவர் சீர்தனப் பெருமையும் சாலையில்
கற்ற இக் காலக் கல்வியும் இருந்தால்
மற்றவள் வாழ்க்கை வாகைக் குரியதே!
'வா வா' என்று மணமேடை அவளை
ஆவலாய் அழைக்கும்! அவள்இத் தகுதியில்
ஒன்றிற் குறையினும் கடவுளே உறுதுணை!
திக்கற் ரேர்க்குத் தெய்வமே துணைஎனில்
கருப்புக் கன்னிக்குக் காசே தெய்வம்!

கலை நுட்பம்

—கவிஞர் நாவுக்கரசன்—

கல்லிலே கலைவண்ணம் கண்டு, சொல்லிலே சுவைநலம் கொண்டு வாழும் நகரத்தார் குலம் தொன்மைச் சிறப்புடையது என்பது மட்டுமன்றி, இச்சிறப்பினை அழியாது காத்துவரும் பாங்குடைத்து என்பதும் போற்றற் குரியது. சிலம்பொலி தமிழகத்தில் காப்பியமாக ஏட்டில் வளர்ந்த காலம் முதல் வாணிபத்துறையில் வளம் 'கொண்டுவிற்று' விளங்குவது தன வணிகர் குலம். செட்டி நாட்டவர் கட்டிமுடித்துள்ள இறை ஆலயங் களும் அறிவாலயங்களும் அவர் தம் வள்ளன்மையைப் பறை சாற்று கின்றன. ஆங்கு எழுந்துள்ள அத் தாணி மண்டபங்களின் சுவரும் தூணும் கூறையும் ஏந்தியுள்ள சிற் பங்கள் எத்துணைச் சிறந்தன! அவை பேசுகின்ற கலைகள். நகரத்தாரின் அழ குணர்ச்சியைப் பறை சாற்றுகின்றன.

நாட்டில், மன்றில் மட்டுமன்றி வீட் டிலும் செட்டிநாட்டு மாந்தர் பழங்கலை மரபுகளை அமைத்துப் பூரிக்கின்றனர். கோட்டைகள்போல மாமனைகள் எழுப் பியுள்ளனர். காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி வீடுகட்டி, அவ் வீட்டினுள்ளே சிற்ப வடிவங்கள் அமைத்துள்ளனர்; சீரிய ஓவியங்கள் வீட்டுச் சுவர்களில் காட்சி தருகின்றன கடாரத்துத் தேக்கில் கடைந்த யானை யும் மயிலும், தாமரையும் மண்டப விதானங்களை அணி செய்வதைக் கண்டு வியவாதவர் யார்?

நகரத்தவர் மனைகளை ஆட்சி செய் யும் ஆச்சிமார்களின் கலைநோக்கும் அழகுணர்ச்சியும் தனிச்சிறப்புடையன, இல்லத்துப் பொருள் ஒவ்வொன்றை யும் உருவாக்குவதில் தனித்தன்மை காட்டுகின்றனர் அடுப்பங் கரைபின் அஞ்சறைப் பெட்டிகள் கலைப்பொருள் களாக வலம் வருகின்றன. இனிக்கும் தமிழில் நினைத்து மகிழும் தாலாட்டுப் பாடி வருகிற தாய்க்குலம் ஆட்டுகிற தொட்டில் வீற்றிருக்கும் கட்டில் இவை களில் யாளிகளை அரிமாக்களை அமைதி வடிவில் நிறுத்தி வைத்துள்ளனர். தென்னகக் கலையின் மரபுகளை நாம் ஆங்காங்கே பார்க்க முடியும். தமிழின் தொன்மைச் சிறப்புக் கூறுகள் செட்டி நாட்டின் மனைகளில் வாழுகின்றன. பழஞ்சிறப்பின் சாயலைநகரத்தவர்பயன் படுத்தும் பண்டங்களிலும், பாத்திரங் களிலும் பார்த்து பரவசமடைகிறோம். மறக்கப்பட்டதென்று கருதப்பட்ட பழங்கலைகள் மறைக்கப்படாது நிலைக் கப் பெற்றுள்ள மண்டலம் செட்டிநாடு.

பசுமை, தன்னைக் கவ்வுமுன், பறிக்கப்பட்ட வெண்ணிறப் பனிங்குக் குருத்தினைக் கொண்டு ஆச்சியர் முடை யும் பெட்டிகள் முட்டை வண்ணம் கொண்டவை! எட்டுத்திசை புகழ் தந்த வை! ஓலையின் இளம் பருவம் தடுக்கா வும் கொட்டான்களாகவும் மாறிவரு கிற சிறப்பு செட்டிநாட்டவரின் கலை யுணர்ச்சிக்கு மணிமுடியாகும்! இங்கி லாந்தின் பேரரசியாரே செட்டிநாட்டுப் பனை ஓலைப்பெட்டியைக் கண்டுவியந்து ஏற்றுப் புகழ்ந்தார்! உலகுபோற்றும் உயர்கலைச் சிறப்புடைய நகரத்தவரின் அருங்கலை ஆற்றல் தமிழகத்தின் சொத்து! அவர் வாழ்க! அவர் வளர்க் கும் தமிழ்ப் பண்பாடு வாழ்க! கலைகள் வாழ்க!

ஒரு நிகழ்ச்சி

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

பெண் அழைத்துச் செல்லும் நேரத்திலே கண்கலங்கி நிற்கிருள் கண்ணம்மை. ''ஏன் ஆத்தா கண் கலங்குகிருய்? உள்ளூரிலேதானே உன்னைக் கொடுத்திருக்கிறது? எந்த நேரத்திலே நீ இங்கு வந்தாலும், உனக்குக் கதவு திறந்திருக்குமே! கண்ணைத் துடைத்துக் கொள்'' என்று ஆறுதல் கூறுகிருள் அடுத்த வீட்டு அழகம்மை ஆச்சி.

பெண் கணவன் வீடு செல்கிருள். 10, 15 நாட்களில் அவளை அழைத்துக்கொண்டு பட்டணத்துக்குப் புறப்பட்டு விடுகிருன், கணவன், அங்குதான் அவனுக்கு வேலை.

